# களஞ்சியம்

## சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

# KALANJIYAM

## International Journal of Tamil Studies (KIJTS)

## SPECIAL ISSUE – PART III

பகுதி III • Articles 41 – 60

# தமிழ் வளர்ச்சியில் பல்துறை ஆய்வுகள்

## (சங்க காலம் முதல் தற்காலம் வரை)

*Multidisciplinary Studies in the Development of Tamil: From the Sangam Age to the Present Day*

**Vol. 10 • No. 02 • September 2026**

DOI: https://doi.org/10.63300/kijts10sp02.2026

Quarterly • Peer-Reviewed • Open Access • Multidisciplinary • International
Crossref DOI • Google Scholar • SJIF Impact Factor 4.0

**Available online at: www.ngmtamil.in**

# பொருளடக்கம்

## CONTENTS – INDEX OF ARTICLES (PART III: ARTICLES 41–60)


| S.No. | Title of the Article / Author(s) | Page |
|---|---|---|
| 41 | **புறநானூற்றில் அரசியல் கோட்பாடுகளும் செங்கோன்மை நெறிகளும்**<br>*Political Theories and Principles of Righteous Rule in Purananuru*<br>ச.வடிவேல் | 1 |
| 42 | **ஜெயமோகன் சிறுகதையில் பெண்ணியச்சிந்தனை**<br>மு. கார்த்திகைச் செல்வி | 5 |
| 43 | **‘செல்லாத பணம்’ நாவலின் பாத்திரப் படைப்பு**<br>*Characterization in the Novel Chellatha Panam*<br>முனைவர் சீ.வைஜெயந்திமாலா | 11 |
| 44 | **சங்க காலத்தில் புரவலர்- புலவர்களின் நட்பும் - வாழ்த்துரைகளும்.**<br>*Sangakalathil Puravalar – Pulavarkalin Natpum- Valthuraikalum*<br>முனைவர் ச.க. அழகாம்பிகை \| முனைவர் இரா.சுரேஷ் | 18 |
| 45 | **திருக்குறளில் காணப்படும் கல்வி முகாமைத்துவக் கோட்பாடுகள்**<br>*Educational Management Theories in Thirukkural*<br>சுப்பிரமணியம் விஷ்வநாதன் | 30 |
| 46 | **எண்வகை மெய்ப்பாடுகள் வழி புறநானூறு**<br>*Purananuru through the Eight Forms of Emotional Expression (Meippadu*<br>முனைவர் சு.சாந்தி | 39 |
| 47 | **சங்க இலக்கியம் - குறுந்தொகையில் மலர்கள்**<br>*Flowers in Sangam Literature – Kuruntokai*<br>சபிதா பேகம் த | 48 |
| 48 | **காமத்துப்பாலில் அறிவியல்**<br>*Science in Kamathuppal*<br>முனைவர் கு.சக்திலீலா | 54 |
| 49 | **சங்க இலக்கியத்தில் மகளிர் விளையாட்டுகள்**<br>*Women’s Games in Sangam Literature*<br>முனைவர் க. பாலாஜி | 63 |
| 50 | **அண்ணன்மார்சாமி வரலாறும் வழிபாடும்**<br>*Annanmar Swami History and worship*<br>பெ. தாரணி \| முனைவர் ம. சுந்தரமூர்த்தி | 69 |
| 51 | **திருமந்திரம் கூறும் யோக நிலைகள்**<br>*Yoga States Described in the Thirumandiram*<br>முனைவர் சா.ஜா.கிதாரஞ்சிதபாக்கியம் | 75 |
| 52 | **குறுந்தொகையில் பல்துறை ஆய்வுகள்**<br>*Multidisciplinary Studies on Kuruntokai*<br>முனைவர் இரா.மாலினி | 81 |
| 53 | **சல்மாவின் சிறுகதைகளில் பெண்களின் குடும்ப அமைப்புகள் மற்றும் உளவியல் சிக்கல்கள்**<br>*Family Systems and psychological problems of women in Salma’s short stories*<br>சங்கீதா சி \| முனைவர் ப. ஜெயபாரதி | 92 |
| 54 | **கல்வி, அறிவு - போமோ நோக்கில் வள்ளுவன்**<br>*Education and Knowledge: Valluvan’s Perspective* | 97 |

| S.No. | Title of the Article / Author(s) | Page |
|---|---|---|
| | முனைவர் அ.ரம்யா | |
| 55 | **கல்வியே அழியாச் செல்வம்**<br>*Education is the imperishable wealth*<br>முனைவர் இரா.தட்சிணா மூர்த்தி | 103 |
| 56 | **சங்க கால மருதநில வேளாண் பயிர்களும், தொழிலும்**<br>*Agricultural Crops and Occupations in the Marutham Landscape during the Sangam Era*<br>முனைவர் மா.சத்யராஜ் | 111 |
| 57 | **பன்னிருதிருமுறையில் மனிதநேயச் சிந்தனை**<br>திருமதி ப.செல்வமணி \| முனைவர் ப. திலகவதி | 121 |
| 58 | **கள்ளியங்காட்டு மாரியம்மன் திருக்கோவில்**<br>*Kalliyankattu Mariamman Temple*<br>ர. தமிழ்தானு \| முனைவர் ம. சுந்தரமூர்த்தி | 126 |
| 59 | **குறுந்தொகைப்பாடல்களில் உள்ளுறை வழியாக வெளிப்படும் தலைவன் தலைவி**<br>*The Hero and Heroine as Revealed Through Ullurai (Inner Meaning / Implicit Metaphor) in Kurunthogai Poems*<br>முனைவர் ச. சரவணத்தாய் | 137 |
| 60 | **ஆண்டாள் திருப்பாவை கூறும் உளவியல் கருத்துக்கள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் - ஓர் ஆய்வு.**<br>*Psychological Insights and Concepts of Social Unity in Andal's Thiruppavai: A Study*<br>முனைவர். செ. ராஜேஸ்வரி | 145 |

**ARTICLE 41 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 1–4

# புறநானூற்றில் அரசியல் கோட்பாடுகளும் செங்கோன்மை நெறிகளும்

## Political Theories and Principles of Righteous Rule in Purananuru

**ச.வடிவேல் விரிவுரையாளர்**
(இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை)
நிறுவனம் - ஆசிரியர் வாண்மை விருத்தி மத்திய நிலையம்
கொழும்பு இலங்கை
TELEPHONE 0094717032642 0094777032642
மின்னஞ்சல் wadeewell@gmail.com

### Abstract

Among the records of internal and external lives of the ancient Tamil society, Purananuru is an incomparable historical treasure. The poems of Purananuru discuss in detail the political structure, duties of kings, principles of governance, taxation theories, and the functioning of courts of justice during the Sangam era. This paper comprehensively examines the political concepts featured in Purananuru, the system of righteous governance known as "Sengonmai" (unwavering justice), and the relationship between the state and its citizens. This paper establishes that concepts equivalent to modern political science thoughts were in practice as early as the Sangam period.

### ஆய்வுச் சுருக்கம்

பண்டைய தமிழ்ச் சமூகத்தின் அகம், புற வாழ்க்கைப் பதிவுகளுள் புறநானூறு ஒப்பற்ற வரலாற்றுப் பேழையாகும். சங்க கால அரசியலமைப்பு, மன்னர்களின் கடமைகள், ஆட்சி நெறிமுறைகள், வரி வசூல் கோட்பாடுகள் மற்றும் அறமன்றங்களின் செயல்பாடுகள் குறித்துப் புறநானூற்றுப் பாடல்கள் விரிவாகப் பேசுகின்றன. இக்கட்டுரை, புறநானூற்றில் இடம்பெற்றுள்ள அரசியல் கோட்பாடுகளையும், "செங்கோன்மை" எனப்படும் நீதி தவறா ஆட்சிமுறையையும், அரசுக்கும் குடிமக்களுக்கும் இடையிலான உறவையும் விரிவாக ஆராய்கிறது. நவீன அரசியல் அறிவியல் சிந்தனைகளுக்கு இணையான கோட்பாடுகள் சங்க காலத்திலேயே நடைமுறையில் இருந்ததை இக்கட்டுரை நிறுவுகிறது.

**திறவுச் சொற்கள்:** புறநானூறு, செங்கோன்மை, அரசியல் கோட்பாடு, அறநெறி, வரி விதிப்பு, குடிதழீஇய ஆட்சி, அரசநீதி.

ஆய்வு நோக்கம் (Objective)

பண்டைய தமிழ் இலக்கியமான புறநானூற்றில் வெளிப்படும் அரசமைப்பு சார்ந்த அரசியல் கோட்பாடுகளையும், மன்னர்களின் நீதி தவறா ஆட்சிமுறையான "செங்கோன்மை" நெறிகளையும் விரிவாக ஆராய்ந்து, அவை தற்கால உலகளாவிய நல்லாட்சிச் ((Good Governance)) சிந்தனைகளுக்கு எவ்வகையில் அடிப்படையாக அமைகின்றன என்பதை நிறுவுதல்.

1. அறிமுகம் (Introduction)

ஒரு நாட்டின் அமைதிக்கும், வளர்ச்சிக்கும், மக்களின் நல்வாழ்விற்கும் திறம்படச் செயல்படும் அரசியல் அமைப்பும் நீதி நெறியும் அவசியமானவை. சங்க இலக்கியங்களில் புறநானூறு அரசியல்

சிந்தனைகளின் கருவூலமாகக் திகழ்கிறது. பேரரசர்கள், குறுநில மன்னர்கள், வேளிர்கள் எனப் பலத்தரப்பட்ட ஆட்சியாளர்களின் ஆட்சிமுறையைச் சங்கப் புலவர்கள் நேர்மையோடும் நடுவுநிலையோடு மதிப்பிட்டுப் பதிவு செய்துள்ளனர்.

அரசன் என்பவன் எதேச்சதிகாரம் படைத்த ஆட்சியாளன் அல்லன்; மாறாக, அறத்தின் காவலன்; மக்களின் சேவகன் என்ற உயரிய கோட்பாடு புறநானூற்றில் வலியுறுத்தப்படுகிறது.

2. அரசனுக்கான அறமும் செங்கோன்மை நெறியும்

சங்கப் பாடல்களில் "செங்கோல்" என்பது நீதியையும் நேர்மையையும் குறிக்கும் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு மன்னனின் உண்மையான ஆற்றல் அவனது படை பலத்திலோ அல்லது கூரிய வேலிலோ இல்லை அவனது நடுவுநிலை தவறாத நீதியிலேயே உள்ளது.

‘வேலன்று வென்றி தருவது மன்னவன்’
கோலதூஉம் கோடா தெனின்"— (புறநானூறு: 55)

மன்னன் கோடாத செங்கோலை உடையவனாக இருந்தால் மட்டுமே அவனுக்கு வெற்றி கிடைக்கும் என்பதை இப்பாடல் வெளிப்படுத்துகிறது. மேலும், அரசன் நீதி தவறினால் நாட்டில் பருவ மழை பொய்த்துப் போகும் என்ற நம்பிக்கையும், அரசனுடைய ஆட்சியின் நல்ல விளைவே இயற்கையின் வளம் என்ற எண்ணமும் சமூகத்தில் நிலவியது.

3. அரசனை மையப்படுத்திய சமூகப் பொறுப்பு

அரசன் நாட்டின் உயிராகக் கருதப்பட்டான். ஆனால், அந்த உயர்வு அவனது அதிகாரத்தைக் காட்டிலும் அவனது கடமையையே அதிகம் நினைவூட்டியது.

“நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால், யான்உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்கு கடனே"
— (மோசிகீரனார், புறநானூறு: 186)

மக்களின் வாழ்வாதாரத்திற்கு உணவும் நீரும் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் ஒரு நல்அரசனின் ஆட்சி. தான் நாட்டின் உயிர் என்பதை உணர்ந்து, குடிமக்களைப் பாதுகாப்பதே மன்னனின் தலையாயக் கடமையாகும்.

4. பொருளியல் மற்றும் வரி விதிப்புக் கோட்பாடு (Taxation Policy)

ஒரு நாட்டின் அரசு இயங்குவதற்கு வரி அவசியமானது. ஆனால், அவ்வரி குடிமக்களுக்குச் சுமையாக இருக்கக் கூடாது என்பதைப் புறநானூறு தெளிவான உவமையின் மூலம் விளக்குகிறது.

பிசிராந்தையார், பாண்டியன் அறிவுடை நம்பிக்கு அறிவுறுத்தும் பாடலில்:

ஒரு சிறிய நிலத்தில் விளைந்த நெல்லை அறுத்து உணவாக்கினால், யானைக்குப் பல நாட்களுக்கு உணவாகும்.

அதே யானை புகுந்து தானாக உண்ணத் தொடங்கினால், அது உண்பதை விடக் காலால் மிதித்து அழிப்பதே அதிகமாகும்.

'அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்...

யானைப் புக்க புலம்போல
தானும் உண்ணான் உலகமும் கெடுமே"
— (பிசிராந்தையார், புறநானூறு: 184)

முறை அறிந்து வரி திரட்டினால் நாடும் மன்னனும் வளம் பெறுவர்;. முறை அறியாது கொடுங்கோன்மையால் வரி வசூலித்தால் நாடும் அழியும், அரசனுக்கும் பயன் கிடைக்காது என்ற பொருளியல் கோட்பாடு இதில் வெளிப்படுகிறது.

5. புலவர்களின் அரசியல் வழிகாட்டலும் இடித்திடித்தலும்

சங்க காலத்தில் புலவர்கள் வெறும் அரசவைப் புகழ்பாடிகளாக இல்லாமல், மன்னர்களின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் அரசியல் ஆலோசகர்களாகச் செயல்பட்டனர்.

நீர்ப்பாசன வழிகாட்டல்: குடபுலவியனார், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்துகையில், நிலத்தையும் நீரையும் ஒன்றிணைத்துப் பாசன வசதிகளைப் பெருக்கும் அரசனே உலகத்தில் நிலையான புகழைப் பெறுவான் என்றார் (புறநானூறு: 18).

போரைத் தடுத்தல்: மன்னர்களிடையே தேவையற்ற போர்கள் நிகழும்போது கோவூர் கிழார் போன்ற புலவர்கள் தூது சென்று போரைத் தடுத்து, பொதுமக்களையும் வளங்களையும் காப்பாற்றினர்.

6. அறமன்றங்களும் ஜனநாயகக் கூறுகளும்

மன்னன் தனித்து முடிவெடுக்காமல், சான்றோர்கள் அடங்கிய அவையின் ஆலோசனையைப் பெற்றே ஆட்சி நடத்தினான்.

"அறமன்றங்கள்" நடுவுநிலையோடு நீதி வழங்கும் மையங்களாகச் செயல்பட்டன.

குற்றங்களை ஆராய்ந்து, தராசு போலச் சமமாக நீதி வழங்கும் முறை பின்பற்றப்பட்டது.

7. முடிவுரை (Conclusion)

புறநானூறு காட்டும் அரசியல் கோட்பாடுகள் தற்கால உலகளாவிய ஜனநாயக மற்றும் நல்லாட்சி (புழழன புழளநசயெnஉந) நெறிமுறைகளுக்கு மிகவும் நெருக்கமானவை.

1. அதிகாரத்தை விட நீதிக்கே முதன்மை.

2. மக்க நலனை அடிப்படையாகக் கொண்ட வரி விதிப்பு.

3. இயற்கையையும் நீர் வளத்தையும் பேணும் நாட்டின் பொருளியல் வளர்ச்சி.

4. ஆட்சியாளரைக் கண்டிக்கும் சுதந்திரமான தன்னாட்சி அமைப்புகள் (புலவர்கள்ஃசான்றோர்கள்).

இத்தகைய உன்னதமான அரசியல் மற்றும் செங்கோன்மை நெறிகளை உலகிற்கு உணர்த்தும் ஒப்பற்ற இலக்கியமாகப் புறநானூறு திகழ்கிறது.

## துணைநூற் பட்டியல் (References)


1. சாமிநாதையர், உ. வே. (பதிப்பாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உ. வே. சா. நூல்நிலையம், சென்னை.
2. சுப்பிரமணியன், ந., சங்ககால அரசியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3. கைலாசபதி, க., பண்டைய தமிழர் வாழ்வும் வழிபாடும், மக்கள் வெளியீடு.
4. பிள்ளை, கே. கே., தமிழக வரலாறும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
5. கைலாசபதி, க. (1978). தமிழ் வீரநிலைக்கவிதை. குமரன் புத்தக இல்லம்.
6. வானமாமலை, நா. (1981). பண்டைய தமிழ்ச் சமூகமும் பண்பாடும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

**ARTICLE 42 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 5–10

# ஜெயமோகன் சிறுகதையில் பெண்ணியச்சிந்தனை

**மு. கார்த்திகைச் செல்வி**
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
ரத்தினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோயம்பத்தூர்
9080411315
rameshkarthika0781@gmail.com

## முன்னுரை

பெண்கள் இந்நாட்டின் கண்கள் என்றும், நம் தாய் திருநாட்டினை ‘பாரதமாதா” என்றும் பெண்ணுக்கு நிகராக ஒப்புமைப்படுத்தியும், பெருமைப்படுத்தியும் பேசிய இந்த சமுதாயம், பெண்ணை ஒரு கேலிப் பொருளாகவும், சுகப் பொருளாகவும் பார்க்கின்றது. தற்காலத்தில் பெண்களின் நிலையைக் குறித்து, ஜெயமோகனின் ‘தேவகிச் சித்தியின் டைரி“ என்னும் சிறுகதையில் “பெண்ணியச் சிந்தனை” அதன் கோட்பாடுகள் பற்றியும் புரிதல்கள் பற்றியும், ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இவ் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## பெண்ணியக்கோட்பாடு – வரையறைகள்

‘பெண்மையும்“, பெண்ணியமும்“ ஒன்றல்ல, வேறு வேறு ‘பெண்மை” என்பது பெண்களுக்கு இயல்பாக அமைய வேண்டுமென ஆணாதிக்கச் சமுதாயம், எதிர்நோக்கும் மரபியல் சார்ந்த அச்சம் மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு பண்புகளைக் குறிக்கும் சொல்லாகவே தொல்காப்பிய நெறிமுறையில் இன்று வரையில் ஆளப்பட்டு வருகின்றன.

திரு.வி.க. – ‘பெண்மை” – என்பதற்கு, அடக்கம், பொறுமை, தியாகம், பிறர்நலம் பேணல், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு, முதலான பண்புகள் அமைந்ததே பெண்மை என்று கூறுகிறார். அவர் கூறும் இப்பெண்மை பண்புகள், பெண்களை அடக்கி ஒடுக்கும் பெண்மைப் பண்புகளாகவே உள்ளன. தமிழிலக்கிங்களில் பெண்மையின் மென்மைப் பண்பு மரபாகக் ”கொடியினம்” எனவே குறிக்கப் பெற்றுள்ளன. இது ஆண்கள் வரையறுத்த பெண்மைக்கான மரபு இலக்கணமாகும். இப் பண்புகள் அனைத்தும் பெண்மையைப் பெருமைப்படுத்துவதாக இல்லை.

## பெண்ணியம் – விளக்கம்

பெண்மை – பெண்ணியல்பு என்னும் கருத்தாக்கங்களிலிருந்து வேறுபட்டு தற்காலத்தில் “பெண்ணியம்” என்னும் இலக்கிய வழக்காறு பெற்றுள்ளது. “feminism” என்னும் ஆங்கிலச்சொல்லின் தமிழாக்கமாக இச்சொல் பயன்பட்டு வருகின்றது. ”பெண்ணியம்” என்பது புதிய சமூகச்

சூழலில் பெண்களைப் பற்றிய புதிய பார்வையின் அடிப்படையில் எழுந்துள்ள கோட்பாட்டைக் குறிக்கும் ன முத்துச்சிதம்பரம் கூறியுள்ளார்.

”பெண்ணியம்” என்னும் சொல் 1890 முதல் பாலினச் சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்களுக்காகப் போராடும் இயக்கங்களையும் குறிக்கப்பயன்பட்டு வருகின்றது. எனினும் இருபதாம் நூற்றாண்டில் தான் பெருவழக்கில் வந்தது. தமிழில் “பெண் இருப்பு“ – என்ற சொல்லுக்கு இணையானதாகப் பெண்ணியம், பெண் நிலைவாதம், பெண்ணிமை ஏற்பு முதலான சொற்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எனினும் பாலியல் சுரண்டலற்ற சமுதாயத்தைப் படைப்பதே பெண்ணியக் காட்பாட்டின் நோக்கமாகும்.

“ஜெயமோகனின் ”தேவகிச் சித்தியின் டைரி” என்ற சிறுகதையில் பெண்ணியக் கோட்பாட்டுச் சிந்தனைகள்

ஜெயமோகனின் இச்சிறுகதையில் “பெண்ணிமை“ பற்றிய வினாவை எழுப்புகின்றார். அக்காலத்தில் பெண்களுக்கு டைரி எழுதும் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. இச்சிறுகதையில் வரும் தேவகியும் அவள் கணவன் மணியும் அலுவலகத்தில் பணி செய்கின்றனர். அவர்கள் வாழும் கூட்டுக்குடும்பத்தில் தாத்தாவும் பாட்டியும், மரபு வழிச்சடங்குகளில் பற்றுறுதியுடன் வாழ்பவர்கள். படிக்காதவரான மணியின் அண்ணன் நாராயணனே குடும்பத்தின் தலைவர் ஆவார். நாராயணனின் மனைவியும் படிக்காதவளே. அவள் தன் வீட்டுவேலைகளே உலகம் என்று வாழும் மரபு வழிப்பட்ட மனைவி ஆவாள்.

## கதைக்களமும், போக்கும்

இக் கதை சொல்லியான ”குஞ்சு” பள்ளியில் படிப்பவன். இவன் நாராயணனின் மகன் ஆவான். இவனாலேயே (குஞ்சு) இக் கதையின் போக்கு மாறுகின்றது. இவன் தேவகி சித்தி டைரி எழுதும் விசயத்தைத் தன் அம்மாவிடம் கூறுகிறான். இதனால் பிரச்சினை பூதாகரமாக மாறுகிறது. கதைக்களம் சூடுப்பிடிக்கிறது.

மணியும் தேவகியும் மாலையில் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய போது தாத்தா, பாட்டி, நாராயணன், அவள் மனைவி அனைவரும் ஒன்று கூடி தேவகியிடம் அவள் எழுதும் டைரியைப் பற்றி விசாரிக்கின்றார்கள். ஆனால் தேவகியோ தான் எழுதிய டைரியை யாரும் படிக்கக் கூடாது என்று அழுது புலம்புகிறாள். தாத்தா எழுந்து ஏன் புருஷன் கூட படிக்கக் கூடாத ரகசியம் என்ன உனக்கு என்று அதட்டினார்.

”வேண்டாம் யாரும் அதைப்படிக்கக்கூடாது”

”அப்படியென்ன ரகசியம் பெண்ணுக்கு வேண்டிக்கிடக்கிறது” என்றால் மணியின் அம்மா. ”என் தாலிமேல் ஆணையாகச் சொல்கிறேன். அதில் என் மனசாட்சிக்கு விரோதமாக ஒன்றுமே இல்லை என்னை நம்புங்கள்” என்று தேவகி வீட்டில் உள்ளவர்கள் அனைவிடமும் கெஞ்சுகிறாள். இவ்வாறு கதைக்களம் அமைகிறது.

## பெண்மையும், ஆணாதிக்கமும்

தெற்காசிய நாடுகள் “பெண்ணியம்”- என்பதற்கு ”பெண்களே சமூகத்திலும், அலுவலகத்திலும், வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும், அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும், பெண்களும் ஒருவரையெருவர் புரிந்துகொண்டு செயற்படுதலும்” என்பதே பெண்ணியம் என இரா.பிரேமா பெண்மையை வரையறுத்துள்ளார்.

இவரின் விளக்கத்தின்படி பாலின அடிப்படையில் சமூகத்திலிருக்கும் ஏற்றத்தாழ்வுகளையும், முரண்பாடுகளையும், ஆணாதிக்கத்தையும், ஆணின் தலைமைப் பண்பை அறிந்த அந்நிலையை மாற்றி ஆண், பெண் சமத்துவம், சமுதாய நிலையைக் காண முயல்பவர்களே பெண்ணியவாதிகள் ஆவர்.

ஆண்கள் தங்கள் வலிமையையும், கமூகத்தில் மற்றவர் முன் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவும்,பெண்களிடம் தன் ஆணாதிக்கத்தைக் காட்ட முற்படுகின்றனர். பெண்களை முன்னிலைப்படுத்தினால் தான் (ஆண்கள்) இந்த சமூகத்தில் தாழ்ந்து விடுவோம் என்று அஞ்சியே பெண்ணை முன்னேற விடாமல் முடக்குகின்றனர்.

அப்படித்தான் இந்நத சிறுகதையில் உள்ளது. தேவகி நன்கு படித்தவள். அலுவலகத்தில் வேலை பார்க்கின்றாள் அது பிடிக்காத அந்த வீட்டின் ஆண்கள் அவளை அடக்க முற்படுகின்றனர். தேவகி ஒரு டைரி எழுதுகிறாள். அது தெரிந்த அவள் கணவன் மணி அந்த டைரியைப் படிக்க முயற்சி செய்கின்றான்.

”இதோ பார் தேவகி, இவர்கள் சந்தேகப்படுவது போல இதில் தப்பாக ஏதும் எழுதவில்லைதானே” என்று கேட்கிறான் மணி. அதற்கு அவள் (தேவகி) ”திருச்செந்தூர் முருகன் மேல் ஆணையாக வேறெதும் இல்லை” என்று கூறுகிறாள். ஆனால் அதை நம்பாமல் தன் குடும்ப உறுப்பினர்கள் முன் தன் ஆணாதிக்கத்தை நிலை நிறுத்த முற்படுகின்றான்.

”அப்படி என்றால் ஏன் பயப்படுகின்றாய்? நான் படித்துவிடுகிறேன். பிரச்சினை தீர்ந்து விடும்” என்று கூறி டைரியை படிக்க முயற்சி செய்கிறான். வேண்டாம் என்று தடுக்கிறாள். அவளை உற்றுப்பார்த்தான் மணி. அவன் முகம் கோணியது. ”அப்படியா சங்கதி அப்படியானால் படித்துப்பார்த்துவிட்டுத் தான் மறுவேலை” என்று கூறி தேவகியின் டைரியைப் படித்தே தீரவேண்டும் என்று தன் அதிகாரத்தை நிலை நிறுத்தத் துணிகிறான். பின்பு தேவகியை “ தேவடியாள்” என திட்டி அவளை அவள் அப்பா வீட்டில் விட்டுவிட்டுவந்து விடுகிறான். இவ்வாறு ஆண்கள் ஆணாதிக்கத்தை நிலை நிறுத்த பெண்ணை இந்தச் சமூகத்தில் பகடைக்காயாக உருட்டி விடுகின்றனர்.

## சமுதாயத்தில் பெண்களின் இடம்

பெண்கள், ஆண்களுக்கு நிகராாணவர்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வைப்பதே பெண்ணியமாகும். பெண்ணாகப் பிறந்ததற்காகவே அவள்

உலகின் அனைத்துச்சமூகங்களிலும் ஒதுக்கப்படுகிறாள். பெண்கள் ஆண்களைச் சார்ந்தே வாழக் கூடியவர்கள், தனித்தியங்கும் ஆற்றல் இல்லாதவர்கள் என்பது ஆண்களின் குறைவான மதிப்பீடு. பெண்கள் ஒரு சமூக இனமாவர். பெண்களின் மகப்பேறு என்னும் தன்மையே இதற்கு அடிப்படையாகும். சமூகத்தில் பெண்களின் இடம் வீடு" என வரையறை செய்திருப்பது ஆண்களின் சுயநலம் மற்றும் உளவியல் சார்ந்தது

இக்கதையிலும் ஆண்களே தலைமைப் பண்பிலும், பெண்கள் அவர்களின் கீழ் இருக்கும் நிலையை ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். கதையில் வரும் தேவகி டைரி எழுதியதற்காக அந்த வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் அவளை தவறாகப் பேசி காயப்படுத்துகின்றனர். தேவகியின், கணவன் மணி ஒருபடி மேலே சென்று அவளைத் திட்டி இனி இந்த வீட்டில் உனக்கு இடமில்லை, உன் அப்பா வீட்டிற்கு செல் என்று விட்டுவிடுகிறான். இதற்கு பிறகு தேவகியின் நிலை என்ன? தேவகியின் வாழ்க்கை என்ன? என்று எதையும் யோசிக்காமல் மணி அவனின் இடத்திலிருந்து மட்டும் செயல்படுகிறான்.

## சமுதாயத்தில் பெண்ணுக்கு பெண்ணே – எதிரி

இநத சமுதாயத்தில் பெண் வாழ்ந்தாலும் பேசும், தாழ்ந்தாலும் பேசும். தமிழ் கமூகத்தில் நெடுங்காலமாகச் சொல்லப்பட்டு வரும் மரபு சார்ந்த மதிப்பீடுகளால் பெண்கள் வீட்டிற்குள்ளேயே சிறை வைக்கப்படுகின்றனர். சமூக நிகழ்வுகளில் பெண்கள் பங்கேற்கை தடைச் செய்யப்படுகின்றது. குடும்ப அமைப்பை வைத்தே பெண்கள் ஒடுக்கப்படுகின்றனர். குடும்பத்தில் பெண்கள் அடைக்கப்படும் போது அதிலிருந்து அவர்கள் வெளியே வருவதற்கு "பண்பாடு" தடையாக உள்ளது. பெண்களுக்கு வீட்டிலும் சரி வெளியிலும் சரி பெண்களுக்கு பெண்களே எதிரியாக உள்ளனர்.

இக்கதையில் வரும் தேவகிக்கும் அந்த குடும்பத்தில் உள்ள பாட்டி, குஞ்சுவின் அம்மா, எதிர் வீட்டு ராணி அத்தை என்று அனைவரும் அவளைக் காயப்படுத்துகின்றனர்.

குஞ்சுவின் அம்மா அலுவலகம் செல்லும் பெண்களை மிகவும் கேவலமாக நினைப்பவள். அவள் தன் மாமியாரிடம் இந்த மானம் கெட்ட பிழைப்பு எங்கள் குடும்பத்தில் இல்லை" என்று தேவகியை குத்திக்காட்டி கேவலமாகப் பேசுகின்றாள்.

"நாலுபேர் முன்னால் உட்கார்ந்து அரட்டையடிப்பதும் கண்டவன் வாயால் பேச்சுக் கேட்பதும்" எனக்குப் பிடிக்காது என்றும் ஏசுகின்றாள். இது மட்டும் அல்லாமல் "தேவகி அலுவலகம் சென்ற பின்னர் எதிர் வீட்டு ராணியத்தையும் பாட்டியும், குஞ்சுவின் அம்மாவும் தேவகி புதுப்புடவை வாங்கியதைப் பற்றியும் அவள் வீட்டிற்கு அடங்காமல் அலுவலகம் செல்கிறாள் என்றும் பேசுகின்றனர்.

அப்போது "தேவகி சித்தி டைரி" எழுதுகின்றாள் என்று குஞ்சு அவள் அம்மாவிடம் கூறுகின்றான். அதனால் அந்தக் குடும்பத்தில் மிகப்பெரிய பிரச்சினை ஏற்படுகிறது. குஞ்சுவின் அம்மா அதை உடனே தன் கணவன் நாராயணனிடம் சொல்லி பலவாறு பேசி அழுது புலம்புகின்றாள். "

குஞ்சுவிற்குத் தெரியவில்லை. இந்தப் பிரச்சினை இவ்வளவு பெரிய பூதாகாரமாக வரும் என்று பாட்டி அவள் பங்கிற்கு பேசுகிறாள். நாராயணா அவள் சொல்வதிலும் காரியம் உண்டு. கேட்டாயா? இந்தக் காலம் பழைய காலமில்லை. எங்கள் காலத்தில் தலையும் முலையும் வந்த பெண்ணைச் சகோதரன் கூடப் பார்க்க முடியாது. இப்போது போடுகிற வேஷமும், ஆடுகிற ஆட்டமும் ஜாக்கிரதையாக இருந்தால் தோசமில்லை" என்று கூறினாள். இவ்வாறு இக்கதையில் ஒரு பெண்ணுக்கு சக பெண்களே எதிரியாக உள்ளதைப் பார்க்க முடிகிறது.

## பெண்களின் நிலை

"பெண்ணியம்" என்ற சொல் பெண் எந்த ஆணுக்கும் நிகரானவளே. எந்த நிலையிலும், எந்த காலத்திலும் அவளைத் தனிமைப்படுத்திவிடக்கூடாது. சார்பு நிலைப்படுத்தக்கூடாது என்று பொருள்படுகின்றது. இது ஆண் மேலாதிக்கத்தில் வழிவழியாக வந்து கொண்டிருக்கும் பண்பாட்டுத் தொடர்ச்சியில் பெண்கள் எவ்விதமான தனித்துவமும் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆண்களின் பாலியல் தேவைகளுக்குப் பயன்படும் பொருளாகத் தள்ளப்பட்டுள்ளனர் பெண்கள். ஆண்களைச் சார்ந்து அவர்களது நலன் பேணுவதையே தன் வாழ்வாக உள்ளனர். இந்தச் சமுதாயத்தில் பெண்கள் எல்லாத் துறைகளிலும் உரிமைகள் வழங்கப்படவேண்டும். ஆண், பெண் சமத்துவம் என்ற சமூகத்தை உருவாக்க வேண்டும்.

இந்தக்கதையில் தேவகி டைரி எழுதியது தெரிந்த கணவன் அவளை அவள் அப்பா வீட்டில் விட்டுவிடுகிறான். இதன்பிறகு கதை சொல்லும் குஞ்சு "ஒரு மாதம் சித்தியின் (தேவகி) அப்பாவும், பெரியப்பாவும் வருவதும், பேசுவதும் விவாதிப்பதும் எல்லாம் நடந்தது ஆனால் சித்தியை வீட்டுக்கு கூட்டி வரவேயில்லை. அவளை சித்தப்பா (மணி) விவாகரத்து செய்து விட்ட விஷயம் மூன்று வருடம் கழித்து அவர் வேறு ஒரு திருமணம் செய்தபோதுதான் எனக்குத் தெரிந்தது, என்று குஞ்சுவின் கூற்றுடன் முடிகின்றது.

மரபுவழிப் பண்பாட்டிலும் சிந்தனைகளிலும் ஊறிப்போன பழங்காலத்துப்பாட்டியும், நவீனத்துவ வளர்ச்சியைக் கண்டிருந்தும் அதனை ஏற்காத நாராயணன் அவனது மனைவி பெண் கல்வியால் ஏற்பட்ட மாற்றங்களுக்கும் பெண்களின் முன்னேற்றத்திற்கும் தடையாகவும் எதிரியாகவும் அமைகின்றன.

## முடிவுரை

ஜெயமோகனின் "தேவகிச் சித்தியின் டைரி" என்ற இச்சிறுகதையில் கூட்டுக்குடும்ப வாழ்க்கையில் புகுந்த வீட்டில் தேவகி அந்த வீட்டுப்பெண்களால் தன் வாழ்வு சீரழிந்ததையும், பெண்களே பெண்ணின் வாழ்வுக்கும், உரிமைக்கும், எதிரிகளாக இருப்பதைக் கதையின் ஓட்டத்தில் மிக அழகாகக் கூறியுள்ளார்.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. திரு.வி.கலியாணசுந்தரனார் - பெண்ணின் பெருமை, ப12

2. ச. முத்துச்சிதம்பரம் பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் ப5
3. இரா. பிரேமா பெண்ணியம் ப.10
4. Juttie and Lisa Encyclopedia of Feminism
5. Nancy F Coft. Grounting Modern Feminism Page 5
6. May E. Haunesnerth Page 151
7. கோ. சரோஜா பெண் படைப்பாளிகளின் புதினங்களில் பெண்ணியப் பார்வை ப.311
8. ஜெயமேகனின் சிறுகதைகள் ப. 209
9. மேலது பக் 212.
10. மேலது பக் 215-216
11. மேலது பக் 217

## துணைநூற் பட்டியல் (References)

1. ஜெயமோகன் சிறுகதைகள் உயிர்மை பதிப்பகம் சென் 2004
2. ச. முத்துச்சிதம்பரம் --பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும் மெய்யப்பன் பதிப்பகம் சிதம்பரம்
3. கோ. சரோஜா பெண்ணியப் படைப்பாளிகள் புதினங்களில் பெண்ணியப்பார்வை – முல்லை நிலையம் சென்னை 2001
4. இரா. பிரேமா பெண்ணியம் தமிழ் புத்தகாலயம் சென்னை- 2005
5. திரு. வி கலியாணசுந்தரனார், பெண்ணின் பெருமை 1 (அ) வாழ்க்கைத்துணை, பாவை பப்ளிகேஷன்ஸ் சென்னை 2005

**ARTICLE 43 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 11–17

# ‘செல்லாத பணம்’ நாவலின் பாத்திரப் படைப்பு

## Characterization in the Novel Chellatha Panam

**முனைவர் சீ.வைஜெயந்திமாலா**
தமிழ் இணைப்பேரசிரியர் மற்றும் துறைத் தலைவர்
குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர் – 613 007.
Mobile: 7373440336.
E-mail:vaijayanthimalakng@gmail.com

**Abstract**
This article, titled "Characterization in the Novel *Chellatha Panam*," explores the relationship between the creator and characterization, discussing the views of various scholars, the significance of characterization, and the nuances of crafting male, female, and supporting characters. Through the character of Revathi, the author illustrates a poignant situation: despite possessing money, it

**Keywords:** Novel – fiction, lead roles – main characters – supporting characters – associate characters – conflict – struggle – creation – formation, portraying – describing, heart.

**ஆய்வுச் சுருக்கம்**
‘செல்லாத பணம்’ நாவலின் பாத்திரப் படைப்பு என்ற இக்கட்டுரையில் வழி படைப்பாளனும் பாத்திரப் படைப்பும் – பாத்திரப் படைப்பு பற்றிய பல்வேறு அறிஞர்களின் கருத்துக்கள், பாத்திரப் படைப்பின் இன்றியமையாமை, முழுமையான பாத்திரப் படைப்பு, ஆண் பாத்திரங்கள், பெண் பாத்திரங்கள், துணைநிலைப் பாத்திரங்கள் இவற்றைப் பற்றி விவரித்து இந்நாவலில் காணப்படும் ரேவதியின் வாழ்க்கையில் பணம் இருந்தும் இறுதியில் அவளின் உயிரைக் காப்பாற்ற முடியாத காரணத்தினால் அப்பணமானது செல்லாத பணமாகப் போய்விட்ட நிலையை ஆசிரியர் இப்பாத்திரத்தின்வழி வெளிப்படுத்தியுள்ளார்.

**திறவுச் சொற்கள்:** நாவல் – புதினம், தலைமைப் பாத்திரங்கள் – முதன்மை மாந்தர்கள் – துணை மாந்தர்கள் - இணை மாந்தர்கள் – மோதல் – போராடுதல் – சிருஷ்டி – உருவாக்கம், சித்தரிப்பது – வருணிப்பது, நெஞ்சு – இதயம்.

## முன்னுரை

இக்கால இலக்கியத்தில் நாவல் இலக்கியம் சிறப்பானதோர் இடத்தைப் பெற்றிருக்கிறது. நாவல் இலக்கியம் சமகாலத்தில் வாழும் மக்களுடைய வாழ்க்கையை உளவியல் சிந்தனையோடு உணர்ச்சிகளின் வெளிப்பாடாக படைக்கப்படும் ஒரு வகை கலையாக அமைந்துள்ளது. நாவல் இலக்கியம் தனிமனித உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதோடு மனித சமுதாய உணர்வுகளையும் பல்வேறு கதைமாந்தர்களால் வெளிப்படுத்தி மனித வாழ்க்கையின் உண்மையை படம்பிடித்துக் காட்டுகிறது. இத்தகைய நாவல் இலக்கிய உலகில் வெ.இமையம் எழுதிய ‘செல்லாத பணம்’ நாவலின் பாத்திரப் படைப்பை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு நாவலாக உயிர்நாடி பாத்திரப் படைப்புதான். உலகத்துப் பெரு நாவல்களைப் பற்றி நினைக்கின்ற போது உடனே நம் நினைவுக்கு வருவது கதைமாந்தர்கள் தான்.

## படைப்பாளனும் பாத்திரப் படைப்பும்

படைப்பாளன் தன் உணர்வுகளை பாத்திரப் படைப்புகள் மூலமே வெளிப்படுத்துகிறான். ஒரு நாவலின் வெற்றிக்கு பாத்திரப் படைப்பு காரணமாக இருப்பதால் படைத்தவனைவிட படைக்கப்பட்டவன் பயில்வோர் நெஞ்சில் ஆழமாக பதிந்து விடுகின்றாள்.

நாவலாசிரியர் தம் படைப்புகளில் இயல்பான நிலையில் உயிரோட்டம் உள்ள படைப்பாக படைத்துக் காட்டும் போதுதான் வெற்றி பெறுகிறான். சிறந்த இலக்கியம் மாந்தர்களின் வாழ்க்கைத் தத்துவத்திலிருந்து தோன்றுகிறது. மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் கண்ட அனுபவத்திலிருந்து வெளிப்பாடு இலக்கியமாகிறது.

## பாத்திரப் படைப்பு

நாவல் கூறுகளுள் முதன்மையானதும் சிறப்புமிக்கதும் பாத்திரப் படைப்பே ஆகும். நாவலின் கதைப்பின்னலைவிட முக்கியமானது பாத்திரப் படைப்பு. இது நாவலுக்கு சிறப்பையும் உயிரோட்டத்தையும் கொடுக்கின்றன.

“மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையே தோன்றும் மோதலை அடிநிலையாகக் கொண்டதே நாவல் இலக்கியம். இதன் காரணமாகவே நாவலின் பாத்திர வார்ப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நாவலின் மகத்துவம் மனிதன் சிருஷ்டிக்கும் திறத்தைப் பொறுத்திருக்கிறது”1

என க.கைலாசபதி கூறுகிறார்.

பாத்திரங்களை விளங்கச் செய்யும் தனி இயல்புகள் நாம் உயரிய மானிட உணர்ச்சிகளை எழுப்பிய அமைதியையும் இன்பத்தையும் அளிக்கிறது.

“பாத்திரங்களை நாவலாசிரியர் இருவகையில் உருவாக்கலாம். முதலில் நிகழ்ச்சிகளை உருவாக்கிக் கொண்டு பின்னர் அதற்கேற்ப பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்தல் ஒருவகை. மற்றொரு வகையில் பாத்திரங்களை முதலில் உருவாக்கிக் கொண்டு பின்னர் அவற்றிற்கேற்ப நிகழ்ச்சிகளை அமைத்தலாகும்”2

என மா.ரா. குறிப்பிடுகின்றார்.

நாவலில் பாத்திரங்களை திறம்பட அமைப்பதும் அவர்களின் குணங்களை சித்தரிப்பதும் ஒரு கலையாகும். பாத்திரங்களையும் அவர்களின் குணச்சிறப்புகளையும் உண்மையான வாழ்க்கையிலிருந்தே எடுத்துக் கூறப்படுகிறது.

> “ஒரு நாவலை நாம் நினைக்கும் போது அதன் கதையைவிட முதலில் நம் மணக்கண்ணில் தெரிவது அந்த நாவலில் இடம்பெறும் பாத்திரங்களே”3

என இரா.தண்டாயுதம் குறிப்பிடுகின்றார். வாழ்க்கையானது பல வகையான நிகழ்ச்சிகள், செயல்கள், உள நெகிழ்ச்சிகள், அனுபவங்கள் ஆகியவற்றால் ஆனது. நாவல் பொதுவாக வாழ்க்கையைச் சித்தரிக்கிறது.

## பாத்திரப் படைப்பின் இன்றியமையாமை

வாழ்க்கை காட்டிய வழியில் சித்தரிக்க விரும்புபவர்கள் வாழ்க்கையின் பல துறைகளிலும் ஈடுபட்டுச் செயல் புரியும் பாத்திரங்களை மேலும் விரிவாகவும், அழகாகவும் சித்தரிப்பது இன்றியமையாததாகிறது. பாத்திரங்கள் நாவலின் மற்றொரு சுவையான பகுதியாகும். நாவலின் நிகழ்ச்சிகள் சுவையுடன் நடைபெற பலவிதமான குணச்சிறப்புகளையுடைய பாத்திரங்கள் இன்றியமையாத அம்சங்களாகும்.

“ஒரு நாவலின் கருவுக்கு உயிரும் உணர்ச்சியும் வாழ்வு இல்லை. ஒரு நாவலின் நடைக்கும் நம் நெஞ்சை அள்ளும் ஆற்றல் இல்லை. நம் நெஞ்சில் உயிரும் உணர்ச்சிமிக்க வாழ்வு கொண்டு வாழும் ஒரு நாவல் கூறு பாத்திரப் படைப்பே ஆகும்”4

என மோகன் குறிப்பிடுகின்றார்.

நாவலில் வரும் பாத்திரங்களே அதன் உயிர் மூச்சென்று கூறுவதுண்டு. என்னென்ன சிறப்புக் கூறுகளைக் கதையாசிரியர் கூற நினைக்கிறாரோ அவற்றிற்கெல்லாம் தனித்த ஒரு பாத்திரத்தை அமைத்துக் கொள்கிறார். ஒரு மாந்தரின் ஆளுமை, ஒரு சமூகத்தின் தனித்தன்மை முதலியன பாத்திரங்கள் வாயிலாகவே வெளிப்படுகின்றன.

“ஒரு புதினத்தின் வெற்றி தேர்ந்தெடுக்கும் பாத்திரப் பொறுத்தே அமைகிறது. படைப்பவரின் உணர்ச்சி அனுபவத்தை ஒட்டி அமைவதே பாத்திரப் படைப்பு சூழ்நிலை, எண்ணங்கள், செயல் மூலம் அவர்தம் பண்பு வெளிப்படும்”5

என்று மா.இராமலிங்கம் கூறுகிறார். நாவலில் பாத்திரங்கள், பேச, நடமாட செயல்புரிய கதை நகர்கிறது. வாழ்க்கைத்தான் நாவல். நாவல்தான் வாழ்க்கை. வாழ்க்கையில் சந்திக்கும் நபர்களையும் நாவல்களில் சந்திக்கிறோம்.

## முழுமையான பாத்திரப் படைப்பு

பாத்திரங்கள் ஒரு கற்பனைப் படைப்பே என்பதை மறந்து நாம் அவர்கள் சிரிக்கும் போது சிரித்தும், துன்பப்பட்டு வருந்தும் போது வருந்தியும் அவர்களுடன் கலந்து உறவாட வேண்டும். அப்போதுதான் பாத்திரம் முழுமையடைகிறது.

ஒரு பாத்திரம் உயிருள்ளது போலக் காட்டப்பட வேண்டுமானால் புறத்தோற்றம், அசைவுகள், ஜாடைகள், நடத்தைமுறை, பழக்கம், மற்றவர்களோடு நடந்துகொள்ளும் முறை, பேச்சு, தனக்குத்தானே நடந்துக் கொள்ளும் முறை, சுற்றுப்புறச் சூழல், ஏனையப் பாத்திரங்களோடு நடந்துக் கொள்ளும்முறை, பாத்திரத்தின் கடந்தகால

வாழ்வு, பெயரமைதி போன்றவைகள் இருப்பின் அவை முழுமையாக பாத்திரத்தின் தன்மையை வெளிப்படுத்தும்.

## முதன்மைப் பாத்திரங்கள்

முதன்மைப் பாத்திரங்கள் நாவலுக்கு உயிர் நாடியாக அமைந்துள்ளன. குணங்களின் அடிப்படையில் பாத்திரங்கள் படைக்கப்படுகின்றன. குணச் சிறப்புகளுடைய பாத்திரங்கள் முதன்மைப் பாத்திரமாக விளங்குகின்றன. நாவலின் இறுதி வரையிலும் இப்பாத்திரங்கள் நாவலின் கதை அமைப்புக்கும் நாவலின் முடிவுக்கும் ஒரு முக்கியப் பங்கினை அளிக்கின்றன.

முதன்மைப் பாத்திரங்கள்
ஆண் பாத்திரங்கள் பெண் பாத்திரங்கள்
1. நடேசன் 1. ரேவதி
2. முருகன் 2. அமராவதி
3. ரவி 3. கோகிலா
4. கணபதி 4. பிரியங்கா
5. குமார் (டிரைவர்) 5. அருள்மொழி

## நடேசன்

பள்ளி தலைமையாசிரியர். கல்விப் பணியை கடமையோடும் நேர்மையோடும் விரும்பி செய்பவர். தேவார, திருவாசகங்களை ஓதுபவராக இருக்கிறார். நிறைய புத்தகங்களை வாசிப்பவர். தனது மனைவியிடம் கோபமாக பேசியது கூட இல்லை. தனது மகன், மகள் மீது மிகுந்த அன்புக் கொண்டவர்.

## முருகன்

ரேவதியின் அண்ணன். தங்கையின் மீது மிகுந்த அன்புக் கொண்டவர். ரேவதியின் தோழி அருள்மொழியை திருமணம் செய்து கொண்டவன். சென்னையில் டி.சி.எஸ். கம்பெனியில் டீம் லீடராக இருக்கிறான்.

## ரவி

பர்மாவிலிருந்து வந்த ஒரு அகதி. ஆட்டோ ஓட்டுபவன். குடிக்காரனாக இருக்கிறான். உழைத்து மனைவி மக்களை காக்கத் தெரியாதவன் பொருளாதாரத்தில் பின் தங்கியவன். ரேவதியை காதலிப்பதாக கையில் பிளேடால் கிழித்துக் கொள்பவன். திருமணத்திற்குப் பிறகும் குடித்துவிட்டு சண்டையிடபவன், அடிப்பவன். ரேவதியிடம் உள்ள பணத்தை திருடி சாராயம் குடித்து வருபவன். வாரத்தில் நான்கு நாட்கள் அடிதடி என்று காவல் நிலையத்திற்கு செல்பவன், படிப்பறிவு இல்லாதவன்.

## கணபதி

ரவியின் தந்தை கணபதி. பர்மாவிலிருந்து வந்த அகதி. படிப்பறிவு அற்றவர் வேலையில்லாதவர் பர்மாவிலிருந்து கொண்டு வந்த பொருட்களை எல்லாம் விற்பவர். குடும்பத்தின்மீது பொறுப்புணர்ச்சி அற்றவர்.

### குமார் (டிரைவர்)

நடேசனின் கார் டிரைவர் குமார். நடேசன்மீது மதிப்பும் மரியாதையும் கொண்டபவன். அனைவரிடமும் பாகுபாடின்றி பழகுபவன். சமூகத்தின் யதார்த்த நடைமுறைகளை நன்கு அறிந்தவர். போலீஸாரின் குணநலன்களை நன்கு அறிந்தவன். எப்போதும் யதார்த்த உணர்வோடு இருப்பவன். இரக்கக் குணம் மிக்கவன்.

பெண் பாத்திரங்கள்

### ரேவதி

நடேசனின் மகள். வசதியான வீட்டுப் பெண். பொறியியல் பட்டதாரி. பர்மாவிலிருந்து வந்த அகதி. ஆட்டோ ஓட்டுநர் ரவியை காதலித்து திருமணம் செய்து கொண்டவள். இரண்டு குழந்தைகளுக்குத் தாய். தன் கணவன் தரும் துன்பங்கள், அடி, உதை அனைத்தையும் தாங்கிக் கொள்கிறாள்.

### அமராவதி

ரேவதியின் தாய். மகளின் மீது அன்பும் அக்கறையும் கொண்டவள். ரேவதியின் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து அவளது மனதை மாற்ற பல முயற்சிகள் செய்தும் தோல்வி அடைந்தவள். நடேசன், முருகனின் சம்மதத்தைப் பெற்று திருமணம் செய்து வைக்கிறாள். ரேவதிக்கு தீ விபத்து ஏற்பட்ட பிறகு அவனை பல வகைச் சொற்கள் கொண்டு திட்டுபவளாக ஆசிரியர் படைத்துள்ளார்.

### அருள்மொழி

ரேவதியின் கல்லூரி தோழி. ரேவதி அண்ணன் முருகனை காதலித்து திருமணம் செய்து கொள்கிறாள். ரேவதியின்மீது அன்பும் அக்கறையும் கொண்டவள். ரேவதியின் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து கல்லூரி காலங்களில் ரேவதி எப்படி இருந்தாள், இப்போது இப்படி ஆகிவிட்டாளே என்று வருத்தமடைகிறாள்.

### கோகிலா

ரவியின் தாய். ரவியின் காதல் செய்தி தெரிந்தவுடன் தன் மகள் பிரியங்காவிற்கு திருமணம் செய்து வைத்து நீ எதை வேண்டுமானாலும் செய்துகொள்ள என வசைச் சொற்களால் திட்டுகிறாள். தன் கணவன் கணபதியை கடுகளவு கூட மதிக்காதவள்.

### பிரியங்கா

ரவியின் அக்கா. 30 வயதாகியும் திருமணம் ஆகாதவள். துணிக்கடையில் வேலைப் பார்ப்பவள். மிகவும் அமைதியும் பொறுமையும் உடையவள்.

### துணைப் பாத்திரங்கள்

முதன்மைப் பாத்திரத்திற்கு துணையாகவும், முதன்மைப் பாத்திரம் பற்றி விளக்கம் தருபவர்கள். தலைமைப் பாத்திரத்தை இயக்கி வைக்கும் பண்பை வெளிப்படுத்தும் தன்மையுடையவர்கள்.

| துணைமைப் பாத்திரம் | | |
|---|---|---|
| ஆண் பாத்திரங்கள் | பெண் பாத்திரங்கள் | பெயர் குறிப்பிடாத பாத்திரங்கள் |
| கருதூர் சுந்தரமூர்த்தி (ஜோசியக்காரர்)<br>தணிக்காச்சலம் (மருத்துவர்)<br>சிவபாதம் (அமராவதி-தங்கை கணவர்)<br>சுந்தரம் (அருள்மொழி தந்தை)<br>ஏட்டு கணேசன்<br>கான்ஸ்டபிள்<br>ஆனந்தகுமார்<br>இராமலிங்கம் (உதவி ஆய்வாளர்)<br>செல்வம் (உதவி ஆய்வாளர்)<br>கதிரவன் (தமிழக முன்னேற்ற கழக நகரச் செயலாளர்)<br>அருள் (தமிழக மக்கள் கட்சி நகரச் செயலாளர்)<br>கண்ணன் (எஸ்.ஐ.) | மலர், மாலதி (நர்ஸ்)<br>லட்சுமி<br>கமலம் (அருள்மொழி அம்மா)<br>தங்கம்மாள்<br>கலா | 1. செக்யூரிட்டி<br>2. நர்ஸ்<br>3. மார்சுவரி ஆட்கள் |

## முடிவுரை

தனது வர்க்கத்துக்கு குறைவான ஒரு பர்மா அகதியை சாதி கடந்து திருமணம் செய்துகொள்ளும் ஒரு பெண் தன்னைச் சுற்றியுள்ள சமூக மதிப்பீடுகளுக்கு எப்படி தன்னை பலி கொடுக்க வேண்டி உள்ளது என்பதை ஆழமாக எடுத்தியம்புகிறது இந்நாவல். இந்நாவலின் பாத்திரங்களை ஆசிரியர் மிகவும் எதார்த்த நிலையில் படைத்துள்ளார். மனிதன் பணத்தைத் தேடி ஓடிக்கொண்டே இருக்கிறான். பணத்தைக் கொண்டு உலகையே விலை பேசுகிறான். அந்த பணமும் ஒரு இடத்தில் செல்லாமல் போகும். அதன் மதிப்பிழந்து போகும் தருணத்தை வாழ்வின் நிலையாமையாகிய இந்நாவல் விளக்குகிறது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. க.கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், ப.216.
2. மா.இராமலிங்கம், நோக்கு நிலை, ப.132.
3. இரா.தண்டாயுதம், நாவல் வளம், ப.95.
4. இரா.மோகன், மு.வ.வின் நாவல்கள், ப.157.
5. மா.இராமலிங்கம், நாவல் இலக்கியம், ப.69.

## துணைநூற் பட்டியல் (References)

1. இமையம், வெ. செல்லாத பணம். சென்னை: க்ரியா பப்ளிகேஷன்ஸ், மு.ப., 2018.
2. இராமலிங்கம், மா. நாவல் இலக்கியம். சென்னை: தமிழ் புத்தகாலயம், 1975.

3. இராமலிங்கம், மா. நோக்குநிலை. கும்பகோணம்: ராசிப் பதிப்பகம், 1984.
4. கைலாசபதி, க. தமிழ் நாவல் இலக்கியம், திறனாய்வு கட்டுரைகள். சென்னை: குமரன் பப்ளிகேஷன்ஸ்.
5. தண்டாயுதம், இரா. நாவல் வளம். சென்னை: மலாய்ப் பல்கலைக்கழகம்.
6. மோகன், இரா. டாக்டர் மு.வ.வின் நாவல்கள். சிதம்பரம்: மணிவாசகம் செயலகம், 1981.

**ARTICLE 44 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 18–29

# சங்க காலத்தில் புரவலர்- புலவர்களின் நட்பும் - வாழ்த்துரைகளும்.

## Sangakalathil Puravalar – Pulavarkalin Natpum- Valthuraikalum

**முனைவர் ச.க. அழகாம்பிகை**
பேராசிரியர் தமிழ்
எம் .குமாரசாமி பொறியியல் கல்லூரி
தளவாபாளையம்- கருர்.
azhakambigai30@gmail.com
9677918113

**முனைவர் இரா.சுரேஷ்**
உதவிப்பேராசிரியர் தமிழ்
மகேந்திர பொறியியல் கல்லூரி
மல்லசமுத்திரம் நாமக்கல்.
katradhutamizhsure@gmail.com
9787310682

**Abstract**

Sangam literature is a valuable repository that reflects the culture, social life, political conditions, economic activities, and literary traditions of ancient Tamil society. The poets of the Sangam age not only composed poems in praise of kings and philanthropists but also recorded their mutual friendship, affection, respect, and literary relationships. The friendship among poets was not merely a personal bond; it was founded on values such as virtue, knowledge, generosity, art, and social responsibility. Relationships such as those between Kapilar and Pari and Avvaiyar and Athiyaman illustrate the close bond between poets and patrons and reveal the humanistic values of Sangam society. The words of appreciation, praise, and benediction exchanged among poets also demonstrate their mutual respect and literary fellowship. This study examines the nature of friendship, mutual appreciation, and benedictions among Sangam poets through selected literary references. It further highlights the literary, social, and cultural significance of these relationships and their contribution to the development of Tamil literary tradition.

**Keywords:** Sangam Literature, Sangam Poets, Poetic Friendship, Benedictions, Praise, Kapilar, Pari, Poet–Patron Relationship, Humanism, Tamil Culture.

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியம் தமிழரின் பண்பாடு, சமூக வாழ்வு, அரசியல், பொருளாதாரம் மற்றும் கலை இலக்கியச் சிந்தனைகளை எடுத்துரைக்கும் தொன்மையான இலக்கியக் களஞ்சியமாக விளங்குகிறது. சங்ககாலப் புலவர்கள் அரசர்களையும் வள்ளல்களையும் பாடியதோடு மட்டுமல்லாமல், தங்களுக்கிடையேயான நட்பு, அன்பு, பரஸ்பர மரியாதை மற்றும் இலக்கியப் பிணைப்புகளையும் தமது பாடல்களில் பதிவு செய்துள்ளனர். புலவர்–புலவர் நட்பு என்பது தனிப்பட்ட உறவாக மட்டும் அமையாமல், அறம், அறிவு, கொடை, கலை மற்றும் சமூகப் பொறுப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாக அமைந்திருந்தது. குறிப்பாக கபிலர்–பாரி, ஔவையார்–அதியமான் போன்ற புலவர்–வள்ளல் உறவுகளும், புலவர்கள் ஒருவருக்கொருவர் வழங்கிய பாராட்டுரைகள் மற்றும் வாழ்த்துரைகளும் சங்ககால சமூகத்தின் உயர்ந்த மனிதநேயப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன. இவ்வாய்வு சங்க இலக்கியப் பாடல்களின் வழியாகப் புலவர்களின் நட்பு, பரஸ்பரப் பாராட்டு, வாழ்த்துரை ஆகியவற்றை ஆராய்ந்து, அவற்றின் இலக்கிய மற்றும் சமூகப் பொருண்மைகளை

வெளிப்படுத்துகிறது. மேலும், புலவர் உறவுகள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கும் ஆற்றிய பங்களிப்பையும் இந்த ஆய்வு எடுத்துரைக்கிறது.

**திறவுச் சொற்கள்:** சங்க இலக்கியம், புலவர்கள், புலவர் நட்பு, வாழ்த்துரைகள், பாராட்டு, கபிலர், பாரி,புலவர்–வள்ளல் உறவு, மனிதநேயம், தமிழ்ப் பண்பாடு.

## முன்னுரை

ஒப்பற்ற தாய்மொழியாம் தமிழ்மொழியை முத்தமிழ், பைந்தமிழ், செந்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், என்றெல்லாம் வழங்கி வருவது போன்று சங்கத்தமிழ்; என்றும் வழங்கி வருகின்றோம் . பழந்தமிழரின் அகவாழ்வும் புறவாழ்வும் பற்றிச் சங்க இலக்கியங்கள் சாற்றுகின்றன தமிழ்மொழிக்குக் கிடைத்த பெருஞ்செல்வமாகச் சங்க இலக்கியம் திகழ்கின்றது சங்க இலக்கிய வேந்தர்கள் செந்தமிழ் புலமை நலத்திலும் புலவரைப் போற்றும் பெருந்தன்மையிலும் குடிபுறந்தழுவிக் கோலோச்சும் செங்கோன்மையிலும் சமுகப்பணியிலும் திகழ்ந்தனர். சங்க இலக்கிய காலங்களில் வேந்தர்களும் புலவர்களும் நட்புடன் வாழ்ந்ததை இவ்வியியல் மூலம் அறியலாம்.

போரும் பூசலும் மிகுந்திருந்த பண்டையக் காலத்தில் பன்னாட்டுப் புலவர்கள் ஒன்றுக்கூடித் தமிழை ஆய்ந்தனர். முடியுடை வேந்தர்கள் சிற்சில நேரங்களில் தம்முள் முரண்பட்ட போதிலும் தமிழால் இணைந்திருந்தனர் அவர்கள் பூசலைத் தமிழ்ப் புலவர்கள் தீர்த்த வரலாறுகளும் உண்டு மேலும்

> “நிலன் நாவில் திரிதருஉம் நீண்மாடக் கூடலார்
> புலனாவில் பிறந்த சொல் புதிதுண்ணும் பொழுதன்றோ?
> (கலித்தொகை) 35 (17-18)
> “ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன் தலைவனாக
> உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற் புலவர் - புறம் 72 (13-16)

என்ற பாடலின் மூலம் புலவர்கள் பலர் கூடித் தமிழ் ஆய்வு செய்ததையே கூறுகின்றதை அறியலாம் . சங்கஇலக்கியத்தில் புரவலர் எனச் சுட்டுவது பெருவேந்தர்களையும் குறுநிலமன்னர்களையும் வள்ளல்களையும் குறிப்பிடுவார்கள்.

## புலவர் விளக்கம்

புலமை நலம் சான்றோர்களைப் புலவர் என சங்க இலக்கியத்தில் குறிப்பிடப்படுகிறது செய்யுள் செய்யும் ஆற்றலுடையாரக கவிஞர் என்றும் பாவலர் என்றும் குறிப்பது பிற்கால மரபாகும் சங்ககாலத்தில் அறிவாளர் என்னும் பொருளுடைய புலவர் என்ம் சொல்லாலேயே அவர்கள் அறியப்பட்டனர்.

(சு.தட்சினாமூர்த்தி –சங்க இலக்கியங்கள்
உணர்த்தும் மனித உறவுகள்)

## புலவர் தொழில்

மதி நுட்பமும் புலமை நலமும் வாய்ந்த புலவர்களின் தொழிலாகக் கவிதை இயற்றுவதையே கொண்டிருந்தனர் புலமை நலத்தோடு வறுமையும் ஆட்கொண்டிருந்தது என்றால் மிகையில்லை இன்நிலையில் அவர்கள் தம் வறுமை பெரும் பொருளை வாரி வழங்கும் வள்ளல்களையும் அரசர்களையும் தேடிச் சென்று பால் புனைந்து பெற்ற பொருளைத் தாமே அனுபவிக்காமல் தன்னை போல வறுமையுற்றவர்களுக்கும் பகிர்ந்து அளித்து வாழ்ந்தனர்.

‘சங்க காலப் புலவர்கள் தன்னை பாணராகவும் பொருநராகவும் பிற இரவலராகவும் கற்பித்துக்கொண்டு பாடுதலை ஒரிலக்கியவுத்தியாகக் கொண்டோராவர் புலவர்களை அன்றைய தமிழ் மன்னர்கள் பசியால்வாட இடமளிக்கவில்லை தம் நாட்டு அறிஞர் தம் பகைமன்னர்பால் பொருள் பெற்றத் தங்கள் வறுமையையும் துடைக்குமாறு விட்டிருப்பின் அஃது அவர்களுக்கு இழுக்காகும் .

## புலவர் - உளவியலாளர்

“சங்கப் புலவர்கள் ஓர் உளவியலாளரைப் போலச் செயல்பட்டுள்ளனர் சங்க புலவர்கள் சிறந்த உளவியலறிஞர்களாக விளங்கியுள்ளனர். மன்னர்களின் உளப்பாங்கினை விருப்பு வெறுப்புகளைப் புறிந்து கொண்டு அவர்களை மகிழ்விக்க முயன்றுள்ளனர் . புலவர்கட்கு பெரும் பொருளைப் பரிசிலாக அளித்தமைக்கு அறிவை மதித்தமை மட்டும் காரணமன்று புலர்களின் வாழ்த்தும் பாராட்டும் கூடக் காரணமாக அமைந்தன.”

## வேந்தர்கள் - புலவர்கள் நட்பு

புலவர்கள் மீது சங்ககால அரசர்கள் வள்ளல்கள் அளவற்ற பற்று கொண்டுள்ளனர் என்பதை சங்க இலக்கியப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது கோப்பெருஞ்சோழன் முன்பின் பார்த்தறியாத மதுரையைச் சேர்ந்த பிசிராந்தையார் மீது பற்றுதலும் நட்பும் கொண்டிருந்தார் பறம்பு மலையை ஆண்ட பாரியின் மீது கபிலருக்கும் நட்பு இருந்தது அதியமான் நெடுமானஞ்சியும் ஒவ்வையாரும் உணர்ச்சி ஒத்த நட்புடையவர்களாகத் திகழ்ந்தனர் இவ்வாறு அரசருக்கும் புலவருக்கும் நட்பு ஏற்பட அரசருக்குத் தமிழ் மீது கொண்ட அளவற்ற பற்றுதலும் காரணம் எனலாம் புலவோர் பல்துறை அறிவையும் கொண்டவர்களாகக் சங்க காலத்தில் விளங்கினர் இதுவும் அரசர்கள் புலவர்களை நேசிக்கக் காரணமாக இருந்தது எனலாம்.

## கோப்பெருஞ் சோழன் - பிசிராந்தையார் நட்பு

கோப்பெருஞ்சோழன் அரசப் பொருப்பில் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டு வடக்கிருந்து உயிற்துறக்க முற்படுகின்றான் காணாமலேயே தன்னோடு நட்போடு மதுரைச் சேர்ந்த புலவன் பிசிராந்தையார் இருக்கின்றான் எனக் கூறி அவனுக்கும் தனக்குப் பக்கத்தில் இடம் ஒதுக்குமாறு கூறுகின்றான் அவன் கண்டிப்பாக என்னைத்தேடி வருவான் என்றும் கூறுவதை நோக்கும் போது அவ்விருவரின் நட்பின் மேன்மையை அறிந்து கொள்ளலாம் இதனை

" கவைக்கதர் வரகின் அவைப்புறு வாக்கல்
தாதுஎரு மறுகின் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்தயிர்க் கொளீஇ
ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை
ஆவரை கொய்யுநர் ஆர மாந்தும்
தென்னம் பொருப்பன் நல்நாட்டுஉள்ளும்
பாசிரோன் எள்ப என் உயிர் ஓம்புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லன் மன்னே" புறம் - (215)

என்னும் பாடலில் பிளவைக் கொண்ட வரகு கதிரின் அரிசியைக் குற்றி வடிக்கப் பெற்ற சோற்றையும் பூண் பொடியை எருப்போலக் கிடைக்கும் தெருவில் புழுதியில் மலர்ந்த வேளைப் பூலினைத் தயிரில் கலந்து ஆயர்மகள் ஆக்கி இனிய புளிங்கூழையும் அவற்றைப் பதிப்பால் நிரம்ப உண்ணும் தெற்கிலுள்ள பொதிய மலை நாட்டின் பிசிர் என்னும் ஊரினான் என்று சொல்லுவர் அவன் என் உயிரின் பாதுகாவலன் அவன் நான் ஆளும் காலத்தில் வராமல் இருந்தாலும் துயரம் கொண்ட இக்காலத்தில் வராதிருக்க மாட்டான் எனப் பிசிராந்தையார் மீது கோப்பெருஞ்சோழன் கொண்ட நம்பிக்கையையும் நட்பையும் தெளிவாக எடுத்துரைக்கிறான்

கோப்பெருஞ்சோழன் தனது உயிரின் பாதுகாவலன் என தாம் எழுதிய பாடலில் அவனது நட்புணர்hவைகட்டுகிறது . இதனை

"நினைக்கும் காலை மருட்கை உடைத்தே
ஏனைப்பெருஞ் சிறப்பினோடு ஈங்கு இது துணிதல்
அதனினும் மருட்கை உடைத்தே பிறன் நாட்டுத்
தோற்றம் சான்ற சான்றோன் போற்றி
இசை மரபு ஆக நட்புக் கந்து ஆக
இனையது ஓர் காலை ஈங்கு வருதல்
வருவான் என்ற கோனது பெருமையும்
அது பழுது இன்றி வந்தவன் அறியவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பு இறந்தன்றே"

இப்பாடலில் கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையார் நட்பை எடுத்துரைத்து பெருமகிழ்வுடன் வியப்பும் அடைகின்றார் இப்பாடலில் மூலம் இருவரின் நட்பின் ஆழத்தையும் உணர்வையும் அறிய முடிகிறது.

## கோப்பெருஞ்சோழன் - பொத்தியார் நட்பு

கோப்பெருஞ்சோழன்- பிசிராந்தையாரோடு மட்டுமின்றி பொத்தியாருடனும் நல்ல நட்போடு இருந்துள்ளான் இதனை

"நும்கோ யார்? என வினவில் எம்கோக்
குளகமர்க்குடி அரிந்த விளையல் வெங்கள்
யாமைப் புழுக்கின் காமர் விடா ஆரா
ஆரல் கொழுஞ்சடு அம்கவுள் அடாஅ
வைகு தொழுல் மடியும் மடியா விழவின்
யாணர் நல்நாட்டுள்ளும் பாணர்
பைதல் சுற்றத்துப் பசிப்பகை ஆகிக்
கோழி யோனே கோப்பெருஞ்சோழன்
போத்திஇல் நண்பின் பொத்தியோடு கெழீஇ

வாய்ஆர் பெருகை வைகலும் நக்கே" (புறம்) - 212

என்னும் பாடலின் மூலமாக பிசிராந்தையார் பாடிய பாடலில் பொத்தியா ரோடு கோப்பெருஞ்சோழனுக்கு இருந்த நட்புறவை பிசிராந்தையார் எடுத்துரைக்கின்றார்.

## பாரி – கபிலர் நட்பு

பாரி பறம்பு மலையை ஆண்ட சிற்றரசன் தன்னை நாடி வரும் இரவலர்க்கு இல்லையென்று வாரி வழங்கும் வள்ளமை மிக்கவர் ஆனால் தான் கடையெழு வள்ளல்களில் ஒருவராகவும் போற்றப்படு கின்றான் பாரியோடு குறிஞ்சித் திணை பாடுவதால் வள்ளவரான கபிலர் நட்பு கொன்டொழுகினர் பாரியின் வள்ளன்மைக் குணத்தையும் போர்த்திறனையும் பல பாடல்களில் எடுத்தியம்பி உள்ளார். குபிலர் பாரியின் பறம்பு மலை மீது பற்று கொண்ட மூவேந்தரும் ஒருங்கிணைந்து பாரியை வீழ்த்தி பாரியது மகளீரை தந்தையில்லாது தவிக்க விட்டனர் இத்தகையது நிலையைப் பற்றி பாரி மகளிர் பாடிய பாடலொன்றும் புறநானூற்றில் உள்ளது தந்தையை இழந்த அம்மகளிருக்கு மணம் முடித்து வைக்கும் கடமை கபிலருக்கு வந்து சேர்கிறது பாரியின் மீது கொண்ட அளவரிந்த நட்பாலும் அன்பாலும் ஏற்றுக் கொள்கிறார் கபிலர் முதலில் பாரி மகளிர்ரை விச்சிக்கோ என்னும் அரசனிடம் கொண்டுசென்று மணமகளிராக ஏற்றுக் கொள்ளும்படி தருகின்றார் அவ்வரசன் ஏற்க மறுக்கவே இருங்கோவேளிடம் கொண்டு சென்று அறிமுகப்படுத்துவதை

"இவர் யார்? என் குவை ஆயின் இவரை
ஊருடன் இரவலர்க்கு அருளித் தேருடன்
முல்லைக்கு ஈத்த செல்லா நல்இசைப்
னடுமணி யானை பறம்பின் கோமான்
நெடுமாப் பாரி மகளிர் யானே
தந்தை தோழன் இவர் என் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே – (புறம்) 200-1-7

என்று கூறுகின்றார் இவர் யார் என்று நீ கேட்டால் இவர் இரவலர்க்கு ஊர்களையும் வளத்தையும் தந்து முல்லைக்குத் தேர் கொடுத்த புகழை உடைய பறம்பு மலைத் தலைவன் பாரியின் மகளிர் நான் அப்பாரியின் நண்பன் அதனால் இவர் என் மக்கள் அருள்வழி நடக்கும் அந்தணனாகிய நான் இவர்களை அழைத்து வந்தேன் என்று கூறுவதததன் மூலம் கபிலரின் நட்புணர்வையும் கடமையையும் அறிய முடிகிறது நண்பனின் பிள்ளைகளைத் தம் பிள்ளைகளெனக் கபிலர் கூறுவதிலிருந்து பாரி மீது கொண்ட நட்பினை உணர்ந்து கொள்ளலாம்.இருங்கோவேளிடமும் விச்சிக்கோவிடமும் பாறியைப் பற்றிக் கூறுகையில் முல்லைக்குத் தேரீந்தவன் என்று அறிமுகம் செய்கின்றனர்.

புலவர்கள் அரசர்களுக்கும் பல்வேறு உதவிகளைச் சங்க காலத்தில் செய்துள்ளனர். அது அரசர்கள் வழங்கும் பொருளுக்காக அன்றி மன்னன் மீதும் மக்கள் மீதும் கொண்ட அளவற்றஅன்பால் நிகழ்ந்தது எனலாம் . இருமன்னர்களுக்கிடையில் நிலவிய பகைமையைப் போக்கத் தூதாகச் சென்றும் அறிவுரைவழங்கியும் தமது இன்னுரைகளால் திருத்தவும் செய்தனர்.

## புலவரைக் காத்த புலவர்

சோழன் நலங்கள்ளியிடமிருந்து உறையூர் புகுந்த இளந்தத்தன் என்னும் புலவனைக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி ஒற்று வந்தான் என்று சொல்ல முற்படும் போது கோவூர் கிழர் அப்புலவனைக் காத்து நின்று அரசனிடம்

“வள்ளியோர்ப் படர்ந்து புள்ளின் போகி
நெடிய என்னாது சுரம்பலகடந்து
வடியா நாலலின் வல்லாங்கும் பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் அருந்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்தும் இப்பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீது அறிந் தன்றோ ? இன்றே திறப்பட
நண்ணார் நாண அண்ணாந்து ஏகி
ஆங்கினிது ஒழுங்கின் அல்லது ஓங்குபுகழ்
முண்ஆள் செல்வம் எய்திய
நும் ஓர் அன்ன செம்மலும் உடைத்தே’’ ( புறம் )- 47

என்னும் பாலில் கொடுப்போரைத் தேடிப் பறவைகள் போல சென்று நீண்ட வழியென்று எண்ணாமல் பாலைநில வழியைக் கடந்து தெளிவில்லாத நாவால் இயன்ற அளவு பாடிப் பெற்ற பொருளுக்கு மகிழ்ந்து அவற்றைத் தம் சுற்றத்தினருக்குக் கொடுத்து நாளைக்கு வேண்டும் என்று பாதுகாக்காமல் தாம் உண்டு சுருக்கம் இல்லாமல் பிறர்க்கும் கொடுத்து பெருமிதம் குறைபடாதிருப்பதற்கு வருந்துவது புலவர் தம் பரிசில் வாழ்கையாகும் .

“அரசுக்கு அறிவுரை கூறியோரிற் பெரும் பாலோர் பணக்காரப் புலவராகிய கிழார்களேயென்றும் பிற புலவரை விடக் கிழார்ப் புலவர்கள் மன்னர்களோடு நெருங்கியிருந்தன என்றும் அவர்களுடைய செல்வமே உறவின் நெருக்கத்திற்கும்காரணம் என்றும் கருத்து தெரிவித்துள்ளார்.”

## வாழ்த்துரைகள்

## பாரியும் மாரியும்

வேள்பாரி பறம்பு மலைலை ஆண்டவன் முல்லைக் கொடி படர தனது தேரை ஈந்தவன் வள்ளன்மை மிக்கவன் இத்தகைய சிறப்புமிக்க பாரியைக் கபிலர் மாரி என்னும் மழையோடுஒப்பிட்டு வாழ்த்திப் பாடுகின்றார்.இதனை

“பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப்பதுவே” (புறம் )- 107

என்னும் பாடலில் பாரி பாரி என்று அவனைப் பாராட்டி அவன் ஒருவனையே புகழ்வர் நடுநிலைமை அமைந்த நாவுடைய புலவர் ஆனால் பாரி ஒருவன் மட்டும் அல்லன் மழையும் உண்டு இந்த உலகத்தைப் பாதுகாப்பதற்கு என்று கபிலர் பாரியை வாழ்த்துகிறார் பாரி கொடை கொடுப்பதில் மடத்தன்மைமிக்கவன் அதனால் தான்

முல்லைக்கொடிக்கு தான் பயணிக்கின்ற வாகனத்தையே கொடுத்தான் பாரியின் கொடைப்பண்பை மழையோடு ஒப்பிட்டுக் கபிலர் வாழ்த்தியது.

## புலவரின் வாழ்த்து

சங்க கால மன்னர்கள் புலவர்களின் வாழ்த்துக்களைப் பெறுவதை பெரும் பேறாகக் கருதினர் . இதன் காரணமாக தாமும் தன்னாடுவளம் மிகுந்ததாக மாறும் என நம்பினார் கல்வியில் சிறந்த புலவோரை போற்றவும் அவர்களை வாழ்த்தவும் மன்னர்கள் பெரிதும் விழைந்தனர் என்றே கூறலாம் இவ்வாறு புலவர் வாழ்த்திய மன்னர் பொருளை புலவர்களுக்கு வாரி வழங்கினர் எனலாம் புலவர்களும் பொருளுக்காக மட்டும் மன்னரையும் அவர் தம் வெற்றியையும் பாராட்டவில்லை என்றே கூற வேண்டும் இதனை

"புலவர்களால் மன்னர்களின் புகழ் பரலியது உண்மையெனினும் அவர்கள் திட்டமிட்டு அப்பணியைச் செய்யவில்லையென்று உணரமுடிகிறது இங்ஙனம் தம்மை வாழ்த்தியும் பாராட்டியுமே மகிழ்வித்தமையோடு தம் புகழ் பரவிடக் காரணமாகவும் இருந்த புலவர்கட்கு மன்னர்கள் பல சிறப்புக்களைச் செய்தனர் என்று சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள் என்னும் நூலில் எடுத்துரைக்கின்றனர்.

## ஔவையின் வாழ்த்து

அதியமான் நெடுமானஞ்சி மலைப்பக்கத்தே தனக்குக் கிடைத்த அரிய நெல்லிக்கனியை தாம் உண்ணாது ஔவையிடம் தருகின்றான் இதன் பலனை அறிந்த ஔவையார் அவனை சிவனைப் போல நீடுழி வாழ்வாயாக என்று வாழ்த்துகின்றன. இதனை

"பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணிமிடற்று ஒருவன் போல
மின்னுக பெரும !நீயே தொலைநிலைப்
பெருமலை விடகதடது அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கணி குறியாது
சாதல் நீங்க எமக்கு ஈத் தனையே ! (புறம் )91- 6-11

என்னும் பாடல் வரிகளில் பால்போலும் பிறையை முடியில் சூடியவனும் நீல மணி போலும் கலுத்தை உடையவனும் ஆகிய இறைவனைப் போல என்றும் நி நிலை பெறுவாயாக உயர்ந்த மலைப்பிளவின் மரத்திலிருந்து கொணர்ந்த சிறிய இலையை உடைய நெல்லியின் சுவையான கனியாகும் அக்கணியால் உண்டாகும் நலத்தை எனக்குச் சாவுதலைப் போக்க நீ தந்தனை ஆதலால் என்றும் வாழ்க என்று வாழ்த்துவதை அறிய முடிகிறது.

## பாண்டியனுக்கு வாழ்த்து

வடம வண்ணக்கன் பேரி சாத்தனர்இலவந்தியைப் பள்ளித்துஞ்சிய பாண்டியன் நன்மாறனை வாழ்த்திப் பாடுகிறார். இம்மன்னனின் செல்வத்தை திருமாலின் செல்வத்தோடு ஒப்பிட்டு வாழ்த்துகின்றார். இதனை

அருவி தாழ்ந்த பெருவரை போல
ஆரமொடுபொலிந்த மார்பில் தண்டாக்
கடவுள் சான்ற கற்பின் சேயிழை
மடவோள் பயந்த மணிமருள் அவ்வாய்க்
கிண்கிணிப் புதல்வர் பொலிக!என்று ஏத்தித்
திண்தேர் அண்ணல் நிற்பாராட்டிக்
காதல் பெருமையின் கணவினும் அரற்றும் என்
காமர் நெஞ்சம் ஏமாந்து உவப்ப
ஆல் அமர் கடவுள் அன்னநின்செல்வம
வேல்கெழு குருசில் ! கண்டேன ; ( புறம் )- 198 (1-10)
என்னும் பாடல்வரிகளில் அருவி விழும் பெரிய மலைபோல

மாலையோடு விளங்கும் மார்பையும் கடவுள் தன்மை வாய்ந்த குறையாத கற்புடைய உன்தேவி பவளம் போன்ற அழகிய வாயையும் கிண்கிணியை உடைய மக்கள் சிறக்க என்று பாராட்டி வலிமையான தேரை உடைய தலைவனே!உன்னையும் புகழ்ந்து பேரன்பினால் நனவில் மட்டும் அன்றிகனவிலும் உன் புகழ் கூறும் எனது நெஞ்சம் அந்நெஞ்சம் மகிழ ஆலிலையில் தங்கியுள்ள திருமால் போலும் செல்வத்தை உன்னிடம் கண்டேன் அதனால் விடைப்பெற்றேன் வாழ்க உனது கண்ணி என்று வாழ்த்துகின்றார் .

கனவிலும் உன்னையே எனது நெஞ்சம் சிந்திக்கும் என்று சாத்தனார் கூறியதுடன் திருமாலைப் போன்ற செல்வத்தை உன்னிடம் கண்டேன் நீ வாழ்க என்று வாழ்த்துகின்றார்.

## கோப்பெருஞ்சோழனை வாழ்த்தியது

கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்துறந்த போது அவனது அருமை பெருமைகளை நண்பரான பொத்தியார் என்பவர் பாடுகின் கையறு நிலையில் அமைந்த இப்பாடலில் அனைவரும் பாராட்டும் நிலையில் உயிரோடிருக்கும் போது வாழ்ந்தவன் என்று வாழ்த்திப் பாடுகின்றார் இதனை

“பாடுநர்க்கு ஈத்த பல்புக ழன்னே
ஆடநர்க்கு ஈத்த பேர் அன் பினனே
அறவோர் புகழ்ந்த ஆய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண் அன்பின்னே “ புறம் - 22

என்னும் பாடல் வரிகளில் பாடியவர்களுக்குக் கொடுத்த புகழை உடையவன் ஆடுபவர்களுக்கு கொடுத்த பெரிய அன்பை உடையவன் அறம் உடையோர் புகழும் பண்பாளன் என்று அவன் உயிரொடு இருக்கும் போது எல்லோருக்கும் உரியவனாகவும் அனைவரும் பாராட்டும் வகையில் வாழ்ந்தவன் என்பதைப் பொத்தியார் தமது பாடலில் எடுத்துரைக்கின்றார்.

## கோடையால் வாழ்த்து

தன்னை தேடிவரும் இரவரருக்கு புலவர்களுக்கும் நிறைய பொருளை வாரி வழங்கும் தன்னை கொண்டவனாகிய சேரமான் சிக்கர் பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதனை குண்டுகுட் பாலியாதனார் என்னும் புலவர் அவனது கொடைத் தன்மைக்காகவே வாழ்த்திப் பாடுகிறார் இதனை

பாடுநர்க்கு ஈத்த பல்புக ழன்னே
ஆடநர்க்கு ஈத்த பேர் அன் பினனே
அறவோர் புகழ்ந்த ஆய்கோ லன்னே
திறவோர் புகழ்ந்த திண் அன்பின்னே – (புறம் )-22 (1-4)

என்னும் பாடல் வரிகளில் பாடியவர்களுக்குக் கொடுத்த புகழை உடையவன் ஆடுபவர்களுக்கு கொடுத்த பெரிய அன்பை உடையவன் அறம் உடையோர் புகழும் செங்கோலாளன் சான்றோர் புகழும் பண்பாளன் என்று அவன் உயிரோடு இருக்கும் போது எல்லோருக்கும் உரியவனாகவும் அனைவரும் பாராட்டும் வகையில் வாழ்ந்தவன் என்பதைப் பொத்தியார் தமது பாடலில் எடுத்துரைக்கின்றார்.

## கொடையால் வாழ்த்து

தன்னைத் தேடிவரும் இரவலருக்கும் புலவர்களுக்கும் நிறைய பொருளை வாரி வழங்கும்தன்மை கொண்டவனாகிய சேரமான் சிக்கற் பள்ளித் துஞ்சிய செல்வக்கடுங்கோ வாழியாதனை குண்டுகுட் பாலியாதனார் என்னும் புலவர் அவனது கொடைத் தன்மைக்காவே வாழ்த்திப் பாடுகின்றார் இதனை

“பகைப்புல மன்னர் பணிதிறை தந்த நின்
நகைப்புல வாணர் நல்குரவு அகற்றி “ (புறம்) - 387 பக் -12-13

என்னும் பாடல்வரிகளில் பகைவேந்தர் பணிந்து தந்த கப்பப் பொருளை உன் இரவலர்களின் வறுமை நீங்கக் கொடுத்துச் சிறப்பால் உன் திருவடி வாழ்க என்று வாழ்த்திப் பாடுவதை மறிய முடிகின்றது.

## மாவளத்தானுக்கு வாழ்த்து

சோழன் நலங்கிள்ளியின் தம்பி மாவளத்தானும் தாமப் கண்ணாரும் வட்டாடிக் கொண்டிக்கையில் புலவர் அந்த ஆட்டத்தில் ஏதோ சூது செய்ய அதனைப் பொறுத்துக் கொள்ள மாட்டாத இளைஞனாகிய மாவளத்தான் கோபம் கொண்டு தன் கையில்pருந்து வட்டை வீசியெறியத் தாமப்பல் கண்ணார் நீ சோழனுக்குப் பிறந்தாய் அல்லை என்று மிகவும் கொடுமையான சொல்லால் அவனை இழித்துப் பேசினார் அக்கொடுஞ்சொல் கேட்டும் மாவளத்தான் அவர் மேல் சீற்றம் கொள்ளாது வெட்கத்தில் தலைகவிழ்ந்தான் கோபம் தணித்த தாமப்பல் கண்ணனார் தாம் செய்தது பிழையென்றிருந்தும் அதனைத் தைரியமாகத் தடடிக் கேட்ட அரசிளங்குமரனைத் தகாத வார்தையில் திட்டியதற்காக வருத்தம் கொண்டஅவர்தன் பிழையைப் பொறுத்த மாவளத்தான் பற்றி

‘ யானே பிழைத்தனென் ! சிறக்கநின் ஆயுள்
மிக்குவரும் இன்நீர்க் காவிரி
எக்கர் இட்ட மணசினும் பலவே ” (புறம்) - 43 (21-23)

என்ற பாடல்வரிகளில் நான் பிழை செய்தென் பெருக்கெடுத்து வரும் இனிய நீரையுடைய காவிரி ஒதுக்கிவிட்ட மேட்டின் மணலினும் பலவாக உன் வாழ்நாட்கள் சிறப்பதாக என்று வாழ்த்துவதைக் காணமுடிகிறது.

## மூவேந்தருக்கு வாழ்த்து

சேரமான் மாரிவெண்கோவும் பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழிதியும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் ஒருங்கு இருக்க அவ்வேந்தர்களை வாழ்த்திப் பாடுகிறார் ஔவையார் இதனை

நாகத்து அன்ன பாகுஆர் மண்டிலம்
தமவே ஆயினும் தம்மொடு செல்லா
…………………………
………………………………
உயர்து மேற் தென்றிப் பொலிக நும்நாலே ! (புறம்) - 367

என்னும் பாடலில் விண்ணுலகம் ஒத்த பகுதிகளை உடைய மண்ணுலகம் தம்முடையதே எனினும் தாம் இறந்து செல்லும் போது அது கூடவராதுடி பிறர் எனினுமு; வலிமையாளர்க்குரியதாயர் அமையும் இரந்துவந்த பார்ப்பனர்க்கு அவர்கை நிறையப் பொன்னும் பூவும் நீர்வார்த்து தந்து வளமான அணிகளன்கள் அணிந்த மகளிர் பொற்கலத்தில் ஏந்தி தந்த மதுவைப் பருகி மகிழ்ந்து இரவலர்க்கு அணிகலன்களைக் குறையாமல் வழங்கி வாழ வேண்டும் இவ்வுலகில் வாழ்வதற்காக வகுக்கப் பெற்ற எல்லை அளவும் நன்கு வாழ்வதற்கு வாய்ந்த நல்வினை ஒன்றும் இல்லாது பிறவிக் கடலில் நுன்புறும் காலத்தில் அதனைக் கடப்பதற்கு நல்வினையன்றி வேறுதுணை இல்லை வீடுபேறு என்னும் ஒன்றைவிரும்பி ஐம்பொறிகளை அடக்கிய அந்தணர் வளர்க்கும் முத்தீயையும் போலக்கண்டு மகிழ இருக்கும் வெண்கொற்றக்கொடையையும் கொடித்தேரையும் உடைய வேந்தர்களே வானில் விளங்கும் விண்மீன்களிலும் முழங்கிய பெய்யும் மழைத்துளிகளினும் மிகவும் மேம்பட்டவையாக உங்கள் வாழ்நாட்கள் விளங்குவன ஆகட்டும் என்று ஔவையார் அறிவுடன் கூடிய வாழ்த்தினை வேங்தருக்கும் கூறுகின்றார்.

## பதிற்றுப்பத்தில் புலவர் வாழ்த்து

சேர மன்னர்கள் பத்துப் பேரைப் பற்றி பத்துப் புலவர்கள் பாடிய நூலாதலின் இது பதிதற்றுப்பத்து எனப்பட்டது இந்நூலின் கடுமை கருதி இருப்புக் கடலை என்றும் கூறுவர் இந்நூலின் முதற்பத்தும் இறுதிப்பத்தாகிய பத்தாம் பத்தும் கிடைக்கப் பெறவில்லை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை குமட்டுர் கண்ணனார் வாழ்த்திப் பாடும் போது

“போர்வால் யானைச் சேர லாத!
நீவா ழியர்இவ் உலகத் தோர்க்கு என
உண்டு உரை மாறிய மழலை நாவின் ’
( பதிற்றுப்பத்து) – 15 (23 – 25)

என்ற வரிகளில் போர்த்தொழில் சிறந்த யானைகளை உடைய சேரலாதனே! உன் நாடுகள் உண்மையால் சொற்கள் தடுமாறும் மழலைச் சொற்களைக் கொண்ட நாவினையும் மென்சொற்களை உடையவரும்; இசைக்கருவிகளை வைத்த பையினை உடையவர்களும்

சிறப்பாக வாழ்வதற்காக நீ நீடுவாழ்வாயாக என்று யாழிசையோடு வாழ்த்தும் இயல்புடையளது என்று கூறுகிறார்.

இவ்வாறு பிறர் நலம் பேணும் ஈகைப்பண்பு உடையவர்கள் பல்லாண்டுகள் இம்மண்ணில் வாழும் இரவலர்கள் வறுமை நீங்கி வளமுடையவர்களாக வாழ வழி வகுத்துத் தருவதால் நெடுஞ்சேரலாதனைப் போன்ற புரவலர்களைப் பல்லாண்டுகள் வாழ்க என வாழ்த்துவது புலவர்களின் கடமையாகின்றது எனலாம்.

## ஐங்குறுநூறு வாழ்த்து

எட்டுத்தொகை நூல்களில் ஒன்று ஐங்குறுநூறு திணைக்கு நூறு பாடல்கள் வீதம் ஐந்திணைக்கும் ஐநூறு பாடல்களைக் கொண்டுள்ளது இந்நூலின் சில பாடல்களில் வாழ்த்து மொழிகள் காணப்படுகின்றன . தோழிக்கூற்றாக வரும் வேட்கைப் பத்து பாடலில் மருதம் பாடிய ஓரம் போகியார்

“வாழி ஆதன் வாழி அவிலி
விளைக வயலே ! வருகஇரவலர்!
எனவேட்ட்டாளே யாளே யாமே
பல் இதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்
தண்டுறை ஊரன் கோண்மை
வழிவழிச் சிறக்க! எனவேட் டேமே “ ( ஐங்குநுறூறு) – 2

என்னும் பாடலில் எங்கள் தாய் சேர மன்னனாகிய ஆதன் அவினி நீண்டநாள் சிறப்பாக வாழ்க எங்கள் நாட்டில் வயல்கள் மிகுதியாக விளைவைதட தரட்டும் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு இரவளர் வரட்டும் என்று விரும்பினான் எங்கள் குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறைகளையுடைய மருதநிலத்தலைவன் காதல் உறவு பல பிறவிகளிடம் தொடரட்டும் என்று விரும்பினாள் மருத நிலத்தில் நீல மலர்கள் மிகுதியாக மலர்ந்துள்ளன . அவை நெய்தல் மலர்களை ஒக்கும் என்று வாழ்த்திப் பாடுகின்றார்.

## முடிவுரை

சங்க இலக்கிய காலங்களில் ஆட்சி செய்யும் அரசனே ஆனாலும் தான் செய்யும் ஒவ்வொரு செயலையும் தானே முடிவு எடுப்பதில்லை ஐபெருங்குழு எண்பேராயம் இவற்றினை கொண்டு ஆலோசனைக் கேட்ட பிறகு தான் அரசன் எந்த முடியும் எடுப்பார் அக்காலத்தில் அரசர்கள் மக்களொடு மக்களாக வாழ்த்தார்கள் அதே போல் மன்னர்கள் புலவர்களின் ஆலோசனைகளை மிகவும் மதிப்பார்கள் . புலவர்களோடு நட்புக் கொண்டும் அவர்களை வாழ்த்தும் இலக்கிய காலங்களில் குறுப்பிடப்பட்டுள்ளது. அப்படிபட்ட புரவலர் புலவர்களில் சிறப்பினை இந்த ஆய்வு கட்டுரை மூலமாக தெரியப்படுத்துகிறேன்.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. கலித்தொகை - 35 (17-18)
2. புறம் - 72(13-16)
3. அ.தட்சிணாமூர்த்தி சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள் பக் - 245
4. மேலது – பக் -249

5. மேலது – பக் -259
6. மேலது – பக் -215
7. மேலது – பக் -217
8. மேலது – பக் -212
9. மேலது – பக் -200-21
10. மேலது – பக் -264
11. மேலது – பக் -107
12. மேலது – பக் -262
13. புறம் - பாடல் - 91

## துணைநூற் பட்டியல் (References)


1. தட்சிணாமூர்த்தி .அ - 2004 ஐங்குறுநூறு
2. மூலமும் உரையும்
3. நியூ செஞ்சரி புக் ஹவுஸ்
4. சென்னை முதல்பதிப்பு
5. நாகராசன் வி - 2004 குறுந்தொகை
6. மூலமும் உரையும்
7. நியூ செஞ்சரி புக் ஹவுஸ்
8. சென்னை முதல்பதிப்பு
9. புலியூர் கேசிகன் - 2010 புறநானூறு
10. மூலமும் உரையும்
11. சாரதா பதிப்பகம்
12. சென்னை – முதல்பதிப்பு
13. சுப்ரமணியம் .ச.வே - 2010 – சங்கஇலக்கியம்
14. ஏட்டுத்தொகை மூலமும் உரையும்
15. தொகுதி – 1 2 3
16. மணிவாசகர் பதிப்பகம்
17. விசுவநாதன் .அ - 2004 கலித்தொகை
18. மூலமும் உரையும
19. நியூ செஞ்சரி புக் ஹவுஸ்
20. சென்னை முதல்பதிப்பு

**ARTICLE 45 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 30–38

# திருக்குறளில் காணப்படும் கல்வி முகாமைத்துவக் கோட்பாடுகள்

## Educational Management Theories in Thirukkural

**சுப்பிரமணியம் விஷ்வநாதன்**
பிரதிப் பரீட்சை ஆணையாளர், இலங்கை பரீட்சைத் திணைக்களம்.
94773628049, svishvanathan3@gmail.com

### Abstract

Education is not only a tool for individual intellectual growth, but also a crucial institutional process that drives social change and national human resource development. Therefore, appropriate educational management principles are essential to manage educational institutions efficiently and humanely. Western management theories have put forward various principles in areas such as planning, organizing, leadership, human resource management, decision-making, monitoring, and accountability. In no way inferior to these, ancient Tamil thought contains many corresponding principles within the Thirukkural. Consequently, the management insights of the Thirukkural can be considered a conceptual resource for culturally relevant, ethical leadership in contemporary educational administration.

**Keywords:** Knowledge gained through listening – Teaching and learning – Applied knowledge – Multidisciplinary knowledge – Experiential knowledge – Knowledge gained through inquiry and understanding.

### ஆய்வுச் சுருக்கம்

கல்வி என்பது தனிமனித அறிவு வளர்ச்சிக்கான கருவி மட்டுமன்றி, சமூக மாற்றத்தையும் நாட்டின் மனிதவள மேம்பாட்டையும் முன்னெடுக்கும் முக்கியமான நிறுவனச் செயற்பாடாகும். எனவே கல்வி வழங்கும் நிறுவனங்களை வினைத்திறனுடனும் மனிதநேயத்துடனும் நிர்வகிப்பதற்குப் பொருத்தமான கல்வி முகாமைத்துவக் கோட்பாடுகள் அவசியமாகின்றன. மேலைத்தேய முகாமைத்துவச் சிந்தனைகள் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், தலைமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், தீர்மானமெடுத்தல், கண்காணிப்பு, பொறுப்புக்கூறல் போன்ற துறைகளில் பல்வேறு கோட்பாடுகளை முன்வைத்துள்ளன. அவற்றுக்கு எவ்விதத்திலும் குறைவில்லாதவாறு பண்டைய தமிழ்ச் சிந்தனையில் இக்கருத்துகளுக்கு இணையான பல நெறிமுறைகள் திருக்குறளில் காணப்படுகின்றன. எனவே, திருக்குறளின் முகாமைத்துவச் சிந்தனைகளை சமகால கல்வி நிர்வாகத்தில் பண்பாட்டு ரீதியாகப் பொருத்தமான நெறிமுறைத் தலைமைத்துவத்திற்கான ஒரு கருத்தியல் வளமாகக் கருதமுடியும்.

**திறவுச் சொற்கள்:** கேள்வி ஞானம் - கற்றல் கற்பித்தல் - பயன்பாட்டு அறிவு - பல்துறை அறிவு - அனுபவ அறிவு - ஆராய்ந்துணர்தல்.

## அறிமுகம்

இருபத்தோறாம் நூற்றாண்டின் கல்வி நிறுவனங்கள் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கின்றன. தொழில்நுட்ப மாற்றம், செயற்கை நுண்ணறிவு, உலகமயமாக்கல், மாணவர் பல்வகைமை, ஆசிரியர் வாண்மைத்துவ மேம்பாடு, வளங்களின் வரையறுக்கப்பட்ட தன்மை, தர உறுதிப்பாடு, சமூக பொறுப்புக்கூறல் போன்ற காரணிகள்

கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தைப் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்கும் செயற்பாடாக மாற்றியமைத்துள்ளன. கல்வி நிறுவனத்தின் வெற்றியானது கட்டடங்கள், தொழில்நுட்ப வசதிகள் அல்லது நிதி வளங்களால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. தூரநோக்கைக் கொண்ட தலைமைத்துவம், வினைத்திறனான மனிதவளத் தெரிவு, திட்டமிடல், பயனுறுதிமிக்க தொடர்பாடல், காலத்துக்கும் தேவைக்கும் ஏற்றவாறான தீர்மானமெடுத்தல், தொடர்ச்சியான கண்காணிப்பு, மனிதநேயம்மிக்க பணிச்சூழல் ஆகியவையும் அவசியமாகின்றன.

இந்தப் பின்னணியில், பொய்யாமொழிப் புலவர் திருவள்ளுவனாரின் பண்டைய தமிழ் ஞான இலக்கியமான திருக்குறளை கல்வி முகாமைத்துவக் கண்ணோட்டத்தில் நோக்குதல் முக்கியத்துவம் பெறுகிறது. திருக்குறளானது மூன்று பெரும் பிரிவுகளில் 1330 குறட்பாக்களைக் கொண்டமைந்துள்ளது. குறிப்பாக பொருட்பாலில் அரசியல், நிர்வாகம், அமைச்சு, தெரிந்து செயல்வகை, காலமறிதல், தலைமைத்துவம் மற்றும் மனிதர்களுடன் செயல்படும் முறை தொடர்பான கருத்துகள் விரிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

## ஆய்வுப் பிரச்சினை

நவீன கல்வி முகாமைத்துவக் கோட்பாடுகள் பெரும்பாலும் மேலைத்தேய முகாமைத்துவ, நிர்வாகச் சிந்தனைகளின் அடிப்படையில் விளக்கப்படுகின்றன. இவை கல்வி நிறுவனங்களின் செயற்றிறன், தலைமைத்துவம், நிறுவன நடத்தை, மனிதவள மேம்பாடு ஆகியவற்றிற்கு முக்கியமான பங்களிப்புகளை வழங்குகின்றன. இருப்பினும் தமிழ் பண்பாட்டுச் சூழலில் கல்வி முகாமைத்துவத்தின் நெறிமுறை, மனிதநேயப் பரிமாணங்களை விளக்குவதற்கு உள்ளூர் அறிவுப் பாரம்பரியங்களைப் பயன்படுத்துவது நம் தனித்துவத்தை உலகறியச் செய்வதற்கான வாய்ப்பாக அமையும்.

அந்த வகையில் திருக்குறளில் காணப்படும் அறிவு, அறம், தலைமைத்துவம், ஆலோசனை, திட்டமிடல், தகுதி அடிப்படையிலான பொறுப்பு வழங்கல், நீதிவழுவாமை, தொடர்பாடல், செயற்றிறன் போன்ற கருத்துக்கள் கல்வி நிர்வாகத்துடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பது ஆய்வுக்குரிய பிரச்சினையாகும்.

## ஆய்வின் நோக்கங்கள்

இவ்வாய்வின் பிரதான நோக்கம் திருக்குறளில் விளக்கப்படும் கருத்துக்களை கல்வி முகாமைத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்வதாகும். இவ்வாய்வின் சிறப்பு நோக்கங்களாகப் பின்வருவன அமைந்துள்ளன:

1. கல்வி தொடர்பான திருக்குறளின் அடிப்படைக் கருத்துக்களை இனங்காணுதல்
2. திருக்குறளில் காணப்படும் தலைமைத்துவக் கருத்துகளை கல்வி நிர்வாகத்துடன் தொடர்புபடுத்துதல்

3. திட்டமிடல், தீர்மானமெடுத்தல், மனிதவள முகாமைத்துவம், பொறுப்புக்கூறல், ஒழுக்கவியல் நிர்வாகம் தொடர்பான திருக்குறள் கருத்துக்களை இனங்காணுதல்

4. சமகால கல்வி முகாமைத்துவத்திற்குப் பொருத்தமான ஒரு கருத்தியல் மாதிரியை முன்மொழிதல்

## ஆய்வு முறை

இவ்வாய்வு தரமான, கருத்தியல் மற்றும் விளக்கவியல் ஆய்வு முறையை அடிப்படையாகக் கொண்டது. முதன்மைத் தரவாக திருக்குறளின் தெரிவு செய்யப்பட்ட குறட்பாக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவாக Project Madurai போன்ற திறந்த இலத்திரனியல் இலக்கிய வளங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள திருக்குறள் உரைகளும் பரிமேலழகர் உரை உள்ளிட்ட மரபுரீதியான விளக்கங்களும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட குறட்பாக்கள் கல்வி முகாமைத்துவத்துடன் தொடர்புடைய பல்வேறு நோக்கெல்லைகளை எடுத்துக்காட்டுவனவாக அமைந்துள்ளன.

## திருக்குறளும் கல்வி முகாமைத்துவமும்

திருக்குறளில் ‘கல்வி’ என்ற அதிகாரம் 391 தொடக்கம் 400 வரையிலான குறட்பாக்களைக் கொண்டுள்ளது. இங்கு கல்வி மனிதனின் அறிவுப் பார்வையை விரிவுபடுத்தும் அடிப்படை ஆற்றலாகக் குறிப்பிடப்படுகிறது. பின்வரும் குறட்பா கற்றல் மற்றும் நடத்தைக்கு இடையிலான தொடர்பை வலியுறுத்துகிறது.

“கற்க கசடறக் கற்பவை, கற்றபின்
நிற்க அதற்குத் தக.” - குறள் 391

இதன்படி கல்வியை வெறுமனே அறிவைப் பெறும் செயற்பாடாகக் கருதாமல், கற்ற அறிவுக்கேற்ப வாழ்வையும் நடத்தையையும் அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது எடுத்துக்காட்டப்படுகின்றது. இதனை நவீன கல்வி முகாமைத்துவத்தின் கற்றல் - நடைமுறை ஒருங்கிணைவு எனக் இனங்காணலாம். கல்வி முகாமைத்துவக் கண்ணோட்டத்தில் இதனை ‘பிரயோகத்துடனான கற்றல்’என்ற கொள்கையுடன் தொடர்புபடுத்தலாம். கல்வி நிறுவனத்தில் திட்டமிடப்படும் பயிற்சிகள், ஆசிரியர் வாண்மைத்துவ மேம்பாடு, மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் ஆகியவை நடைமுறை மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அந்த வகையில் திருக்குறளின் கல்விக் கோட்பாடானது கற்றல், புரிந்துகொள்ளல், நடைமுறைப்படுத்தல், நடத்தை மாற்றம் என்ற தொடர்ச்சியைத் தெளிவாக எடுத்தியம்புகின்றது.

## தொடர்ச்சியான கற்றலும் அறிவு முகாமைத்துவமும்

திருவள்ளுவர் அறிவை நிலையான ஒன்றாகக் கருதாமல் தொடர்ந்து வளரக்கூடியதாகக் குறிப்பிடுகிறார். மணற்கேணியில் தோண்டத் தோண்ட நீர் ஊறுவது போலக் கற்கக் கற்க அறிவு பெருகுகிறது என்ற கருத்து பின்வரும் குறட்பாவில் வெளிப்படுகிறது.

“தொட்டனைத் தூறும் மணற்கேணி, மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.” - குறள் 396

நவீன கல்வி நிறுவனத்தில் இது தொடரச்சியான வாண்மைத்துவ மேம்பாடு, அறிவு முகாமைத்துவம், கற்றலை ஒழுங்குபடுத்தல் ஆகிய கருத்தேற்புகளுடன் இணைக்கப்படலாம். இதன் அடிப்படையில் கல்வி முகாமையாளர் ஆசிரியர்களின் தொடர்ச்சியான முகாமைத்துவ மேம்பாட்டை ஊக்குவித்தல், நிறுவனத்தில் அறிவுப் பகிர்வை ஏற்படுத்துதல், அனுபவ அறிவை ஆவணப்படுத்துதல், புதிய தொழில்நுட்பங்களைக் கற்றுக்கொள்ளலை உருவாக்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்பது எடுத்துக்காட்டப்படுகின்றது.

## கல்வி நிறுவனத் தலைமைத்துவம்

திருக்குறளின் தலைமைத்துவச் சிந்தனையானது அதிகாரத்தைவிட அறிவு, அறம், ஆலோசனை, நீதி, மக்கள் நலன் ஆகியவற்றை முன்னிறுத்துகிறது. மேல்வரும் குறட்பா எந்தவொரு தலைவரையும் தவறுகளிலிருந்து எச்சரிக்கும் சிறந்த ஆலோசனையாளர்கள் அவசியம் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

“இடிப்பாரை யில்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் ரிலானும் கெடும்.” - குறள் 448

கல்வி நிறுவனத்தில் இதனை பங்குபற்றல் தலைமைத்துவம், பகிரப்பட்ட தலைமைத்துவம் ஆகிய கருத்தேற்புகளுடன் தொடர்புபடுத்தலாம். கல்வித்துறையில் ஒரு தலைவர்; அல்லது நிர்வாகி தனது தீர்மானங்களை மட்டும் திணிப்பதைவிட ஏனையோரின் கருத்துக்களுக்குச் செவிசாய்த்தல், பயனாளிகளின் நலன் சார்ந்த கருத்துக்களைப் பெறுதல், பெற்றோர் மற்றும் சமூகப் பங்காளிகளுடன் கலந்துரையாடுதல், தவறுகளைச் சுட்டிக்காட்டும் பண்பாட்டை உருவாக்குதல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.

## நெறிமுறைத் தலைமைத்துவம்

கல்வி நிறுவனம் அறிவைப் பரப்பும் நிறுவனமாக அமைவதனால், அதன் நிர்வாகம் நெறிமுறை அடிப்படையில் அமைதல் அவசியமாகிறது. திருக்குறளின் அறத்துப்பால் முழுவதும் மனித நடத்தை, நேர்மை, அன்பு, ஒழுக்கம் மற்றும் பிறர்நலம் போன்ற சமூகப் பெறுமானங்கள் பரவிக் காணப்படுகின்றன. இதனால் கல்வி நிர்வாகத்தில் அதிகாரத்தைப் பயன்படுத்துவதைவிட அறத்துடன் அதிகாரத்தைப் பயன்படுத்துதல் முக்கியமாகிறது. நவீன ஆய்வுகளும் திருக்குறளின் நெறிமுறை, நேர்மை, நீதிவழுவாமை ஆகியவற்றை நல்லாட்சியுடன் தொடர்புபடுத்துகின்றன.

## திட்டமிடல்

திட்டமிடலானது கல்வி முகாமைத்துவத்தின் அடிப்படையாக அமைவதுடன், ஒரு கல்வி நிறுவனத்தின் செயற்றிறன் அதன் தரத்துடன் நெருங்கிய தொடர்புடையது. திருக்குறளின் செயல்வகைச் சிந்தனைகள் செயலைத் தொடங்குவதற்கு முன்னர் அதன் தன்மை, வளங்கள், காலம்

மற்றும் சாத்தியமான விளைவுகளை ஆராய வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. இது நவீன கல்வி முகாமைத்துவத்தின் தேவைகளைத் தீர்மானித்தல், குறிக்கோளைக் கட்டமைத்தல், திட்டமிடல், நடைமுறைப்படுத்தல், கண்காணிப்பு, மதிப்பீடு என்ற நிர்வாகச் சுழற்சியுடன் கருத்தியல் ஒற்றுமையைக் கொண்டுள்ளது. அண்மைய சில ஆய்வுகளும் திருக்குறளில் இலக்கு நிர்ணயம், திட்டமிடல், வள ஒதுக்கீடு போன்ற நவீன முகாமைத்துவக் கருத்துக்களைக் காணக்கூடியதாய் உள்ளமையை வெளிப்படுத்தியுள்ளன.

## மனிதவள முகாமைத்துவம்

கல்வி நிறுவனத்தின் மிக முக்கியமான வளம் மனித வளமாகும். ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள், அலுவலர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களின் திறன் நிறுவனத்தின் செயற்றிறனைத் தீர்மானிக்கின்றன. திருக்குறள் தகுதியான நபரைத் தெரிவு செய்து அவருக்குப் பொருத்தமான பணியை வழங்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. பின்வரும் குறட்பா பணியைச் செய்பவரின் தகுதியையும் பணியின் தன்மையையும் ஆராய்ந்து செயற்பட வேண்டுமெனக் குறிப்பிடுகிறது.

“செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ(டு)
எய்த உணர்ந்து செயல்.” - குறள் 516

இதனை நவீன மனிதவள முகாமைத்துவத்தில் தொழிலுக்குப் பொருத்தமான நபர், தேர்ச்சி; அடிப்படையிலான முகாமைத்துவம், தர முகாமைத்துவம், பொருத்தமான அதிகாரப் பகிர்வு ஆகிய கருத்தேற்புகளாகக் கருதலாம்.

## தகுதியின் அடிப்படையில் பொறுப்பளித்தல்

கல்வி நிறுவனமொன்றின் அனைத்து பணிகளையும் தலைமை நிர்வாகியே மேற்கொள்வது அதன் செயற்றிறனைக் குறைக்கக்கூடும். எனவே, நிறுவனப் பணியாளர்களின் திறமைக்கேற்ப பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்க வேண்டியுள்ளது. திருக்குறளின் பொருட்பால் அமைச்சியல் இதற்கு வலுவான கருத்தியல் அடித்தளத்தை வழங்குகிறது. குறள் 631 ஆனது அமைச்சருக்குத் தேவையான திறன்களாக கருவி, காலம், செயல்வகை மற்றும் கடினமான செயலை மேற்கொள்ளும் திறன் போன்றவற்றைச் சுட்டுகிறது. இதனை கல்வி நிர்வாகத்தில் தகுதியை அறிதல், பொருத்தமான பொறுப்பு, அதிகாரப் பகிர்வு, செயற்றிறன், பொறுப்புக்கூறல் என்ற முகாமைத்துவச் சுழற்சியாகப் பார்க்கலாம்.

## தீர்மானமெடுத்தல்

கல்வி நிர்வாகத்தில் நாளாந்தம் பல முடிவுகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன. மாணவர் நலன், ஆசிரியர் நியமனம், வளப் பயன்பாடு, பரீட்சை நிர்வாகம், ஒழுக்கம், கற்றல் மேம்பாடு, சமூகத் தொடர்புகள் போன்றவற்றில் எடுக்கப்படும் முடிவுகள் நிறுவனத்தின் எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடியவை. திருக்குறள் அவசரமான அல்லது முழுமையான தகவலின்றி எடுக்கப்படும் முடிவுகளைத் தவிர்த்து ஆராய்ந்து செயற்படுவதையே வலியுறுத்துகிறது. இதனை நவீன கல்வி

முகாமைத்துவத்தில் சாட்சியங்கள், பகுப்பாய்வு, ஆலோசனை பெறல், தீர்மானமெடுத்தல், நடைமுறைப்படுத்தல், மீளாய்வு என்ற செயன்முறையாக விளக்கலாம்.

## தொடர்பாடல் முகாமைத்துவம்

ஒரு கல்வி நிறுவனத்தின் வெற்றியில் தொடர்பாடல் முக்கிய பங்கு வகிக்கிறது. திருக்குறளின் ‘சொல்வன்மை’ என்ற அதிகாரம் நல்ல தொடர்பாடலின் பல பரிமாணங்களை எடுத்துரைக்கிறது. பேச்சினால் நன்மையும் தீமையும் உருவாகக்கூடும் என்பதனால் சொல்லும் சொல்லில் தவறு நேராமல் காத்துப் பாதுகாக்க வேண்டும் என குறள் 642 எச்சரிக்கிறது. குறள் 643 கேட்பவரை ஈர்க்கும் வகையில் உரையாடல் முக்கியத்துவம் பெற வேண்டுமென எடுத்துக்காட்டுகிறது. கல்வி முகாமையாளர் தெளிவாகப் பேசுதல், சரியான நேரத்தில் தகவலை வழங்குதல், பிறரது கருத்துக்களைச் செவிமடுத்தல், விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளல், முரண்பாடுகளை உரையாடல் மூலம் தீர்த்தல் போன்ற பண்புகளைக் கொண்டவராகக் காணப்பட வேண்டும். எனவே, திருக்குறள் அடிப்படையிலான கல்வித் தலைமைத்துவத்தில் தொடர்பாடல் நுண்ணறிவு முக்கிய கூறாக அமைகிறது.

## நீதிவழுவாமையும் சமத்துவமும்

கல்வி நிறுவனத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், பணியாளர்களைச் சமமாகவும் பக்கச்சார்பு இன்றியும் நடத்துதல் கல்வி நிர்வாகத்தின் முக்கிய கொள்கையாகக் காணப்பட வேண்டும். திருக்குறளின் ‘செங்கோன்மை’ என்ற அதிகாரம் நியாயமான நிர்வாகத்தை வலியுறுத்துகிறது. மேல்வரும் குறட்பா தீர்மானமெடுப்போர் ஆராய்ந்து, பக்கச்சார்பின்றி, நியாயத்துடன் செயற்பட வேண்டுமெனக் குறிப்பிடுகிறது.

“ஓர்ந்துகண் ணோடா(து) இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை.” - குறள் 541

இக்குறளின் அடிப்படையில் கல்வி முகாமைத்துவத்தில் மாணவர்களிடையே வேறுபாடு காட்டாமை, ஆசிரியர்களிடையே சமத்துவச் செயன்முறை, வெளிப்படையான மதிப்பீடு, ஒருசீர்த்தன்மையான சட்டதிட்டங்கள், விதிமுறைகள், நியாயமான ஒழுக்க நடவடிக்கை ஆகியவை சிறப்பாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

## கண்காணிப்பும் பொறுப்புக்கூறலும்

கல்வி முகாமைத்துவத்தில் திட்டமிடல் மட்டும் போதுமானதன்று. திட்டங்கள் நடைமுறையில் எவ்வாறு செயற்படுகின்றன என்பதைக் கண்காணித்து தேவையான மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். திருக்குறளில் தலைமைக்கு உண்மையைச் சொல்லும் ஆலோசகர்களின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது. குறள் 638இன்படி, ஆட்சியாளருக்குத் தேவையான உண்மையான ஆலோசனையை வழங்குவது அமைச்சரின் கடமையாகும். இதனை கல்வி முகாமைத்துவத்தில் கண்காணிப்பு, பின்னூட்டல், சரியான செயற்பாடு, முன்னேற்றம் என்ற தர உறுதிப்பாட்டு முறையுடன் தொடர்புபடுத்தலாம்.

## செயற்றிறன்

திட்டமிடல் சிறப்பாக இருந்தாலும் அதனைச் செயற்படுத்தும் திறன் இல்லாவிட்டால் எதிர்பார்த்த விளைவு கிடைக்காது. ஒரு செயலை முடிவுறச் செய்வதற்கான செயற்றிறனின் முக்கியத்துவத்தை மேல்வரும் குறட்பா தெளிவாக விளக்குகிறது.

“எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்ப(து) இழுக்கு." - குறள் 467

திருக்குறள் தெரிந்து செயல்வகையில் உள்ள இக்குறட்பா எந்தவொரு செயலையும் செய்வதற்கு முன்னரே அதற்கான வழிவகைகளையும் விளைவுகளையும் தீர ஆலோசித்து, திட்டமிட்டுத் தொடங்க வேண்டும். செயலைத் தொடங்கிய பின் ‘இனி என்ன செய்வது?’ என்று யோசிப்பது குற்றமாகும்; அது தோல்விக்கு வழிவகுக்கும் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. இதனடிப்படையில் கல்வி முகாமைத்துவத்தில் சிறந்த திட்டம், தகுதியான மனிதவளம், சரியான காலம், செயற்றிறன் என்பவற்றின் தொகுப்பு எதிர்பார்க்கப்படும் கல்வி விளைவுகளுக்குச் சமமாதல் என்ற கோட்பாட்டை திருக்குறள் மெய்ப்பித்துக் காட்டியுள்ளது.

## கல்வி நிறுவனத்தில் மனித உறவுகள்

கல்வி நிறுவனம் மனிதர்களால் உருவாக்கப்பட்ட ஒரு சமூக அமைப்பாகும். எனவே அதில் பணியாற்றும் நிர்வாகிகளின் மனித உறவுத்திறன் மிக முக்கியமானது. திருக்குறள் அன்பு, இனிய சொல், பொறுமை, செவிமடுக்கும் திறன், நட்பு, ஒத்துழைப்பு போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. இதன் அடிப்படையில் கல்வி முகாமையாளர் ஆசிரியர்களை வெறும் பணியாளர்களாகக் கருதாமல், முகாமைத்துவப் பங்காளிகளாகக் கருதுதல், மாணவர்களின் கருத்துக்களைக் கேட்டல், பெற்றோருடன் சுமுகமான உறவைப் பேணுதல், முரண்பாடுகளைத் தீர்த்தல், குழு உணர்வை வளர்த்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

## மாற்ற முகாமைத்துவம்

நவீன கல்வி அமைப்புகள் காலத்துக்கேற்ற விதத்தில் தொடர்ந்து மாற்றமடைந்து வருகின்றன. பாடத்திட்ட மாற்றம், எண்ணிம (Digital) கற்றல், நிகழ்நிலைப் பரீட்சை, செயற்கை நுண்ணறிவு, புதிய மதிப்பீட்டு முறைகள் போன்றவை கல்வி நிர்வாகத்தில் மாற்றத்தின் தேவையைச் சுட்டி நிற்கின்றன. திருக்குறளின் செயல்வகை மற்றும் காலமறிதல் தொடர்பான சிந்தனைகள் மாற்றங்களை முன்கூட்டியே உணர்ந்து சூழ்நிலைக்கேற்ப செயல்படுவதற்கான அறிவை வலியுறுத்துகின்றன. இதனை சூழலைப் புரிதல், மாற்றத்துக்கான தேவையை இனங்காணுதல், திட்டமிடல், மனித வளங்களைத் தயார்படுத்தல், செயற்படுத்தல், மதிப்பீடு என்ற மாற்ற முகாமைத்துவச் செயன்முறையுடன் இணைத்து நோக்கலாம்.

திருக்குறள் அடிப்படையிலான கல்வி முகாமைத்துவக் கருத்தியல் மாதிரி

இவ்வாய்வின் அடிப்படையில் அறம், அறிவு மற்றும் தொடர்ச்சியான கற்றல், தெளிவான நோக்கம் மற்றும் திட்டமிடல், தகுதியான மனிதவளத் தெரிவு, பொறுப்பளித்தல் மற்றும் அதிகாரப் பகிர்வு, சான்றுகளின் அடிப்படையிலான தீர்மானமெடுத்தல், பயனுள்ள தொடர்பாடல், செயற்றிறன், கண்காணிப்பு மற்றும் பொறுப்புக்கூறல், மதிப்பீடு மற்றும் திருத்தம், தொடர்ச்சியான நிறுவன மேம்பாடு என்ற கருத்தேற்பு மாதிரி முன்மொழியப்படுகின்றது. இந்த மாதிரியின் மையப்புள்ளியாக ‘அறம்’ அமைந்துள்ளது. ஏனெனில் திருக்குறளின் நிர்வாகச் சிந்தனைகளை வெறும் செயற்றிறன் அடிப்படையில் மட்டும் அணுக முடியாது. செயற்றிறனுடன் இணைந்த நெறிமுறை, நீதி, மனிதநேயம் என்பன அதன் தனித்துவமாகக் காணப்படுகின்றன.

## கலந்துரையாடல்

நவீன கல்வி முகாமைத்துவம் பொதுவாக இலக்கு நிர்ணயம், திட்டமிடல், மனிதவள முகாமைத்துவம், தலைமைத்துவம், நிறுவன நடத்தை, தர மேம்பாடு, மதிப்பீடு போன்ற கருத்துக்களை உள்ளடக்கியதாகும். திருக்குறளில் இக்கருத்துகளுக்கு நேரடியாக அதே நவீன பெயர்கள் பயன்படுத்தப்படாவிட்டாலும், அவற்றின் அடிப்படை மனித, முகாமைத்துவ, நிர்வாகக் கொள்கைகளுக்கு இணையான சிந்தனைகள் காணப்படுகின்றன. இதனை ‘திருக்குறள் நவீன முகாமைத்துவக் கோட்பாடுகளை முன்கூட்டியே முழுமையாக உருவாக்கியது’ என்று கூறுவது ஆய்வியல் ரீதியாக மிகைப்படுத்தலாக அமையும்.

இருப்பினும், திருக்குறள் கல்வி முகாமைத்துவத்தின் நெறிமுறை, மனிதநேய மற்றும் செயன்முறை அடித்தளங்களுக்கான மரபுரீதியானதொரு கருத்தியல் வளம் எனக் கூறுவது பொருத்தமானது. சமகால ஆய்வுகளும் திருக்குறளின் தலைமைத்துவம், மனிதவள முகாமைத்துவம், நெறிமுறை மற்றும் நிறுவன முகாமைத்துவச் சிந்தனைகளை நவீன முகாமைத்துவச் சூழமைவுகளுடன் தொடர்புபடுத்துகின்றன. இதனால், திருக்குறளை நவீன கல்வி முகாமைத்துவப் பாடத்திட்டத்தில் ‘கல்வி முகாமைத்துவத்திற்கான சுதேச அறிவு’ அல்லது ‘கல்வி நிர்வாகத்திற்கான நெறிமுறைசார்ந்த அடிப்படைகள்’ என்ற பரிமாணங்களில் பயன்படுத்துவது ஆய்வியல் ரீதியாகப் பொருத்தமானதாகும்.

## முடிவுரை

திருக்குறள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ சமூகத்திற்கோ அல்லது நிர்வாக அமைப்பிற்கோ மட்டுப்படுத்தப்பட்ட நூலாகக் கருதப்பட முடியாது. அதன் கருத்துக்கள் மனித நடத்தை, அறிவு, அறம், தலைமைத்துவம், நிர்வாகம், தீர்மானமெடுத்தல், சமூக நலன் உள்ளிட்ட வரையறைக்குட்படாத பல்வேறு பரிமாணங்களை உள்ளடக்கியவை. கல்வி நிறுவனத்தின் உண்மையான வெற்றி அதன் கட்டடங்களின் உயரத்திலோ, தொழில்நுட்ப வசதிகளின் அளவிலோ மட்டும் தங்கியிருப்பதில்லை. மாறாக அறிவை அறமாகவும், அதிகாரத்தைப் பொறுப்பாகவும், நிர்வாகத்தை மனிதநேயமாகவும் மாற்றும்

திறனிலேயே தங்கியுள்ளது. அந்த வகையில், பொய்யாமொழிப்புலவர் திருவள்ளுவரின் சிந்தனைகள் இன்றைய கல்வி நிர்வாகத்திற்கும் முகாமைத்துவத்திற்கும் பொருத்தமான கருத்தியல் வளமாகத் திகழ்கின்றன என்பதில் எதுவித ஐயமுமில்லை.

## துணைநூற் பட்டியல் (References)


1. திருக்குறள். பரிமேலழகர் உரை. Project Madurai இலத்திரனியல் பதிப்பு.
2. Vasantha Kumar, P. J., & Pappu Rajan. (2024). Timeless wisdom for modern management: Exploring the application of Thirukkural in leadership, ethics, and organizational excellence.
3. Karthik, M., & Srinivasan, V. C. (2026). Leadership qualities in Thirukkural and AI-generation management models: A study. Tamilmanam International Research Journal of Tamil Studies, 10(01), 15–28.
4. Shoveena Priya Thiagu, Ilangkumaran Sivanadhan, & M. Sargunavathy. (2021). The principles of human resource management in Thirukkural. Malaysian Journal of Social Sciences and Humanities, 5(3), 185–194.
5. Sivakumar, N., & Srinivasan, V. C. (2026). Ethical management guided by Thirukkural and AI governance: A conceptual study. Tamilmanam International Research Journal of Tamil Studies, 10(01), 29–42.

**ARTICLE 46 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 39–47

# எண்வகை மெய்ப்பாடுகள் வழி புறநானூறு

## Purananuru through the Eight Forms of Emotional Expression (Meippadu

**முனைவர் சு.சாந்தி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
வேல்ஸ் பல்கலைக்கழகம், பல்லாவரம்
சென்னை-117
shanthitvm2020@gmail.com

### Abstract

Emotion and intellect have existed since the very dawn of life. Through the course of evolution, humans refined their knowledge based on experience and their emotional expressions—termed *Meippadu*—based on their feelings. Tolkappiyar uses the term *Meippadu* to describe physical manifestations arising from internal states; etymologically, *Mei* signifies the body, and *Padu* signifies manifestation. Tamil dictionaries define *Meippadu* as the physical changes that occur in the body in response to mental emotions.

Tolkappiyar identifies eight specific types of emotions that humans express physically: *Nagai* (mirth), *Azhugai* (sorrow), *Ilivaral* (disdain/ridicule), *Marutkai* (wonder/awe), *Achcham* (fear), *Perumitham* (pride/valor), *Veguli* (anger), and *Uvagai* (joy). Tamils cherished love and valor as their two most vital attributes. Among the *Ettuthogai* (Eight Anthologies) of Sangam literature, *Purananuru* focuses on the theme of *Puram*—which deals with heroism and external conduct. *Purananuru* contains abundant references to these physical manifestations of emotion (*Meippadu*). Since *Meippadu* represents the physical expression of emotions unique to humans, this article examines how these eight types of manifestations are depicted within *Purananuru*.

**Keywords:** Knowledge gained through listening – Teaching and learning – Applied knowledge – Multidisciplinary knowledge – Experiential knowledge – Knowledge gained through inquiry and understanding.

**திறவுச் சொற்கள்:** கேள்வி ஞானம் - கற்றல் கற்பித்தல் - பயன்பாட்டு அறிவு - பல்துறை அறிவு - அனுபவ அறிவு - ஆராய்ந்துணர்தல்.

## முன்னுரை

உயிரினங்கள் தோன்றிய காலத்திலிருந்தே உணர்ச்சியும் அறிவும் தொடக்கம் பெற்று விட்டன. இதில் மனிதன் தான் அடைந்த பரிணாம வளர்ச்சியினால், அனுபவத்தின் மூலம் அறிவையும், உணர்ச்சியின் மூலம் மெய்ப்பாட்டையும் மேம்படுத்தினான். உடலில் தோன்றும் வெளிப்பாடுகளை தொல்காப்பியர் மெய்ப்பாடு என்கிறார். மெய்ப்பாடு என்று பிரித்தால் மெய்-உடல், பாடு-வெளிப்பாடு எனப் பொருள் தருகின்றது. **மனவுணர்ச்சி பற்றி உடம்பில் தோன்றும் வேறுபாடு மெய்ப்பாடு என்று தமிழ் அகராதி பொருள் கூறுகிறது.**

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று எட்டு வகையான உணர்ச்சிகளை மனிதன் உடல் வெளிப்படுத்துவதால் தொல்காப்பியர் கூறுகிறார். தமிழர்கள் காதலையும் வீரத்தையும் இரு கண்களாகப் போற்றினர். சங்க இலக்கியமான எட்டுத்தொகையில் புறத்தைப் பற்றிக் கூறுவது புறநானூறாகும். புறம் என்பது வீரத்தைப் பற்றிக் கூறுவதாகும்.

புறநானூற்றில் மெய்ப்பாடுகள் குறித்த செய்திகள் மிகுதியாக உள்ளன. மனிதர்களுக்கே உரிய உணர்ச்சி வெளிப்படுவதே மெய்ப்பாடாகும். இந்த எண்வகை மெய்ப்பாடுகள் புறநானூற்றில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

## எண்வகை மெய்ப்பாடுகள்

தொல்காப்பியர் மெய்ப்பாடு எட்டு வகைப்படும் என்கிறார். அவை நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எட்டு மெய்ப்பாடுகளை அடிப்படை மெய்ப்பாடுகளாகக் கூறுகிறார். இதனை,

நகையே அழுகை இளிவரல்மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளிஉவகையென்று
அப்பால் எட்டேமெய்ப்பாடென்ப (தொல்.மெய், நூ:3)

எனும் நூற்பாவின் மூலம் அறியலாம். இதில் காணப்படும் மெய்ப்பாடுகளான நகை என்பது இகழ்ச்சியிலும், அழுகை என்பது அவலத்திலும், இளிவரல் என்பது இழப்பிலும், மருட்கை என்பது வியப்பிலும், அச்சம் என்பது அஞ்சத்தகுவனவற்றிலும், பெருமிதம் என்பது வீரத்திலும், வெகுளி என்பது வெறுக்கத் தக்கனவற்றிலும், உவகை என்பது சிருங்காரத்திலும் பிறக்கின்றது. இந்த மெய்ப்பாடுகள் ஒவ்வொன்றும் தனக்கென நிலைக்களன்களைக் கொண்டு விளங்குகிறது.

## நகை

புறநானூற்றில் நெடுங்கிள்ளியை நோக்கி, ஆசிரியர் கோவூர்கிழார் தோன்றால், யானைகள் வெய்துயிர்த்து உருமென முழங்குகின்றன, குழவிகள் பாலின்று அலறியழுகின்றன, மகளிர் வறுந்தலை முடிக்கின்றனர், மனையிடங்களில் எழும் அழுகுரல் நின் அரண்மனைக்கண் கேட்கிறது. இவை நிகழும் நீ அரண்மனைக்கண் அடங்கிக் கிடத்தல் இனிதன்று. முன்னே வந்து, முற்றுகையிட்டிருக்கும் வேந்தனைப் பார்த்து ஈயும் அறவுணர்வால் நினக்கு வேண்டின் பெற்றுக்கொள்ளெனச் சொல்லி எயிற் கதவை திறத்தல் வேண்டும். எதிரூன்று காத்தலே மறம் என்பது கருத்தாயின், போர் குறித்து திறந்து விடல் வேண்டும். அறவையும், மறவையு மல்லையாய் மதிற்கதவைத் திறவாது ஒருபுறத் தொடுங்கிடிருப்பது நாணத் தகுவதொன்று என்று கூறுகின்றார்.

அறவையாயி னினதெனத் திறத்தல்
மறவை யாயிற் போராடு திறத்தல்
அறவையு மறவையு மல்லை யாகத்
திறவா தடத்தை திண்ணிலைக் கதவின்
நீண்மதி லொருசிறை யொடுங்குதல்

## நாணுத்தக வுடைத்திது காணுங் காலே (புறநானூறு :52)

இதில் அரசன் இவ்வாறு போரிடாமல் மறைந்து, பயந்து இருத்தல் நாணுதற்க்கு உரிய, நகைப்புக்குறிய செயல் ஆகும் என்று கூறுகிறார். இதன் மூலம் நகை என்ற மெய்ப்பாடு தோன்றுகிறது.

இளைய வயதில் அரசேற்றான் நெடுஞ்செழியன். அவன் நாட்டை கொள்ளுதல் எளிதெனப் பகைவர்கள் வந்தனர். இதனை

நகுதக்கனரே நாடு மீக்கூறுநர்

**இளையன’ இவன் என ஞ்ஞ்ஞ்.. (புறநானூறு : 72)**

இவன் மிகவும் இளையவன் இவனுடைய நாட்டை உயர்வாக புகழும் புலவர்கள் நம் நகைப்பிற்கு உரியவர்கள் என்று நெடுஞ்செழியனை நகைத்துக் கூறுகின்றனர்.

பெருங்கோப்பெண்டு தீப்பாய்வாளைக்கண்டு மதுரைப் பேராலவாயார் சொல்லியது. அங்கு நீர்வடியும் கூந்தல், முதுகில் வீழ்ந்தும் தாழவும் பெரிய துன்பமுற்ற கண்களுடையவளாய்ச் சுடுகாட்டை நோக்கி பார்த்து அவள் மனம் வருந்தும். அத்தகையோள், தன் தலைவனுடைய முரசின் மண்ணமைந்த பகுதி அடங்காது காவலை உடைய அகன்ற மாளிகையில் தன் இளமையைப் புறங்கொடுத்து மிகச்சிறிய பொழுது தனித்திருந்தாலும் அவளுடைய இனிய உயிர் தளரும் என்பதனை,

………………… தன் கொழுநன்
முழவு கண் துயிலாக் கடியுடை வியல நகர்ச்
சிறுநனி தமியள் ஆயினும்

**இன்உயிர் நடுங்கும் தன் இளமை புறங்கொடுத்தே (புறநானூறு :247)**

என்னும் பாடலால் அறியலாம். தொல்காப்பியம் குறிப்பிட்டுள்ள முதலாவது மெய்ப்பாடாகிய நகையென்னும் மெய்ப்பாட்டினுள் இளமை என்னும் பொருளில் அடங்கும்.

**அழுகை**

எண்வகைச் சுவைகளில் இரண்டாவதாக வருவது அழுகைச் சுவையாகும். அழுகை, அவலம், துன்பம் இவை ஒன்றாகவே கொள்ளப்படும். பிறர் தன்னை இகழும் போதும் பிறரைத் தான் இகழும் போதும் அழுகை உண்டாகும். இதனை தொல்காப்பியர்,

இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே (தொல்.மெய்,நூ:5)

என்று குறிப்பிடுகிறார். இழிவு, இழவு, அசை, வறுமை என நான்கு வகைகளில் அழுகை மெய்ப்பாடு பிறக்கும் என்று கூறுகிறார். சான்றாக புறநானூற்றில்,

ஐயோ எனின் யான்புலி அஞ்சுவலே;

**அணைத்தனன் கொளினே, அகல்மார்பு எடுக்க வல்லேன்;(புறநானூறு :255)**

என்னும் பாடலால் தன் தலைவன் போர்க்களத்தினின்றும் வராமைகண்ட தலைவி அவன் வீழ்ந்து கிடக்கும் இடத்தை அடைந்தாள். அந்த இடம் புலி முதலிய கொடிய விலங்குகள் வாழும் காட்டருகே இருந்தது. அதன் அருகே மலை ஒன்றும் காட்டர்ந்து காணப்பட்டது. கணவனைக் கண்ட அப்பெண்ணின் கலக்கம் மிகுதியாயிற்று. எனவே

அவன் உடலைத் தழுவிப் புலம்பி அழுவதாக அமைந்துள்ளது. இதனால் இப்பாடல் இழிவு பற்றி வந்த அழுகை மெய்ப்பாடு ஆகும்.

இழிவு என்னும் மெய்ப்பாட்டு நிலைக்களன் பிறரால் இகழப்பட்டு எளியராதலாகிய தாழ்வு நிலையைக் குறிப்பதாகவரும். **குடி பழி தூற்றும் கோலோன் ஆகுக(புறநானூறு :4)** என்ற பாடல் வரியில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் போரில் வெற்றி பெறவில்லையெனில் பிறரால் இகழப்படும் தாழ்வுநிலை அடைவேனாகுக! என்று சபதம் செய்வதின் மூலம் இழிவு புலனாகிறது.

கதிர் மூக்கு ஆரல்..

……………………………

### மெழுகும், ஆப்பி கண் கலுழ் நீரானே (புறநானூறு :249)

கணவன் இறந்தபின் பிண்டம் வைக்க தன் கண்ணீர் கொண்டு மெழுகுகிறாள் என்றதால் இது தன் கட்டோன்றிய இழவு பற்றி பிறந்த அவலம் ஆகும்.

### இளிவரல்

தம்மிடமுள்ள தகுதியைச் சிலர் குறைவாக மதிப்பிட்டு ஏளனமாக பேசுவர். இந்த உணர்வின் வெளிப்பாட்டை தொல்காப்பியர் இளிவரல் என்று குறிப்பிடுகிறார்.

மூப்பே பிணியே வருத்த மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே (தொல்.மெய், நூ:6)
மூப்பு, பிணி, வருத்தம்,மென்மை ஆகிய நான்கு வகைகளில் இளிவரல் தோன்றும். இது புறநானூற்றில்,
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேள் அல்கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி வயிற்றுத் தீத் தணிய
தாம் இரந்து உண்ணும் அளவே

### ஈன்மன்ரோ, இவ்உலகத்தானே (புறநானூறு :74)

அரசராயிருந்து போரில் பகைவர் வாளினால் வடுப்பட்டு அழியாது உயிர் பிழைத்தால் சங்கிலியால் பிணிக்கப்பட்ட நாய் போல விலங்கு பூட்டித் துன்புறுத்துவர் பகைவர். அத்தகைய உறவு கொண்டிராத பகைவர் உதவியால் சிறிது நீரினை அவரிடம் இரந்துண்ணோம் என்று கூறுவது தன்னிடம் இருந்த வருத்தத்தால் பிறந்ததால் இளிவரல் மெய்ப்பாடாயிற்று. இதனைப் பற்றி வள்ளுவர் கூறுவது,

தலையின் இழிந்த மயிர் அனையா மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை. (குறள் 964)

மக்கள் தம் உயர்வுக்கு உரிய நிலையில் இருந்து தாழ்ந்த போதும் தலையிலிருந்து விழுந்து தாழ்பெற்ற மயிரினைப் போன்றவர் ஆவர் என்று குறிப்பிடுகிறார்.

## மருட்கை

வியப்பு ஏற்படும் போது மருட்கை தோன்றும். இது நான்கு வகைகளில் தோன்றும். புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் போன்ற நிலைகளில் தோன்றும் என்பதை,

புதுமை பெருமை சிறுமை ஆக்கமோடு
மதி சாலா மருட்கை நான்கே (தொல்.மெய், நூ:7)
என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். புறநானூற்றில்,
உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே” (புறநானூறு :182)

இவ்வுலகம் இவ்வளவு மக்கள் தொகைப் பெருக்கத்திலும் பொருளாதார நெருக்கடியிலும் இன்னும் இயங்கிக் கொண்டிருப்பதற்குக் காரணம் நற்சிந்தனை மிக்க சான்றோர்கள் இருப்பதனால்தான். அத்தகையோர் இந்திரர்கள் சாப்பிடக் கூடிய அமிழ்தமே கிடைத்தாலும் இனிதாக இருக்கிறது என்று தனியாக உண்ணமாட்டார்கள் என்ற வியப்பை தரும் செய்தியைக் கூறுவதால் இப்பாடல் மருட்கை என்னும் மெய்ப்பாடாயிற்று.

ஒருநாள் ஆசிரியர் ஆவூர் மூலங்கிழார் கிள்ளிவளவன் என்ற அரசனைக் காண வந்தார். அவரைப் பார்த்த அரசன் நீவீர் எந்நாட்டீர்? எம்மை நினைத்தலுண்டோ? என்று வினவினான். அதற்கு ஆவூர் மூலங்கிழார் வேந்தே நீ சினந்து நோக்குமிடம் தீப்பரவும், அருளி நோக்குமிடம் பொன்பொழியும், நீ வேண்டியது விளைக்கும் ஆற்றலுடைய யாம் நின்னிழற் பிரந்து நின்னிழல் வளர்ந்தோம், நின்னளவு எம்மால் நினைக்கும் அளவிற்றன்று, பரிசிலர் நின்பகைவர் நாட்டில் இருப்பினும் நின் நாட்டையே நினைப்பர் என்று பெருமை கொண்டு உரைக்கின்றான்.

ஆண்டு செய் நுகர்ச்சி மீண்டுங் கூடலின்
நின்னா டுள்ளுவர் பரிசிலர்
ஒன்னார் தேஎத்து நின்னுடைத் தெனவே (புறநானூறு :49)

இதன் மூலம் மருட்கை என்ற மெய்ப்பாட்டில் அளவின் மிக்க பெருமை என்ற மெய்ப்பாடு தோன்றுகிறது.

## அச்சம் (அணங்கு)

அச்சம் பிறராலும், பிற பொருளாலும் தோன்றும் (தெய்வம்,பேய்), விலங்கு, கள்வர், தம் இறை என்ற நான்கு வகைகளில் அச்சம் தோன்றும். இதனை

அணங்கே விலங்கே கள்வர் தம் இறையென
பிணங்கல் சாலா அச்சம் நான்கே” ( தொல்.மெய், நூ;1202)

என்னும் தொல்காப்பிய நூற்பா வழி அறிய முடிகிறது. புறநானூற்றில் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை ஆசிரியர் குடபுலவியனார் வருகையைக் கண்ட அரசன் அவரை அன்போடு வரவேற்றுத் தழுவிக் கொண்டான். தலையாலங்கானத்துப் போரில் தன்னை எதிர்த்து வந்த ஏழு பகை மன்னர்களை வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் வீரத்தையும்,

அவன் மார்பில் ஒளிவீசும் முத்தாரத்தையும் போற்றி, அவரது போர் செயலை சிறப்பித்து உரைக்கின்றார் புலவர் குடபுலவியனார்,

எழுவர் நல்வலங் கடந்தோய் நின்
கழூ உவிளங் காரங் கவை இய மார்பே" (புறநானூறு:19)

இதில் பகைவர்களுக்கு அரசன் அச்சத்தை தருபவன் என்றும், புலவர்க்கு அரசன் அன்போடு கலந்த பரிசிலினை தருபவன் என்றும் மெய்ப்பாடு உணர்த்துகிறது.

வன்பரணர் பாடியது. ஐயோ, என்று வாய்விட்டு அழுவதற்கு நான் புலியை அஞ்சுகிறேன். உன் அகன்ற மார்பு பெரிதாகையால் உன்னை இவ்விடத்தினின்று எடுத்துச் செல்லவும் என்னால் இயலாது. நீ இரந்துபடும்படி வந்து தாக்கிய அறனில்லாத கூற்றம் என்னைப்போல் பெருந்துன்பம் அடைக என்பதனை,

**ஐயோ' எனின், யான் புலி அஞ்சுவலே**

**அணைத்தனன் கொளினே. அகல் மார்பு எடுக்கவல்லேன்**

என்போல்பெரு விதிர்ப்புறுக, நின்னை
இன்னாது உற்ற அறன் இல் கூற்றே!" (புறநானூறு: 255)

என வரும் பாடலால் அச்சம் எனும் மெய்ப்பாட்டை அறியலாம். தொல்காப்பியத்தில் அச்சம் என்பது ஐந்தாவது மெய்ப்பாடாகும். இங்கு புலி அஞ்சுவல் என்றது இவள் அலறும் ஓலம் கேட்டு புலி வந்து அவன் உடலைக் கொண்டு செல்லும் என்பதாகும்.

அச்சம் என்னும் மெய்ப்பாட்டில் முதலில் வருவது அணங்கு எனும் நிலைக்களனாகும். தமிழ் இலக்கியங்களில் அணங்கு என்பதையாரும் கண்டு உயிருடன் மீளமுடியாத அழகின் எல்லையானது காண்பரை வருத்தும் உருவாக அமைகிறது என்கின்றனர்.

அணங்குடைஅவுணர் (புறநானூறு:174)
அழுகுரற் பேய்மகள் அயர் (புறநானூறு:370)

இவ்வரிகள் அணங்கின் பொருளைத் தெளிவுபடுத்துகிறது.

## பெருமிதம்

தம்முடைய அல்லது பிறருடைய தகுதிகளைப் பெருமையுடன் பிறருக்கு உணர்த்தும் வகையில் அமைவது பெருமிதம் ஆகும். இந்த பெருமிதம்.

கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்

**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே (தொல்.மெய், நூ:9)**

என கல்வி, தறுகண், புகழ், கொடை ஆகிய நான்கு வகைகளில் தோன்றும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். சான்றாக,

இம்மைச் செய்தது மறுமைக்குஆம் எனும்
அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்
பிறரும் சான்றோர் சென்ற நெறிஎன
ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே (புறநானூறு:134)

அறம் கொள்ளும் வணிகன் ஆய் அல்லன் அவனது பகைவ சான்றோரும் பிறரும் சென்ற நெறி என்று உலகத்தார் கருதுவது

மன்னனின் கொடையைப் பற்றிக் கூறுவதால் பெருமிதம் என்னும் மெய்ப்பாடு கூறுவதைக் காணலாம்.

வளைந்த சிறகினையும் கூரிய நகங்களையும் கொண்ட ஆண் பருந்தின் தாக்குதலில் இருந்து தப்பித் தன்னிடம் வந்த குறுகிய நடையை உடைய புறாவின் அழிவுக்கு அஞ்சித் துலாக் கோலின் தட்டில் அமர்ந்த அளவில்லாத கொடைமையை உடையவனைக் கண்டு அம் முனிவர்களும் வியப்பால் மயங்கினர்.

தன் அகம் புக்க குறு நடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை உரவோன் மருக! (புறநானூறு:43)
என்னும் புறநானூறு வரிகள் எடுத்தியம்புகின்றன. மேலும் காமம் பற்றிய பெருமிதத்தினை,
**(புறநானூறு:73)** பாடலில் இடம்பெற்றுள்ளது.

## வெகுளி

உடலில் உள்ள உறுப்புகளை அறுக்கும் போதும் கீழ்வாழ்வாரை நலிதல் என்று கூறும் போதும் வெகுளி உண்டாகும் என்பதை,

உறுப்பறை குடிகோள் அலைகொலை என்றன

## வெறுப்ப வந்த வெகுளி நான்கே (தொல்.மெய், நூ;10)

உறுப்பறை, குடிகோள், அலை, கொலை ஆகிய நான்கு வகைகளில் வெகுளி தோன்றும் என்று தொல்காப்பியர் கூறுவதைக் காணலாம். புறநானூற்றில்,

உறுதுப்பு அஞ்சாது உடல் சினம் செருக்கி

## சிறுசொல் சொல்லிய சினம் கெழு வேந்தரை (புறநானூறு:72)

என் மிகுதியான வலிமைக்கு அஞ்சாது பகைத்துச் சினம் பெருகிப் புன்மையான மொழிகளைச் சினமுடைய வேந்தர் கூறினார். அவ்வாறு கூறியோரை பொறுத்தற்கரிய போரில் சிதறுமாறு போர் செய்து அவருடைய முரசங்களுடன் கைக் கொள்ளுவேன் என்று வெகுளி தோன்ற கூறுவதைக் காணலாம்.

ஆசிரியர் நெட்டிமையார், பாண்டியன் முதுகுடுமி பெருவழுதியின் போர்சிறப்பை பாடும்பொழுது,
கடுந்தேர் குழித்த நெளள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்..” (புறநானூறு : 15)

குடிகளையும், இதில் அரசனின் எதிரிநாட்டு கீழ்வாழும் விளைநிலங்கலையும் துன்புறுத்தும் வெகுளி என்ற மெய்ப்பாட்டை காணமுடிகிறது. மேலும்

கொடுமர மறவர் பெரும கடுமான்
கைவண் போன்ற லைய முடையேன்” (புறநானூறு: 43)

என்னும் பாடலின்,இந்த செயலால் புலவர் அரசனின் செய்கையால் வெறுத்து சினம் கொண்டு உரைத்தான். இங்கு வெறுத்தலால் வரும் சின மெய்ப்பாடு சுட்டப்படுகிறது.

நின் மகன் பகைவர் படைக்கு அஞ்சிப் புறங்கொடுத்து மாண்டான் என்று பலரும் வந்து அவளிடம் கூறினர். நெருங்கிச் செய்யும் போரில் அஞ்சி இறந்தான் என்பது உண்மையாயின் அவன் பாலுண்ட என் மார்பகத்தை அறுத் தெறிவேன் என்று சினம் கொண்டு வாளை கையிலேந்தி போர்களம் புகுந்தாள்.

## உவகை

உவகை என்றால் மகிழ்ச்சி என்று பொருள்படும். உவகை நான்கு வகைகளில் வரும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென
**அல்லல் நீத்த உவகை நான்கே (தொல்.மெய், நூ:11)**

செல்வத்தை நுகரும் போதும் ஐம்புலம்களால் நுகர்தலானும், மகளிரொடு புணரும் போதும் சோலையில் புகுந்து விளையாடும் போதும்; மகிழ்ச்சி ஏற்படும் என்று கூறுவதைக் காணலாம்.

அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர்
**திறம் புரி பசும் புல் பரப்பினர் கிடப்பி (புறநானூறு: 93)**

தமது வீரமே பற்றுக் கோடாகக் கொண்டு நல்ல போரிலே வீழ்ந்த நெடிய கழலணிந்த வீரர் செல்லும் உலகிற்கு செல்க! என்று கூறி அந்தணர் வாளால் மார்பைப் பிளந்து அடக்கம் செய்யும் மன்னர் உய்வை அடைந்தார் என்று உவகை தோன்ற கூறியதைக் காணலாம். புலன் அறிவால் ஏற்படும் அறிவு, புலமை முதிர்ச்சி மெய்ப்பாடு இங்கு இப்புவலரின் மூலம் அழகாக சுட்டப்படுகிறது.

மெல்லிய பெரும தாமே நல்லவர்
காரணங் காகிய மார்பிற் பொருநர்க்
கருநிலத் தன்ன நோன்மைச்
**செருமிகு சேஎய்நிர் பாடுநர் கையே (புறநானூறு: 14)**

இப்பாடலின் கருத்து புலவர் அரசனிடம் உரைக்கின்றார். இந்நிகழ்வு உவகை மெய்ப்பாடாக அமைந்துள்ளது.

## முடிவுரை

தொல்காப்பியர் குறிப்பிடும் எண்வகை மெய்ப்பாடுகள் புறநானூற்றில் பல்வேறு இடங்களில் சிறப்பாக காணப்படுகிறது. ஒவ்வொரு மெய்ப்பாடும் அதன் வழித் தோன்றும் மெய்ப்பாடுகளும் புறநானூற்றில் எவ்வகையில் இடம் பெற்றுள்ளது என்பதனை இக்கட்டுரையின் மூலம் காணமுடிகிறது. தொல்காப்பிய மெய்ப்பாட்டியலில் மாந்தரின் மெய்ப்பாட்டு உணர்வுகளைத் தொல்காப்பியர் மிகத் துள்ளியமாகவும், நுட்பமாகவும் விளக்கியுள்ளார். இத்தகைய மெய்ப்பாடுகளை புறநானூற்றில் பொருத்திப் பார்க்கும் போது கவிஞரின் அறிவு நுட்பம் புலப்படுகின்றன. மேலும் இலக்கியங்கள் உணர்ச்சிக்கு ஆட்பட்டவை என்பது புலனாகிறது. புறநானூறு உணர்ச்சிகளின் இருப்பிடமாகவே அமைந்துள்ளது. புறநானூறு அறிவுப்

பெட்டகமாக விளங்குவதால் அதில் அள்ள அள்ளக் குறையாமல் உணர்வுகள் பொதிந்து கிடப்பதும் புலனாகிறது.

## துணைநூற் பட்டியல் (References)

1. இளம்பூரணர் (உரையாசிரியர்) தொல்காப்பியம் பொருளதிகாரம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை-18
2. கிரியா தற்கால தமிழ் அகராதி.
3. புறநானூறு (மூலமும் உரையும்) – நியு செஞ்சுரி புக் ஹாவுஸ் (பி) லிட், சென்னை.
4. வெள்ளைவாரணன்., தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் உரைவளம், சாரதா பதிப்பகம் சென்னை.
5. டாக்டர். மு. வரதராசனார்.,திருக்குறள் தெளிவுரை, சாரதா பதிப்பகம் சென்னை.

**ARTICLE 47 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 48–53

# சங்க இலக்கியம் - குறுந்தொகையில் மலர்கள்

## Flowers in Sangam Literature – Kuruntokai

**சபிதா பேகம் த**
உதவிப் பேராசிரியர்
பயனீர் கலை அறிவியல் கல்லூரி
ஜோதிபுரம்
கோயம்புத்தூர் 641 047
9047712074
tsabithabegam@gmail.com

### Abstract

This article examines the literary use of flowers in *Kuruntokai* to elucidate the nature-centric thought found in Sangam literature. *Kuruntokai*, one of the *Ettuttokai* (Eight Anthologies), is a collection of poems centered on romantic love (*akam*). Within this work, elements of nature—specifically flowers—serve as significant symbols for expressing human emotions.

The flowers associated with the five landscapes (*Aintinai*) of *Kuruntokai*—*Kurinchi*, *Mullai*, *Marutam*, *Neithal*, and *Palai*—reflect both the natural environment of each region and the associated romantic sentiments. The *Kurinchi* flower signifies secret trysts; *Mullai* represents patience and waiting; *Marutam* denotes social life and prosperity; *Neithal* symbolizes the sorrow of separation; and *Palai* signifies an arduous journey.

Furthermore, flowers are employed through literary devices such as similes and metaphors to convey the beauty and emotional states of the beloved. This study also highlights the significant role flowers played in the cultural life of the Sangam era.

Thus, the study demonstrates that in *Kuruntokai*, flowers are not merely natural elements but serve as symbols of human emotion and culture.

**Keywords:** Knowledge gained through listening – Teaching and learning – Applied knowledge – Multidisciplinary knowledge – Experiential knowledge – Knowledge gained through inquiry and understanding.

### ஆய்வுச் சுருக்கம்

இக்கட்டுரை சங்க இலக்கியங்களிலுள்ள இயற்கைச் சிந்தனையை விளக்கும் நோக்கில் குறுந்தொகையில் இடம்பெறும் மலர்களின் இலக்கியப் பயன்பாட்டை ஆய்வு செய்கிறது. எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகை, அகப்பொருள் சார்ந்த காதல் வாழ்க்கையை மையமாகக் கொண்ட பாடல்களின் தொகுப்பாகும். இதில் இயற்கை கூறுகள், குறிப்பாக மலர்கள், மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் முக்கியச் சின்னங்களாகப் பயன்பட்டுள்ளன.

குறுந்தொகையில் இடம்பெறும் ஐந்திணை நிலங்களான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை ஆகியவற்றுடன் தொடர்புடைய மலர்கள், அந்தந்த நிலப்பரப்பின் இயற்கைச் சூழலையும் காதல் உணர்வுகளையும் பிரதிபலிக்கின்றன. குறிஞ்சி மலர் இரகசியச் சந்திப்பை, முல்லை பொறுமையையும் காத்திருப்பையும், மருதம் சமூக வாழ்க்கையையும் வளத்தையும், நெய்தல் பிரிவுத் துயரத்தையும், பாலை கடினமான பயணத்தையும் குறிக்கின்றன.

மேலும், மலர்கள் உவமை, உருவகம் ஆகிய இலக்கிய உத்திகளாகப் பயன்படுத்தப்பட்டு காதலியின் அழகு மற்றும் மனநிலைகளை வெளிப்படுத்துகின்றன. சங்க காலத்தில் மலர்கள் பண்பாட்டு

வாழ்க்கையிலும் முக்கிய இடம் பெற்றிருந்ததையும் இவ்வாய்வு எடுத்துக்காட்டுகிறது.

இதனால், குறுந்தொகையில் மலர்கள் வெறும் இயற்கைக் கூறுகளாக இல்லாமல், மனித உணர்வுகள் மற்றும் பண்பாட்டின் அடையாளங்களாக விளங்குகின்றன என்பதை இவ்வாய்வு விளக்குகிறது.

**திறவுச் சொற்கள்:** கேள்வி ஞானம் - கற்றல் கற்பித்தல் - பயன்பாட்டு அறிவு - பல்துறை அறிவு - அனுபவ அறிவு - ஆராய்ந்துணர்தல்.

## முன்னுரை

சங்க இலக்கியங்கள் தமிழர் வாழ்க்கை முறையையும் இயற்கையுடனான அவர்களின் நெருங்கிய தொடர்பையும் வெளிப்படுத்துகின்றன. சங்க இலக்கியங்களில் இயற்கை கூறுகள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. குறிப்பாக மலர்கள் தமிழர் பண்பாட்டிலும் இலக்கியத்திலும் அழகு, மணம், உணர்ச்சி ஆகியவற்றின் அடையாளங்களாகக் காணப்படுகின்றன. சங்க காலத்தில் மலர்கள் வெறும் அலங்காரப் பொருளாக மட்டுமின்றி மனித உணர்வுகளையும் சமூக வாழ்க்கையையும் வெளிப்படுத்தும் அடையாளங்களாகவும் பயன்பட்டன.

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான குறுந்தொகை காதல் வாழ்க்கையை மையமாகக் கொண்ட அகப்பொருள் பாடல்களின் தொகுப்பாகும். இதில் இயற்கைச் சூழலை விளக்குவதற்கும் காதல் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கும் மலர்கள் முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இக்கட்டுரை குறுந்தொகையில் இடம்பெறும் மலர்கள் பற்றிய குறிப்புகளையும் அவற்றின் இலக்கியப் பயன்பாட்டையும் ஆய்வு செய்கிறது.

## அறிமுகம்

குறுந்தொகை சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகும். இதில் சுமார் 400 பாடல்கள்இடம்பெற்றுள்ளன. பல்வேறு சங்கப் புலவர்கள் இயற்றிய இப்பாடல்கள் காதல் வாழ்க்கையை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன.

குறுந்தொகைப் பாடல்களில் ஐந்திணை நிலங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன:
குறிஞ்சி
முல்லை
மருதம்
நெய்தல்
பாலை

இந்த ஐந்திணை நிலங்களுடன் தொடர்புடைய மலர்கள் குறுந்தொகையில் இடம்பெறுகின்றன. அவை இயற்கைச் சூழலையும் மனித உணர்ச்சிகளையும் இணைக்கும் முக்கியச் சின்னங்களாக விளங்குகின்றன.

குறுந்தொகையில் மலர்களின் இலக்கியப் பயன்பாடு

குறுந்தொகையில் மலர்கள் பின்வரும் வகையில் பயன்படுத்தப்படுகின்றன:

இயற்கை அழகைக் காட்டுவதற்கு
காதல் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு
உவமை மற்றும் உருவகமாக
காதலியின் அழகை விளக்குவதற்கு
நிலப்பரப்பின் தன்மையை எடுத்துக்காட்டுவதற்கு

மலர்களின் மணம், நிறம், மென்மை ஆகிய இயற்கை பண்புகள் மனித உணர்வுகளோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

## குறிஞ்சி நிலமும் குறிஞ்சி மலரும்

குறிஞ்சி நிலம் மலைப்பகுதியைக் குறிக்கிறது. இந்நிலத்தின் அடையாள மலர் குறிஞ்சி ஆகும். குறிஞ்சி மலர் காதலர்களின் இரகசியச் சந்திப்பை குறிக்கும்.

## நிலத்திலும் பெரிதே

வானினும் உயர்ந்தன்று நீரினும் ஆழளவு இன்றே – சாரல் கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.(குறுந்தொகை – பாடல் 3) இந்தப் பாடலில் மலைப்பகுதியின் இயற்கை அழகும் குறிஞ்சி மலரின் சிறப்பும் குறிப்பிடப்படுகிறது.

குறிஞ்சி மலர்கள் மலர்ந்த மலைப்பகுதி காதலர்களின் சந்திப்பிற்கான இடமாகக் காட்டப்படுகிறது. இதன் மூலம் காதலின் இனிமையும் இயற்கையின் அழகும் இணைந்து வெளிப்படுகின்றன.

## முல்லை நிலமும் முல்லை மலரும்

முல்லை நிலம் காடு மற்றும் மேய்ச்சல் நிலங்களை குறிக்கிறது. இந்நிலத்தின் அடையாள மலர் முல்லை ஆகும்.

முல்லை மலர் பொறுமையையும் காத்திருப்பையும் குறிக்கிறது. காதலன் தூரம் சென்றபோது காதலி அவனை எதிர்பார்த்து காத்திருக்கும் மனநிலையை முல்லை மலரின் மூலம் சங்கப் புலவர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

## முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்

கழுவுறு கலிங்கம் கழாஅது உடைஇ குவளை உண்கண் குய்ப்புகை கழுமத் தான் துழந்து அட்ட தீம்புளிப் பாகர் இனிதெனக் கணவன் உண்டலின் நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.(கு.தொ-பாடல் 59)

மென்மையான விரல்களால் முளிதயிரை பிசைந்து உணவு செய்தாள் தலைவி. சமையல் செய்ததால் கைகளில் புகை வாசம் இருந்தது. அதைக் கூட கழுவாமல், அவள் செய்த புளிப்பாகத்தை தலைவன் மகிழ்ந்து உண்டான். அதை பார்த்த தலைவியின் முகம் நாணமும் மகிழ்ச்சியும் கலந்து மலர்ந்தது. இந்தப் பாடலில் முல்லை மலரின் மணமும் மென்மையும் காதலியின் மனநிலையுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் பாடல் தலைவி செய்த உணவைத் தலைவன் மகிழ்ந்து உண்பதைப் பார்த்து அவள் அடையும் மகிழ்ச்சியை அழகாக விளக்குகிறது.

## மருத நிலமும் மருத மலரும்

மருத நிலம் விவசாய நிலங்களையும் நதிக்கரையையும் குறிக்கிறது. இந்நிலத்தின் அடையாள மலர் மருதம் ஆகும்.

மருத நிலப் பாடல்களில் குடும்ப வாழ்க்கை, சமூக உறவுகள் போன்றவை முக்கியமாக இடம்பெறுகின்றன. மருத மலர் வளமான வாழ்க்கையையும் சமூக அமைப்பையும் குறிக்கிறது.

## மின்னுச்செய் கருவிய பெயன்மழை தூங்க

விசும்பாட் அன்னம் பறைநிவந்தாங்குப் பொலம்படைப் பொலிந்த வெண்டேர் ஏறிக் கலங்குகடல் துவலை ஆழி நனைப்ப இனிச்சென் றனனே இடுமணற் சேர்ப்பன் யாங்கறிந் தன்றுகொல் தோழி என் தேங்கமழ் திருநுதல் ஊர்தரும் பசப்பே (கு.தொ-பாடல் 205

தலைவன் பிரிந்து சென்றவுடன், தலைவியின் நெற்றியில் பசலை (பசப்பு) தோன்றுகிறது. அதை பார்த்து தோழி கவலைப்படும்போது, “அவன் பிரிந்ததை இந்த பசலை எப்படி அறிந்தது?” என்று தலைவி கூறுகிறாள்

நெய்தல் நிலமும் நெய்தல் மலரும்

நெய்தல் நிலம் கடற்கரைப் பகுதிகளைக் குறிக்கிறது. இந்நிலத்தின் அடையாள மலர் நெய்தல் ஆகும்.

நெய்தல் மலர் பிரிவு துயரத்தையும் காத்திருப்பையும் குறிக்கிறது. கடலோர மக்களின் வாழ்க்கை, மீனவர்களின் தொழில் ஆகியவற்றுடன் இந்த மலர் தொடர்புடையது.

## காலையும் பகலும் கையறு மாலையும்

ஊர்துஞ்சு யாமமும் விடியலும் என்றிப் பொழுதிடை தெரியின் பொய்யே காமம்; மாவென மடலோடு மறுகில் தோன்றி தெற்றெனத் தூற்றலும் பழியே; வாழ்தலும் பழியே பிரிவுதலைவரினே.(கு.தொ– பாடல் 325)

காதலரைப் பிரிந்தால் காலை, பகல், மாலை, இரவு, விடியல் என்று காலங்கள் பிரிந்ததாகத் தோன்றாது. காதல் உண்மையானால் பிரிவைத் தாங்க முடியாது. காதலன் பிரிந்தால் வாழ்வதும் பழி; மடலேறி காதலை வெளிப்படுத்துவதும் பழி. இந்தப் பாடலில் கடற்கரையில் மலர்ந்த நெய்தல் மலர்கள் காதலியின் மனத் துயரத்தை வெளிப்படுத்துகின்றன.

## பாலை நிலமும் அதன் தாவரங்கள்

பாலை நிலம் வறண்ட பாலைவனத்தை குறிக்கிறது. இந்நிலத்தில் குறிப்பிட்ட மலர்கள் குறைவாக இருந்தாலும், வறண்ட நிலத்தின் தன்மையை எடுத்துக்காட்ட பல தாவரங்கள் மற்றும் மலர்கள் குறிப்பிடப்படுகின்றன.

பாலை நிலப் பாடல்களில் பிரிவுத் துயரமும் கடினமான பயணமும் முக்கியமாகக் காணப்படுகின்றன.

## முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்

கழுவுறு கலிங்கம் கழாஅது உடைஇ குவளை உண்கண் குய்ப்புகை கமழத் தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர் இனிது எனக் கணவன் உண்டலின் நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே.(கு.தொகை – பாடல் 283)

மென்மையான காந்தள் மலரைப் போன்ற விரல்களால் தயிரை பிசைந்து, அவசரத்தில் கைகளை கழுவாமல் உடையில்த் துடைத்து, அடுப்பிலிருந்து எழும் புகை கண்களைத் துளைக்க, அவள் சமைத்த புளிப்பான உணவை கணவன் சுவைத்து “இனிது” என்று கூறி சாப்பிடுகிறான். அதைப் பார்த்த மனைவியின் அழகிய முகம் மிகுந்த மகிழ்ச்சியால் ஒளிவிடுகிறது. இந்தப் பாடலில் பாலைவனப் பயணத்தின் கடுமை இயற்கைச் சூழலின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

காதலியின் அழகும் மலர்களும்

குறுந்தொகைப் பாடல்களில் காதலியின் அழகை மலர்களோடு ஒப்பிட்டு பாடியுள்ளனர்.

முகம் → மலர்
கண்கள் → தாமரை
முடி → மலர்மணம்

இதன் மூலம் காதலியின் அழகு இயற்கையின் அழகுடன் இணைக்கப்படுகிறது.

மலர்களின் பண்பாட்டு முக்கியத்துவம்

சங்க காலத்தில் மலர்கள் தமிழர் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்தன.

## மலர்கள் பயன்படுத்தப்பட்ட இடங்கள்

திருமண நிகழ்ச்சிகள்
வழிபாட்டு முறைகள்
அலங்காரம்
காதல் அடையாளங்கள்

இதன் மூலம் சங்க காலத்தில் இயற்கை மற்றும் மனித வாழ்க்கை ஒன்றோடொன்று இணைந்திருந்தது என்பதை அறிய முடிகிறது.

## முடிவுரை

குறுந்தொகை சங்க இலக்கியங்களில் இயற்கையும் மனித உணர்வுகளும் ஒன்றிணைந்துள்ள சிறந்த நூலாகும். இதில் மலர்கள் முக்கியமான இலக்கியச் சின்னங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன. ஐந்திணை நிலங்களின் தனித்துவத்தை எடுத்துக்காட்டவும் காதல் உணர்வுகளை வெளிப்படுத்தவும் மலர்கள் பெரிதும் உதவுகின்றன.

குறுந்தொகையில் இடம்பெறும் மலர் குறிப்புகள் சங்க காலத்து இயற்கைச் சூழலையும் தமிழர் பண்பாட்டையும் நமக்கு தெளிவாக அறியச் செய்கின்றன. எனவே குறுந்தொகையில் மலர்கள் பற்றிய ஆய்வு

சங்க இலக்கியத்தின் இயற்கைச் சிந்தனையைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

## துணைநூற் பட்டியல் (References)

1. சங்க இலக்கியம் எட்டுத்தொகை (அறிஞர் ச. வே. சுப்பிரமணியன்) சாரதா பதிப்பகம் சென்னை ஏழாம் பதிப்பு பிப்ரவரி 2006

**ARTICLE 48 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 54–62

# காமத்துப்பாலில் அறிவியல்

## Science in Kamathuppal

**முனைவர் கு.சக்திலீலா**
உதவிப்பேராசிரியர்
தமிழியல்துறை
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி)
சிவகாசி
9789238290
sakthileelak@gmail.com

### Abstract

Ethical principles guide human beings in living a virtuous life, and the *Thirukkural* serves as an exemplary literary record of these principles. The work is structured into three sections: *Aram* (Virtue), *Porul* (Wealth/Statecraft), and *Inbam* (Love/Pleasure). Although *Aram* is highlighted as the foremost among these three divisions, scientific concepts—spanning fields such as geology, medicine, hydrology, environmental science, physics, chemistry, botany, zoology, agriculture, mathematics, and astronomy—are interspersed throughout the text, demonstrating the author's scientific acumen. Valluvar has incorporated scientific observations as metaphors not only in the sections on Virtue and Wealth but also in *Kamathuppal* (the section on Love), which deals with the ethics of experiencing pleasure; this article aims to highlight those specific instances.

**Keywords:** Knowledge gained through listening – Teaching and learning – Applied knowledge – Multidisciplinary knowledge – Experiential knowledge – Knowledge gained through inquiry and understanding.

### ஆய்வுச் சுருக்கம்

மனிதர் மனிதராக வாழ்வதற்கு வழிகாட்டுபவை அறங்கள். அதனைச் செம்மையாக இலக்கிய பதிவாக செய்துள்ளநூல் திருக்குறள். இந்நூல் அறம், பொருள், இன்பம் என்ற பால்பகுப்புகளைக் கொண்டுள்ளது. முப்பால்களிலும் அறமே முதன்மையாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. எனினும் மண்ணியல், மருத்துவவியல், நீரியல், சுற்றுப்புறச்சூழலியல், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், வேளாண்மையியல், கணிதம், வானியல் போன்ற அறிவியல் கருத்துக்கள் திருக்குறள் முழுவதிலும் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன. இவை அவரின் அறிவியல்நுட்பங்களைக் காட்டுகிறது. அறத்துப்பால், பொருட்பால் மட்டுமல்லாது இன்பம் பெறுவதற்குரிய அறத்தைக் கூறும் காமத்துப்பாலிலும் சில அறிவியல் செய்திகளை உவமைகளாக வள்ளுவர் பதிவுசெய்துள்ளார் அவற்றை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:** கேள்வி ஞானம் - கற்றல் கற்பித்தல் - பயன்பாட்டு அறிவு - பல்துறை அறிவு - அனுபவ அறிவு - ஆராய்ந்துணர்தல்.

‘அறிவியல்’ என்ற சொல் ஆங்கிலத்தில், 'Science' என்று அழைக்கப்பட்டது. ‘Science' என்ற ஆங்கிலச்சொல், ‘அறிவு’ என்ற பொருள் ஏக்கூடிய கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். தமிழிலில் இச்சொல், 'அறிவு+இயல்' எனப் பிரிந்து அறிவின் இயல்பு அல்லது இயற்கை அறிவு என்கிற பொருளைத் தருகிறது. வள்ளுவர்

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு" (குறள்.423)

உண்மைப் பொருளைக் காண்பதே அறிவு என்கிறார். அந்தவகையில், எந்த ஒரு செயலையும் காரணகாரியத்தோடு சரியான எடுத்துக்காட்டுகளுடன் கூறுவதும் உள்ளதை உள்ளவாறு விளக்குவதுமே அறிவியல் எனலாம்.

வானியல்

## அறுவாய் நிறைந்த அவிர்மதி

விண்ணில் இருந்து எரிகற்கள் மோதியதால் நிலவின் மேற்பரப்பில் பல பள்ளங்கள் காணப்படுகின்றன. நிலவின் இக்குறைபாடு பார்ப்பதற்கு, முயல், மான் போன்ற உருவங்கள் போலத் தெரிகிறது. இதைப் பலவாறு கற்பனை செய்து மக்களும் இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. முதன் முதலாக அறிவியல் அறிஞர் கலிலியோ தான் நிலவில் உள்ள பள்ளங்களைத் தன் ஆராய்ச்சிக் குறிப்பில் கூறியுள்ளதாக குறிப்பிடுவர். ஆனால், அவருக்கு முன்பே தமிழர்கள் இதைப்பற்றி அறிந்து வைத்திருந்தனர். வள்ளுவர் இதை,

"அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல
மறுஉண்டோ மாதர் முகத்து" (குறள்.1117)

அறு – நீக்கபட்ட, வாய் - இடம் அதாவது "நீக்கப்பட்ட இடம்' என்று பொருள்படும் 'அறுவாய்' என்ற சொல்லால் சுட்டுகிறார். தலைவியின் முகத்தில் நிலவின் பள்ளங்களைப் போன்று குற்றமில்லை என்பதை உவமையாக அமைத்துள்ளார்.

"மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி" (குறள்.1118)

என அடுத்த குறளில் தலைவயின் முகம் போல குற்றமில்லாமல் ஒளிவீசும் தன்மை நிலவுக்கு இல்லை. நிலவுக்கு வளர்பிறை, தேய்பிறை என்ற குறைபாடுள்ளது. தலைவிக்கு அது இல்லை. ஆகையால், தலைவி முகம் நிலவைவிட ஒளிவீசக் கூடியது என்கிறார். வள்ளுவர் பொருட்பாலிலும், உயர்குடியில் பிறந்தவர்கள் குற்றம் செய்தால் நிலவில் உள்ள மறுப்போல பலரும் அறியும்நிலை ஏற்படும் (**குறள்.957**) என நிலவின் மறுவை உவமையாக்கியுள்ளார்.

## சந்திரகிரகணம் (திங்களைப் பாம்பு கொண்டற்று)

விண்ணில் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பது நிலா. ராகு என்ற பாம்பினால் நிலவு விழுங்கப்படுகிறது என்ற நம்பிக்கைப் பழங்கால மக்களிடம் நிலவியது. இவை, இலக்கியங்களில் தொன்மையாகவும் உவமையாகவும் பல இடங்களில் புலவர் பெருமக்களால் கையாளப்படுகிறது. இதற்கு அறிவியலார் தரும் கருத்து வேறு. பூமி, நிலா, சூரியன் மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும்போது சூரியனுக்கும் நிலவுக்கும் இடையில் பூமி வருகின்றது. அப்பொழுது சூரியனின் ஒளி நிலவில் விழுவதை பூமி மறைத்துவிடவே நிலாவில் பூமியின் நிழல் விழுகிறது. எனவே, நிலவு தெரிவதில்லை. இது ஒரு சில நிமிடமே நிகழும். இந்நிகழ்வு சந்திரகிரகணம். இதேபோல் சூரியனின் ஒளி மறைக்கப்படும் சூரியகிரகணமும் உண்டு. ஆனால், அதை அனைவராலும்

பார்க்கமுடியாது. பூமியின் ஒரு பகுதியில் உள்ளவர்களுக்கு மட்டுமே தெளிவாகத் தெரியும். மேலும் சூரியனின் ஒளிமிகுதியால் பார்ப்பவர் உடல்ரீதியான பாதிப்பை அடைவர். ஆனால், சந்திரகிரகணத்தை அனைத்துப் பகுதி மக்களாலும் காணமுடியும். இதற்கு உடல்ரீதியான பாதிப்பும் கிடையாது. வள்ளுவர் இந்நிகழ்வை உவமையாகப் பயன்படுத்தி இருந்தாலும் அதனுள் அவர் சொல்லும் கருத்து ஆழமானது.

“கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று” (குறள்.1146)

தலைமக்களின் சந்திப்பு ஒரு நாள் தான் நிகழ்ந்தது. ஆனால், அவர்களின் களவொழுக்கம் ஊரார் அனைவரும் அறியும்படி அலராக மாறியதைக் குறிக்கவே இதை வள்ளுவர் பயன்படுத்தினார் எனலாம்.

## நீரின் இயல்பு

பூமிக்கு அடியில் இருந்து ஊறி தேங்கி நிற்கும் ஊற்றுநீர் இறைக்க இறைக்க குறையாது ஊறும் தன்மையது. இதைத்தான் வள்ளுவர்,

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு” (குறள்.396)

என்கிறார். தலைவன் பிரிவால் தனக்கு ஏற்படும் ஆற்றாமையைத் தலைவி மறைக்க முயன்றாலும் அது ஊற்றுநீர் போல் மிகுந்து கொண்டே இருக்கிறது என ஊற்றுநீரை உவமையாக்குகிறார்.

“மறைப்பேன்மன் யானிஃதோ நோயை இறைப்பவர்க்கு
ஊற்றுநீர் போல மிகும்” (குறள்.1161)
“உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்
பொய்த்தல் அறிந்தென் புலந்து” (குறள்.1287)
‘புனல்’ என்பதற்கு ‘ஓடுகின்ற நீர்’என்று பொருள். ஓடுகின்ற நீருக்கு
இழுத்துச் செல்லும்

இயல்பு உண்டு என்பதை அறிந்தும் நீரில் விழுபவரைப் போல தலைவி, தலைவனைக் கண்டபின் அவன் மீதான ஊடலை நீடிக்க முடியாது கைவிடுவாள். மற்றொரு இடத்தில், “காமக்கடும் புனல் நீந்திக் கரைகாணேன்” (குறள்.1167) என காமத்தை கடக்க இயலாத வெள்ளமாக உருவகப்படுத்துகிறார்.

“புலத்தலின் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து” (குறள்.1323)

நிலத்தொடு நீர் கலந்தால் நீரின் இயல்பு மாறி நிலத்தின் தன்மையைப் பெறும் அதுபோல உள்ளம் கலந்த தலைமக்களிடம் தோன்றும் ஊடலால் பெறும் இன்பம் தேவலோகத்திலும் இல்லை. நிலத்தின் தன்மையை நீர் பெறுவதை, “செம்புலப் பெயனீர் போல” (குறுந்.40) தலைமக்களின் உள்ளம் கலந்தநிலைக்கு உவமையாக குறுந்தொகைப் பாடலும் காட்டுகிறது.

## வேளாண்மையியல் : எருவிடுதல்

ஏரால் நிலத்தை உழுது பண்படுத்துவது இன்றியமையாதது. அதனினும், சிறப்பு வாய்ந்தது எருவிடுதல் ஆகும். இதனை “ஏரினும் நன்றால் எருவிடுதல்” (குறள்.1038) எனும் குறளடியால் அறியலாம்.

எருவின் இன்றியமையாமையைத் தலைமக்களின் காதலாகிய பயிர் வளர்ச்சியோடு உருவகப்படுத்துகிறார் வள்ளுவர். பயிர் வளரத் தொடங்கும் பருவத்தில் இடப்படும் எரு, அதன் வளர்ச்சியைச் சிறக்கச் செய்யும் அதுபோல தலைமக்களின் காதலை அறிந்து ஊரார் பேசும் அலர்மொழி அவர்களின் காதலாகிய பயிருக்கு எருவாகவும்; அவர்களின் அலர்மொழி தாயின் செவிக்கு எட்டும் போது அவள் தலைவிக்கு விதிக்கும் கட்டுப்பாடுகள் காதலாகிய பயிறுக்கு நீராக இருந்து காதலை வளம்பெறச் செய்தது என்பதன் வழி நிலத்தைப் பண்படுத்தி பயிர் வளரத்தொடங்கும் போது இடப்படும் எருவாகிய உரம், நீர் பாய்ச்சுவதன் மூலம் பயிருக்கு பலவிதமான சத்துக்களை வழங்கி செழிப்படைய வைக்கும் என்ற வேண்மைச் செய்தி ஈண்டு புலப்படுகிறது.

## இயற்பியல் : காவாத்தூக்கும்

பழங்காலத்தின் பொருளை பண்டமாற்றாகப் பெறும் வழக்கம்தான் இருந்தது. எனினும், அளவை தொடர்பான நுட்பங்களை அறிந்திருந்தனர். அந்தவகையில்ää தராசு (குறள்.118), எடைநுட்பம் (குறள்.476), அளக்கும்கோல் (குறள்.796), நுட்ப அளவுகோல் (குறள்.760) போன்ற அளவை தொடர்பான செய்திகளைத் திருக்குறளில் காணமுடிகிறது. “பூமிக்கு ஈர்ப்புவிசை உண்டு. நீள, அகல, உயரமுடைய எப்பொருளையும் பூமி கவர்ந்து இழுக்கும் தன்மையுடையது”1 என்பதை நியூட்டன் சமன்பாடு தத்துவம் மூலம் விளக்குகிறார். இருபுறமும் சமமாக பாரம் தொங்கும்போது அதற்கு மையப்புள்ளி இருக்குமானால் இரண்டு பாரங்களும் அதற்குரிய கனத்தோடு இருக்குமானால் தண்டு சமமாக நிற்கும் என்பதே இயற்பியல் சமன்பாடாகும். ஒரு தண்டின் இருபுறமும் சமமான பொருளைத் தொங்கவிட்டு தோளை மையப்புள்ளியாகக் கொண்டு சுமக்கம் காவடி சமன்பாட்டுத் தத்துவம் சார்ந்ததாகும்.

“காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்
நோனா உடம்பி னகத்து” (குறள்.1163)

தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் உயிரைக் காவடித் தண்டாகக்கொண்டு காமநோயும் நாணமும் இருபுறமும் தொங்குகின்றன. இதேபோன்று,

“ஒருதலையான் இன்னாது காமங்காப் போல்
இருதலை யானும் இனிது” (குறள்.1196)

என்ற குறளும் இருபக்கமும் சமமான எடை இருப்பதால்தான் காவடி சமமாக உள்ளது. ஒரு பக்கம் மட்டும் எடை இருப்பதால் சமமாக நிற்காமல் விழுந்துவிடும் அதேபோல், காதலும் தலைமக்களிடையே சமமாக இருத்தல் வேண்டும் என்கிறது.

கோல் காணா கண்
ஒரு பொருளைக் கண்களால் பார்ப்பதற்கு ஒரு குறிப்பிட்ட தூரத்தில் அப்பொருள்

இருக்கவேண்டும். கருவிழியில் இருந்து 25செ.மீ. தொலைவில் உள்ள பொருளே கண்ணுக்கு காட்சியாகப் புலப்படும். இதை, “தெளிவுறு காட்சியும் மீச்சிறு தொலைவும்” என்பர். இச்சரியான ஒளிச்சிதறல் நிலையை ‘இமெட்ரோப்பியா’ (Emmetropia) என்பர். கண்கோளம்

நீளமாகுதல் அல்லது கண்ணின் ஒளிச்சிதறல் தன்மையில் வேறுபாடு ஏற்படுவதை ‘ஏமெட்ரோபியா’ (Ametropia)”2 என்பர்.

“எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து” (குறள்.1285)

கண்ணுக்கு மையிடும் பழக்கம் இன்றளவும் பெண்களிடம் காணப்படுகிறது. கண்ணுக்கு மையட பயன்படும் கோலை அஞ்சனக்கோல் என்பர். மையிடும்போது அந்தக்கோலை மையிடுபவர் தன் கண்ணால் காணஇயலாது கண்ணாடியில்தான் பார்க்கமுடியாது. அதேபோன்று தலைவனைக் கண்டவுடன் அவனுடைய குற்றங்களை தலைவி மறந்துவிடுகிறாள் எனுமிடத்து, கண்ணின் காட்சியைப் புலப்படுத்துவதற்கு தூரம் அவசியம் கண்ணுக்கு மிக அருகில் இருப்பதை கண்களால் காணமுடியாது எனும் காட்சிப்புலப்பாட்டு அறிவியலை வள்ளுவர் அமைந்துள்ளார். இன்னொரு குறளில், “வாளற்றுப் புற்கென்ற கண்ணும்” (குறள்.1261) என்று கண்கள் ஒரு காட்சியை நீண்டநேரம் கண்டால் காட்சிப்புலப்பாடு குறையும் என்பதையும் குறிப்பிடுகிறார்.

## வேதியியல் : நெருப்பு

நெருப்பு தன்னில் இடும்பொருளை அழிக்கும் தன்மையுடையது. எரிந்து கொண்டிருக்கும் நெருப்பில் விறகு போன்ற திடப்பொருளை இட்டால் அவை எரிபொருளாக மாறுவதைக் காணமுடியும். எண்ணெய், நெய் போன்ற திரவப்பொருளை இட்டால் அவை நெருப்பால் உடனே ஆட்கொள்ளப்பட்டு நெருப்பின் வேகம் அதிகரிப்பதை மட்டுமே காணமுடியும். இந்த அறிவியல் உண்மையை இரண்டு குறள்களில் காட்டுகின்றார். தலைமக்களின் காதல் குறித்து ஊரார் பேசும் அலர்மொழி அவர்தம் காதலாகிய நெருப்புக்கு நெய்யாகி காதலை மிகுவிக்கிறது.

“நெய்யால்எரிநுதுப்பேம்என்றற்றால்கௌவையால்
காமம்நுதுப்பேம்எனல்”(குறள்.1148)

மேலும், நெருப்பில் இடப்படும் கொழுப்பானது எரிபொருளாக மாறி நெருப்புடன் உடனே கலத்தலைப் போல தலைவியின் ஊடலும் தலைவனைப் பார்த்தஉடன் தீர்கிறது.

“நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பேம் எனல்” (குறள்.1260)

## தாவரவியல் : அனிச்சமலர்

பழங்காலத் தமிழர்கள் இயற்கையோடு இணைந்த வாழ்க்கையை நடத்தயவர்கள் தங்களைச் சுற்றயிருந்த தாவரங்களின் இயல்புகளை உற்றுநோக்கியதோடு இலக்கியங்களிலும் பதிவு செய்துள்ளனர். அப்படி குறிப்பிட்ட மலர்களில் அறியவகையாக அனிச்சமலரைக் கூறலாம். குறிஞ்சிப்பாட்டில் இம்மலர் குறிப்பிடப்பட்டாலும் அதன் மென்மைத்தன்மை குறிப்பிடப்படவில்லை. ‘லுஷிங்டன்’ (Lushington) என்ற தாவரவியல் அறிஞர் அனிச்சமலருக்கான தாவரவியல் பெயரை, ‘லாகர் சுராமியா பிளாசுரீசினே’ _Lagerstroemia flos-reginae_ Retz. (Syn. _Lagerstroemia speciosa_) - Queen's Flower / Pride of India (தமிழில் பூமருது, கதலி) தென் ஆசிய

நாடுகளில் காணப்படும் இச்சிறுமரத்தின் மலர்கள் மிகுந்த நுண்ணுணர்வு உடையது”3 என்பர். இதன் தன்மையாக தாவரவியலாளர், நெடுந்தூரத்தில் மேகம் நீர் கொண்டு கறுக்கும் போதே தரையில் இருக்கும் அம்மலர் வாடிவிடும் எனக் கூறுவது முகர்ந்து பார்த்தாலே குழைந்துவிடும் அளவிற்கு இம்மலர் மென்மைத்தன்மை உடையது என்று வள்ளுவர் குறிப்பிடும் மென்மைத்தன்மையோடு ஒத்திப்பது இங்கு குறிப்படத்தக்கது.

“மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து” (குறள்.90)

தலைவி அனிச்சமலரைவிட மென்மையானவள் (குறள்.1111). அனிச்சமலர் தலைவியின் மெல்லடியை நெருஞ்சிமுள் போல வருத்தும் (குறள்1115). அனிச்சமலரின் காம்பு மலரைவிட கனமுள்ளது. அம்மலரைத் தலைவி சூடியதால் அவள் இடைவருந்தும் (குறள்.1120) என தலைவியின் மென்மையை உணர்த்த நலம்புனைந்துரைத்தல் அதிகாரத்தில் மூன்று குறளில் அனிச்சத்தின் மென்மையைக் குறிப்பிடுகிறார்.

## மலரின் பருவம்

அரும்பு, மொட்டு, முகை, மலர், அலர், வீ, செம்மல் என ஏழுநிலை மலருக்கு உண்டு என வரையறுக்கின்றனர். ஆனால், பழந்தமிழில் அரும்பு, நனை, முகை, மொக்குள், முகிழ், மொட்டு, போது, மலர், பூ, வீ, பொதும்பர், பொம்மல், செம்மல் என மலர்களின் மாற்றங்களுக்கு ஏற்ப பதின்மூன்று பருவப்பெயர் குறிப்பிடப்படுகிறது. பூ மலருதலுக்கு முந்தைய பருவத்தை, இன்று அரும்பு விரிந்த நிலையைப் பூ என்கிறோம்., “1.அரும்பு = பூ தாவரத்தில் அரும்பும் நிலை, 2.நனை – வெளியில் தலைகாட்டும்நிலை, 3.முகை – தலைகாட்டி திரட்சியாக மாறும்நிலை, 4.மொக்குள் - பூவிற்குள் பருவமாற்றமான மணம் உருவாகும் நிலை, 5.முகிழ் - மணம் கொண்டு முகிழ்தல், 6.மொட்டு – விரிந்தும் விரியாமலும் இருக்கும்நிலை, 7.போது – மொட்டு மலரும் போது ஏற்படும் புடைப்பு, 8.மலர் – மலர்ந்தநிலை, 9.பூ – முழுமையாக விரிந்தநிலை, 10.வீ – உதிரும்நிலை, 11.பொதும்பர் - பூத்துக் குலுங்கி நிற்பது, 12.பொம்மல் - உதிர்ந்து கிடக்கும் பூ, 13.செம்மல் - செந்நிற மாற்றம் பெற்று அழுகியநிலை” பூவின் இந்தப் பதின்மூன்று நிலைகளும் ஏழுநிலைகளுக்குள் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

“காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்” (குறள்.1227)

தலைவன் பிரிவால் தலைவிக்கு தோன்றிய காதலாகிய துன்பம் காலையில் அரும்பி பகல்முழுவதும் போதுநிலையாகிய, (மலரும்) புடைப்புநிலையை அடைந்து மாலையில் முழு மலராகிறது என்று அரும்பு, போது, மலர் எனப் பூவின் மூன்றுநலைகளையும் ஒரே பாடலில் இயம்பிவிட்டார் வள்ளுவர்.

“முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை
நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு” (குறள்.1274)

பூ பருவமடைந்து சற்று புடைத்துக் கொண்டு வரும்போது அதற்குள் மணம் உருவாதல் போல காதலியின் புன்முறுவலாகிய மொக்குளில்

காதற்குறிப்பு உள்ளது. இதில் தலைவியின் புன்முறுவலுக்கு முகைமொக்குள் என்ற பூவின் மணத்திற்கான பருவநிலையைக் காட்டுகிறார். பூவின்நிலையை உற்றுநோக்கி, உவமையாக அதை வள்ளுவர் எழுதியுள்ளார் எனலாம்.

## பழத்தின் தன்மை

ஒவ்வொரு பழத்திலும் ஒவ்வொரு வகையான அமிலங்கள் உள்ளன. உதாரணமாக, ஆப்பிள் பழத்தில் மேலிக் அமிலமும், எலுமிச்சையில் சிட்ரிக் அமிலமும் உள்ளன. இந்த அமிலங்கள் காய்களை உண்ணுவதற்குத் தகுந்த பழமாக மாற்றுவதோடு உடலுக்குத் தேவையான சத்துக்களையும் வழங்குகிறது. உரிய பருவத்தில் பழத்தை உண்ணாவிட்டால் இந்த அமிலங்கள் பழத்தை உண்ணமுடியாத அளவு (கெட்டுப்போதல்) மாற்றிவிடுகின்றன. துனியும் ஊடலும் காதலில் எத்தன்மையது என்று உரைக்க பழங்களின் நிலை பற்றி வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். பெரும்பிணக்கும்(துனி), சிறுபிணக்கும்(புலவி) ஏற்பட்டு இன்பம் தரும் காதல் வாழ்க்கை அமையாவிட்டால் அது முற்றிப் பழுத்து அழுகிய பழம் போலவும், முற்றாத இளம் பிஞ்சைப் போலவும் பயனற்றதாகவே இருக்கும்.

“துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருங்காயும் அற்று” (குறள்.1306)

தலைமக்களிடையேயான ஊடல் அளவாக இருக்க வேண்டும் என்பதை பழத்தின் தன்மையைக் கூறி விளக்குகிறார்.

## உடலியல் - உணவு

உயிர் வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது. உணவு உடல்வளர்ச்சிக்கு உதவிகிறது. தேய்ந்துபோகும் திசுக்களைப் புதுப்பிக்கின்றது. உடல்உறுப்புக்களின் செயல்பாட்டுக்குத் தேவையான சத்துக்களை வழங்குகிறது. அத்தகைய உணவை,

“மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருத்தியல
தற்றது போற்றி யுனின்” (குறள்.942)

உண்ட உணவு செரித்தமைக்கான அறிகுறியாகிய (வயிற்றில் உள்ள செரிமான சுரப்பிகளால்) பசிஉணர்வு தோன்றிய பின் உண்ண வேண்டும். அப்படி உணவு உட்கொள்பவருக்கு மருந்து தேவையில்லை. நோயின்றி நீண்டநாள் வாழலாம். உணவு உண்பதைவிட உண்ட உணவு செரித்தலே உடலுக்கு நலம் தரக்கூடியது என்பதை காதலில் கூடுவதைவிட ஊடலே அன்பை மிகுவிக்கும் எவ்வாறு பசிஉணவின் அருமையை உணர்த்துகிறதோ, அதேபோல தலைமக்களுக்கிடையேயான ஊடல் ஒருவர் மீது ஒருவருக்கு இருக்கும் அன்பை மிகுவிக்கும் என்ற உளவியல் உண்மையையும் இக்குறள் காட்டுகிறது. உணவு உண்ணும்முறை பற்றிக் கூறியவள்ளுவர் உணவில் இருக்கவேண்டிய உப்பின் அளவையும் இந்த புலவி மூலமாகவே விளக்குகிறார்.

“உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்” (குறள்.1302)

புலவியை நீளவிட்டால் (காலநீட்டுப்பு) அது பிரிவாகிய துனிக்கு வழிவகுக்கும் அதுபோல, உப்பின் அளவை மிகவிட்டால் உணவினைச் சுவைக்க இயலாது. எனவே, காதல் இன்பத்தைச் சுவைக்க புலவியாகிய உப்பு அளவாக இருக்க வேண்டும் என்கிறார். “வாயில் உள்ள உமிழ்நீரில் இரண்டு காடிச்சத்துக்கள் உள்ளன. ஒன்று லைசோசைம் (Lysozyme). இது, வாயில் துர்நாற்றம் வருவதற்குக் காரணமான நுண்ணுயிர்கள் வளராமல் தடுக்க துணைபுரிகிறது. மற்றொன்று அமிலேஸ் (Amylase). இது, உணவில் உள்ள மாவுச்சத்தினை நொறுக்கி உணவில் உள்ள உயிர்சத்துக்களை உடலில் சேரச் செய்து செரிமானத்திற்கு உதவுகிறது”4. உமிழ்நீர் நாவின் அடியில் உறி பற்களுக்கிடையில் நிற்பதை,

“பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்” (குறள்.1121)

என்கிறார். இங்கு இன்னொரு அறிவியல் உண்மையும் மறைந்திருக்கிறது. பாலொடு தேனைக் கலந்து உண்பதால் உடல் எடைகூடும் என்பர். உடல் எடை கூடுகிறதோ இல்லையோ, பாலில் கலக்கப்படும் தேன் செரிமான மண்டலத்தைச் சீர்படுத்தி செரிமானம் தொடர்பான நோய்வராமல் தடுக்கும். உமிழ்நீரின் சுவைக்கு உவமையாக வள்ளுவர், “பாலொடு தேன் கலந்தற்றே” என்று கூறலும் இவ்விடம் நோக்கத்தக்கது.

ஐம்புலன்

“அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு” (குறள்.343)

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புலன்களின் உணர்வுகள் அடக்கப்படாவிட்டால், தீங்குநேரும் எனக் கூறும் வள்ளுவர் காமத்துப்பபாலில் ஐம்புலன்களும் அறவழியில் இன்பம் பெறுதல் தீங்கில்லை என்பதைக் குறிப்பிட்டுள்ளார். கண், காது, மூக்கு, வாய், உடல் என்ற ஐம்புலன்களும் ஐந்துவிதமான உணர்வுகளைப் பெற்றுள்ளன. அவைமுறையே, பார்த்தல், கேட்டல், முகர்தல், சுவைத்தல், தொடுதல் ஆகிய உணர்வுகளைப் பெற்றுள்ளன. தலைவி ஐம்புலனுக்கான இன்பத்தைத் தருபவளாக விளங்குகிறாள். எனுமிடத்து, வள்ளுவர் புலன்உணர்வுகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

“கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள” (குறள்.1101)

மேலும், இந்த உணர்வுகளே ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான உயிர்பாகுபாடுக்கு அடிப்படையாக அமைகிறது எனலாம்.

நிறைவாக…

நிலவின் மேற்பரப்பில் பள்ளங்கள் உள்ளன. சந்திரகிரகணத்தை அனைவராலும் காணமுடியும் என்ற வானியல் உண்மைகள் உள்ளன.

ஓடுகின்ற நீருக்கு இழுத்துச் செல்லும் தன்மை உண்டு. நீர் ஊற்று இறைக்க இறைக்க சுரந்து கொண்டே இருக்கும். நிலத்தொடு நீர் கலந்தால் அதைப் பிரிக்கமுடியாது. அது நிலத்தடி நீராகிவடும் நீரியல் தொடர்பான அறிவியல் புலப்படுகிறது.

எருவாகிய உரம் நீர் பாய்ச்சுவதால் மண்ணோடு கலந்து பயிறுக்கு பலவிதமான சத்துக்களை அளிக்கிறது என்ற வேளாண்மை அறிவியல் உள்ளது.

இயற்பியல் சமன்பாடாகிய காவடியின்தன்மை. கண்ணுக்கு மிக அருகில் இருக்கும் பொருள் காட்சிக்குப் புலப்படாது என்ற இயற்பியல் செய்திகள் உள்ளன.

நெருப்பில் இடப்படும் கொழுப்பு, நெய் எரிபொருளாகி நெருப்பை மிகுவிக்கும் எரியாற்றல் விளக்கப்படுள்ளது.

மலரின் பதின்மூன்று பருவமாற்றத்தை மூன்றாகச் சுருக்கி ஒரு குறள் காட்டுகிறது. அனிச்சமலரின் மென்மைத் தன்மை. கருங்காயில் சுவை இருக்காது. மிகவும் பழுத்த பழத்தை சுவைக்க இயலாது எனும் தாவரவியல் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளன.

மனிதருக்கான ஐம்புலன் உணர்வுகள், உண்ட உணவு செரித்தபின் உண்ணுதல் உடலுக்கு நன்மை தரும், உப்பு உணவின் சுவையை மிகுவிக்கும் என்றாலும் அளவாக பயன்படுத்துதல் நலம் என திருக்குறள் காமத்துப்பாலில் வானியல், நீரியல், வேளாண்மையியல், இயற்பியல், வேதியியல், தாவரவியல், உடலியல் தொடர்பான அறிவியல் செய்திகள் உவமையாகவும் உருவகமாகவும் காமத்துப்பாலில் அமைந்துள்ளன.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. தமிழ்நாடு அரசு சமச்சீர் கல்வி - 9-ம் வகுப்பு அறிவியல் / 11-ம் வகுப்பு இயற்பியல் - இயக்கவியல் பாடம், ஈர்ப்பு விசை பாடத்தில் - பக்கம் 45-48.
2. தமிழ்நாடு அரசு பாடநூல் கழகம், 10-ம் வகுப்பு அறிவியல் - ஒளியியல் பாடம், ப.98
3. Sir Isaac Newton, Philosophiæ Naturalis Principia Mathematica, P.128.
4. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 10-ம் வகுப்பு அறிவியல் - செரிமான மண்டலம், பக்கம் 78-80

## துணைநூற் பட்டியல் (References)

1. திருக்குறள் பரிமேலழகர் உரை சாரதா பதிப்பகம் சென்னை ஏழாம் பதிப்பு பிப்ரவரி 2006
2. தமிழ்நாடு அரசு சமச்சீர் கல்வி - 9-ம் வகுப்பு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 2019 – 2024 (மறுபதிப்பு)
3. 10-ம் வகுப்பு அறிவியல், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 2019 - 2023 (மறுபதிப்பு)
4. Sir Isaac Newton, Philosophiæ Naturalis Principia Mathematica, Royal Society, London,1687
5. பேராசிரியர் கு.வி.கிருஷ்ணமூர்த்தி, தமிழரும் தாவரமும், பாரி நிலையம், சென்னை, 2005 (மறுபதிப்பு)

**ARTICLE 49 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 63–68

# சங்க இலக்கியத்தில் மகளிர் விளையாட்டுகள்

## Women's Games in Sangam Literature

**முனைவர் க. பாலாஜி**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
கே .எஸ். ஆர் பொறியியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு.

### Abstract

Sangam literature provides invaluable insight into the social structures, cultural ethos, and recreational practices of ancient Tamil society. Within this corpus, poetry frequently documents the varied games and pastimes pursued by women. This study examines these activities and analyzes their socio-cultural significance.

The research highlights key pastimes, including ball games (Pandu), doll play (Pavaikkuthu), aquatic games, maritime activities, crab-chasing (Alavanattam), and building sandcastles (Cirril). Far from being mere entertainment, these pursuits fostered female camaraderie, social interaction, and emotional expression across age groups. Ball and doll games reflect peer bonding among adolescent girls, while water sports-frequently set in agrarian Marutham settings-mirror emotional nuances tied to romantic narratives. Similarly, seaside games in the littoral Neithal landscape highlight creative expression through sand sculptures adorned with floral garlands. Moreover, Cirril and Alavanattam illustrate youthful spontaneity and connection with coastal biodiversity. Ultimately, this study demonstrates that recreational games were not marginal activities, but an essential dimension of women's everyday lives, emotional well-being, and social agency in classical Tamil culture.

**Keywords:** Sangam Literature, Women's Games, Recreation, Tamil Culture, Social Life, Ancient Tamil Society.

### ஆய்வுச் சுருக்கம்

பழந்தமிழ்ச் சமூகத்தின் சமூகக் கட்டமைப்பு, பண்பாட்டு மரபுகள் மற்றும் பொழுதுபோக்கு நடைமுறைகளை அறிந்துகொள்ளச் சங்க இலக்கியங்கள் சிறந்த மூல ஆதாரங்களாகத் திகழ்கின்றன. இவ்விலக்கியத் தொகுப்பில் மகளிர் ஆடிய பல்வேறு விளையாட்டுகள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகள் குறித்த விரிவான சான்றுகள் காணப்படுகின்றன. இவ்வாய்வு, சங்கப் பாடல்களில் பதிவாகியுள்ள மகளிர் விளையாட்டுகளை ஆராய்வதோடு, அவற்றின் சமூக-பண்பாட்டு முக்கியத்துவத்தையும் மதிப்பீடு செய்கிறது.

பந்து விளையாட்டு, பாவை விளையாட்டு, புனலாடல், கடற்கரை விளையாட்டுகள், அலவனாட்டம் (நண்டு பிடித்தல்) மற்றும் சிற்றில் இழைத்தல் போன்ற முதன்மையான பொழுதுபோக்குகளை இவ்வாய்வு முன்னிறுத்துகிறது. வெறும் பொழுதுபோக்காக மட்டுமின்றி, இவை பெண்களிடையே தோழமை, சமூக நல்லுறவு, கற்பனைத்திறன் மற்றும் உணர்வுசார் வெளிப்பாடுகளை வளர்க்கும் களங்களாகவும் விளங்கின. பந்தாட்டமும் பாவை விளையாட்டும் இளம் பெண்களின் கூட்டுறவையும் தோழியர் பிணைப்பையும் புலப்படுத்துகின்றன. மருத நிலப் பின்னணியில் நிகழும் புனலாட்டு, காதல் வாழ்வின் உணர்வுப் பரிமாணங்களை வெளிப்படுத்துகிறது. நெய்தல் நிலத்தில் மலர் மாலைகளால் மணற்பாவைகளை அலங்கரித்து ஆடும் விளையாட்டுகள் அவர்களின் அழகியல் உணர்வைச் சித்திரிக்கின்றன. மேலும், சிற்றில் விளையாட்டும் அலவனாட்டமும் இளைய பருவத்தினரின் இயல்பான உற்சாகத்தையும்

இயற்கை சார்ந்த ஈடுபாட்டையும் காட்டுகின்றன. முடிவாக சங்க காலத்தில் மகளிர் விளையாட்டுகள் வெறும் பொழுதுபோக்காக அமையாமல், பெண்களின் அன்றாட வாழ்வு, மனநலம் மற்றும் சமூக வெளிப்பாட்டின் இன்றியமையாத அங்கமாகத் திகழ்ந்தன என்பதை இவ்வாய்வு நிறுவுகிறது.

**திறவுச் சொற்கள்:** சங்க இலக்கியம், பெண்களின் விளையாட்டுகள், பொழுதுபோக்கு, தமிழ்ப் பண்பாடு, சமூக வாழ்க்கை, பண்டைய தமிழ்ச் சமூகம்.

## முன்னுரை

சங்க கால மக்களின் வாழ்வியலை காட்டும் கண்ணாடியாக விளங்குவது சங்க இலக்கியங்களாகும். இவ்விலக்கியம் அக, புற வாழ்க்கை முறை, பண்பாடு, வீரம், காதல், இயற்கை மற்றும் அரசியல் சூழலை மிகத் தெளிவாகக் காட்டுகின்றது. சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படும் விளையாட்டுக்கள் பண்டைத் தமிழர்களின் உயர்ந்த நாகரிகம், உடல் மற்றும் மன வலிமை, சமூகக் கூடிவாழும் பண்பு, மற்றும் பொழுதுபோக்கு ஆர்வத்தை உணர்த்துகின்றது. மக்கள் ஓய்வு நேரத்தில் விளையாடி மகிழ்ந்ததன் மூலம் சிறந்த உடல் நலமும், மகிழ்ச்சியான மனநிலையும் பெற்றனர். அவ்வகையில் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள சில மகளிர் விளையாட்டுக்களை ஆய்வதாக இவ்வாய்வின் நோக்கமாகும்.

## விளையாட்டு சொற்பொருள் விளக்கம்

விளையாட்டு என்னும் சொல்லாட்சி தொல்காப்பியத்திலேயே காணப்படுகிறது. “செல்லம் புலனே புணர்வு விளையாட்டென்று அல்லல் நீத்த உவகை நான்கே”1 என்கிறார். (தொல்காப்பியம் - நூற்பா எண்.1205) இதில் உவகை என்னும் மெய்பாட்டின் தோற்றக் காரணங்களுள் ஒன்றாக விளையாட்டைக் கூறுகிறார். தமிழில் ஆடல், ஆட்டு, ஆட்டம், விளையாட்டு போன்ற சொற்கள் விளையாட்டைக் குறிக்கின்றன.

## விளையாட்டு - வரையறை

விளையாட்டு என்பது உடலையும் மனதையும் மகிழ்வித்து, ஒழுங்குமுறை மற்றும் விதிமுறைகளுடன், ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைய விளையாடப்படும் உடல் ரீதியான அல்லது மன ரீதியான செயலாகும்.

“விளையாட்டு சமூக ஒழுகலாறுகளைக் கற்பிப்பதற்குப் பயன்படுகிறது. விளையாட்டின் மூலம் குழந்தைகளிடையே கட்டுப்பாட்டுணர்வு, ஒற்றுமையுணர்வு ஏற்படுகிறது. குழந்தைகளிடையே தலைமைப் பண்பும் வளர்கிறது. அதே நேரத்தில் பணிவும் பிறருக்கு உதவும் மனித நேயமும் குழந்தைகளிடையே வளர்கிறது.”2 (நாட்டுப்புற இயல் ஆய்வு - டாக்டர் சு. சக்திவேல் ப. 248)

“பிறருக்குத் துன்பமறிக்கும் இரக்கமற்ற செயல்களில் ஈடுபடும் பண்டைய நோக்கு மனிதனிடமிருந்து இன்னும் முழுமையாக மறைந்தொழியவில்லை. தீய விளைவுகளை நீக்கி அவற்றை உயர்நிலைப்படுத்துவற்கு விளையாட்டு உதவுகின்றன காலுதற்

கொள்கை புலப்படுத்துகிறது.”3 (நாட்டுப்புற இயல் ஆய்வு - டாக்டர் சு. சக்திவேல் ப. 248)

“விளையாட்டு என்பது மகிழ்ச்சி உணர்ச்சியோடு தொடங்கி மகிழ்ச்சி உணர்ச்சியோடு நிகழ்ந்துஇ மகிழ்ச்சி உணர்ச்சியோடு முடிவது.”4 (பெருமாள். க - விளையாட்டுக்கலை. ப. 9)

## பழந்தமிழரின் விளையாட்டுக்கள்

ஆண்கள் உடல் வலிமை, வீரம் மற்றும் பொழுதுபோக்கை மையமாகக் கொண்ட விளையாடியுள்ளனர். ஏறுதழுவுதல், குத்துச்சண்டை, மற்போர், வட்டு ஆடுதல், வில்வித்தை, சுனை விளையாட்டு, மற்றும் மகளிர் நீர் விளையாட்டுக்களான புனலாடல், பொழிலாடுதல், மணலில் பாவை அமைத்தல், அலவனாட்டம், பொய்தல் போன்ற விளையாட்டுக்கள் விளையாடியுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. இவற்றில் நீர் விளையாட்டுகள் மருத நிலத்திலும், வீர விளையாட்டுகள் முல்லை, குறிஞ்சி நிலங்களிலும் இடம்பெற்றுள்ளன என்பதை அறிய முடிகிறது.

## மகளிர் விளையாட்டுப் பொருட்கள்

இளம் பெண்கள் பந்தாடல், பாவையை வைத்து விளையாடுதல், கழங்காடுதல் முதலிய பொழுது போக்குகளில் பெரிதும் இன்பம் கண்டனர் என்பதை,

“நீர் நசைக்கு ஊக்கிய உயவல் யானை
இயம் புணர் தூம்பின் உயிர்க்கும் அத்தம்
சென்றனள் மனற்இஎன் மகளே
பந்தும் பாவையும் கழங்கும் எமக்கு ஒழித்தே.” (ஐங்கு - 377)

பந்து, பொம்மை (பாவை), மற்றும் கழங்கு (கழற்சிக்காய்) விளையாட்டுப் பொருட்களை என்னிடம் விட்டுவிட்டுச் சென்றாள். இளமகளிர் விளையாட்டுப் பொருள்களை வைத்துத் திண்ணையில் உட்கார்ந்து விளையாடுவதாக ஐங்குறுநூற்று பாடல் உணர்த்துகிறது.

## புனலாடல்

ஆற்றுநீர்இ சுனை, அருவி போன்ற நன்னீர்நிலைகளில் மகிழ்ந்து ஆடும் நீர் விளையாட்டு (Water Sport) ஆகும். ஐங்குறுநூற்றில் ‘புனலாட்டுப் பத்து’ என்றே ஒரு பகுதி நீராடுதலைக் குறிக்கின்றது. தலைவனும் தலைவியும், பரத்தையரும் மருத நிலத்து ஆற்று நீர் அல்லது குளக்கரையில் மகிழ்ந்து விளையாடும் காதலைக் குறிக்கிறது.

“சூது ஆர் குறுந் தொடிச் சூர் அமை நுடக்கத்து
நின் வெங் காதலி தழீஇ, நெருநை
ஆடினை என்பஇ புனலே; அலரே”(ஐங்கு – 71)

மருத நில மக்கள் ஆற்றுப் புதுவெள்ளத்தில் மகிழ்ந்து நீராடும் பண்பாட்டை உணர்த்துகிறது. தலைவன் பரத்தையருடன் புனலாடியதால் கோபமுற்ற தலைவியின் காதல் சண்டையை ஐங்குறுநூற்று பாடல் வெளிப்படுத்துகின்றது.

“மலர் ஆர் மலிர்நிறை வந்தென,
புனல் ஆடு புணர்துணை ஆயினள் எமக்கே”(ஐங்கு – 72)

தலைமகள் புலவி நீக்கித் தன்னோடு புதுப் புனல் ஆட வேண்டிய தலைமகன் களவுக் காலத்துப் புனலாட்டு நிகழ்ந்ததையும் அவள் கேட்பத் தோழிக்குச் சொல்லியதையும் ஐங்குறுநூற்று பாடல் வெளிப்படுத்துகின்றது.

"சுழன்று விளையாடும் தோழியர் கூட்டத்தில்
விரும்பிய பெண்ணைத் தருவிக்கொண்டு நலம்
தரும் புதிய ஆற்றுப் புனலில் நீ நீராடியதைக்
கண்டவர்கள் ஒருவர், இருவர்"(ஐங்கு – 64)

இப்பாடலில் தலைவன் மருத நில ஊரன், ஆற்று வெள்ளத்தில் பரத்தையருடன் புதுப்புனல் ஆடியதைக் கண்டு ஊடல் கொள்ளும் தலைவி, அந்த உண்மையை மறைக்க வேண்டாம் என்று அவனைப் பரிகாசம் செய்கிறாள் என்பதை ஐங்குறுநூற்று வழி அறிய முடிகிறது.

## கடல் விளையாட்டு

கடல் விளையாட்டு என்பது இளமகளிர் தம் தோழியருடன் கடலில் இன்பமுடன் விளையாடும் பொழுதுபோக்காகும். அவர்கள் மணலில் பாவை அமைத்து, மலர்மாலைகள் சூட்டி மகிழ்வர்; அப்பாவைக்கு பிறர் அளிக்கும் மாலைகளைச் சூட்டினர்.

"நொதுமலாளர் கொள்ளார் இவையே
எம்மொடு வந்துகடல் ஆடு மகளிர்"(ஐங்கு – 187)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியமுடிகின்றது. இவ்விளையாட்டு மகளிர் அனைவரும் ஒன்றுகூடி விளையாடும் விளையாட்டாகும் என்பதை உணர்த்துகிறது.

"வெண்தலைப் புணரி ஆயமொடு ஆடி"(அகம் 20 : 8)

என்ற பாடல் வரிகள், கடல் அலைகளில் தன் தோழியர் கூட்டத்துடன் கூடி விளையாடி மகிழ்ந்ததைக் குறிக்கிறது.

## பொழிலாடுதல்

தலைவன் மற்றும் தலைவி மலர்கள் மலர்ந்த சோலைகளில் (பொழில்) சென்று மலர்களைப் பறித்தும், சுற்றித் திரிந்தும், மகிழ்ச்சியுடன் விளையாடும் ஒரு பொழுதுபோக்கு செயலாகும். களவு, கற்பு என இருவகைக் காலங்களிலும் தலைவன், தலைவி புனலாடலும் பொழிலாடலும் இயல்பானவை. பல மலர்கள் மலர்ந்த சோலையில் காயா, கொன்றை, நெய்தல், செம்முல்லை, பிடவம் முதலிய மலர்களைப் பறித்து அவர்கள் மகிழ்ந்து விளையாடுதல் பொழிலாடுதல் உணர்த்துகிறது.

"போதவிழ் தளவமொடு பிடவு அலர்ந்து கவனிப்
பூ அணி கொண்டன்றால் புறவே". (ஐங்கு – 412)

இப்பாடலில் இடம்பெறும் "ஆடுகம் விரைந்தே" என்ற சொற்றொடர், தலைவன்–தலைவியருக்கு பொழிலாடுதலின் மீதான மிகுந்த ஆர்வத்தை உணர்த்துவதாகக் கூறலாம்.

## நண்டு ஆட்டம் (அலவனாட்டம்)

பெண்கள் கடற்கரை மணலில் நண்டுகளை (அலவன்) அதன் வளைகளிலிருந்து வெளியே வரச்செய்து, அவை ஓடுவதைக் கண்டு

மகிழ்ந்து விளையாடிய ஒரு பாரம்பரிய விளையாட்டாகும். ஈரமான மணலில் உள்ள நண்டுகளை வெளியே வரச் செய்து, அவை ஓடுவதை வேடிக்கை பார்ப்பது, முள்ளி வேரைக் கொண்டு நண்டுகளை அலைக்கழிப்பது போன்ற செயல்களில் மகளிர் ஈடுபட்டனர்.

“முள்ளிவேர் அளைக் களவன் ஆட்டி
பூக்குற்றி எய்திய புனல்அணி ஊரன்”. (ஐங்கு –23)

இப்பாடல் வழிஇ பண்டைய கால இளமகளிர் ஒன்றுகூடி முட்செடிகளின் வேர்களிடையிலுள்ள வளைகளில் வாழும் நண்டுகளைப் பிடித்தும்இ மலர்களைப் பறித்தும் விளையாடி மகிழ்ந்தனர் என்பது அறியப்படுகிறது.

"திணி மணல் அடை கரை அலவன் ஆட்டி
அசையினள் இருந்த ஆய் தொடிக் குறுமகள்" (அகம் 280 : 2-3)

பாடலில் கடல் மணற்பரப்பில் தலைவி அலவன் ஆடிய சிறப்பினை வரிகள் புலப்படுத்துகின்றன.

## மணல் வீடு (சிற்றில்)

சிறுமியர்கள் கடற்கரை மணலில் சிறிய இல்லங்களை அமைத்து, அதில் அமர்ந்து மணலைச் சோறாகக் கொண்டு சமைப்பது போல விளையாடினர். மேலும் மணலில் பொருட்களை மறைத்து வைத்து விளையாடும் வகையிலும் இவ்விளையாட்டு, மணல் வீடு கட்டி விளையாடும், காம உணர்வு இல்லாத சிறுமியர் விளையாட்டாகும்.

“நெய்தல் உண்கண் நேர்இறைப் பணைத் தோள்
பொய்தல் ஆடிய பொய்யா மகளிர்.” (ஐங்கு - 181)

இப்பாடல் வழி, தாம் கண்டதையும் கேட்டதையும் மறையாது வெளிப்படையாகச் சொல்லும் பருவத்தினர் என்பதனால், பொய்தல் ஆடிய மகளிர் “பொய்யா மகளிர்” என அழைக்கப்பட்டனர் என்பது அறியப்படுகிறது.

"வரிபுனை சிற்றில் பரிசிறந்து ஓடித்
புலவுத்திரை உதைத்த கொடுந்தாட் கண்டல்” (நற் 123:8)

நெய்தல் நிலத்து இளம்பெண்கள் கடற்கரை மணலில் அழகிய வண்டல் வீடுகளைக் கட்டி, அங்குமிங்கும் ஓடி மகிழ்வர். கடலலைகள் கரையை நோக்கி வந்து அந்தச் சிற்றில்களைச் சிதைக்கும் என்பதையும் தோழியருடன் மிகுந்த வேகத்துடனும் மகிழ்ச்சியுடனும் ஓடி விளையாடியதையும் புலப்படுத்துகிறது.

## முடிவுரை

மகளிர் விளையாட்டு அக்கால மகளிரின் பொழுதுபோக்கு முறைகளையும், தோழியருடன் ஒன்றுகூடி மகிழும் சமூகப் பண்பையும் வெளிப்படுத்துகின்றன. மேலும், மணல் வீடு அமைத்தல், பாவை விளையாட்டு போன்றவை சிறுமியரின் கற்பனைத் திறனையும் குழுவாகச் செயல்படும் பண்பையும் உணர்த்துகின்றன. சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள மகளிர் விளையாட்டுகள் வழியாகச் சங்ககாலத் தமிழரின் சமூக, பண்பாட்டு மற்றும் பொழுதுபோக்கு வாழ்வியலை அறிந்துகொள்ள முடிகிறது. மகிழ்ச்சியை

அடிப்படையாகக் கொண்டு விளையாடுதல் என்பது பழந்தமிழரின் வாழ்வியலில் இயல்பான கூறாக இருந்துள்ளது என்பதை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது.

## துணைநூற் பட்டியல் (References)

1. ச.வே. சுப்பிரமணியன் – ஐங்குறுநூறு.
2. புலியூர்க் கேசிகன் – சங்க இலக்கியம் எட்டுத்தொகை.
3. டாக்டர் சு. சக்திவேல் - நாட்டுப்புற இயல் ஆய்வு.
4. பெருமாள். க - விளையாட்டுக்கலை.
5. தொல்காப்பியம் – நச்சினார்க்கியருரை.

**ARTICLE 50 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 69–74

# அண்ணன்மார்சாமி வரலாறும் வழிபாடும்

## Annanmar Swami History and worship

*ஆய்வாளர்:* **பெ. தாரணி**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் - 11
dharanigowtham31@gmail.com
8489631500

*நெறியாளர்:* **முனைவர் ம. சுந்தரமூர்த்தி**
பேராசிரியர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் – 11
drmsundaramoorthi@gmail.com
9443714173

**Abstract**

In the Kongu region, even today the twin brothers Ponnar and Shankar, known as Annanmar Swamis, are worshipped as deities in many places. They lived as leaders of the people and as unparalleled warriors, and after attaining a heroic death in battle, they were deified by their younger sister Arukkani Thangam. Later, they were accepted as gods by all the people of that region, who built temples for the Annanmars and continue to perform poojas and worship them. People of that region, both as various ethnic groups and in general, began worshipping the Annanmar Swamis, and today Annanmar Swami is regarded as a family deity and as a guardian deity among various districts and communities. The purpose of this article is to explain the beliefs and worship practices of the people who worship Annanmar.

**Keywords:** Knowledge gained through listening – Teaching and learning – Applied knowledge – Multidisciplinary knowledge – Experiential knowledge – Knowledge gained through inquiry and understanding.

**ஆய்வுச் சுருக்கம்**

கொங்கு நாட்டில் இன்றும் பல இடங்களில் தெய்வமாக வழிபடக் கூடிய அண்ணன்மார் சாமிகளான பொன்னர் மற்றும் சங்கர் ஆகிய இரட்டை சகோதரர்கள் மக்களின் தலைவராகவும் ஒப்பற்ற வீரர்களாகவும் வாழ்ந்து போரில் வீரமரணம் அடைந்த பிறகு, தங்கை அருக்காணிதங்கத்தினால் தெய்வமாக்கப்பட்டு பின்பு அப்பகுதி மக்கள் அனைவராலும் தெய்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கு அண்ணன்மார்களுக்கு கோவில் கட்டி பூசை செய்து வழிபட்டு வருகின்றனர். அப்பகுதி மக்கள் பல்வேறு இன குழுக்களாகவும், பொதுவாகவும் அண்ணன்மார்சாமிகளை வணங்கத்தொடங்கி இன்று பல்வேறு மாவட்ட மற்றும் சமூக இனத்தினரிடையே குலதெய்வமாகவும், காவல் தெய்வங்களாகவும் அண்ணன்மார்சாமிகள் விளங்குகின்றனர். அண்ணன்மாரை வழிபடும் மக்களின் நம்பிக்கைகளையும் வழிபாட்டு முறைகளையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:** கேள்வி ஞானம் - கற்றல் கற்பித்தல் - பயன்பாட்டு அறிவு - பல்துறை அறிவு - அனுபவ அறிவு - ஆராய்ந்துணர்தல்.

## முன்னுரை

தமிழகத்தில் கொங்கு மண்டலத்தில் தலைமுறை தலைமுறையாக பரவலாக மக்களால் வணங்கப்பட்டு வரும் நாட்டுப்புறத் தெய்வங்களுள் குறிப்பிட்டதக்க தெய்வங்களாக விளங்குவது அண்ணன்மார்சாமிகள் ஆகும். இவர்களின் வரலாறு வாய்மொழிக் கதைகளாகவும், கதைப்பாடல்களாகவும் மக்களிடையே பாடப்பட்டும், கூறப்பட்டும் வருகிறது. அண்ணமார்சாமி கோவில்களில் இன்றளவும் வருடம் தோறும் மாசி மாதம் படுகளத் திருவிழாவானது மிகவும் விமர்சையாகவும், பல சடங்குகள் மற்றும் நம்பிக்கைகளுடனும் நடத்தப்பட்டு வருகிறது. அவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

## அண்ணமார்சாமி கோவில் (வீரப்பூர்)

கொங்கு நாடான கரூர் மற்றும் சோழநாடான திருச்சி ஆகிய இரு மாவட்டங்களின் எல்லைப்பகுதியில் மணப்பாறை வட்டம் வீரப்பூர் கிராமத்தில் அண்ணன்மார்சாமி கோவிலானது அமைந்துள்ளது. இங்குள்ள வீர மலையின் ஒரு பகுதியான கூவனாம்பள்ளம் என்ற இடத்தில் வேட்டுவத் தலைவனான தலையூர்காளிக்கும் அண்ணன்மார்களுக்குமிடையில் நடந்த போரின் இறுதியில் அண்ணன்மார்கள் இருவரும் வீரமரணமடைந்தனர். போர் நடந்த இந்த இடமானது படுகளம் என்று அழைக்கப்படுகிறது. அண்ணன்மார்களின் இறப்பினைக் கண்டு துடித்துக் கதறிய தங்கை அருக்காணித்தங்கம், தனது தெய்வ சக்தியால் மீண்டும் அவர்களை உயிர்பித்தாள். உயிர் பெற்ற பின்பு அவர்கள் அங்கு தெய்வீக நிலையினை அடைந்தனர். தெய்வீக நிலையடைந்த அந்த இடத்தைப் பின்பு வழிபாட்டுத் தலமாக மாற்றியதாக வாய்மொழித் தகவல்கள் கிடைகப்பெறுகின்றன.

இன்றும் இந்த கோவிலில் பொன்னர், சங்கர் ஆகிய அண்ணன்மார்சாமிகளின் உயிரானது அங்கு நிலைபெற்று நின்று வழிபடுவோருக்கு உறுதுணையாகி நல்வழிபடுத்துகிறது என நம்பப்பட்டு வருகிறது. அண்ணன்மார்கள் வீர மரணமுற்று தங்கை அருக்காணியால் தெய்வீக நிலையினை அடைந்ததை நினைவுகூறும் படுகளத் திருவிழாவானது மிகவும் விமர்சையாக அங்கு கொண்டாடப்பட்டு வருகிறது. இந்தக் கோவிலில் அண்ணன்மார்சாமிகளான பொன்னர், சங்கர் சிலைகள் மற்றும் தங்கை அருக்காணி, மாயவர், பெரியகாண்டி அம்மன், சப்த கன்னிமார் சிலைகள், மாகாமுனி, கருப்பண்ணசாமி சிலைகளும் வீரமலை சாம்புகன், செல்லாண்டி அம்மன், வீரபாகு, அத்தைப்பிள்ளை ஆகியோரின் சிலைகளும் குதிரை வாகனங்களும் வழிபாட்டில் உள்ளன.

## அண்ணமார்சாமி படுகளத் திருவிழா

பன்னெடுங்காலமாக தலைமுறை தலைமுறையாக ஆண்டுதோறும் மாசி மாதம் வீரப்பூர் அண்ணமார்சாமி கோவிலில் படுகளமானது மிகவும் விமர்சையாகவும், பக்தி பரவசத்துடனும் நடத்தப்பட்டு வருகிறது. அண்ணமார்சாமி கதையின் மிகவும் முக்கியமான பகுதியான போர்களக்காட்சி இங்கு தத்ரூபமாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. மாசி

மாதம் ஏழாம் நாள் திருவிழா படுகளமாக கொண்டாடப்படுகிறது. இந்தத் திருவிழாவிற்கு வரும் பக்தர்களில் ஆண்கள் பலருக்கு அவர்களின் மீது அண்ணன்மார்சாமி தெய்வமாக வந்திறங்க அவர்கள் சாமியாடிக்கொண்டே படுகளத்தில் வந்து மயங்கி விழுவர். குறைந்தது மூன்று நான்கு மணிநேரம் மூர்ச்சையாகி மயங்கி மரணமுற்ற நிலையில் கிடப்பர். இவர்களை அண்ணன்மார் சாமிகளாக நினைத்து அவர்களது குடும்பத்தினர் கதறி அழுவார்கள். பின்பு அங்கே வந்திருக்கும் எதாவது ஒரு பெண்குழந்தையின் மீது தங்காள் அருக்காணி தெய்வமாக வந்திறங்கி அருள்வாக்கு கூறுவார். பின்பு பெரியகாண்டி அம்மனின் தீர்த்தக் குடத்திலிருக்கும் தீர்த்தத்தினை அவர்களின் மீது அப்பெண் குழந்தை தெளிக்கும், தீர்த்தம் தெளித்த பின்பு அவர்கள் பரவசநிலையடைந்து தன்னிலை பெற்று மீண்டெழுவர். இந்தச் சடங்கானது வருடாவருடம் தவறாது நிகழ்த்தப்பட்டுவருகிறது. இப்படுகளத்தைக் காண பல்வேறு ஊரிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டம் கூட்டமாக ஆண்டுதோறும் தவறாது வீரப்பூருக்கு வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

## வேடபரி மற்றும் தேரோட்டம்

படுகளம் முடிந்த மறுநாள், எட்டாம் நாள் திருவிழாவாக வேடபரி திருவிழா மாலை வேளையில் நடைபெறுகிறது. இத்திருவிழாவில் குதிரை வாகனத்தில் விழாவின் நாயகனான பொன்னர் அமர்ந்து வில் ஏந்தி வேட்டைக்குச் செல்வார். தீமைகளை அழித்து தர்மத்தை நிலைநாட்டும் சடங்காக இந்த வில் ஏந்தி அம்பு விடும் சடங்கானது நிகழ்த்தப்படுகிறது. அண்ணமாரின் குல தெய்வமான பெரியகாண்டியம்மன் யானை மீது ஏறி கோவிலை சுற்றி வந்து மக்களுக்கு ஆசி வழங்குவார். அண்ணன்மாரின் தங்கையான அருக்காணிதங்காள் தீர்த்த குடத்துடன் வந்து ஆசி வழங்க இவ்விழாவானது நிறைவுபெறும். இத்திருவிழாவின்போது அண்ணன்மார்களின் வரலாறு கூத்துக்கலைஞர்களால் இரண்டு மூன்று நாட்களுக்கு நாடகமாக நடிக்கப்படுகிறது.

## பொன்னர் சங்கர் வரலாறு

கொங்கு நாட்டினைப் பூர்வீகமாகக் கொண்டு ஆட்சி செய்த கோளாத்தாகவுண்டரின் மகனாகிய குன்றுடையானும் அவரது மனைவி தாமரைநாச்சியும் பங்காளிகளின் சூழ்ச்சியால் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டு பல இன்னல்களை சந்தித்த பின்பு சோழ மன்னரிடம் தஞ்சம் புக மன்னர் சிறிது நிலங்களைப் பரிசாக அளித்தார். அந்த நிலத்தில் இருவரும் சேர்ந்து அயராது உழைத்து மண்ணைப் பொன்னாக்கினர். அதனால் பலவகையான செல்வங்கள் அவர்களை வந்து சேர்ந்தது இவ்வாறு செல்வ செழிப்புடன் இருவரும் வாழ்ந்த போதும் தங்களுக்கு ஒரு குழந்தைச் செல்வம் இல்லையே என்று மிகவும் வருந்தினார். இதனால் தாமரை நாச்சியார் சிவனை நோக்கி தவம் புரியவே, சிவனின் அருளால் இரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் ஒரே பிரசவத்தில் பிறந்தனர். இவர்களே பொன்னர் சங்கர் மற்றும் அருக்காணித்தங்கம் ஆகிய மூவர் ஆவர்.

இவர்களில் பொன்னரும், சங்கரும் சிறுவயதிலேயே வாள் வித்தை, வில் வித்தை, சண்டைப் பயிற்சி ஆகியவற்றை சிறப்புடன் கற்று அவற்றில் கைத்தேர்ந்து சிறந்து விளங்கினர். தங்கை அருக்காணியும் எதிர்காலத்தில் நடக்கக் கூடியதை முன் கூட்டியே அறியும் தெய்வ ஆற்றலைப் பெற்று விளங்கினாள். அனைத்து போர் பயிற்சிகளிலும் சிறந்த இளைஞர்களாக திகழ்ந்த பொன்னரும், சங்கரும் தனது தந்தையிடமிருந்து ஊர் நிர்வாகப் பொறுப்பினை ஏற்ற பின்னர் சீரோடும் சிறப்போடும் ஆட்சி செய்து தன் நாட்டு மக்களுக்களுக்கு சிறந்த தலைவனாகவும், காவலனாகவும் விளங்கி நல்லாட்சி புரிந்தனர். பின்பு தந்தையிடமிருந்து பங்காளிகள் கைப்பற்றிய பொன்னிவளநாட்டினையும் கைப்பற்றி தனது நாட்டுடன் இணைத்தனர். இதனால் கோபமடைந்த பங்காளிகளும், இவர்களது வளர்ச்சியைப் பிடிக்காத ஆண்டை நாட்டு மன்னனான தலையூர்க்காளியும் இவர்கள் மீது படையெடுத்து வந்தனர். இதனையறிந்த தம்பியான சங்கர் யானை பலம் கொண்டு இவர்களின் படையினரை அழித்து வெற்றி பெறும் வேளையில் அதனை அறிந்த தலையூர்க்காளி சூழ்ச்சிகள் பல செய்து சங்கரைத் தோற்க்கடிக்க முயலவே, சங்கர் பகைவர் கையால் தான் இறந்துவிடக் கூடாது என்று எண்ணி தனது வாளினால் தன்னை குற்றிக்கொண்டு மாய்கிறார். இதனை அறிந்த அண்ணன் பொன்னர் தம்பி இல்லாத இவ்வுலகில் தானும் வாழக்கூடாது என்று எண்ணி அவரும் தன்னை மாய்த்துக் கொள்கிறார். இந்த வரலாற்று சிறப்புமிக்க போர் நடந்த இடமே இன்று "படுகளம்" என்று அழைக்கப்படுகிறது.

தனது அண்ணன்மார்கள் இருவரும் வீரமரணமடைந்தனர் என்பதனை அறிந்த தங்கை அருக்காணி அழுது புலம்பி அவ்விடம் சென்று தனது குல தெய்வமான பெரியகாண்டியம்மனின் துணையுடன் புனித தீர்த்தம் தெளித்து தனது அண்ணன்மார்களை உயிர்பெற்று எழச்செய்கிறாள். உயிர்பெற்ற அண்ணன்மார்கள் இருவரும் இப்புவியில் தனது கடமை முடிந்து என்றும், "மாண்டவர் மீண்டார் உலகம் தாங்காது" என்றும் தனது தங்கையிடம் கூறி, தங்கை அருக்காணியுடன் மூவராக சேர்ந்து தெய்வீக நிலையினை அடைந்தனர் என்று கூறப்படுகிறது. இன்றும் அவர்களது உயிரானது அங்குதான் நிலைபெற்று இருக்கிறது என்றும், அவர்களை வழிபட்டால் மனதில் வேண்டியது கண்டிப்பாக நடக்கும் என்றும் மக்களால் மிகவும் நம்பப்படுகிறது. படுகளம் நடந்த இடமான வீரமலை இன்று மணப்பாறை வட்டம் வீரப்பூர் கிராமத்தில் உள்ளது.

## மக்களின் நம்பிக்கைகள்

பொன்னர் சங்கர் ஆகிய இருவரும் தங்களின் மண்ணிற்காகவும், நீதிக்காகவும்போராடி உயிர் துறந்தமையால் அண்ணன்மார்சாமியை வழிபட்டால் குடும்பத்திற்கு பாதுகாப்பும், குடும்பத்தில் செழிப்பும் ஏற்படும் என்பது மக்களின் நம்பிக்கையாக உள்ளது. இன்றும் இந்த சுற்றுவட்டப் பகுதிகள் மற்றும் அண்ணன்மார்சாமிகளை வழிபடுவோர் இடையே பிறக்கும் இரட்டை குழந்தைகள் மற்றும் ஆண் குழந்தைகளுக்கு அவர்கள் பொன்னர் சங்கர் என்றே பெயரிடுகின்றனர்.

## படுகளம் மற்றும் சாட்சி

வீரப்பூர் படுகளம் என்பது அண்ணன்மார் சாமிகள் தீமைக்கும் தீயோர்ககளுக்கும் எதிராக போர் புரிந்து வீழ்ந்த இடமாதலால் இத்தலத்தின் மீது சத்தியம் செய்தால் பொய் கூறியவர்களுக்கும், தவறு செய்தவர்களுக்கும் தக்க தண்டனையானது கிடைக்குமென்றும், முறையிட்டவருக்கு நீதி கிடைக்குமென்றும் மக்களால் நம்பப்படுகிறது.

## பேய் ஓட்டுதல்

திருவிழாவின் போது பெரியகாண்டி அம்மனும், தங்காளும் அங்குள்ள பெண்களின் மீது வந்திறங்கி சாமியாடுவார்கள் பிறகு அருள்வாக்கு வழங்குவார்கள் அவர்களிடம் பேய் பிடித்துள்ளவர்களையும், செய்வினையால் பாதிப்படைந்தவர்களையும், பில்லி, சூனியம், ஏவல் போன்றவற்றினால் பாதிக்கப்பட்டவர்களையும் அழைத்துச் சென்றால் அவர்களின் தலையின் மீது கைவைத்து அருள்வாக்கு கூறி நெற்றியில் திருநீறு பூச பாதிக்கப்பட்டவர்கள் குணமடைவார்கள் என்று நம்பப்படுகிறது.

## கிடாய் பலி, வேல் வைத்தல்

அண்ணமார்சாமியிடம் தனது வேண்டுதல்களை வைத்து அவை நல்ல முறையில் நிறைவேறி விட்டால் பக்தர்கள் திருவிழாவின்போது கோவிலுக்குச்சென்று ஆடு, கோழி என்று பலியிட்டு தனது நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றனர். அங்குள்ள முனியப்பனுக்கு வேல் சாத்தியும் தனது நேர்த்திக்கடனை நிறைவேற்றுகின்றனர். அவ்வாறு பலியிடப்பட்ட ஆடு மற்றும் கோழியின் இறைச்சியில் சமைத்த உணவை அவர்கள் அங்கேயே சமைத்து உண்ணுகின்றனர். அவற்றை அவர்கள் வீட்டிற்குக் கொண்டுவருவதில்லை.

## இரத்த கற்கள்

படுகளத்தை சுற்றியுள்ள சில இடங்களில் உள்ள கற்கள் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கின்றன. போரின் போது சிந்திய அண்ணன்மார்களின் இரத்தமே இவ்வாறு சிவப்பு நிற கற்களாக மாறி காட்சியளிப்பதாக இங்குள்ள மக்கள் நம்புகின்றனர்.

## நடுகல் எடுப்பித்தல்

தங்காள் அருக்காணி தனது அண்ணன்மார்களுக்கு இறுதிச் சடங்கினை செய்து மேலும் வழிபாட்டு சடங்கினையும் செய்தாள் என்பதினை கதைப்பாடல்களின் மூலம் அறியமுடிகிறது. போரில் வீரமரணம் அடைந்த வீரர்களைத் தெய்வமாக்கி நடுகல் நட்டு வழிபடும் வழக்கம் பழங்காலம் தொட்டு இருந்துள்ள நிலையில் "பார்வதியா அண்ணமார் இருவரையும் கூட்டிச்சென்று பெரியண்ணசாமியை வலதுபுற மண்டபத்தில் கிழக்கு முகமாக வைத்துச் சின்னண்ணசாமி கோபக்காரரர் ஆதலால் யாரும் எதிர்நின்று பூசை செய்ய முடியாதாகையால் அவர் முன்பு ஒரு பெரிய கல்லை நிறுத்திக் கல்லுக்கு அந்தபுரமிருந்து பூசை செய்யும்படி ஏற்பாடு செய்து கல்லுக்கு இந்த புறம் தூரத்தில் சாம்புகனையும், பொன்னாச்சியையும் நிறுத்திச்

சாம்புகனுக்குத் திருமம், கொம்பு ஆகியவைகளைக் கொடுத்து யமனை அழைத்து நான்குபேர் உயிரையும் பிடிக்கச் சொன்னாள். எமன் உயிர்களைக் பிடித்துச் சென்றபின் பார்வதியா அண்ணார்களுக்குப் பூசை ஆரம்பித்தாள்" (பிருந்தா. இ.எப்.பெக் 1992, 770) என்ற கதை கூறலும் தங்காள் செய்த நடுகல் வழிபாட்டை உறுதிப்படுத்துகின்றன. ஆகவே "அண்ணன்மார் இருவரும் வீரமலை போரில் மரணம் அடைந்த பிறகு தங்காயி அவர்களுக்குச் செய்ய வேண்டிய இறுதிச்சடங்குகளைச் செய்து முடித்துக் கல்நட்டு வழிபாடு செய்திருக்கலாம் அவ்வாறு தங்காயி அண்ணன்மார்களுக்கு வழிபாடு செய்த கோவில் என்று வீர மலையில் உள்ள படுகளம் காட்டுக் கோயிலைப் பூசாரி குறிப்பிடுவது எண்ணுவதற்குறியதாகும்" என்று (சி.கார்த்திகேயன்- அண்ணன்மார் சாமி உடுக்கடிக் கூத்து 2012,13) ல் குறிப்பிடுகிறார்.

இக்கோவிலே படுகளக்கோவில் ஆகும். பின்பு அங்கு வழிபாட்டு மக்களாக இருந்த பலர் தொழில் மற்றும் பல்வேறு காரணங்களால் பல இடங்களுக்கு குடிபெயரும் போது இக்கோவிலின் பிடிமண்ணை எடுத்து அவர்கள் சென்ற இடங்களில் கோவில்களை அமைத்து அங்கு வழிபாடு செய்தனர். இவ்வாறே கொங்கு மண்டலத்தில் பல இடங்களில் அண்ணன்மார்சாமி கோவில்கள் நூற்றுக்கணக்கில் பெருகி மக்கள் வழிபடுவதற்கு காரணமாக உள்ளது.

## முடிவுரை

கொங்கு நாட்டு வேளாளர் குலத்தைச் சேர்ந்த நாட்டு காணியாளர்களாக விளங்கிய அண்ணன்மார்களான பொன்னரும், சங்கரும் தனது காவலுக்கு உட்பட்ட மண்ணைக் காக்கவும் சூழ்ச்சி செய்து தனது நாட்டை கைப்பற்ற நினைத்த அண்டை நாட்டு மன்னனை வீழ்த்தவும் கடும் போர் செய்து தனது உயிரை இழந்தனர். இவர்கள் இறந்து பல நூற்றாண்டுகள் கழிந்தபோதும் இவர்களின் தியாகமானது மக்கள் மனதிலிருந்து அழியாது இன்றும் பலரின் காவல் தெய்வமாகவும், குல தெய்வமாகவும் சாதி இன வேறுபாடு இன்றி மக்கள் அனைவராலும் தெய்வமாக ஏற்றுக்கோள்ளப்பட்டு கொங்கு மண்டலத்தில் முன்னூற்றிற்கும் மேற்பட்ட கோவில் கொண்டு விளங்குவதைப் பார்க்கும் போது மாவீரர்களாகிய அண்ணன்மார்கள் பல நூற்றாண்டுகள் கழிந்தும் மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றுள்ளனர் என்பதனை இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகிறது.

## துணைநூற் பட்டியல் (References)

1. அண்ணன்மார் சுவாமி வீரவரலாற்றுக்கதை, கொங்குக் கவிக்கோ முனைவர். இரா.வடிவேலன், நாம் தமிழர் பதிப்பகம், சென்னை. பதிப்பு – ஏப்ரல்- 2007.
2. அண்ணன்மார்சாமி உடுக்கடிக் கூத்து, முனைவர். சி.கார்த்திகேயன், காவ்யா பதிப்பகம்,சென்னை. பதிப்பு- 2012.
3. பொன்னர் - சங்கர் (அண்ணன்மார் வரலாறு) கலைஞர். மு.கருணாநிதி, பூம்புகார் பதிப்பகம், சென்னை-18, பதிப்பு -1992.

**ARTICLE 51 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 75–80

# திருமந்திரம் கூறும் யோக நிலைகள்

## Yoga States Described in the Thirumandiram

**முனைவர் சா.ஜா.கிதாரஞ்சிதபாக்கியம்**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
தூய யோவான் கல்லூரி
பாளையங்கோட்டை
திருநெல்வேலி
Email ID:sggeetha@gmail.com

**Abstract**

Yoga is an art that fosters balance and development across the physical, mental, intellectual, emotional, and spiritual dimensions. It is both a science of life and an art of living. The *Thirumandiram* outlines eight stages of Yoga: Yama, Niyama, Asana, Pranayama, Dharana, Dhyana, and Samadhi. The objective of this article is to highlight how the practice of these yogic disciplines enables one to lead a healthy life—both physically and mentally—while upholding virtuous conduct.

**Keywords:** Yoga—Yama—Niyama—Asana—Pranayama—Pratyahara—Dharana—Dhyana—Samadhi.

**ஆய்வுச் சுருக்கம்**

யோகக் கலை என்பது உடல், மனம், அறிவு, உணர்வு மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கும் சமன்பாட்டிற்கும் உதவிடும் கலையாகும். யோகா என்னும் கலை வாழ்க்கை அறிவியல் மற்றும் வாழும் கலையாகும். திருமந்திரம் எட்டு வகையான யோக நிலைகளை கூறியுள்ளது. அவை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், தாரணை, தியானம், சமாதி ஆகிய கூறுகளைக் கூறியுள்ளார். இந்த யோகங்களை செய்வதன் மூலம் உடலும், உள்ளமும் நலத்துடன் வாழவும் நல்ல ஒழுக்கங்களை கடைபிடித்து வாழ வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:** யோகம்-இயமம்-நியமம்-ஆசனம்-பிராணாயாமம்-பிரத்தியாகாரம்-தாரணை-தியானம்-சமாதி.

## முன்னுரை

இடைவிடாத ஓங்கார ரீங்காரம் பொங்கும் கயிலை மலையில் சிவபெருமானிடம் ஆசிப் பெற்ற சிவயோகியர் பலருண்டு. அவர்களுள் ஒருவராக திருமூலரும் காணப்பட்டார். அட்டாங்க யோகத்தை திருமூலர் சிவயோகமாக வளர்த்து அதன் மூலம் ஞானத்தைப் பெற்றார்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"

**ஆயில்யன்-திருமூலர் திருமந்திரம்- பக.23**

என்று மக்களுக்காக திருமூலர் இயற்றிய நூல் தான் திருமந்திரம் ஆகும். அந்நூலில் தமது யோக சாதனையால் பெற்ற ஞானத்தையும், பிற சிவயோகியரால் பெற்ற ஞானத்தையும், யோக நிலைப் பற்றி எட்டு வகைகள் குறித்தும் இக்கட்டு¡யில் காணலாம்.

## யோகம் பற்றிய செய்தி

யோகாசனம் என்பது உடற்பயிற்சி என்று பலர் நினைக்கின்றனர். ஆனால் யோகா என்பது உடலுக்கும் மனதிற்கும் ஒருசேர பயன் கிடைக்கச் செய்யும் ஒன்றாகும். யோகம் என்ற சொல் “யுஜ்” என்ற சமஸ்கிருத மொழியிலுள்ள சொல்லின் வழியே பிறந்ததாகும்.

“யோகம் என்ற சொல்லுக்கு ஒருங்கிணைத்தல் அல்லது முழுமைபடுதல் என்று பொருள்.”

**கி. கிரு~Êணம்மாள், உடற்கல்வியும் உடல்நலக்கல்வியும், பக்.41**

மேலும் யோகம் என்றால் மனதை அலையாமல் நேர் வழிப்படுத்தும் செயல் என்றும் கூறலாம். இதற்கு தமிழில் தவம் என்று பெயர். யோகப் பயிற்சியில் சித்தி பெற்ற அறிஞர்கள் இயற்கையைத் தன்வயப்படுத்தும் ஆற்றலை அடைவார்கள். திருமூலரும் யோகாசனத்தில் தில்லையில் குகையில் இருந்தார் என்பதை,

“முகப்பீட மாமட முன்னிய தேயம்
அகம்பெற வர்க்கமே யாசில்செய் காட்சி
அகம்பெற மாதனம் எண்ணென்ன கிரியை
சிதம்பரற் தற்கதை யாதாரந் தானே”
ஆயில்யன்-திருமூலர் திருமந்திரம்- பக.412

என்ற திருமந்திரப் பாடல் எடுத்துரைப்பதை அறியலாம்.

யோகாவும் அதன் சிறப்புகளும்

யோகா செய்வதன் hத்துஷமூலம் நோய்களைப் போக்கிடவும், நோய்கள் வராமல் காத்து ஒருவருக்கு உகந்த உன்னத உடலை உருவாக்கவும், உள்ளுறுப்புகளையும், வெளியுறுப்புகளையும் தூய்மைப்படுத்தி அது தன் பணிகளை அயராமல் செயல்படுத்துவதற்கும் முடியும்.

ஒருவனுடைய செயலாற்றலை மிகைப்படுத்தவும், உடல் நலமும், மனவளமும் சிறப்பு பெற்று வாழவும், உற்சாகமாக இருக்கவும் முடியும். மேலும் அன்றாடம் உடலில் உண்டாகும் கழிவுப் பொருட்களை வெகு விரைவாக வெளிப்படுத்தவும், உடலை கசடற்ற முறையில் காக்கின்ற சக்தியினையம் உடலுக்குத் தருகின்றது. நரம்புகள், மூளை, நுரையீரல், இதயம், ஜீரண உறுப்புகள் ஆகியவைகளை திறடையுடன் வேலை செய்யம் ஆற்றலையும் அளிக்கிறது.

நீண்ட காலம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு தணைபுரிகிறது. மனதாலும், செயலலாலும் உயர்ந்து வாழ தூண்டுகிறது. தேக நலனையும், சிறந்த ஆரோக்கியத்தையும் ஊட்ட யோகாப் பயிற்சி முறையானது உதவியாக செயல்படுகிறது. இவ்வாறு யோகா செய்வதினால் ஒரு மனிதனுக்கு சிறந்த பலன்கள் பல கிடைக்கின்றன என்பதை அறியலாம்.

## யோகா நிலை எட்டுக் கூறுகள்

யோகா நிலையில் எட்டுக் கூறுகள் உள்ளது. இந்த யோகா நிலைக்கு அட்டாங்க யோகம் என்று பெயர். யோகம் என்பது மனமும், உடலும் இணைந்த பயிற்சியே ஆகும். திருமூலர் சரீர சுத்தியைப் பெற அட்டாங்க

யோகம் பயில வேண்டும் என்று கூறுகின்றார். அட்டாங்க யோகம் என்பது

- இயமம்
- நியமம்
- ஆசனம்
- பிராணாயாமம்
- பிரத்தியாகாரம்
- தாரணை
- தியானம்
- சமாதி

என்று எட்டு வகை உறுப்புகளை கொண்டது. இறைவனை அடைவதற்குரிய யோகா நெறிகளைக் கூறும் உபாயங்களையம் இந்த எட்டு நிலைகளையும் முறையாகபட பற்றி நிலைத்த மனதோடு நிற்பவருக்கு ஞான வாயில் திறக்கும் என்று அறிவுறுத்துகின்றனர். இதனையே திருமூலர்,

> “இயம நியமமே என்னிலா ஆதனம்
> நயமுறு பிராணாய மம்பிரத்தி யாகராஞ்
> சயமிகு தாரணை தியானஞ் சமாதி
> அயமுறும் அட்டாங்க மாவதும் மாமே”

**ஆயில்யன்-திருமூலர் திருமந்திரம்- பக.23**

என்ற திருமந்திரப் பாடலில் பிறவா நெறியை நல்கும் எண்வகையிலான நெறிகளே ஆகும் என்று எடுத்துரைப்பது அறியலாகின்றது.

> நயமுறு பிராணாயாமம் மனஒருமைப் பாட்டை உண்டாக்கி ஆயுளை
> நீடித்து நன்மை தரும். மேலும்
> “அட்டாங்கமாவது அயமுறும்”

**ஞா. எல்லப்பன், திருமந்திர முத்துக்கள், பக்- 61**

என்ற வாக்கியத்திற்கு ஏற்ப இவற்றை இறையாகவ் செய்வோர் பிறவிப் பெறுங்கடல் நீந்துவர். நீந்துவர் என்பது திருமூலரின் கருத்தாக வெளிப்படுத்துவதை அறியலாம்.

## இமயம்

இமயம் என்பது ஐந்த வகையான பிரிவுகளைக் கொண்டது. சமூக கடமைகளை வலியுறுத்தும் உண்மை, அகிம்சை, திருடாமை, பிரம்மச்சரியம், அதிக பொருள் சேர்க்காமை ஆகியவை இப்பஞ்சமயங்கள் யோகக் கலைக்கு அடித்தளமானவை என்பதை எடு;த்துரைக்கின்றது.

## நியமம்

நியமமானது விதிமுறைகளை நெறித்தவறாது ஒழுகுதலாகும். நியமத்தில் இருப்பவன் தூய்மை, வாய்மை, அருள், உண்டிச் சுருக்கம், செம்மை, தெளிந்த அறிவு, அகண்ட பிரபஞ்சமான ஓர் இறையை சரணடைதல் ஆகியவை பின்பற்றடீல ஆகும். இவை அனைத்தும் யோகக் கலைக்கு மிக முக்கியமானவை என்பது தெளிவுபடுத்துகின்றது.

## ஆசனம்

ஆசனக் கலை என்பது யோகக் கலையிக் மூன்றாம் படி. மானுட உடல் என்னம் அற்புதமான விலைமதிப்பற்ற கருவியே முழு ஆரோக்கியத்தோடு வைத்து சுறுசுறுப்பு மற்றும் நீண்ட ஆயளோடு வாழ ஆசனக் கலை அற்புதமாக உதவி புரிகிறது.

யோகம் புரிவதற்கு முன் இருக்க வேண்டிய ஆசன முறைகளைப் பற்றியும் அவற்றால் உண்டாகம் பலன்களைப் பற்றியும் திருமூலர் கூறுகின்றார். அட்டாங்க யோகத்தில் பிராணாயாமத்தோடு மிகவும்,

"பத்திரங் கோமுகம் பங்கயம் கேசரி
சொத்திரம் வீரஞ் சுகாதனம் ஓரெழு
முத்தம மாமுது ஆசனம், எட்டெட்டுப்
பத்தோடு நூறு பல ஆசனமே"

### ஆயில்யன்-திருமூலர் திருமந்திரம்- பக.23

என்ற திருமந்திரப் பாடல் மூலம் எடுத்துரைப்பதோடு பத்திரம், கோமுகம், பங்கயம், கேசரி, சொத்திரம், வீரம், சுகாதானம் என்ற ஏழு ஆசனங்களும் சிறந்ததாக கருதப்படுகிக்றது.

## பிராணயாமம்

பிராணாயாமம் என்பது பிராணனை கட்டுப்படுத்துதல் ஆகும். **"நம்முடைய சுவாசத்தின் மூலம் தூய காற்றை நிறுத்தி வெளிவிட்டு மீண்டும் நிறுத்தி எங்கும் வியாபித்து இருக்கும் பிராண சக்தியை நம் உடலில் இயங்கும் 72000 நாடிகளில் செலுத்தி உடல் மற்றும் மனதை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவும் கலையே இதுவாகும்.** "

கரு. ஆறுமுகத்தமிழன், திருமூலர் காலத்தில் குரல் , பக். 101.

## பிரத்தியாகாரம்

பிரத்தியாகாரம் என்பது புறத்தே செல்லம் மனத்தை நிறுத்தி பழகுதலே ஆகும். பிராணாயாமம் பழகுவோர் ஒவ்வொருவருக்கும் ஆதராமாக பிராணனை நிறுத்தி வணங்குவது பிரத்தியாகாரம் என்று குறிப்பிடப்படுகின்றது.

" குறிப்பினின் உள்ளே குவளையன் தோன்றும்
வெறுப்பிறுள் நீங்கி விகர்தணை நாடுஞ்
சிறப்புறு சிந்தனையை சித்கென் ருணரிள்
அறுப்புறு காட்சி அவரறு மாமே"

### ஆயில்யன்-திருமூலர் திருமந்திரம்- பக்.96

என்கிறார். மேலும் திருமந்திரப்பாடல் உலகம் முழுவதுமே அறியாமை ஆகிய இருளை நீக்கி சிவத்தை நாடினால் சிவஞானம் பொருந்திய சிறந்தவர்களாக மாறலாம் என்று அப்பாடல் உணர்த்துவதை அறிய முடிகின்றது.

## தாரணை

தாரணை என்பது பிரத்தியாகார நிலையில் பன்னிரண்டு மடங்கு நிலைத்திருக்கிறது. இதனை ஆங்கிலத்தில் ஊழளெநவெசயவழைn என்று கூறப்படுகிறது.

“கடைவாச லைக்கட்டிக் காலை எழுப்பி
இடைவாசல் நோக்கி இனிதுள் இருத்தி
மடைவாயிற் கொக்கு போல் வந்தித்திருப்பாற்கு
குடையாமல் ஊழி இருக்கலுமாமே”

கரு. ஆறுமுகத்தமிழன், திருமூலர் காலத்தில் குரல் , பக். 101.

மூலாதாரத்தை அடைந்து பிராணவாயுவால் குண்டலினியை எழுப்பி நடுவழியாகிய கழுமுனையால் தாரணை செய்து, பொறிப்புலன்களை அடக்கி இருப்பவருக்கு அழிவில்லை என்று திருமூலரின் திருமந்திரப்பாடல் குறிப்பிடுகின்றது.

## தியானம்

தியானம் மனதை ஒழுங்குப்படுத்தும் மற்றும் நெறிப்படுத்தும் ஒரு சிறந்த கலையாகும். “எண்ணாயிரத்தாண்டு யோகம் இருக்கினும் பயனில்லை” என்று கண்ணார் அமுதான கடவுளை கண்டறிய வேண்டுமானால் உள்நாடியுள் ஒளி பெற நோக்குங்கள் என்று புறத்தே செல்கின்ற கவனத்தை அகத்துக்க மடைமாற்ற செல்வதே திருமூலரின் கருத்தின் வாயிலாக அறிய முடிகின்றது.

## சமாதி

சமாதி என்பது முக்தி அடையும் வழியை குறிப்பதாகும். மேலும் இது உச்ச நிலை அனுபவமாக கருதப்படுகின்றது.

“சாகாமல் இருப்பதற்கு தான்கற்ற கல்விஅன்றோ
வாகான மொய்க்கல்வி வகுதறி நீ கல் மனமே”

**புலவர். ந. இராமகிருட்டிணன், திருமூலரும் சிவயோகமும்- பக்.94**

என்று இடைக்காட்டு சித்தர் கூறியுள்ளார். சாகாக் கல்வி பிராணாயாமத்தால் கிடைக்கும் எனவும் அறியப்படுகிறது. சமாதி நிலையில் எட்டு சித்திகளும் கைக்கூடும் சமாதியாவது உயிரும் இறைவனும் இரண்டற ஒன்றி சங்கர்ப்ப விகர்ப்பங்கள் அற்றிருக்கும் நிலையாகும்.

## முடிவுரை

மனதாலும் உடலாலும் யோகா, தியானம் போன்ற செயல்களில் ஈடு படுவதில்ஆரோக்கியம் கிடைப்பதோடு மனதை ஒழுங்குப்படுத்தும் ஒரு சிறந்த கலையாகவும் விளங்குகிறது.

## துணைநூற் பட்டியல் (References)


1. ஆயில்யன்-திருமூலர் திருமந்திரம், பாரதி வெளியீடு, (மு.ப) செப்டம்பர் 1997.
2. கரு. ஆறுமுகத்தமிழன், திருமூலர் காலத்தில் குரல், தமிழினி, (மு.ப)நவம் 2004.
3. இராமக்கிரு~;ணன். திருமூலரும் சிவயோகமும், மணிவாசகர் பதிப்பகம், 2000.
4. எல்லப்பன்.மா, திருமந்திர முத்துக்கள், பாலன் பதிப்பகம், (மு.ப) 2000.

5. தி. கிரு~;ணன், உடற்கல்வியும் உடல்நலக்கல்வியும், பிரியாகமல் பதிப்பகம்.

**ARTICLE 52 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 81–91

# குறுந்தொகையில் பல்துறை ஆய்வுகள்

## Multidisciplinary Studies on Kuruntokai

**முனைவர் இரா.மாலினி**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
PSGR கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி
கோயம்புத்தூர்-14
Mail ID : malinivijayakumar1980@gmail.com
malinir@psgrkcw.ac.in
Orcid ID : https://orcid.org/0000-0002-5807-0509

### Abstract

The Tamil language boasts a continuous history spanning over two millennia. The diverse literary and grammatical works that emerged from the Sangam era onwards bear witness to the depth and breadth of the language. Although *Kuruntokai*—one of the Sangam anthologies—consists of short poems centered on *Akam* (inner life/love), it is not merely a record of romantic emotions. It encapsulates data across a wide spectrum of disciplines, including nature, fauna, flora, geography, climate, agriculture, economics, social structure, family dynamics, the status of women, psychology, medical knowledge, cuisine, occupations, linguistics, and aesthetics.

Approaching *Kuruntokai* through a multidisciplinary lens—integrating linguistics, literary studies, history, anthropology, sociology, psychology, ecology, biology, botany, zoology, geography, agriculture, economics, medicine, feminism, communication studies, science, and cultural studies—will open up new intellectual horizons for the advancement of Tamil. Such a multidisciplinary research approach enables the re-articulation of the ancient Tamils' knowledge of life in the language of modern science and helps establish Tamil as a language of knowledge creation. Examining human relationships from a sociological perspective, knowledge of nature through botany and zoology, human emotions through psychology, and the historical evolution of words through linguistics serves to demonstrate that Tamil is a unique, classical language of world-class stature.

**Keywords:** Kuruntokai, multidisciplinary study, Tamil development, Sangam literature, ecology, culture, linguistics, intellectual tradition.

### ஆய்வுச் சுருக்கம்

தமிழ்மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சியான வரலாற்றுச் சிறப்புடையது. சங்க காலத்தில் தோன்றி, காலம் தோறும் உருவெடுத்த பல்வேறு இலக்கியங்களும் இலக்கணங்களும் தமிழ்மொழியின் ஆழத்தையும் அகலத்தையும் எடுத்தியம்புகின்றன. சங்க இலக்கியத் தொகுப்புகளில் ஒன்றான குறுந்தொகை, அகப்பொருள் சார்ந்த குறுங்கவிதைகளின் தொகுப்பாக அமைந்திருந்தாலும், அது காதல் உணர்வுகளை மட்டும் பதிவு செய்யும் இலக்கியமாக அமையவில்லை. இயற்கை, உயிரினங்கள், தாவரங்கள், நிலவியல், காலநிலை, வேளாண்மை, பொருளாதாரம், சமூக அமைப்பு, குடும்ப உறவுகள், பெண்களின் நிலை, உளவியல், மருத்துவ அறிவு, உணவு, தொழில்கள், மொழியியல், அழகியல் போன்ற பல்வேறு அறிவுத்துறைகளுக்கான தரவுகளையும் அது தன்னகத்தே கொண்டுள்ளது.

இவ்வகையில் குறுந்தொகையை ஒரே ஒரு இலக்கியக் கோணத்தில் அணுகாமல், மொழியியல், இலக்கியவியல், வரலாறு, மானிடவியல், சமூகவியல், உளவியல், சூழலியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல், நிலவியல், வேளாண்மை, பொருளாதாரம், மருத்துவம், பெண்ணியம், தகவல் தொடர்பியல், அறிவியல், பண்பாட்டியல் போன்ற பல்துறைகளுடன் இணைத்து ஆராய்வது தமிழ் வளர்ச்சிக்குப் புதிய அறிவுப் பரப்பை

உருவாக்கும். இத்தகைய பல்துறை ஆய்வு முறையின் வாயிலாகப் பழந்தமிழரின் வாழ்வியல் அறிவை நவீன அறிவியல் மொழியில் மீள்பதிவு செய்யவும், தமிழை அறிவு உருவாக்கும் மொழியாக நிலைநிறுத்தவும் முடியும். சமூகவியல் நோக்கில் அன்றைய மனித உறவுகளையும், தாவரவியல் மற்றும் விலங்கியல் நோக்கில் இயற்கை அறிவையும், உளவியல் நோக்கில் மனித மன உணர்வுகளையும், மொழியியல் நோக்கில் சொற்களின் வரலாற்றுப் பரிணாமத்தையும், ஆராயும்போது தமிழ்மொழி உலகத் தரம் வாய்ந்த உயர் தனிச் செம்மொழி என்பதை மெய்ப்பிக்கின்றது.

**திறவுச் சொற்கள்:** குறுந்தொகை, பல்துறை ஆய்வு, தமிழ் வளர்ச்சி, சங்க இலக்கியம், சூழலியல், பண்பாடு, மொழியியல், அறிவு மரபு.

## முன்னுரை

தமிழ் உலகின் தொன்மையான செம்மொழிகளில் ஒன்றாகும். தமிழ் மொழியின் பெருமை அதன் தொன்மையில் மட்டும் அடங்கியதல்ல; காலந்தோறும் புதிய அறிவையும் சிந்தனைகளையும் உள்வாங்கிக் கொண்டு வளர்ந்து வரும் தன்மையிலும் அடங்கியுள்ளது. மொழி வளர்ச்சி என்பது புதிய சொற்களை உருவாக்குவதோ, பழைய இலக்கியங்களைப் பதிப்பிப்பதோ மட்டும் அன்று. மொழியில் உருவாக்கப்படும் அறிவு, மேற்கொள்ளப்படும் ஆய்வு, உருவாகும் புதிய கருத்தாக்கங்கள், அறிவியல் விளக்கங்கள், சமூகப் பதிவுகள் ஆகிய அனைத்தும் மொழி வளர்ச்சியின் அடிப்படைக் கூறுகளாகின்றன.

இந்த நிலையில் சங்க இலக்கியங்கள் முக்கியமான அறிவுக் களஞ்சியங்களாக விளங்குகின்றன. சங்கப் பாடல்கள் பழந்தமிழரின் வாழ்க்கையை இயற்கையோடு இணைத்து வெளிப்படுத்துகின்றன. அவற்றுள் குறுந்தொகை சிறிய அளவிலான பாடல்களைக் கொண்டிருந்தாலும், அதன் கருத்துப்பரப்பு மிக விரிவானது.

குறுந்தொகைப் பாடல்களை இலக்கியமாக மட்டும் வாசிக்கும் போது காதல், பிரிவு, காத்திருப்பு, ஊடல், இரங்கல், கூடல் போன்ற அக உணர்வுகள் முன்னிலைப்படுகின்றன. ஆனால் அதே பாடல்களைப் பல்துறை நோக்கில் வாசிக்கும்போது அவற்றுக்குள் மறைந்திருக்கும் பல்வேறு அறிவுத் தகவல்கள் வெளிப்படுகின்றன.

எனவே, ‘குறுந்தொகை ஒரு இலக்கியப் பிரதியாக மட்டுமல்ல; பல்துறை அறிவுத் தரவுகளைக் கொண்ட தமிழ்ச் சிந்தனைக் களஞ்சியம்’ என்ற பார்வை தமிழ் ஆய்வில் முக்கியத்துவம் பெறுகின்றது.

இன்றைய நவீன உலகில், ஒரு மொழியின் வளர்ச்சி என்பது வெறும் கவிதை மற்றும் உரைநடை அமைப்புகளோடு நின்றுவிடுவதில்லை. அது மானுடவியல், சமூகவியல், தாவரவியல், உளவியல், புவியியல், மருத்துவக் கோட்பாடுகள் மற்றும் மொழியியல் போன்ற பல்துறை ஆய்வுகளுக்குப் (Interdisciplinary Studies) பயன்படும்போதே முழுமையான பரிமாணத்தைப் பெறுகிறது.

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகத் திகழும் குறுந்தொகை, சங்க கால மக்களின் அகவாழ்க்கைப் பதிவாக மட்டும் அல்லாமல்,

அக்காலகட்டத்தின் பல்வகை அறிவியல்களையும் பண்பாட்டையும் தன்னுள் அடக்கியுள்ள கருவூலமாகத் திகழ்கிறது. "தமிழ் வளர்ச்சியில் பல்துறை ஆய்வுகள்" என்னும் தளத்தில் குறுந்தொகை இலக்கியம் எவ்வாறெல்லாம் பயின்று வருகிறது என்பதையும், அது தமிழ்மொழியின் நவீன வளர்ச்சிக்குப் எவ்விதம் துணைபுரிகிறது என்பதையும் இக்கட்டுரை விரிவாக ஆராய்கிறது.

## குறுந்தொகை – அறிமுகமும் இலக்கிய அமைப்பும்

சங்க இலக்கியப் பாகுபாட்டில் ‘எட்டுத்தொகை’ நூல்களுள் அகத்திணை சார்ந்த நூலாகக் குறுந்தொகை விளங்குகிறது. 4 அடி முதல் 8 அடி வரை அமைந்த குறுகிய அடிகளையுடைய பாடல்களின் தொகுப்பு என்பதால் இது ‘குறுந்தொகை’ எனப் பெயர் பெற்றது.

கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்களைக் கொண்டது. இதனை 205-க்கும் மேற்பட்ட புலவர்கள் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுத்தவர் பூரிக்கோ ஆவார். தொகுப்பித்தவர் பெயர் கிடைக்கப்பெறவில்லை. "நல்ல குறுந்தொகை" எனச் சான்றோரால் சிறப்பித்துப் போற்றப்படும் பெருமை உடையது. குறுந்தொகை அகப்பொருள் திணைகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்திணைகளின் தலைவன், தலைவி, தோழி, செவிலித்தாய் ஆகியோரின் கூற்றுகளாக அமைந்தது.

## பல்துறை ஆய்வு முறைமையும் தமிழ் வளர்ச்சியும்

ஒரு மொழியின் வளர்ச்சி என்பது புதிய சொற்களை உருவாக்குவதுடன், பழமையான இலக்கியப் பதிவுகளை நவீன அறிவியல் மற்றும் அறிவுப் புலங்களோடு இணைத்து ஆய்வு செய்வதிலும் அடங்கியுள்ளது.

சங்க இலக்கியங்கள் வெறும் கற்பனை அல்ல; அவை வரலாற்று உண்மைச் சான்றுகள் என்பதை நிறுவுதல். பண்டைய தமிழர்களின் தொழில் நுட்பம், அறிவியல் மற்றும் வாழ்க்கை நெறிகளை உலக அரங்கில் நிலைநாட்டுதல். நவீனத் துறைகளுக்கான தமிழ் கலைச்சொல் களஞ்சியத்தைப் பெருக்குதல் போன்றவை பல்துறை ஆய்வுகள் மூலம் தமிழ்மொழிக்குக் கிடைக்கும் நன்மைகள் ஆகும்.

குறுந்தொகை காதல் வாழ்க்கையை மையமாகக் கொண்டிருந்தாலும், காதல் நிகழ்வுகளை வெளிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் இயற்கைக் காட்சிகள் பல்வேறு அறிவுத் தகவல்களைத் தாங்கி நிற்கின்றன. குறுந்தொகையில் காணப்படும், மலை,காடு, வயல், கடல், வறண்ட நிலம், மழை, அருவி, ஆறு, மரங்கள், கொடிகள், மலர்கள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், உணவுப்பொருட்கள், தொழில்கள், கருவிகள், ஊர்கள், வழித்தடங்கள், குடும்ப உறவுகள்

போன்றவை பல்துறை ஆய்வுக்கு அடிப்படையாக அமைகின்றன.

## தாவரவியலும் விலங்கியலும் (Botany & Zoology)

பண்டைய தமிழர்கள் இயற்கை உணர்வுடன் இணைந்து வாழ்ந்தனர் என்பதற்கு குறுந்தொகையில் இடம்பெறும் தாவரவியல் மற்றும் விலங்கியல் செய்திகள் சிறந்த சான்றுகளாகும். குறுந்தொகை பாடல்களில் பல்வேறு மரங்கள், கொடிகள், பூக்கள் பற்றிய துல்லியமான குறிப்புகள் உள்ளன. குறிஞ்சிப் பூ, வேங்கை, காந்தள், முல்லை, நெய்தல், ஆம்பல் போன்ற தாவரங்களின் மலரும் காலம், அவற்றின் நிறம் மற்றும் பருவகால மாற்றங்கள் மிகத் துல்லியமாக விவரிக்கப்பட்டுள்ளன. இயற்கையில் விலங்கினங்கள் காட்டும் பரிவு, இணைப்புத் தன்மை மற்றும் தாவரங்களின் ஈரப்பதம் சார்ந்த அறிவியல் பதிவுகளை,

“பிடிப் பசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி! அவர்சென்ற ஆறே.”(குறுந்தொகை - 37)

என்னும் பாடல் எடுத்துக்காட்டுகின்றது. நீரற்ற பாலை நிலத்தில் ஆண் யானையானது (பெருங்கை வேழம்) பெண் யானையின் (பிடி) பசியைப் போக்க 'யா' மரத்தின் மெல்லிய பட்டையை உரித்து, அதிலுள்ள ஈரப்பசையுள்ள நாரை உணவாகத் தருகிறது. இது விலங்கியல் நடத்தை அறிவியலுக்கும் (Ethology), 'யா' மரத்தின் தன்மையை விளக்கும் தாவரவியலுக்கும் சான்றாகும்.

மேலும் பல்வேறு விலங்குகளின் இயல்பான நடத்தைகள் குறுந்தொகை பாடல்களில் உவமைகளாகக் கையாளப்பட்டுள்ளன. யானை தன் பிடிக்கு (பெண் யானை) உணவளிப்பதற்காக யா மரத்துப் பட்டையை உரித்து நீர் சுரக்கச் செய்யும் இரக்க உணர்வு. ஆற்று நீரோட்டத்திலும், நெய்தல் கரைகளிலும் வாழும் உயிரினங்களின் வாழ்க்கை முறை, ஆண்குரங்கிற்காக உயிர் துறக்கும் பெண்குரங்கின் அன்பு போன்றவை விவரிக்கப்பட்டுள்ளது.

குறுந்தொகையில் யானை, மான், புலி, குரங்கு, குதிரை, எருமை போன்ற பல்வேறு விலங்குகளின் குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றின் இயல்புகள் மனித உணர்வுகளுடன் ஒப்புமைப்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் விலங்குகளின் நடத்தை, இயக்கம், வாழிடம், உணவு, இனப்பெருக்கம், மனிதர்களுடனான தொடர்பு போன்றவற்றை ஆராய இயலும்.

## சமூகவியலும் பொருளாதாரவியலும்

குறுந்தொகைப் பாடல்கள் தனிமனித உணர்வுகளைக் கூறினாலும், அவற்றின் பின்னணியில் சமூக அமைப்பு உள்ளது.தலைவன்–தலைவி உறவு, தோழியின் பங்கு, குடும்பத்தின் பங்கு, ஊரார் கருத்து போன்றவை அக்கால சமூகக் கட்டமைப்பை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, தனிமனிதன் – குடும்பம் – சமூகக் குழு என்ற மூன்று நிலைகளின் தொடர்பை குறுந்தொகையின் வழியாக ஆராயலாம். சமூகக் கட்டுப்பாடுகள், சமூக அங்கீகாரம், காதல் உறவுகளுக்கான சமூகப் பார்வை போன்றவையும் ஆய்வுக்குரியனவாகும்.

பண்டைய தமிழர்களின் நிலவியல் சார்ந்த வாழ்க்கை முறையையும், சமூகத்தில் நிலவிய பண்டமாற்று முறைப் பொருளாதாரத்தையும் உணர்த்துகிறது,

“அமைகண் தண்சுமடு அசைஇ வீழ்க்கும்
உமணர் சேர்ந்த சிறுகுடி, ஓங்கி
நெல்லிடை இரட்டைய மென்கோல் உமைத்தொடி
நெல்லின் நேரே வெண்கல் உப்பு” (குறுந்தொகை - 269)

என்னும் பாடல் உமணர்கள் உப்பை வண்டியில் ஏற்றி ஊர் ஊராகச் சென்று விற்கின்றனர். "உப்பிற்கு நிகராக நெல்லைத் தாருங்கள்" என்று கூவி விற்பதன் மூலம் சங்க காலத்தில் பண்டமாற்று முறை (Barter System) சமூகத்தின் முதன்மைச் சந்தையாக இயங்கியதை இப்பாடல் சமூகவியல் நோக்கில் உறுதிப்படுத்துகிறது. மேலும் முல்லை நில மக்கள் பால், நெய், மோர், போன்றவற்றை விற்று, நெல் முதலியனவற்றைப் பெற்றுக்கொண்டமையும் பண்பாட்டுப் பொருளாதாரத்திற்குச் சான்றாகின்றன. எனவே குறுந்தொகைப் பாடல்கள் அன்றைய சமூகக் கட்டமைப்பையும் மக்களின் நிலவியல் சார்ந்த வாழ்க்கை முறையையும் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. மேலும் தொல்காப்பியர் வகுத்த நிலம் மற்றும் பொழுது சார்ந்த திணைக் கோட்பாட்டைப் பின்பற்றி, மனிதப் பழக்கவழக்கங்கள் நில அமைப்போடு எவ்வாறு பிணைக்கப்பட்டுள்ளன என்பதையும் குறுந்தொகை புலப்படுத்துகிறது.

சங்ககால சமூகத்தின் பொருளாதார நடவடிக்கைகளையும் குறுந்தொகை மறைமுகமாகப் பதிவு செய்கிறது. பல்வேறு நிலங்களுக்குரிய தொழில்களாக, வேட்டை, கால்நடை வளர்ப்பு, வேளாண்மை, மீன்பிடித்தல், சேகரிப்பு, வணிகம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இதன் மூலம் நிலவியல்–தொழில்–பொருளாதாரம் ஆகியவற்றின் தொடர்பை அறிய முடிகின்றது.

### உளவியலும் மானுடவியலும் (Psychology & Anthropology)

குறுந்தொகையின் மையப்பொருள் மனித உணர்வு என்பதால் உளவியல் ஆய்வுக்கு அது வளமான களமாகும். குறுந்தொகையில், காதல், ஏக்கம், பிரிவு, காத்திருப்பு, அச்சம், மகிழ்ச்சி, துயரம், நாணம், கோபம், ஊடல், எதிர்பார்ப்பு போன்ற பல்வேறு உணர்ச்சிகள் நுட்பமாக வெளிப்படுத்தப்படுகின்றன. தலைவியின் மனநிலை, தலைவனின் பிரிவுணர்வு, தோழியின் இடைத்தரகர் பங்கு போன்றவற்றை நவீன உளவியல் கருத்தாக்கங்களோடு ஒப்பிட்டு ஆய்வு செய்யும் ஆய்வுத் துறையாக அறிய முடிகின்றது.

இரு வேறு பின்னணி கொண்ட மனிதர்களின் மனங்கள் ஒன்றிணையும் பிணைப்பு உளவியலை

“யாயும் ஞாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளீர்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே.”(குறுந்தொகை - 40)

என்னும் பாடல் விளக்குகிறது. முன்பின் அறியாத தலைவனும் தலைவியும் சந்திக்கும் போது, செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர்

அம்மண்ணோடு கலப்பதைப் போல அவர்களின் மனங்கள் ஒன்று கலக்கின்றன. மனித உணர்வுகளின் ஒருமைப்பாட்டை விளக்கும் பிணைப்பு உளவியலுக்கு (Attachment Psychology) இப்பாடல் மிகச் சிறந்த மானுடவியல் சான்றாகும்.

அகத்திணைப் பாடல்கள் மனித மனதின் நுட்பமான உணர்வுகளைப் பேசுவதால், குறுந்தொகை உளவியல் ஆய்வுகளுக்கு மிகப்பெரிய மூலப்பொருளாக விளங்குகிறது. இப்பாடலில் தலைவனும் தலைவியும் தங்களுக்கிடையேயான உறவு எவ்வாறு உருவானது என்பதை "செம்புலப் பெயல்நீர்" என்ற இயற்கைக் காட்சியின் மூலம் விளக்குகின்றனர். அறியாத இரு மனிதர்களின் மனங்கள், செம்மண் நிலத்தில் பெய்த மழைநீர் நிலத்தோடு கலந்து ஒன்றாவது போல ஒன்றுபடுகின்றன என்னும் கூற்று, மனித மானுடவியல் மற்றும் பிணைப்பு உளவியலின் உச்சகட்ட வெளிப்பாடாகும்.

தலைவன் பொருள் வயிற் பிரியும் போது தலைவி அடையும் மனவேதனையும், அவள் மேனியில் தோன்றும் 'பசலை' நிறமும் உடலியல்-உளவியல் (Psychosomatic) மாற்றங்களின் வெளிப்பாடாகும். **பிரிவாற்றாமை (Separation Anxiety) என்னும்** அக உணர்வுகளின் வெளிப்பாடாக அமைகின்றது.

இன்றைய நவீன உளவியலில் வழங்கப்படும் "ஆற்றுப்படுத்துதல்" (Counseling) முறையை அன்றைய தோழி மிகச் சிறப்பாகச் செய்துள்ளாள். தலைவியின் மன அழுத்தத்தைக் குறைத்து, அவளுக்கு நம்பிக்கை ஊட்டும் கதையாடல்கள் குறுந்தொகையில் நிறைந்துள்ளன.

## புவியியலும் சுற்றுச்சூழல் ஆய்வுகளும் (Ecology)

இன்றைய உலகில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மிக முக்கியமான பிரச்சினையாக உள்ளது. இந்நிலையில் சங்க இலக்கியத்தில் காணப்படும் இயற்கைச் சிந்தனைகள் புதிய ஆய்வுப் பொருளாக மாறியுள்ளன. குறுந்தொகையில் இயற்கை வெறும் பின்னணியாக இடம்பெறவில்லை. மனித வாழ்க்கையோடு இணைந்த உயிருள்ள அமைப்பாக அது சித்தரிக்கப்படுகிறது. மலை, காடு, வயல், கடல், நீர்நிலை ஆகியவை மனித உணர்வுகளோடு இணைக்கப்படுகின்றன. இதன் மூலம், மனிதன் – இயற்கை – உயிரினம் – நிலம் – நீர் என்ற ஒருங்கிணைந்த உறவைப் புரிந்துகொள்ள முடிகிறது. பருவகால மாற்றங்கள், காடுகளின் சுற்றுச்சூழல் மற்றும் விலங்குகளின் இனப்பெருக்கச் சுழற்சியைக் கணித்த சூழலியல் அறிவிற்கு,

"மடவ வாழி தோழி! பசுவீ நறுமுல்லை
முயல்ஏற்று ஆள்காட்டிப் பிணைபுணர்ந்து ஆடும்
கார்அன்று சான்றோர் வரூஉம்
பருவம் அன்றுஎனக் கூறிய காலம்" (குறுந்தொகை - 232)

என்னும் பாடல் சான்றாகின்றது. முல்லை நிலத்தில் பசுமையான மொட்டுகள் மலர்வதும், ஆண் முயல் பெண் முயலோடு கூடி விளையாடுவதும் மழைக்காலத்தின் (கார் காலம்) வருகையைக்

காட்டுகின்றன. இது பருவகால சுழற்சி மற்றும் உயிரினங்களின் நடத்தை சார் சூழலியலை (Ecological Phenology) விளக்குகிறது.

சங்க காலத் தமிழர்கள் நில அமைப்பையும் பருவகால மாற்றங்களையும் துல்லியமாகக் கணித்திருந்தனர். கார் காலம் (மழைக்காலம்), கூதிர் காலம், இளவேனில், முதுவேனில் ஆகியவற்றின் தொடக்கத்தையும், அப்போது ஏற்படும் இயற்கை மாற்றங்களையும் புலவர்கள் துல்லியமாகப் பதிவிட்டுள்ளனர். மனிதன் தனியாக வாழவில்லை; தாவரங்கள், விலங்குகள், பறவைகள் மற்றும் இயற்கை வளங்களோடு இணைந்தே வாழ்கிறான் என்னும் சூழலியல் மையம் (Ecocentrism) குறுந்தொகை முழுவதும் இழையோடுகிறது.

## மொழியியலும் கலைச்சொல்லாக்கமும்

தமிழ் மொழியின் பழைமையையும் சொல்வளத்தையும் ஆராய்வதற்கு சங்க இலக்கியங்கள் முதன்மையான ஆதாரங்களாக உள்ளன. குறுந்தொகைப் பாடல்களில் காணப்படும் சொற்கள் அக்காலத் தமிழரின் வாழ்க்கைச் சூழலோடு நெருங்கிய தொடர்புடையவை. தமிழ் மொழியியல் வளர்ச்சிக்குக் குறுந்தொகை அளிக்கும் பங்களிப்பு அளப்பரியது.

இயற்கைப் பொருட்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு பெயர்கள், தொழில்சார் சொற்கள், உறவுமுறைச் சொற்கள், உணவுப் பெயர்கள், விலங்கு–தாவரப் பெயர்கள் ஆகியவை தமிழின் சொல்வளத்தை வெளிப்படுத்துகின்றன. சொற்களின் செறிவும், குறிப்பால் பொருள் உணர்த்தும் ‘உள்ளுறை’ ,'இறைச்சி' என்னும் மொழியியல் உத்தியும் மொழியியல் வளர்ச்சிக்கு சான்றாகின்றது.

“நசைபெரிது உடையர் நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழி அவர்சென்ற ஆறே” (குறுந்தொகை - 37)

இப்பாடலில் வரும் நசை, பிடி, வேழம், யாஅம் போன்ற சொற்கள் வரலாற்று மொழியியல் ஆய்வுக்குப் பயன்படுகின்றன. மேலும், பாலை நிலத்தில் யானை தன் பிடிக்கு உதவும் காட்சியைக் கூறுவதன் மூலம் "தலைவனும் உனக்கு அருள் செய்வான்" என்று தோழி உணர்த்தும் இறைச்சி என்னும் உத்தி மொழியியலின் செழுமையைக் காட்டுகின்றது.

பண்டைத் தமிழ்ச் சொற்களான *அல்குல், கழங்கு, புனம், பசலை, உமணர், எல், கங்குல்* போன்ற எண்ணற்ற சொற்கள் வரலாற்று மொழியியல் (Historical Linguistics) ஆய்வுகளுக்குத் மூலச் சான்றுகளாக அமைகின்றன இத்தகைய அரிய சொற்கள் சொற்களஞ்சியப் பெருக்கத்திற்கு வாய்பளிப்பவையாக அமைகின்றன.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களுடன் தொடர்புடைய பல சொற்கள் குறுந்தொகையில் இடம்பெறுகின்றன. இதன் மூலம், நிலப்பரப்பு சார்ந்த சொல்வளம்தாவரப் பெயர்கள்விலங்குப் பெயர்கள்பறவைப் பெயர்கள் நீர்நிலைப் பெயர்கள்

தொழில்சார் சொற்கள் ஆகியவற்றைத் தொகுத்து தமிழ்ச் சொல்வள அகராதி உருவாக்க முடியும்.

சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட சொற்களுக்கும் பின்னாளில் பயன்படுத்தப்பட்ட சொற்களுக்கும் இடையிலான தொடர்ச்சியை ஆராய்வதன் மூலம் தமிழின் சொல் வரலாற்றை அறியலாம். இதனால் குறுந்தொகை வரலாற்று மொழியியல் ஆய்வுக்கான முக்கிய ஆதாரமாக அமைகிறது.

குறைந்த சொற்களில் மிகுந்த பொருளை உணர்த்தும் "இறைச்சி" மற்றும் "உள்ளுறைஉவமம்" ஆகிய உத்திகள் தமிழின் கவிதை மொழியியல் செழுமைக்குச் சான்றுகளாகும். சொல்லப்படும் பொருளுக்கு உள்ளே மறைமுகப் பொருளை வைத்து உணர்த்தும் கவிதை மொழியியல் குறியீட்டு உத்தி ஆகும். இதனை,

> “கழுநீர் மேய்ந்த கயல்அமை கடுங்கண்
> எருமை இருள்தோன்று எருமைச் சிறுமு his
> பயிர்புகு நல்லகப் பிள்ளை பெறூஉம்
> தண்டுறை ஊரன்” (குறுந்தொகை - 261)

இப்பாடல் தாமரைத் தடாகத்தில் கழுநீர்ப் பூவை மேய்ந்த எருமையானது, வாழைத் தோட்டத்தில் கன்றைப் பெறுகிறது என்று கூறுவதன் மூலம், தலைவன் தன் மனைவியை விடுத்துப் பரத்தையரிடம் செல்லும் பரத்தைமை ஒழுக்கத்தைக் குறிப்பால் உணர்த்துகிறது. இது நவீன மொழியியலின் குறியீட்டியல் (Semiotics) ஆய்வுக்குச் சான்றாகும்.

## பண்பட்டியலும் மானிடவியலும்

பண்பாடு என்பது மனித சமூகத்தின் வாழ்வியல் முறைகளின் தொகுப்பாகும். குறுந்தொகையில் காதல், பண்பாடு, குடும்பப் பண்பாடு, விருந்தோம்பல், நட்பு, திருமண மரபு, சமூக ஒழுக்கம், இயற்கை வழிபாடு, தொழில் சார்ந்த வாழ்க்கை போன்ற பண்பாட்டுக் கூறுகள் வெளிப்படுகின்றன. எனவே குறுந்தொகையை தமிழர் பண்பாட்டு நினைவகமாக அணுக முடியும்.

மானிடவியல் மனித சமூகத்தின் தோற்றம், வளர்ச்சி, பண்பாடு, உறவுகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை ஆராய்கிறது.குறுந்தொகையில் பழந்தமிழரின் அன்றாட வாழ்க்கை பல இடங்களில் பதிவாகியுள்ளது.அவற்றுள்,திருமண முறைகள்காதல் உறவுகள்குடும்ப
உறவுகள்தோழமைவிருந்தோம்பல்பயணம்தொழில்வேட்டைவேளாண் மைமீன்பிடித்தல்கால்நடை வளர்ப்பு போன்றவை குறிப்பிடத்தக்கவை. எனவே குறுந்தொகையை பண்பாட்டு மானிடவியல் ஆவணமாகவும் அணுக முடியும். அகவாழ்விலும் கற்பு, காதல், அறம் சார்ந்த விழுமியங்கள் எவ்வாறு பேணப்பட்டன என்பதைக் காட்டுவதன் மூலம் சமூக நெறிமுறையியலுக்கு **(Ethics)** வழிவகுக்கிறது.

## குறுந்தொகையில் பிற அறிவியல் கூறுகள்

**இலக்கியவியல்:** குறுந்தொகையின் முதன்மையான ஆய்வுத்துறை இலக்கியவியலாகும். அகப்பொருள் அமைப்பு, திணைக் கோட்பாடு,

உரிப்பொருள், கருப்பொருள், முதற்பொருள் போன்றவை குறுந்தொகையைப் புரிந்துகொள்ள அடிப்படை அம்சங்களாகும்.

குறுந்தொகைப் பாடல்களில், தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய், பாங்கன், பரத்தையர் போன்ற பாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இவை பழந்தமிழ்ச் சமூகத்தின் உறவியல் அமைப்பையும் வெளிப்படுத்துகின்றன. குறுந்தொகையின் குறுங்கவிதை வடிவம் குறைந்த சொற்களில் ஆழமான பொருளை வெளிப்படுத்தும் தமிழரின் கவித்திறனை எடுத்துக்காட்டுகிறது.

குறுந்தொகை அகப்பொருள் சார்ந்த இலக்கியமாக விளங்கும் முறையையும், அதன் அடிக் கட்டமைப்பு மற்றும் கவிதைச் செறிவையும்,

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே." (குறுந்தொகை - 3)

என்னும் பாடல் விளக்குகின்றது**.** தலைவன் மீதான காதலைத் தலைவி வெளிப்படுத்தும் இப்பாடல், 4 அடிகளில் அமைந்த அகப்பொருள் கவிதையாகும். நிலத்தைக் காட்டிலும் பெரியதாகவும், வானத்தைக் காட்டிலும் உயர்ந்ததாகவும், கடலைக் காட்டிலும் ஆழமானதாகவும் தன் காதல் உள்ளது என உணர்த்துவது குறுந்தொகையின் குறுகிய அடிகளில் பொதிந்துள்ள இலக்கியச் செறிவுக்குச் சிறந்த சான்றாகும்.

**மருத்துவவியல் :** இயற்கை வைத்தியம், உடலியல் மாற்றங்கள் மற்றும் பசலை பாய்தல் பற்றிய மருத்துவ அறிவியல் சார்ந்த செய்தியினை,

"அருள்தீர்ந்தனரே தோழி! நம்முறு
பசலை ஆர்வுற்றனரே; நுண்கோல்
அகலல்குல் தோள்நீவி நீங்கியோர்
நமக்கென வைத்தான்ற பசலைதானே."(குறுந்தொகை - 142 )

என்னும் பாரதாயனார் பாடல் சுட்டுகின்றது. தலைவனின் பிரிவால் தலைவியின் மேனியில் தோன்றும் 'பசலை' நிறம் என்பது வெறும் கற்பனை அல்ல; மன அழுத்தத்தினால் உடலில் ஏற்படும் நிறமி மற்றும் உடலியல் மாற்றங்களை (Psychosomatic Changes) குறிக்கும் மருத்துவவியல் சான்றாகும். மூலிகைகளின் தன்மைகள், உடலின் நோய் நிலைகள் (பசலை பாய்தல்), மற்றும் இயற்கை வைத்திய முறைகள் பற்றிய பதிவுகள் உள்ளன.

**வானியல் அறிவு:** விண்மீன்கள், நிலவின் பிறைகள், மற்றும் திசைகள் பற்றிய குறிப்புகள் இடம்பெறுகின்றன.

## வேளாண் அறிவும்

மருத நிலப் பாடல்களில் வேளாண்மை சார்ந்த பல செய்திகள் காணப்படுகின்றன. நிலம், நீர், வயல், நெல், உழவு, கால்நடை போன்றவை அக்கால வேளாண் வாழ்க்கையை வெளிப்படுத்துகின்றன. இன்றைய வேளாண் ஆய்வுடன் ஒப்பிடும்போது, பாரம்பரிய வேளாண்மை மழை சார்ந்த வேளாண்மை நீர்ப்பாசனம் நிலப் பயன்பாடு

கால்நடை–வேளாண் தொடர்பு போன்றவற்றை ஆராயலாம். இது தமிழ் மரபு வேளாண் அறிவு குறித்த ஆய்வுக்கு வழிவகுக்கும்.

## தகவல் தொடர்பியலும்

இன்றைய தகவல் தொடர்பியல் பார்வையிலும் குறுந்தொகையை ஆராய முடியும். அறத்தோடு நிற்றல் என்னும் முறை தகவல் தொடர்பியலின் தொடக்க நிகழ்வாக அமைகின்றது. தலைவி தனது உணர்வைத் தோழியிடம் தெரிவிப்பது, தோழி தலைவனிடம் செய்தியை எடுத்துச் செல்வது, தோழி தாயிடம் கூறுதல் போன்றவை பழந்தமிழரின் மனிதத் தகவல் பரிமாற்ற முறைகளை வெளிப்படுத்துகின்றன. இதனை, அனுப்புநர் → செய்தி → இடைத்தரகர் → பெறுநர் என்ற நவீன தகவல் தொடர்பு மாதிரியுடன் ஒப்பிட்டு ஆராய இயலும். இதன் மூலம் பழந்தமிழ் சமூகத்தில் செய்திப் பரிமாற்றத்தின் தன்மையைப் புரிந்துகொள்ளவும் வாய்ப்பாகின்றது.

## உயிரியல் ஆய்வு

குறுந்தொகைப் பாடல்களில் விலங்குகள், பறவைகள், பூச்சிகள் போன்ற உயிரினங்கள் பல இடங்களில் இடம்பெறுகின்றன. குறுந்தொகை 27-ஆம் பாடலில் காணப்படும் குரங்கு குறிப்பு குறிப்பிடத்தக்கது:

“ஈயல் புற்றத்து ஈர்ம் புறத்து அன்ன
...குரங்கு ...”
“அஞ்சிறைத் தும்பி...”

இத்தகைய பாடல்களில் விலங்குகளின் இயக்கம், வாழிடம், உணவு தேடும் இயல்பு போன்றவை மனித உணர்வுகளுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. குறுந்தொகையில் தும்பி, வண்டு, எறும்பு போன்ற சிற்றுயிர்களின் பதிவுகளும் காணப்படுகின்றன.

## தொகுப்புரை

தமிழ் வளர்ச்சியில் பல்துறை ஆய்வுகள் என்பது வெறும் கோட்பாடு அல்ல; அது தமிழ் இலக்கியங்களின் ஆழத்தை உணரும் ஒரு நவீனத் திறவுகோல். குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். குறுகிய அடிகளைக் கொண்ட அகப்பாடல்களின் தொகுப்பாக, காதல் வாழ்க்கையை மையமாகக் கொண்டிருந்தாலும், காதல் நிகழ்வுகளை வெளிப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் இயற்கைக் காட்சிகள் பல்வேறு அறிவுத் தகவல்களைத் தாங்கி நிற்கின்றன.

குறுந்தொகையில் பல்வேறு தாவரங்கள் இடம்பெறுகின்றன. அவற்றின் மலர், இலை, தண்டு, மணம், நிறம், வளரிடச் சூழல் போன்ற பண்புகள் கவிதைச் சூழலுக்கேற்ப பயன்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் சங்ககாலத் தாவர அறிவை மீள்கட்டமைக்க முடியும்.

சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட சொற்களுக்கும் பின்னாளில் பயன்படுத்தப்பட்ட சொற்களுக்கும் இடையிலான தொடர்ச்சியை ஆராய்வதன் மூலம் தமிழின் சொல் வரலாற்றை அறியலாம். இதனால் குறுந்தொகை வரலாற்று மொழியியல் ஆய்வுக்கான முக்கிய ஆதாரமாக

அமைகிறது. பல்துறை ஆய்வின் மூலம் குறுந்தொகை ஆய்வு விரிவடைவதோடு தமிழ் மொழியின் அறிவுப் பயன்பாடும் விரிவடைகிறது. புதிய கலைச்சொற்கள் உருவாக்குதல், பல்துறை ஆய்வுகள், தமிழில் புதிய அறிவியல் கலைச்சொற்களை உருவாக்க உதவும்.

தமிழ் வளர்ச்சி என்பது மொழியின் எண்ணிக்கையிலான வளர்ச்சி மட்டுமல்ல; அறிவின் பரப்பளவு, ஆய்வின் ஆழம், புதிய துறைகளில் தமிழின் பயன்பாடு ஆகியவற்றின் வளர்ச்சியுமாகும். குறுந்தொகை அகப்பொருள் இலக்கியமாக உருவாக்கப்பட்டிருந்தாலும், அதன் பாடல்களுக்குள் பழந்தமிழரின் இயற்கை அறிவு, உயிரியல் அவதானிப்பு, நிலவியல் அறிவு, வேளாண் வாழ்க்கை, சமூக அமைப்பு, குடும்ப உறவு, பெண் நிலை, உளவியல் உணர்வு, பண்பாட்டு மரபு, சொல்வளம் போன்ற பல்வேறு தரவுகள் பொதிந்துள்ளன.எனவே குறுந்தொகையை பல்துறை ஆய்வுக்கான திறந்த அறிவுக் களமாக அணுக வேண்டும். குறுந்தொகை போன்ற சங்க இலக்கியங்களைப் பல்துறை நோக்கில் தொடர்ந்து ஆய்வு செய்வதும், அவற்றின் தரவுகளை நவீன கணினி மொழியியல் (Computational Linguistics) மற்றும் சர்வதேச ஆராய்ச்சித் தளங்களுக்குக் கொண்டு செல்வதுமே தமிழ்மொழியின் எதிர்கால வளர்ச்சிக்கு நாம் செய்யும் சிறந்த தொண்டாக அமையும்.

## துணைநூற் பட்டியல் (References)

1. சங்க இலக்கியம் மூலமும் உரையும், உரையாசிரியர் பேராசிரியர் முனைவர் இரா. பிரேமா, வர்த்தமானன் பதிப்பகம், தி. நகர், சென்னை-600 017 பதிப்பு:1999
2. தமிழர் பண்பாட்டு வரலாறு , வானமாமலை நா.நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (NCBH), சென்னை.
3. சங்கத் தமிழரின் வாழ்வியலும் பண்பாடும், டாக்டர் மா. இராசமாணிக்கனார், பூம்புகார் பதிப்பகம், சென்னை.
4. சங்க இலக்கியத்தில் அறம், முனைவர் க. தணிகாசலம் பெருவெக்டார், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

**ARTICLE 53 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 92–96

# சல்மாவின் சிறுகதைகளில் பெண்களின் குடும்ப அமைப்புகள் மற்றும் உளவியல் சிக்கல்கள்

**Family Systems and psychological problems of women in Salma's short stories**

*ஆய்வாளர்:* **சங்கீதா சி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)
அலைபேசி எண் : 7604817778
மின்னஞ்சல் முகவரி : sangeethayoga1991@gmail.com
கல்லூரி முகவரி : விநாயக மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம், கலை மற்றும் அறிவியல் கல்லூரி பையனூர்
சென்னை – 603104.

*நெறியாளர்:* **முனைவர் ப. ஜெயபாரதி**
தமிழ்த்துறை

## Abstract

Salma is a unique feminist voice in contemporary Tamil literature. Her works depict the inner and outer worlds of women, especially Muslim women, from lower and middle class families. Her short stories do not see women as mere family members, but accurately speak of their self and the internal struggles that arise within them. This article examines the relationship of women revealed in Salma's short stories and the psychological problems they face as a result.

**Keywords:** Family Structure, Psychological Issues, Feminism, Stress, Social Environment, Oppression, Body Shame, Loneliness.

## ஆய்வுச் சுருக்கம்

சமகாலத் தமிழ் இலக்கியப்பரப்பில் பெண்ணியக் குரலைத் தனித்துவ அடையாளத்துடன் பதிவு செய்தவர் சல்மா. அடித்தட்டு மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த, குறிப்பாக இஸ்லாமியப் பெண்களின் அகம் மற்றும் புற உலகை விவரிப்பது இவருடைய படைப்புகள். இவருடைய சிறுகதைகள் பெண்ணை வெறும் குடும்ப அங்கத்தாராக மட்டும் பார்க்காமல், அவளது சுயத்தையும், அவளுக்குள் ஏற்படும் அகப்போராட்டங்களையும் துல்லியமாகப் பேசுகின்றன. இக்கட்டுரை, சல்மாவின் சிறுகதைகளில் வெளிப்படும் பெண்களின் குடும்ப அமைப்புகள் மற்றும் அதனால் அவர்களுக்கு ஏற்படும் உளவியல் சிக்கல்கள் குறித்து ஆராய்கிறது.

குறிப்பு சொற்கள்:

குடும்ப அமைப்பு, உளவியல் சிக்கல்கள், பெண்ணியம், மன அழுத்தம், சமூகச் சூழல், அடக்குமுறை, உடல் சார்ந்த அவமானம், தனிமை.

## முன்னுரை

நவீன தமிழ் இலக்கியப் பரப்பில் பெண் மைய எழுத்துகளும் பெண்ணியச் சிந்தனைகளும் சமகாலத்தில் மிக முக்கியத் திருப்புமுனையை ஏற்படுத்தியிருக்கின்றன. பாரம்பரியக் குடும்பக் கட்டமைப்புகள், சமூகக் கட்டுப்பாடுகள் மற்றும் மத மரபுகள் ஆகியவற்றிற்குள் ஒடுக்கப்படும் பெண்களின் குரலை உலகிற்கு உரக்கச் சொன்னவர்களில் சமகால எழுத்தாளர் சல்மா முதன்மையானவர் ஆவார். ஆண் மையச் சமூக அமைப்பில் பெண்களின் உடல், மனம்,

மற்றும் சுதந்திரம் எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றன என்பதைத் தனது படைப்புகளின் வழியே அவர் அப்பட்டமாகத் தோலுரித்துக் காட்டுகிறார். சல்மாவின் சிறுகதைகள் வெறும் கதைகளாகத் தங்கிவிடாமல், குடும்பம் என்னும் நிறுவனத்திற்குள் பெண்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் போராட்டங்களின் சாட்சியங்களாக இக்கட்டுரை விளங்குகின்றது.

குடும்பம் என்பது பெண்களுக்குப் பாதுகாப்பான இடமாகக் கருதப்பட்டாலும், அதுவே அவர்களின் அக உலகைச் சிதைக்கும் ஒரு தளமாகவும் மாறுவதை இவரது கதைகள் சுட்டிக்காட்டுகின்றன. சல்மாவின் சிறுகதைகளில் வரும் பெண் பாத்திரங்கள் தங்களின் விருப்பங்களுக்கும், சமூக எதிர்பார்ப்புகளுக்கும் இடையே நடக்கும் போராட்டத்தில் சிக்கித் தவிக்கின்றனர். இந்தச் சூழலில், சல்மாவின் சிறுகதைகளில் சித்தரிக்கப்படும் பெண்களின் குடும்ப அமைப்புகள் மற்றும் அவர்களின் உளவியல் சிக்கல்களை விரிவாக ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இவ்வாய்வு, குடும்பக் கட்டமைப்பிற்குள் பெண்களின் நிலை குறித்தும், அதன் விளைவாக அவர்களுக்குள் ஏற்படும் மன அழுத்தம், தனிமை, ஏமாற்றம் மற்றும் அடையாள இழப்பு போன்ற உளவியல் ரீதியான தாக்கங்கள் குறித்தும் ஆழமாக விவாதிக்க முயல்கிறது.

## சமூகச் சூழலும் மன அமைப்பும்

சமூக நிலையை உள்ளிழுத்து வாழ்கின்றனர். தாழ்வு மனப்பான்மை அவர்களின் மனதில் நிலையான அடையாளமாக மாறுகிறது. சாதி ஒடுக்குமுறை மனிதன் தனித்து உருவாகவில்லை; சமூகச் சூழலின் விளைவு. சல்மா சிறுகதைகளில் கதாபாத்திரங்கள் தங்கள் சமூக வெளிப்புற வன்முறையாக மட்டுமல்ல; அது மனத்தின் உள் அடுக்குகளிலும் பதிகிறது. இந்த சமூகம் “நான் தாழ்ந்தவன்” என்ற எண்ணத்தை எவ்வாறு ஒருவருக்குள் கட்டமைத்திருக்கிறது என்பதை பல கதாபாத்திரங்களின் வழி வெளிப்படுத்தி இருக்கிறார். இத்தகைய உளவியல் நிலை நீண்டகால மன அழுத்தத்தின் விளைவாகும்.

## பெண்ணின் அகப் போராட்டம்

பெண்கள் சமூகத்தின் நம்பிக்கைகள், மரபுகள் எதிர்ப்பார்ப்புகள் மற்றும் தங்கள் தனிப்பட்ட விருப்பங்களுக்கு இடையில் சிக்கும்போது ஏற்படும் உளவியல் போராட்டங்களை வெளிப்படுத்துகிறது. பாரம்பரியப் பாத்திரங்களில் இருந்து விடுபடத் துடிக்கும் ஒரு பெண்ணின் மனக் குமுறல்கள், சுதந்திரமான வாழ்க்கையைத் தேடும் அவளது ஏக்கங்கள், தன் அடையாளத்தை நிலைநிறுத்த அவள் செய்யும் உட்கட்டப் போராட்டங்கள் இக்கதைகளில் உணர்வுபுர்வமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குடும்பம், சமூகம் என இரு தளங்களிலும் பெண்ணுக்கு விதிக்கப்பட்ட அளவுகளைத் தாண்டிச் சொல்ல விரும்பும் ஒரு பெண்ணின் மன உளைச்சல்.

சுயமரியாதை, சுய அடையாளம் குறித்த தேடல் மற்றும் அதைப் பெறுவதற்கான கனவுகள்.

தன்னை வெளிப்படுத்த முடியாத சூழ்நிலையில் பெண்ணின் உள்ளுக்குள் நிகழும் அமைதிப் புரட்சி.

## அடக்குமுறை

குடும்பம், சமூகம், மற்றும் வேலைத்தளத்தில் பெண்கள் மீது திணிக்கப்படும் கட்டுப்பாடுகளால், அவர்களது சுதந்திரம் பறிக்கப்படுகிறது.

குடும்பத்தில் அடக்குமுறை: வரதட்சணை, வீட்டு வேலைகள், குழந்தை வளர்ப்பு போன்ற விஷயங்களில் பெண்ணின் மீது திணிக்கப்படும் சுமைகள், அவளது தனிப்பட்ட விருப்பங்கள் மதிக்கப்படாமை.

சமூக அடக்குமுறை: பெண்கள் மீதான சமூகக் கட்டுப்பாடுகள், பாதுகாப்பு அச்சுறுத்தல்கள், பெண் குழந்தைகள் மீதான புறக்கணிப்பு.

பணியிடத்தில் அடக்குமுறை: வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் சீண்டல்கள், ஊதியத்தில் பாகுபாடு, அதிகார உயர்வு மறுப்பு போன்ற பிரச்சனைகள். இத்தகைய அடக்குமுறைகளை வெளிப்படுத்தி, அவற்றிற்கு எதிராகக் குரல் கொடுப்பதன் அவசியத்தை இத்தொகுப்பு வலியுறுத்துகிறது.

## பெண்களின் உளவியல் சிக்கல்கள்

நான்கு சுவர்களுக்குள் வாழும் பெண்களின் மன அழுத்தங்களை சல்மா ஆழமாகப் பதிவு செய்துள்ளார்.

தனிமையும் ஏக்கமும்: கணவன் அருகில் இருந்தும், அவனுடன் மனரீதியான தொடர்பு இல்லாத பெண்களின் தனிமை சல்மாவின் கதைகளில் முதன்மையாகப் பேசப்படுகிறது. மேலும்

வலி என்ற கதையில் பத்து வருடங்களாக குழந்தை இல்லாத ஏக்கமும், கணவன் அருகில் இருந்தும் தன்னை கண்டுகொள்ளாமல் தானுண்டு தனது வேலையுண்டு என இருப்பதும், இவளுக்கு யாருடைய கரிசனமும் தேவைப்படுவதாகத் தோன்றவில்லை. அப்படிப்பட்ட பலவீனமான நிலையில் தானில்லை என நம்ப விரும்பினாள். கோழைதான் பிறர் கரிசனத்தின் கீழ் ஒண்டிக்கொள்ள வேண்டும், தானில்லை என்பதில் உறுதியாகவே இருந்தாள்.

## உடல் சார்ந்த அவமானம்

மாதவிடாய், கர்ப்பகாலம் மற்றும் சாதாரண உடல் உபாதைகளின் போது, ஆண்கள் நடமாடும் முற்றத்தைக் கடந்து கழிப்பறைக்குச் செல்ல பெண்கள் படும் அவஸ்தை, அவர்களின் மனதில் அவமானம் மற்றும் அச்சத்தை உருவாக்குகிறது. மேலும் ‘கழிப்பறை’ என்ற ஒரு சாதாரணப் பொதுவெளி, பெண்ணின் உடலையும் மனதையும் ஒடுக்கும் ஒரு அதிகார மையமாக மாறுவதைச் ‘சல்மா’ துணிச்சலாகப் பதிவு செய்துள்ளார்.

## அடையாளச் சிக்கல்

சல்மா கதாபாத்திரங்கள் சமூக அடையாளத்தின் சுமையுடன் வாழ்கின்றனர். சாதி பெயர், தொழில், வாழ்விடம் ஆகியவை அவர்களின் தனிநபர் அடையாளத்தை மறைத்துவிடுகின்றன. அவர்களின் உள் மனதில் உருவாகும் கேள்வி “என் வாழ்க்கைக்கு அர்த்தம் என்ன?” இந்த இருத்தலின் மனநிலை தனிமையும், அர்த்தத் தேடலையும் உருவாக்குகிறது.

## உறவியல் உளவியல்

சல்மா சிறுகதை குடும்ப உறகவுகள் சிக்கலானவை.

பாசமும் அதிகாரமும் கலந்த கணவன் மனம்
அச்சத்துடனான மகன் மனம்

கடமையால் கட்டுப்பட்ட மனைவி மனம் உறவுகளில் உள்ள வெளிப்படாத எதிர்பார்ப்புகள் மன அழுத்தத்தை உருவாக்குகின்றன. பல கதாபாத்திரங்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தாமல் அடக்கிக்கொள்கின்றனர். இந்த அடக்குமுறை பின்னர் உள் மோதலாக வெளிப்படுகிறது

## மௌனம் – உளவியல் மொழி

இவரின் சிறுகதை கதாப்பாத்திரங்கள் மௌனத்தின் வழி தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. கதாபாத்திரங்கள் அதிகம் பேசுவதில்லை. ஆனால் அவர்களின் செயல்கள், உடல் மொழி, அமைதி, இவை அனைத்தும் அவர்களின் மனநிலையை வெளிப்படுத்துகின்றன. இந்த மௌனம்:

ஏற்றுக்கொள்ளப்பட்ட விதி
ஒடுக்கப்பட்ட கோபம்
மறைமுக எதிர்ப்பு
மன அழுத்தம்
பெண் மனத்தின் உளவியல் அடுக்குகள்

சல்மா படைப்புகளில் பெண் கதாபாத்திரங்கள் பல்வேறு சுமைகளைத் தாங்குபவர்களாக இருக்கின்றனர். அவர்கள் உடல் உழைப்பும் மன உழைப்பும் இணைந்த வாழ்வை நடத்துகின்றனர். பெண்ணின் மன உணர்வுகள் மூன்று அடுக்குகளாக காட்டடப்பட்டுள்ளது.

சமூகத்தில் தங்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளையும் உழைப்புச் சுரண்டலையும் எதிர்த்து பேச முடியாத நிலையிலேயே உள்ளதாக காட்டடப்பட்டுள்ளது.

மௌனமாக தங்களின் வாழ்க்கையை நடத்தக் கூடியவர்களாகவும் காட்டப்பட்டுள்ளது.

எல்லா பிரச்சனைகளையும் கடந்து தனது குடும்பத்தை காப்பாற்ற வேண்டும் என்ற கட்டமைப்புக்குள் சுழல்பவர்களாகக் காட்டப்பட்டுள்ளது.

‘சாபம் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள மறுமுகம்:

ஆணாதிக்க சமூகத்தில் பெண்கள் சந்திக்கும் ஒடுக்குமுறைகள் மற்றும் அவர்களின் உளவியல் போராட்டங்களை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய கதையாகும். வெளியில் ஒழுக்கமான குடும்பத் தலைவியாகத் தோன்றும் ஒரு பெண், தனக்குள் எதிர்கொள்ளும் தனிமை, ஏக்கம் மற்றும் உண்மையான அடையாளத் தேடலை வலி என்ற கதையில் நுட்பமாக விளக்குகிறார்.

‘சாபம்’ சிறுகதை குடும்பப் பாரம்பரிய மூடநம்பிக்கை என்ற பெயரில் பெண்கள் எதிற்கொள்ளும் ஆணாதிக்க வன்முறை மற்றும் மன அழுத்தத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ஷமீம் எனும் திருமணமாகாத பெண்ணின் வாழ்வியல், குடும்பச் சாபத்தால் ஏற்படும் தனிமை மற்றும் அவள் கவனிக்கும் அத்தையின் நிலை, திருமண உறவில் பெண்கள் மீதான ஒடுக்குமுறையை நுட்பமாக வெளிபடுத்துகிறது.

## முடிவுரை

சல்மா தன் சிறுகதைகளின் வழியே பெண் ஒடுக்குமுறையை வெறும் சமூகப் பிரச்சனையாகப் பார்க்காமல், பெண்ணின் அகம் சார்ந்த உளவியல் தளத்தில் நின்று அணுகியுள்ளார். குடும்ப அமைப்பில் மாற்றம் ஏற்பட்டு, பெண்களின் உணர்வுகளுக்கும் தன்னாட்சி உரிமைக்கும் மதிப்பு அளிக்கப்படும் போது மட்டுமே அவர்களின் உளவியல் சிக்கல்களுக்கு நிரந்தரத் தீர்வு கிடைக்கும் என்பதை உணர்த்துகிறது. சமகாலப் பெண் எழுத்தாளர்களில், பெண்களின் அக உலகைப் பாரபட்சமின்றி அப்பட்டமாக படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

## துணைநூற் பட்டியல் (References)

1. சல்மா, சாபம் சிறுகதைத் தொகுப்பு, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்- 629 001, அக்டோபர் -2023.
2. வி. ராதாகிருஷ்ணன், உலக வரலாற்றில் பெண்கள், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், அம்பத்துர், சென்னை- 600 050, செப்டம்பர் – 2023.
3. தமிழ்ச் சிறுகதைகளில் பெண்ணியக் கோட்பாடுகள் – ஆய்வுக் கட்டுரைகள்.
4. மு. மீனாட்சி – மகளிர் படைப்புகளில் சமுதாயச் சித்தரிப்பும் உளவியல் நோக்கும் – ஆய்வேடு.

**ARTICLE 54 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 97–102

# கல்வி, அறிவு - போமோ நோக்கில் வள்ளுவன்

## Education and Knowledge: Valluvan's Perspective

**முனைவர் அ.ரம்யா**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த் துறை
மங்கையர்க்கரசி மகளிர் கலை
மற்றும் அறிவியல் கல்லூரி,மதுரை.
மின்னஞ்சல்: mramyamuruganm@gmail.com.
8680061796.

**Abstract**

Sangam literature proclaims the antiquity of the Tamil language to the world, while ethical texts—works of moral instruction—reveal the character and values of the Tamil people to the global community. Among these ethical texts, the *Thirukkural* stands out as a work revered and celebrated across many nations. Numerous commentaries have been written on this distinguished work, primarily because readers interpret and articulate its verses in alignment with their own perspectives—a testament to the *Thirukkural*'s inherent flexibility. This article aims to examine the profound insights Valluvar conveys regarding education and knowledge within the verses of the *Thirukkural*.

## முன்னுரை

தமிழ் மொழியின் தொன்மையினை உலகிற்குப் பறைசாற்றுவன சங்க இலக்கியங்கள், தமிழர்களின் தன்மையினை(பண்பினை) உலக மக்களுக்குப் புலப்படுத்துவன அற இலக்கியங்களான நீதி நூல்கள். அந்நீதி நூல்களுள் உலக நாடுகள் பலவற்றிலும் போற்றித் துதிக்கப்பட்டு வருவது திருக்குறள். அத்தகைய சிறப்புக்குரிய திருக்குறளுக்கு பற்பல உரைகள் வெளிவந்துள்ளன. ஏனெனில் அதனைப் படிப்பவர்கள் தங்களின் கருத்துக்களுக்கேற்ப அதனை வெளிப்படுத்துவதே காரணமாகும். அத்தகைய நெகிழ்தன்மையில் அமைந்துள்ளது திருக்குறள். கல்வி குறித்தும், அறிவு குறித்தும்

வள்ளுவன் குறட்பாக்களில் கூறவிழையும் உண்மைக் கருத்துக்களைப் போமோ நோக்கில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கேள்வி ஞானம் - கற்றல் கற்பித்தல் - பயன்பாட்டு அறிவு - பல்துறை அறிவு - அனுபவ அறிவு - ஆராய்ந்துணர்தல்.

Knowledge gained through listening – Teaching and learning – Applied knowledge – Multidisciplinary knowledge – Experiential knowledge – Knowledge gained through inquiry and understanding.

## போமோ

தற்காலத்தில் அதிகமாகப் புழங்கப்படும் வார்த்தைகளில் ஒன்று 'போமோ' ஆகும். 'போமோ' என்கிற இந்த இரண்டெழுத்துப் பதம் போஸ்ட் மாடர்னிசத்தைக் குறிக்கிறது. போஸ்ட் மாடர்னிசம் என்பதைத் தமிழில்

பின்னை நவீனத்துவம் என்று அழைப்பர். 1966ல் ழாக் தெரிதா அறிவித்த கட்டவிழ்ப்பு அல்லது நிர்மானம் (De Construction) என்ற சொல்லே பின்னை நவீனத்துவம் தோன்றக் காரணமானது.

மேலை வரலாற்றின் நான்காவது கட்டமாகக் கருதப்படும் பின்னை நவீனத்துவம் முதலில் கட்டிடக் கலையில்தான் தோன்றியது. இருப்பினும் அதன் கருத்தாக்கங்கள் மற்றும் சொல்லாட்சிகள் பெரும்பாலும் இலக்கியத் துறையில்தான் அதிகம் ஆளப்பட்டு வருகின்றன.

இப்பின்னை நவீனத்துவம் வெறும் கதை கூறும் உத்தியாகப் பரவ ஆரம்பித்தது பின்னர் அனைத்துக் கலைகளுக்குமான வெளிப்பாட்டு உத்தியாக உருமாறியது. அதனையும் தாண்டி அறிதல் (Cognitive), அறிவியல், தத்துவம், பொருளியல், சமூகவியல், மொழியியல், அரசியல், அறவியல் எனச் சகல புலங்களுக்குள்ளும் நுழைந்தது.

## போமோ சுட்டும் அறிவு

பின்னை நவீனத்துவம் அனைத்துத் தரப்பினிலிருந்தும் ஒடுக்கப்பட்டவர்களுக்கான போராட்டச் சாதனமாக, கலகக்குரலாகக் கையாளப்படுவதாக உள்ளது. இதன் பார்வையில் அதிகாரக் கருத்தியல்களாகத் தென்படும் பிறதுறைகள் மற்றும் சிந்தனைகளைக் கேள்விக்குட்படுத்துவதுடன் அவற்றின் மீது தாக்கங்கள் செலுத்துவது, மறுப்பது, சிதைப்பது போன்ற செயல்பாடுகளையும் மேற்கொள்கிறது. இத்தகு தன்மைகளைக் கொண்ட இச்சிந்தனையை உருவாக்கியவர்கள் இதற்கெனச் சில அடிப்படைக் கூறுகளையும் வரையறுத்துத் தந்துள்ளனர். அவற்றுள் அறிவின் வழி அறிதலில் அதிகாரமும், ஒருங்கவிழ்ப்பும் என்பது ஒன்றென ஆ.பூமிச்செல்வம் கூறியுள்ளார். மனிதனின் ஐவகைப் புலன்களின் வழியே பெறும் உணர்வே புலனறிவு எனப்படுகிறது. இவற்றில் அடிப்படையாக அமையும் அறிவு என்பது "பேரண்டம் குறித்த அதாவது நம்மையும் நம்மைச் சுற்றி நிலவும் இயற்கை மற்றும் சமூகம் எவ்வாறு இயங்குகிறது, இவற்றை இயக்கும் விதிமுறைகள் யாவை? இவற்றை மனிதகுலம் தனக்கு இசைவாகப் பயன்படுத்திக் கொள்வது எவ்வாறு? என்பது பற்றிய எல்லாமுமான புரிதலேயாகும்" என அஷ்வகோஷ் (பின் நவீனத்துவம் பித்தும் தெளிவும், ப.37) குறிப்பிட்டுள்ளார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு அறிவு என்பதென்ன எனும் வினாவுக்கு, அது உண்மைத்தன்மையைத் தேடும் ஒருவகை முயற்சி என இதுநாள்வரை சொல்லப்பட்டு வரப்பட்டுள்ளது. ஆனால் பின்னை நவீனத்துவமானது, "அறிவு என்பது உண்மையைத் தேடும் முயற்சியாகும் என்பதை மறுத்து அதை ஓர் உரையாடலாகவும் சமூக நடைமுறையாகவும் காண்கிறது. இதனால் அறிவின் சர்வ வியாபகத்தன்மை, நிரந்தரத்தன்மை என்பன கேள்விக்குள்ளாக்கப்படுகின்றன. எல்லாவிதக் கோட்பாடுகளையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்கும் இது நடைமுறை அறிவுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது" ( பின் நவீனத்துவம் பித்தும் தெளிவும், ப.25-26) என்று மார்க்ஸ் கூறிள்ளார்;. அதாவது அறிவு என்பது உண்மையைத் தேடும் முயற்சி அல்ல ஏற்கனவே வரையறுத்து கட்டமைக்கப்பட்டு

வைத்திருக்கும் விதிகளை அறிவது தான். இதுவரையுள்ள அறிவு, இதனை அறிந்தவர் - அறியாதவரை அடிமைப்படுத்துகிறார். எனவே இது ஒரு வித அதிகாரத்தன்மை கொண்டது எனக் கூறி அறிவின் வழி அறிதல் என்பதானது பின்னை நவீனத்துவதால் மறுக்கப்படுகிறது. மேலும் மனிதன் இதுவரை அறிந்த எதுவுமே அறிவல்ல. எல்லாம் பகுத்தறிவின் விதிகளைப் பற்றிய அறிதல் தானே தவிர மாற்றத்தை அறிந்ததல்ல என்று பின்னை நவீனத்துவமானது கூறுகிறது. பகுத்தறிவின் ஆட்சியில் அறிவு என்பது மற்றததை அறிதல் அல்ல. மாறாக அது

பகுத்தறிவின் விதிகளை அறிதல் என்று ஆகிவிடுகின்றது. இதனால் இந்த அறிதல் முறையைத் தெரிந்து கொண்டவன் அதனைத் தெரிந்து கொள்ளாதவனைக் காட்டிலும் அதிகாரம் மிக்கவனாக மாறுகிறான். இவ்வாறு அறிதல் அறிவு என்பது அறியாதவன் மீதான அதிகாரமாக மாறுகிறது (பின் நவீனத்துவம் பித்தும் தெளிவும் ப.28) என்று அஷ்வகோஷ் கூறியதன் மூலம் அறிதல் என்பது சுயநலமுடையது என்று பொருள்படுகிறது.மேற்கண்ட கருத்துக்களின் வழி அறிவு (அல்லது) அறிதல் என்பதை உண்மையைத் தேடும் முயற்சி அல்ல, அதிகாரத்தன்மை கொண்டது, சாதகமானவற்றை மட்டும் உணர்தல் என்று பொருள் கொள்ளலாம்.

வள்ளுவரின் கல்வி எது? யாருக்கானது?

இனக்குழுச் சமூகத்தில் வாழ்ந்த மக்களின் அறிவானது இயற்கையில் இருந்த உணவைத் தேடிச் சேகரிப்பதாக மட்டும் இருந்தது. அதன்பின் அவர்களது கல்வி வேட்டையாடுவதற்கு உதவும் வில்லையும், ஈட்டியையும் கையாளும் அறிவைப் பெறுவதாக மாறியது. மேலும் வலை, பொறி வைத்தல் பற்றிய அறிவையும் கற்றனர். அக்கல்வி எல்லோருக்கும் உரியதாக இருந்தது. ஆனால் செல்வ உடைமை மற்றும் நாகரிகம் உருவானபின் அறிவு என்பது அதிகாரம் சார்ந்ததாக மாறியது. வேளாண்மை மற்றும் கைவினைப்பொருட்கள் உற்பத்திக்கான அறிவு குலமுறையாகப் பெறப்பட்டது. அதாவது அனுபவ அறிவாகக் கற்றுத்தரப்பட்டது. ஆனால் உடைமைக்கும் அதிகாரத்திற்குமான அறிவாக "ஞானம்" கூறப்பட்டது. ஏனெனில் ஞானமே மனிதனை இயக்கி உன்னத நிலைக்குக் கொண்டு செல்கிறது என்ற மாயம் உருவாக்கப்பட்டது. ஆனால் ஞானத்திற்குரிய எண், எழுத்து என்பவை அதிகாரத்திற்குரியதாகவும் அதிகாரத்திற்குரிய அறிவு எண், எழுத்தோடு உறவு கொண்டிருந்தது. எனவே எண்ணும் எழுத்தும் கல்விக்குரிய தகுதியைப் பெற்றன. ஏனைய தொழில் பற்றிய அறிவியல் கல்விக்குரிய தகுதியைப் பெறவில்லை. அதே சமயம் எண்ணும், எழுத்துமாகிய கல்வியைக் கற்று அறியும் உரிமையானது அரசர், அந்தணர் ஆகியோர்களுக்கும், அவர்களது சுற்றத்தார்களுக்கும் மட்டுமே இருந்தது. (ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன) ஏனைய மக்கள் கூட்டம் எழுதப் படிக்க தெரியாதவர்களாக இருந்தனர். இருப்பினும் பிழைப்பு அறிவைப் பெற்றவர்களாக இருந்தனர். இதன் வாயிலாக எழுத்து மற்றும் எண் எனக் குறிப்பிடும் கல்வியாக அறங்கள், புராண இதிகாசங்கள், சாஸ்திரங்கள், ஆகமம், இலக்கணம், இலக்கியம் போன்றவைகள் வள்ளுவர் காலத்தில் கல்வியாக இருந்ததையும் அவற்றை அறிதலே அறிவு எனக்

கருதப்பட்டதும் தெளிவாகத் தெரிகிறது. மேலும் உயர் வர்க்கத்தினர் மட்டுமே அத்தகைய கல்வியறிவு பெறும் உரிமைகளைப் பெற்றிருந்தனர் என்பதும் தெள்ளத் தெளிவு.

## போமோவின் பார்வையில் வள்ளுவன்

போமோவின் பார்வையில் கல்வி மற்றும் அறிவு என்பது அதிகாரத்தையும், khaj;jd;ikAk;; (cz;ikia mwpjy; my;y) Raeyj; jd;ikiaAk; (rhjfkhdtw;iw mwpjy;) கொண்டவை. வள்ளுவன் காலத்தில் கல்வி மற்றும் அறிவு என்பன எண், எழுத்துக்களான வேதம், இலக்கணம், இலக்கியம், வானசாஸ்திரம் போன்றவை. அவை உயர்குடி மக்களுக்கு மட்டுமே போதிக்கப்பட்டன. ,t;tpuz;L epiyfisAk; mbg;gilahff; nfhz;L ts;Sthpd; rpy Fwl;ghf;fis mZfyhk;.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" (குறள்-392)

என்ற குறட்பாவில் வள்ளுவர் குறிப்பிடுவன எண், எழுத்து, வான சாஸ்திரம் போன்றவை. அவை உயர் குடிமக்களுக்கே கிடைத்திருந்த அக்காலத்தில் வள்ளுவன் யாரை கற்கச் சொல்லி இருப்பான் என்ற வினா எழுகிறது. "எழுத்து என்பது அக்காலச் சமுதாயத்தில் அதிகாரத்தின் குறியீடாக இருந்தது" 6 (தமிழ்ச் சமூகத்தில் அறமும் ஆற்றலும், பக்கம். 117 ) என்ற ராஜ்கௌதமனின் கூற்றும் “அதிகாரம் எங்கிருக்கிறதோ அங்கே எண் எசமானனாகிறது. எண்ணுக்கு மிகுந்த அதிகாரம் உண்டு”7 (தமிழ்ச்சமூகத்தில் அறமும், ஆற்றலும், ப.149) என்ற நீட்சேவின் கூற்றும் இக்குறட்பாவின் அர்த்தப்படுத்துதலைப் பின் நவீனத்துவத் தளத்திற்கு எடுத்துச் செல்கிறது. மேலும் இக்குறட்பாவை ‘கல்வி’ எனும் அதிகாரத்தில் பொருட்பாலில்

அரசியலில் தொகுத்திருப்பது ‘அறிவு’ அதிகாரத் தன்மை கொண்டு என்பதை உறுதி செய்ய வழிவகுத்துள்ளது. அதுமட்டுமின்றி இத்தகைய கல்வியறிவைப் பெற உரிமையில்லாத விளிம்புநிலை மக்கள் எண்ணையும், எழுத்தையும் கற்றவர்கள் தங்கள் கண்களினால் அடிமைப்படுத்தினர் என்பது மறைமுகமாகத் தெரிகிறது. இக்குறட்பாவினைத் தொடர்ந்து,

“கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதவர்” (குறள்-பொருள்:393)

என்று வள்ளுவன் பாடியுள்ளான். இதன்மூலம் கல்லாதவர்களைக் குருடர்கள் என்று குறிப்பிடுகிறான். அதாவது உயர்குடி மக்களில் இருந்தும் கற்க வாய்ப்புகள் இருந்தும், கல்லாதவர்களைக் குருடர்கள் என்று குறிப்பிட்டுள்ளான். இதன் உள் அர்த்தம் அதிகாரத்திற்கான கண்களைப் பெறாதவர்கள் என்பதாகும்.

“மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு”(குறள்-பொருள்:409)

இக்குறட்பாவில் வள்ளுவன் அக்காலத்தில் நிலவிய வர்க்கப்பாகுபாடுகளைத் தெளிவாக முன்வைத்துள்ளார். அதாவது உயர்குடியில் பிறந்தும் கல்வி பெறாதவர் என்று குறிப்பிடும்பொழுதே கல்வி என்பது விளிம்புநிலை மக்களுக்கு போதிக்கப்படவில்லை என்பது தெளிவு. அவர்விருக்கத் தாழ்குடியில் பிறந்தும் கல்வி பெற்றிருப்பதன்

என முரண்பாட்டை முன்வைக்கிறார். இங்கு ‘உம்’ என்னும் இடைச்சொல் எதிர்மறைப்

பொருளிலும், இழிவு சிறப்பும்மையாக வரும் இடம் பெறுகிறது. அதாவது கீழ்ப்பிறவியில்

பிறந்தவர் கற்க இயலாது. கற்றிருப்பினும் அவன் தாழ்குடியே என்பது மறைபொருளாகும். கல்வி கற்கும் முறை பற்றி வள்ளுவன்,

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”(குறள்-பொருள்:391)

என்று குறிப்பிட்டுள்ளார்.

அதாவது கற்க வேண்டிய நூல்களைத் தெளிவாகக் கற்று, கற்றபடி வாழ வேண்டும் என்பது அவரது எண்ணம். கற்பதினால் புதிய எண்ணங்கள், சிந்தனைகள் தோன்றி புதிய பாதைகளை வகுப்பதே பயன்பாடாகும். ஆனால் அவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்ளாது முன்னோர்கள் கூறியபடி ஒழுக வேண்டும் என்று வள்ளுவன் அமைப்படுத்த எண்ணுகிறான் என்பது போலும் நோக்கில் கார்ட்டீசியன் அணுகுமுறையையும் ‘விதி ஒழுங்கு அறிதல்முறை’ என்னும் அதிகார வர்க்கத்திற்கு துணை செய்தல் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது. இதனை விடுத்து விதிமீறல் அணுகுமுறையைப் பின்பற்றியே அறிதலை நிகழ்த்த வேண்டும் என்கிறது போமோ. மேலும் கல்வியறிவு பெறாதவர்களைப் பற்றி வள்ளுவன் செய்துள்ள விமர்சனம் ஏற்புடையதாக இல்லை. அறக்கருத்துக்களை உலகிற்குப் பறைசாற்றியுள்ள வள்ளுவனின் மன எண்ணத்தின் வெளிப்பாட்டில் இப்படியொரு குறட்பா,

“கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற்றற்று” (குறள்-பொருள்:402)

என்பது கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியதாகும். அதாவது கல்வியறிவு பெறாதவர்கள் அவையின்கண் (கற்றவர்கள் முன்) பேசவோ, உரையாடவோ கூடாது என்ற அதிகார எண்ணத்தின் வெளிப்பாடே இக்குறள் எனலாம். இதில் வள்ளுவன் குறிப்பிடும் உவமையானது இரண்டு மார்பகமும் இல்லாத பெண் காமுறுவது என்பது கல்வியறிவு பெறாதவன் அவையின்கண; பேசுதலுக்குச் சமம்.

இக்குறட்பாவின் தொடர்ச்சியாக,

“கல்லாதவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லாதிருக்கப் பெறின்” (குறள்-பொருள்:403)

என இயம்பியுள்ளதன் வாயிலாகக் கல்வியறிவு பெறாதவர்கள் கற்றவர்களுக்கு அடங்கி வாழவேண்டும் என்று அதிகார எண்ணத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அறத்தை மனதிற்கொண்டு கல்வியை முன் வைத்துள்ளார். கல்வி என்பது வள்ளுவனுக்கு அறம் சார்ந்த கல்வியே. நல்ல கருத்துக்களைக் கேட்டறிதலே கல்வி. நாம் துன்பமடையும் பொழுது துணை நின்று பாதுகாக்கும். இவ்வாறாக கல்வியறிவு பற்றி வள்ளுவன் தந்துள்ள விளக்கங்கள் அனைத்தும் அறம் மற்றும் ஒழுக்கவியலைச் சேர்ந்தவையாகவே உள்ளன அத்தகைய அறக்கல்வி அதிகாரத்தின் வெளிப்பாடே.

## முடிவுகள்

கல்வி மற்றும் அறிவு என்பதை அதிகாரத்தன்மை கொண்டவை. அவ்வதிகாரத் தன்மையே வள்ளுவன் கல்வி மற்றும் அறிவுடைமை அதிகாரங்களில் வெளிப்படுத்தியுள்ளார் என்பது கட்டுரையின் வாயிலாகத் தெரியவருகிறது.

பின்னை நவீனத்துவம் முன்மொழியும் அதிகாரத்திற்குத் துணை செய்யும் கார்ட்டீசியன் அணுகுமுறையென்னும் 'விதி ஒழுங்கு அறிதல்" முறையையே வள்ளுவன் கற்கும்முறை எனக் கூறியுள்ளார் என்பது அறியப்பட்டது.

வள்ளுவரின் காலத்தில் அதிகார வர்க்கத்தினர் மட்டுமே எண்ணும் எழுத்துமான கல்வியறிவைப் பெற உரிமை பெற்றிருந்தனர் என்பது தெளிவு.

## துணைநூற் பட்டியல் (References)

1. திருக்குறள்- பரிமேலழகர் உரை தென்னிந்திய சைவ சித்தாந்த நூல் பதிப்பு கழகம் , திருநெல்வேலி. (2007).
2. பின்னை நவீனத்துவம் பித்தும் தெளிவும் அஷ்வகோஷ், மங்கை பதிப்பகம் (2002), சென்னை.
3. தமிழ்ச சமூகத்தில் அறமும் ஆற்றலும் ராஜ் கௌதமன் (2018), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

**ARTICLE 55 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 103–110

# கல்வியே அழியாச் செல்வம்

## Education is the imperishable wealth

**முனைவர் இரா.தட்சிணா மூர்த்தி**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறைத் தலைவர்
கே.எல்.என்.கலை ரூ அறிவியல் கல்லூரி
பொட்டப்பாளையம்
சிவகங்கை.

**Abstract**

Thirukkural, one of the *Pathinenkilkanakku* (Eighteen Didactic Texts) works within the corpus of Sangam-era literature, is a world-renowned Tamil classic. Although it addresses universal themes such as ethics, society, politics, economics, and love, it also profoundly articulates the significance and necessity of education. This article highlights the importance of knowledge by examining the insights on education offered by Valluvar.

**Keywords:** Knowledge gained through listening – Teaching and learning – Applied knowledge – Multidisciplinary knowledge – Experiential knowledge – Knowledge gained through inquiry and understanding.

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கியத்தில் பதினெண் கீழ்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறள் உலகப் புகழ்பெற்ற தமிழ்ச் செவ்வியல் இலக்கியமாகும். மனித வாழ்க்கையின் ஒழுக்கம்இ சமூகம், அரசியல், பொருளாதாரம், காதல் போன்ற பொதுவான கருத்துக்களைக் கூறும் நூலாக இருந்தாலும் கல்வியின் சிறப்பையும் அவசியத்தையும் ஆழமாகக் கூறியுள்ளது. இவற்றில் வள்ளுவர் கூறிய கல்வியின் சிறப்பால் அறிவின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்:** கேள்வி ஞானம் - கற்றல் கற்பித்தல் - பயன்பாட்டு அறிவு - பல்துறை அறிவு - அனுபவ அறிவு - ஆராய்ந்துணர்தல்.

முன்னுரை

திருக்குறள் என்பது தமிழ் இலக்கியத்தின் ஒளியாக விளங்கும் ஒரு நீதி நூல். பொதுவாக நீதிநூலானது அறம்இ பொருள்இ இன்பம் இவற்றின் நெறிமுறைகளைப் பின்பற்றி இருக்க வேண்டும். அவ்வாறு இருக்கும் நூல்களில் ஒன்றான திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்னும் முப்பாலையும் கொண்டுள்ளது. பதினெண் கீழ்கணக்கு நூல்களில் தலைசிறந்த நூல். உலக அளவில் நாடுஇ மொழிஇ இனம்இ மதம் அனைத்தையும் கடந்து அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நூல் என்பதால் திருக்குறளை உலகப்பொதுமறை என்று கூறுவதற்கு இதுவே காரணமாக அமைந்துள்ளது. தமிழில் எழுதப்பட்ட நூல் தமிழுக்கு பெருமை சேர்த்த நூலாக விளங்குகிறது. அவ்வாறு விளங்குகின்ற இந்நூல் மனித வாழ்வின் மேம்பாட்டிற்கு கல்வி மிக அவசியம் என்பதை தெளிவாக எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்வி - விளக்கம்

கல்வி என்பது ஒழுக்கம், சிந்தனை, திறமை, அறிவு ஆகியவற்றை வளர்த்துக் கொண்டு வாழ்க்கையைச் சிறப்பாக நடத்த உதவும் ஒரு சிறந்த கருவியாகும். மனிதனின் அறியாமையைப் போக்கி நன்மை, தீமையை அறியச் செய்கிறது கல்வி.

கல்வியின் சிறப்பு

கல்வியின் சிறப்பைப் பற்றி திருவள்ளுவர் ‘கல்வி’ என்னும் அதிகாரத்தில் எடுத்துரைத்துள்ளார். கற்க வேண்டியவற்றைத் தெளிவாகக் கற்று கற்றவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார். இதனை,

“ கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு;
மாடல்ல மற்றை யவை” (குறள்.400)

என்ற குறளில் ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே என்று வலியுறுத்தியுள்ளார்.

கல்வியின் இலக்கணம்

கல்வி என்பது ஒருவரிடம் உள்ள அறியாமையை நீக்கி நற்பண்புகளை வளர்க்கும் செயல்முறையாகும். கற்க வேண்டியவற்றைக் கற்று, கற்ற அறிவை வாழ்க்கையில் பயன்படுத்தி நல்ல மனிதனாக வாழ்வதே கல்வி. இதனை,

“கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக” (குறள்.391)

என்கிறார் வள்ளுவர். அதாவது கல்வியைத் தெளிவாகக் கற்று கற்றதற்கு ஏற்ப வாழ வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.

கல்வியின் முக்கிய அம்சங்கள்

- அறிவைப் பெறுதல்
- சிந்திக்கும் திறனை வளர்த்தல்
- நல்லொழுக்கத்தை வளர்த்தல்
- பகுத்தறிவை ஏற்படுத்துதல்
- வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்துதல்
- சமூகப் பொறுப்புடன் வாழச் செய்தல்

கல்வி - எப்படி கற்க வேண்டும்

கல்வி என்பது மனப்பாடம் செய்வது மட்டும் அல்ல் அது சிந்தனையையும் ஒழுக்கத்தையும் உருவாக்க வேண்டும் என்பதே வள்ளுவரின் நோக்கமாக உள்ளது. கல்வி என்னும் அதிகாரத்தில் கல்வியின் தூய்மையும் ஆழமும் வலியுறுத்தப்படுகிறது. குறைபாடுகள் இல்லாமல் கல்வியைக் கற்க வேண்டும். அவ்வாறு கற்ற கல்விக்கு ஏற்ற முறையில் நாம் வாழ வேண்டும் என்று வள்ளுவர் அறிவுறுத்துகிறார். (குறள்.391) அதாவது கல்வி அறிவானது மனிதனின் செயல்களிலும் பண்பிலும் வெளிப்பட்டு அதன்படி நடக்க வேண்டும் என விரும்புகிறார்.

கல்வியின் சிறப்பை ஔவையாரும்,

“கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்றை நன்றே”1

என்கிறார். கல்வி கற்பது நல்லது நம்மிடம் வறுமை ஏற்பட்டாலும் பிச்சை எடுத்தாவது கல்வி கற்பது நல்லது என வற்புறுத்துகிறார். மேலும்

“ஒருவன் தான் கற்றவற்றை ஐயம் திரிவு இன்றியும்இ திருத்தமாகவும் பிறருக்குச் சொல்ல வேண்டும்”2 இதனை,

“கல்விக் கழகு கசடற மொழிதல்”3
என்கிறார் ஔவையார்.

எவற்றைக் கற்க வேண்டும்

எண்ணும் (கணிதம்), எழுத்தும் (மொழிஃஇலக்கணம்) கற்க வேண்டும். மனிதன் வாழ்வதற்கு இரண்டு கண்கள் எப்படி முக்கியமோ அது போல அறிவு பெறவும் வாழ்க்கையை நடத்தவும் எண்ணும் எழுத்தும் மிக முக்கியம் என்று வள்ளுவர் கூறுகிறார்.

“எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு” (குறள்.392)

கற்றோரின் பண்புகள்

தொல்காப்பியர் கல்வி என்பதை ஓதல் (கல்வி) என்று குறிப்பிடுகிறார். கல்வி கற்றவர்களை உயர்ந்தோர் எனவும் குறிப்பிடுகிறார்.

“அவற்றுள்
ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன”4

வள்ளுவர் கூறிய எண்ணும், எழுத்தையும் அறிந்தவர்கள் கண்ணில்லா விடினும் அவர்கள் கற்றவர்களாகவும், கல்லாதவர்கள் கண்கள்; இருப்பின் அவர்கள் புண்களுக்கு ஒப்பானவர்கள்; என்கிறார். இதனை,

“கண்ணுடையார் என்பவர் கற்றோர் ; முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லா தவர்” (குறள்.393)

என்கிறார். மேலும் கல்வியில் கற்றுத் தேர்ந்தவன் தன் புலமையை திறம்படக் காட்டும்போது பிறர் மகிழும்படியாக கூறி பின் பிரியும் போது வருத்தத்தோடு பிரிந்து செல்வதுதான் கற்றவனின் வேலை என்கிறார் வள்ளுவர்.

“உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்” (குறள்.394)

உலகில் இன்று பல்வேறு நாடுகளில் தமிழர் பணிபுரிகிறார்கள்; என்றால் தாம் கற்ற மேலான கல்வியால்தான். இதற்குக் காரணம் ‘கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு’ என்ற காரணமேயாகும். உணவு வகைகளுல் எதை உண்டாலும் நல்ல உணவு வகைகளால் மட்டுமே உடல் உறுதி பெறும், அதுபோல் கல்வி நிலையிலும் நல்லவற்றைத் தேர்ந்தெடுத்துக் கற்றால் நல்லறிவுடன் விளங்குவர்.

எவ்வளவு செல்வந்தர்களாக இருந்தாலும் கல்வி கற்காதவர்கள் கற்றவர்களுடைய தயவை நாடவேண்டி உள்ளது. எந்தவிதமான குறைகளும் இல்லாத பணக்காரர்களுடைய வாசலில் ஏழைகள் குறையிருந்து நிற்பதைப் போல் கற்றவர்கள் வாசலில் நிற்க வேண்டியவர்கள் கல்லாதவர்களே கற்றவரே உயர்ந்தோர் எனவும் கல்லாதவர் தாழ்ந்தோர் எனவும் கூறியதனை,

“உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் ;

கடையரே கல்லா தவர்" (குறள்.395)

என்றும். கல்வி கற்பதற்கு காலக்கணக்கில்லை மணற்கேணியைத் தோண்டத் தோண்ட நீர் ஊறுவதைப்போல் கல்வி கற்கக் கற்க அறிவு பெருகும் எனபதனை,

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு" (குறள்.396)

என்றும் கூறுகிறார்.

எல்லா மொழியும் கற்கவேண்டும். எந்த மொழிக் கற்கின்றமோ அந்த நாடே சொந்த நாடாகும்படியாக பல மொழிகளையும் நூல்களையும் கற்க வேண்டும் என்று கூறியதும் அல்லாமல் ஒருவன் இறக்கும் வரையிலும் கற்காமல் இருப்பது ஏனோ? என்ற கேள்வியை முன் வைக்கிறார் வள்ளுவர். இதனை,

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு" (குறள்.397)

என்கிறார்.

கல்வியின் பயன்

ஆயுள் முழுவதும் கற்கின்ற கல்வி ஏழு பிறவிகளுக்கும் பாதுகாப்பளிக்கும் என்பதை,

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து" (குறள்.398)

என உரைக்கிறார்.

கற்க வேண்டியதையும் அறியவேண்டியதையும் தெரிந்து தாம் பெற்ற அறிவை உலகில் எல்லாரும் அடையும்படி பிறருக்கும் கொடுத்து மகிழ்பவர்களே கல்வியில் சிறந்த பெரியோர்கள். வள்ளுவர் இதனை,

"தாம்இன் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்" (குறள்.399)

என்கிறார்.

அழியாத செல்வம்

பணம் பொருள் பதவி எல்லாம் நிலையானவை அல்ல. அவை காலத்தால் அழியலாம் அல்லது பிறரால் அழிக்கப்படலாம். ஆனால் கல்வியால் பெற்ற அறிவை யாராலும் பறிக்க முடியாது. ஆகையால் கல்வி ஒரு மனிதனின் அழியாத செல்வமாகும். வள்ளுவரும் இதனை,

" கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு;
மாடல்ல மற்றை யவை" (குறள்.400)

என்ற குறளில் ஒருவருக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே என்றும் மற்ற செல்வங்கள் அதற்கு இணையானவை அல்ல என்றும் குறிப்பிடுகிறார்.

கல்வி - வாழ்க்கையின் இரு கண்கள்

"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிரிக்கு" (குறள்.392)

என்று எண்ணும் எழுத்தும் மனித வாழ்க்கைக்கு இரு கண்களைப் போன்றவை என்கிறார். இதன் மூலம் கல்வி இல்லாத வாழ்க்கை முழுமையற்றது என்பதை உணர்த்துகிறார்.

கேள்வி அறிவின் மேன்மை

மனிதன் மனம்போன போக்கில் சென்று பல துன்பங்களை அடைகின்றான். ஆராய்ந்து அறியும் அறிவினை உடைய மனிதன். தன் உணர்வின் வழியில் செல்லாமல் அறிவின் துணை கொண்டு வாழ்ந்தால் துன்பங்கள் சேராது என்கிறார் வள்ளுவர்.

“சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு” (குறள்.422)

மக்கள் விரும்பி அடைகின்ற செல்வங்களிலே சிறந்த செல்வம் கேள்விச் செல்வம். அந்தச் செல்வம் மற்ற செல்வங்களுக்கெல்லாம் தலையாயது. என்பதைஇ

“செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை” (குறள்.411)

என்கிறார்.

நல்ல கேள்வி இன்பத்தை அனுபவித்துக் கொண்டு இருக்கின்றவர்களுக்குப் பசியும் மறந்து போகும். கேட்கின்ற இன்பம் நின்றபின்புதான் தனக்குப் பசித்த நினைவுகள் உண்டாகும். பசி மட்டும்மல்ல தனக்குப் பிடித்த உணவுப் பண்டங்களையும் மறந்துவிடுவர்.

“செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்” (குறள்.412)
“செவிவுணவின் கேள்வி உடையார் அவியுணவின்
ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து” (குறள்.413)

என்ற குறள்கள் வழிப் புலப்படுத்துகிறார்.

நல்லொழுக்கம் உள்ளவர்களிடம் இருந்து கேட்கும் அறிவுரையானது ஒருவன் அவனுடைய கால் சறுக்கிவிட்ட சமயத்தில் அவன் கையிலுள்ள ஊன்றுகோல் போல் விழுந்துவிடாதபடி காப்பாற்றும்.

“இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல” (குறள்.415)

என்றும்இ நல்ல அறிவுரைகளைக் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும். என்பதைஇ

“எனைத்தானும் நல்லவை கேட்க் அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்” (குறள்.416)

என்றும் விளக்குகிறார்.

கேள்வி அறிவுடையோரின் பண்புகள்

தொல்காப்பியர் கேள்வி அறிவினை ‘மனம்’ என்னும் சொல்லில் குறிப்பிடுகிறார்.

“ஆறு அறிவதுவே அவற்றோடு மனனே”5

என்கிறார்.

அடிக்கடி பல நல்லுரைகளைக் கேட்கிறவர்கள் அவற்றை எண்ணியெண்ணி உணர்ந்து சிலவற்றைப் பற்றித் தவறுதலாக உணர்ந்திருந்தாலும் கூட அறிவற்ற முறையில் பேசமாட்டார்கள்.

“பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர்” (குறள்.417)

கேள்வி ஞானத்தை விருப்பத்துடன் கேட்டுக் கொள்ளாதவர்கள் பணிவான சொற்களைப் பேசமாட்டார்கள் அவர்களை செவிட்டுக் காதுகள் என்கிறார்.

“கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி” (குறள்.418)

கேள்வி ஞானத்தை அனுபவிக்கப் பழகாமல் வெறும் நாக்கு ருசிகளை மட்டும் அனுபவிக்கிற மனிதப்பிறவிகள் இருந்தால் என்ன? இறந்தால் என்ன? என்ற கேள்வியை முன் வைத்து முடித்துள்ளார்.

“செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என” (குறள்.420)

காதால் கேட்டு உணர்ந்து கொள்வதற்கு எத்தனை முக்கியத்துவம் கொடுக்கிறார் திருவள்ளுவர். ஒருவன் ஆசிரியரிடம் நேரடியாக கல்விகற்க முடியாமல் போனால் பலருடைய கேள்வி ஞானத்தால் தன்னை அறிவுடையவராக ஆக்கிக் கொள்ளலாம் என்பது சாத்தியம். பிறந்த குழந்தை தாயின் பேச்சை கேட்டுத்தான் தன் பேச்சாற்றலை வளர்த்துக் கொள்கிறது. பிரகலாதன் தாயின் வயிற்றில் இருக்கும் போதே நாராயணன் பெருமைகளைக் கேட்டு நாராயண பக்தனானான்.

ஆகவே கேள்வி ஞானம் வேண்டும் என்பதால் தான் இறைவன் படைப்பில் காதுகளுக்கு கதவு வைக்கவில்லை. இறைவனின் பெருமைகளை காதால் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காக கம்பராமாயணத்தில் அயோத்தி நகரத்து மக்கள் நல்லனவற்றைக் கேட்பதற்கு பட்டி மண்டபங்களை ஆங்காங்கே தசரத மன்னன் கட்டி வைத்தான். அந்த மண்டபங்களில் உரையாற்றியவர்கள் கேட்பவர்கள் காதுகளில் இனிய சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். என்பதை,

“பொருந்திய மகளிரோடு வதுவையிற் பொருந்துவாரும்
பருந்தொடு நிழல்சென்று என்னஇயல் இசைப்பயன் துய்ப்பாரும்
மருந்தினும் இனியகேள்வி செவியுற மாந்துவாரும்
விருந்தினர் முகம்கண்டு அன்னவிழா அணிவிரும்புவாரும்”6
என்றுரைக்கிறார் கம்பர். இதனை வள்ளுவரும்,
“செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை” (குறள்.411)
“எனைத்தானும் நல்லவை கேட்க் அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்” (குறள்.416)

என்றும் கூறுகிறார். நல்லவரிடம் சேர்ந்த வறுமையை விட கல்லாதவரின் செல்வம் தீங்கானது என்கிறார் வள்ளுவர்.

“நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு” (குறள்.408)

வறுமையை மிகக் கொடுமையானதாக கருதும் வள்ளுவர் வறுமையைத் தீர்க்கும் வழிகள் பற்றியும் குறிப்பிடுகிறார். ஒருவனுடைய வாழ்வு வளம்பெற வேண்டுமெனில் விடா முயற்சியும்இ ஆழ்ந்த அறிவும் தேவை என்கிறார்.

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையான் நீளும் குடி" (குறள்.1022)
என உரைக்கிறார்.

வள்ளுவர் அறிவு என்னும் சொல்லின் பல்வேறு வடிவங்களைக் கையாண்டுள்ளார். இதன் மூலம் வள்ளுவரின் சொல் ஆளுமைத்திறன் நன்கு விளங்குகிறது. திருக்குறள் ஒரு அறிவுச் சுரங்கம்இ கல்விக் களஞ்சியம் என்பதைக் குறளைப் பயில்வோர் கேட்போர் உணரமுடியும்.

வள்ளுவர் கூறிய கல்வி அறிவு கேள்வி அறிவு இரண்டில் கேள்வி அறிவே சிறந்தது என்கிறார். ஒருவன் எழுதப்படிக்கத் தெரியாதவனாக இருந்தாலும் கூட தடுமாற்றம் உண்டாகும் நேரங்களில் கேள்வி அறிவு அவனுக்குத் துணையாக இருக்கும் என்பதை,

"கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை" (குறள்.414)
என வள்ளுவர் கூறுகிறார். தொல்காப்பியர் கூறும் ஐம்புலன்களுல்
"ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
…………………………………………
நான்கு அறிவதுவே அவற்றோடு கண்ணே
…………………………………………
அறிவதுவே அவற்றோடு மனனே"7

எனும் நான்காவது அறிவாகக் கூறப்படுவது கண் (பார்த்தல்) என்பதால் நாற்பதாவது அதிகாரமாக கல்வி என்னும் அதிகாரத்தையுமஇ; ஆறாவது அறிவாகக் கூறப்படுவது மனம் (சிந்திக்கும் ஆற்றல்) என்பதால் நாற்பத்தி இரண்டாவது (4஁ூ2ஸ்ரீ6) அதிகாரமாக கேள்வி என்ற அதிகாரத்தையும் வைத்துள்ளார் என சிந்திப்பதற்கு இடம் உண்டு. ஆகையால் கல்வி அறிவும் கேள்வி அறிவும் ஒரு மனிதனுக்குத் தேவையாக இருந்தாலும் கூட ஒரு மனிதன் நுண்ணியப் புலமையோடு வாழ்வதற்கு கேள்வி அறிவே தலைமையானது என்கிறார் வள்ளுவர்.

முடிவுரை

மனித வாழ்க்கையில் ஒருவன் எந்த நிலையில் இருந்தாலும் அவனுக்கு உரிய அறிவுரை கூறி நல்வழிப்படுத்துகிற சிறப்பு திருக்குறளுக்கு உண்டு. அந்த வகையில் கல்வி என்பது வெறும் புத்தக அறிவு மட்டுமல்ல் அது ஒரு மனிதனை அறிவுடையவனாகவும், பண்புடையவனாகவும்இ பொறுப்புள்ளவனாகவும் மாற்றுகிறது. கல்வியைப் பெறுவது மட்டுமின்றி கற்றவற்றை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துவதும் அவசியம். எனவே "கல்வியே அழியாத செல்வம்" என்பதைத் திருக்குறள் தெளிவாக உணர்த்துகிறது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. நறுந்.36

2. ‘நீதி நூல்கள்’ உரைவிளக்கம் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் ப.243.
3. நறுந்.2
4. தொல். பொருள் 972
5. தொல்.பொருள்.1526:6
6. கம்ப.பால.47
7. தொல்.பொருள்.1526:4-6

## துணைநூற் பட்டியல் (References)

1. அறவாணன் க.ப. - திருக்குறள் தெளிவுரை
2. தமிழ்க் கோட்டம் இ
3. முனிரத்தினம் தெரு
4. அய்யாவு குடியிருப்பு
5. அமைந்த கரை சென்னை - 600 029.
6. ஆசிரியர் குழாம் - சுராவின் தமிழ் - தமிழ்-ஆங்கில அகராதி
7. சுரா புக்ஸ் லிமிடெட்
8. வது பிரதான சாலை
9. அண்ணா நகாஇ;
10. சென்னை - 600 040.
11. உ.வே.சா.நூல் நிலையத்தார் - கம்பராமாயணம் பாலகாண்டம்
12. (ப.ஆ) மகாமகோ பாத்யாய உ.வே.சா.நூல்நிலையம
13. சென்னை - 41.
14. சீனிவாசன் புலவர் ச. - திருக்குறள் (பரிமேழகர் உரை)
15. (ப.ஆ) மனை எண் - 9இ கதவு எண் - 4
16. ஜோசப் காலணிஇ ஆதம்பாக்கம்
17. சென்னை - 600 088.
18. சுப்பிரமணியன் முனைவர் ச.வே. - தொல்காப்பியம் தெளிவுரை
19. மணிவாசகர் பதிப்பகம்
20. 31இ சிங்கர் தெரு பாரிமுனை
21. சென்னை - 600 108.
22. நாமக்கல் கவிஞர் உரை - திருக்குறள்
23. சாரதா பதிப்பகம்
24. சென்னை - 600 014.
25. வேங்கடசாமி நாட்டார் ந.மு. - நீதி நூல்கள்
26. (உ.ஆ) மாணவர் பதிப்பகம்
27. 20ஃ33-p.3 பாண்டியன் அடுக்கம்
28. சீனிவாசன் தெரு
29. தியாகராயர் நகர் சென்னை - 600 017.

**ARTICLE 56 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 111–120

# சங்க கால மருதநில வேளாண் பயிர்களும், தொழிலும்

## Agricultural Crops and Occupations in the Marutham Landscape during the Sangam Era

**முனைவர் மா.சத்யராஜ்**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த் துறை
கே. எஸ். ஆர் பொறியியல் கல்லூரி
திருச்செங்கோடு- 637215
தொ.எண். 97872 51510
இ.முகவரி : masathyaraj@gmail.com

## Abstract

Agriculture was central to the economic, social, and cultural development of Sangam-age Tamil society. Fertile river valleys and Marudha plains, enriched by abundant water, rich soil, and irrigation facilities, became the heartlands of production. Rivers such as the Kaveri, Vaigai, Tamiraparani, Bhavani, Amaravati, and Noyyal sustained this growth. Sangam literature and archaeological evidence reveal the diversity of crops, farming methods, tools, and occupations. Rice and sugarcane dominated the Marudha lands, while red rice (Sennel), white rice (Vennel), millet (Kambu), Varagu, sorghum (Cholam), green gram (Pachai Payaru), and beans (Mochai) were also cultivated. Tools like the plough (Kalappai), iron ploughshare (Er), irrigation channels (Nanjil), yoke (Nugam), sickle (Arival), grinding stone (Ammi), digging stick (Kuzhavi), water-lift (Etram), and threshing floor (Thalampu) illustrate technological progress. Sites such as Porunthal, Sivakalai, Kodumanal, Adichanallur, Keeladi, and Uraiyur provide evidence of production and storage. Agriculture thus underpinned food security, trade, social organization, and governance.

**Keywords:** நெல் (Nel – Paddy), கரும்பு (Karumbu – Sugarcane), ஏர்கலப்பை (Erkalappai – Iron Plough), உழவர் (Uzhavar – Farmers), மருத நிலம் (Marudha Nilam – Fertile River Plains), குறிஞ்சி நிலம் (Kurunji Nilam – Hill Tracts), தொல்லியல் (Tholliyal – Archaeology), கல்வெட்டு (Kalvettu – Inscriptions), அறுவடை (Aruvadai – Harvest), வணிகம் (Vanikam – Trade)

## ஆய்வுச் சுருக்கம்

சங்ககாலத் தமிழகத்தின் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு வளர்ச்சியில் வேளாண்மை முக்கிய பங்கு வகித்தது. வளமான நீர்வளம், செழிப்பான மண் மற்றும் பாசன வசதிகளால் ஆற்றுச் சமவெளிகளும் மருத நிலப்பகுதிகளும் உற்பத்தியின் மையங்களாக விளங்கின. காவிரி, வைகை, தாமிரபரணி, பவானி, அமராவதி, நொய்யல் போன்ற ஆறுகள் வேளாண் வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தன. சங்க இலக்கியம் மற்றும் தொல்லியல் சான்றுகள் மூலம் பயிர்கள், வேளாண் முறைகள், கருவிகள் மற்றும் தொழில்கள் பற்றிய தகவல்கள் வெளிப்படுகின்றன. மருத நிலங்களில் நெல் மற்றும் கரும்பு முக்கிய பயிர்களாக இருந்தன; செந்நெல், வெண்ணெல், கம்பு, வரகு, சோளம், பச்சைப்பயறு, மொச்சை போன்ற பயிர்களும் பயிரிடப்பட்டன. கலப்பை, ஏர், நாஞ்சில், நுகம், அரிவாள், அம்மி, குழவி, ஏற்றம், தளம்பு போன்ற கருவிகள் தொழில்நுட்ப முன்னேற்றத்தை காட்டுகின்றன.

## முன்னுரை

மனித பரினாம வளர்ச்சியில் புதிய கற்காலத்தில் வேளாண்மைத் தொழில் குழுக்களாக இணைந்து தொடங்கப்பட்டன. தொடக்கக் காலத்தில் மழை நீரைப் பயன்படுத்தி கல்லால் உருவாக்கப்பட்ட கூர்மையான கைக்கோடரியால் பூமியை உழுது அல்லது புறட்டி விதைகள் விதைக்கப்பட்டு வேளாண் தொழில் செய்யப்பட்டன. வேளாண்மை முதன் முதலில் குறிஞ்சி நிலப் பகுதி வேளாண்மை செய்வதற்கு ஏற்ற இடமாக இருந்தமையால் முதன் முதல் மலைசார்ந்த பகுதிகளிலேயே வேளாண்மைத் தொழில் தொடங்கியதை சங்க இலக்கியங்கள் வழியாக அறிந்து கொள்ள முடிகின்றன. இங்கு தினை, வரகு, சாமை, கொள்ளு, பச்சைப்பயிறு, துவரை, மொச்சை ஆகிய பயிரிகள் விளைச்சல் செய்யப்பட்டமை தெரிய வருகிறது. மேலும் தானியங்களை இடிக்க கல்லைப் பயன்படுத்தி உள்ளான். பையம்பள்ளி, ஓடுகத்தூர். (சு.இராசவேலு, கோ.திருமூர்த்தி,(1995),தமிழ்நாட்டுத் தொல்லியல் அகழாய்வுகள், ப.15) ஆகிய இடங்களில் இவை கண்டுபிடிக்கபட்டதாக இராஜவேலு குறிப்பிடுகிறார். தமிழகத்தில் வேளாண்மையில் நெல்லின் பயன்பாடும் சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன்பாகவே இருந்ததை தொல்லியல் சான்றுகள் மெய்பிக்கின்றன. ஆதிச்சநல்லூர், சிவகளை, கீழடி, பொருந்தல் ஆகிய அகழாய்வு இடங்களில் நெல் கிடைத்திருப்பது இலக்கியங்கள் குறிப்பிடுவதை மெய்பிக்கின்றன.

இரும்புக் காலத்தில் வேளாண் கருவியாக ஏர்கலப்பையின் கூர் முனைகள் அகழாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆதிச்சநல்லூர், கொடுமணல், சென்னானூர், கீழடி ஆகிய அகழாய்வு இடங்களில் ஏர்முனைக் கருவிகளும் கதிர் அறுக்கும் அறுவாள்களும் குறுமுனைக் கத்திகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஏரின் இரும்புக் கலப்பையை மரக்குச்சியில் இணைத்து அதனைப் பயன்படுத்தியும் உள்ளனர். சென்னானூரில் கிடைத்த ஏர்முனை கெட்டியான இரும்பால் செய்யப்பட்டுள்ளது. இதனை கையால் பிடித்தவாறே நிலத்தைக் கொற்றிப் பண்படுத்தி இருத்தல் வேண்டும். கிருஷ்ணகிரி அருகில் மேலுமலைத் தொடரில் எட்றப்பள்ளி மேல்பள்ளம் என்ற இடத்தில் ஏர் உழுகின்ற காட்சி வெள்ளை நிறத்தில் ஓவியமாகத் திட்டப்பட்டுள்ளதை மனோன்மணி கே.பி. முருகன் மற்றும் அவரது குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். (மனோன்மணி,(2009), ஏரின்றி அமையாது உழவு, செம்மொழி செய்திமடல்-4) இவ்வோவியத்தில் ஏர்க்கலப்பையை ஒருவர் இயக்கிய நிலையில் இரண்டு மாடுகளை நுகத்தடியில் பூட்டி ஏர் உழும் காட்சி மிக அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. ஏர்க்கலப்பை நுகத்தடியுடன் காளைகளின் கழுத்தின் மேல் உள்ளவாறும் ஏரினை உழவர் உழுவதற்கு ஏற்ற கைப்பிடியையும் ஏர் நிலத்தில் உழுகின்ற கொழுவும் இவ்வோவியத்தில் காட்டப்பட்டிருப்பது சிறப்புடையது. இவ்வோவியம் இரும்புக்காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம் என தொல்லில் அறிஞர்கள் கருதுகின்றனர்.

வேளாண் நிலங்கள் அதன் தன்மைக்கேற்ப நன்னிலம், வன்புலம். மென்புலம், புண்புலம், படப்பை, முரம்பு, கரம்பை உவர் நிலம் பழனம், புலம். எனப் பிரிக்கப்பட்டன. வேளாண் தொழில் வளர்ச்சி பெற்று அபரிவிதமான உற்பத்திக் பெறுகியபோது நான்கு நிலங்களில் வேளாண் பொருள்கள் பண்டமாற்று முறையிலான வணிகம் தொடங்கியது. ஏர்கலப்பைகளை செய்து விற்போர் குறித்து அழகர்மலைத் சங்கக் கால தமிழிக் கல்வெட்டில் 'கொழு வணிகர் எளசந்தன்' என்று குறிப்பிடுவதன் மூலம் கொழு எனப்படும் இரும்பாலான ஏர்க்கலப்பையை எலசந்தன் என்பவர் விற்பனை செய்கின்ற வணிகராக இருந்துள்ளார் என கூறுகிறது. Iravatham Mahadevan,( 2014 ), Early Tamil Epigraphy, p.441)

## வேளாண் தொழில்

மேற்குறித்த தொல்லியல் சான்கள் கூறியது போல் சங்க கால தமிழ் நாட்டில் வேளாண்மைக்கு சிறந்த இடமாக மருத நிலச் ஆற்றுச் சமவெளிப்பகுதிகளில் வேளாண் தொழில் நடைப்பெற்றதை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. தமிழகத்தில் காவிரி, வைகை, தாமிரபரணி, பவானி, அமராவதி , நொய்யல் ஆகிய ஆறுகள் மருத நிலப் பயிர்கள் செழிக்கக் காரணமாக இருந்திருக்கின்றன. காவிரியும் அதனுடைய கிளை நதிகளும் காவிரி சமவெளியான சோழநாட்டு மருத நிலத்தில் பாய்ந்து வளமை உள்ள நாடாக உருவாக்கியிருக்கின்றன. கரிகாலன் காவிரி ஆற்றின் கரைகளை உயர்த்தினான். இதனால் சோழநாடு வேளாண்மைத் தொழில் பெருக ஏதுவாக இருந்தன. சங்க காலச் சோழநாட்டில் ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் செந்நெல் விளைந்ததாகப் பொருநராற்றுப்படை எனக் குறிப்பிடுகிறது. நன்செய் வேளாண்மையைச் செய்யக் கூடிய மருதநிலப் பகுதியில் வேந்தர்கள் தோன்றியிருக்கின்றனர் என்பதிலிருந்து அரசு உருவாக்கத்தில் மருதநிலம் முக்கியப் பங்கு வகித்திருக்கின்றது. சீறூர் மன்னர்களும், கிழார்கள் தோன்றியதும் மருத நில வேளாண் சமூகத்தில் என்பது குறிப்பிடத்தக்கது.

## மருத நில பயிர்கள்

நெல், கரும்பு இரண்டும் மருத நிலத்தின் விளைபயிராக இருந்திருக்கின்றன. இவ்விரண்டும் நாட்டின் முக்கிய வருவாய்ப் தரக்கூடிய தொழிலாக இருந்திருக்கின்றன. நெல் முதன்மையான நன்செய் பயிராகும். சங்க காலத்தில் ஐவன நெல், தோரை நெல், மூங்கில் நெல் ஆகியவை குறிஞ்சி முல்லை நிலங்களில் விளையக் கூடிய நெல் ஆகும். செந்நெல், வெண்நெல், மருத நிலத்திற்குரிய நெல் வகையாகும். சங்க இலக்கியங்களில் 102 இடங்களில் நெல் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றது. அவற்றில் மருத நிலத்தில் விளையக்கூடிய செந்நெல், வெண்ணெல் பற்றிச் சங்க இலக்கியப் பாடல்கள் சுட்டுகின்றன. குறிப்பாக புறநானூ மற்றும் பதிற்றுப் பத்தில் பல இடங்களில் இடம் பெறுவதை பின்வருமாறு;

"அலங்கு செந்நெல் கதிர் வேய்ந்த
ஆய் கரும்பின் கொடிக் கூரை" (புறம்.22:14,15)

என புறநானூற்றில் அசைந்த செந்நெல்லின் ஒழுங்குடைய கூரை வேயப்பட்டது என்று கூறுகிறது.

“வேங்கை மலரின் வண்ணம் ஒத்த
செந்நெல் விளைந்த வயலின் பயனை,
எருதுகளால் உழுது விளைவித்த
செந்நெல்லைப் பொருநனுக்குப் போரோடு
வழங்கினான் அதியமான் நெடுமான் அஞ்சி” (புறம்.390:22)

என அதியமான் நெடுமான் அஞ்சி பொருநனுக்கு வேங்கை மலர்களைப் போன்ற, எருதுகளால் உழுது விளைவிக்கப்பெற்ற செந்நெல்லைப் போரோடு கொடுத்தான் என்றும்,

“அறுவடைத் தொழில்செய் மகளிர்,
நெற்களத்தின்கண் எருமை கடாவிட,
மிதித்துதிர்த்த மெல்லிய செந்நெல்
குவியல்களை மரக்கால் செருகி,
அளந்தனர் மகிழ்ந்து” (பதி.71:1-5)

என அறுவடைத் தொழில் செய்யும் உழவர் மகளிர் நெற்களத்தின்கண் எருமைகள் கடாவிடப்பட்டு மிதித்துதிர்த்த மெல்லியச் செந்நெற்குவியல் மரக்கால்களை அளப்பதற்குச் செருகி வைத்தனர் என்று பதிற்றுப் பத்திலும்,

“பெரிய செந்நெல்லின் தூம்புடைய திரண்ட தாளை
அறுத்துத் தொழில் செய்வர் உழவர்;
மருத மரத்தின் நிழலிடத்தே
தெய்வங்கள் பலி பெறும் களங்களிலே,
அறுத்த செந்நெல்லைக் குவியலாக்கி
போரென இடுவர்” (பெரு.228-233)

என பெரிய செந்நெல்லினுடைய தூம்புடைய திரண்ட தாளையறுத்துத் தொழில் செய்வர். மருதமரத்து நிழலிலே தெய்வங்கள் பலி பெறுகின்ற களங்களிலே போராக இடுவர் என்றும்,

“உலர்ந்த பெரிய செந்நெல்லின்
அரிசிச் சோற்றினைப் பாணர்
உண்டு மகிழ்ந்தனர்” (பெரு.473,474,479).

என உலர்ந்த பெரிய செந்நெல்லினுடைய அரிசிச் சோற்றினைப் பாணர் உண்டனர் என்று பெரும்பாணாற்றுப்படையிலும், பட்டினப்பாலையில்

‘காய்ந்த செந்நெற் கதிர்களை எருமைகள் தின்றன’ (பட்.13).

என காய்ந்த செந்நெற் கதிர்களை எருமைகள் தின்றன என்று உள்ளது. செந்நெல்லைப்போல் வெண்ணெல்லும் மருத நிலத்தில் விளைவிக்க கூடிய நெல் வகைகளில் ஒன்றாகும். வெண்ணெல் பற்றி

‘வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி’ (பெரும். 255)
‘வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ’ (மலை. 471)
‘நெடு வெண்ணெல்லின் அரிசி முட்டாது’ (மலை. 565)
‘குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்’ (புறம். 33:5)
‘வெண்ணெல் அரிஞர் தண்ணுமை வெரீஇக்’ (புறம். 348:1)

‘மாவண் தித்தன் வெண்ணெல் வேலி’ (புறம். 352:9)
‘அடுமகள் முகந்த அளவா வெண்ணெல்’ (புறம். 399:1)
என சங்க இலக்கியத்தில் பேசப்படுன்றன. நெல்லை அறுவடை செய்கின்ற உழவரைக்
‘நெல்லை அரிகின்ற உழவர்’ (புறம். 24:1)
என புறநானூறு குறிப்பிடுகிறது.

“குப்பை நெல்லின் முத்தூறு தந்த
கொற்ற நீள்குடைக் கொடித்தேர்ச் செழிய” (புறம். 24:21-23)
என்று புறநானூறும்,
‘நெல் விளை கழனி படுபுள் ஓப்புநர்’ (புறம். 29:13)
என புறப் பாடல் நெல் விளையும் வயலில் வந்து அமரும் பறவைகளை உழவர்கள் ஓட்டுவர் என்று குறிப்பிடுகிறது.

“ஒன்னாத் தெவ்வர் முன்னின்று விலங்கி
ஒளிறு ஏந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்தெனக்
கல்லே பரவின் அல்லது,
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே ” (புறம். 335:9–12)
என நடுகல் வழிபாட்டில் நெல்லைத் தூவி வழிபடும் மரபு நிலவியதைப் புறப் பாடல் வழையாக அறிந்து கொள்ளமுடிகிறது.

‘பிணிக் கதிர், நெல்லின் செம்மல் மூதூர்’ (புறம். 97:18)
‘நெல்விளை கழனி அம்பர் கிழவோன்’ (புறம். 385:9)
என்று நெல்லை அடிப்படையாகக் கொண்ட ஊர்களும் மன்னர்களும் புகழப்படுதலை அறியமுடிகிறது. மேற்குறித்த நெல் வகைகள் பற்றி சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை மற்றும் பத்துப்பாட்டின் வழியாக சங்க காலத்தில் இருந்த நெல் வகைகள் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது.

சங்க இலக்கியங்கள் பெருமளவு நெல் பற்றிய சான்றுகள் இருந்தாலும் சில நேரங்களில் தொல்லியல் சான்றுகள் அவற்றை மெய்பிக்க உதவுகின்றன. திண்டுகல் அருகில் உள்ள பொருந்தலில் பேராசிரியர் க.இராஜன் அகழாய்வு மேற்கொண்டுள்ளனர். அவற்றில் நான்கு கால்களுடன் கூடிய மண்ஜாடியில் நெல்லின் உமி கண்டுபிடிக்கப்பட்டது. இக்கண்டுபிடிப்பு தமிழகத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் சிறப்பம்சமாகும். (கா.ராஜன்(2010), சங்காலம்:தொல்பொருள் ஆய்வுகள்,ப.110) இந்த நெல்லின் காலம் கரிமக்காலக் கணிப்பின்படி கி.மு.496 எனக் கணித்துள்ளனர். மேற்குறித்த தொல்லியல் சான்றுகள் சங்க காலத்தில் நெல் வேளாண் உற்பத்தில் பெருமளவு இருந்ததை அறிந்துகொள்ள முடிகிறது.

உழுவோரைப் பற்றி பல சொற்கள் இலக்கியத்தில் காணப்படுகின்றன. அகவர் (பொரு 220), உழவர் (குறு.155:1,பதி.20:22, புறம்.13: 11, 395:1, அகம்.366:8), உழவன் (குறு.131: 5,181:4, புறம். 230:3, 289 :3), ஏராளர் (ப.76:11), ஏரின்வாழ்நர் (புறம்.375:6), ஏரோர் (சிறு. 233), தொழுவர் (நற்.195:6,புறம்.24: , 209:2, 379:3) என்ற பெயர்கள் வந்துள்ளன. களமர் எனும் சொல் உழவர் எனும் பொருளில் கையாளப்படுவதாக பெ.மாதையன் குறிப்பிடுவது நோக்கத்தக்கதாகும். (பெ.மாதையன்,(2004),சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம்,ப.ப.30-33) களமர் என்னும்

சொற்றடர் இலக்கியங்களில் பொரு.194, மது. 260, மலை. 469, நற். 125: 9, அகம். 366:3,புறம், 387:25, பரி.தி. 1: 27 இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன.

உழவுத் தொழில் செய்வோரைக அரிஞர்(அகம்.84:12, புறம்.348:1), அரிநர் (பதி. 19:22, ஐங்.190:2), அரிவணர் (நற்.400:3), அரிவார்(குறு.375:4),கடைசியர்(புறம்.61:1), களமர்-வயற்பணி செய்வோர்(பொரு.194,மது.260,மலை.469, நற்.125: 9,அகம்.366:3), உழுதுண்போர் (பரி.தி.1:27), உழுதுண்பார் (புறம்.387:25), தொழுவர் - வினைஞர்(நெடு.49) போன்ற சொற்றடர்கள் குறிப்பிடுகின்றன.

உழவுத் தொழிலுக்கு தேவைபடும் கருவிகள் பற்றியும் குறிப்புகள் காணப்படுகின்றன. கலப்பை (அகம். 41: 4, 194:2, புறம். 33:4, 338:1, பதி.14:17, குறு.173,மலை.60), உழுபடை- கலப்பை (புறம். 35:25), நாஞ்சில்-ஏர்(அகம்.42:5, கலி. 8:5,பதி.19:17, 25:1, 26: 2, 58:17,பரி.1:5, 4:39, 20: 53, புறம்.9:11, 20:11, 56: 4, 140:1, 380:9, பெரும்.199), கலப்பை(பெரும்.188), கொழு(பொரு.117,பதி.58:17), நுகம்- நுகத்தடி (பெரும்.62, பட். 206, மலை.515, நற்.58:11, அகம். 224: 4,329:6,350 6, 400:10,புறம். 102:1,179:9)

## கரும்பு

மருத நிலத்தில் நெல்லைப் போலவே கரும்புச் சாகுபடியை முக்கியத் தொழிலாகக் கொண்டனர். தமிழகத்திற்குக் கரும்பை அறிமுகப்படுத்தியவர்களாகத் தகடூரை ஆட்சி செய்த அதியமானின் முன்னோர்கள் என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

“அரும்பெறல் மரபின் கரும்புஇவண் தந்தும்,
நீர்அக இருக்கை ஆழி சூட்டிய
தொன்னிலை மரபின்நின் முன்னோர் போல” (புறம்.99:1-4)
எனவும், மருத நிலத்தில் செந்நெல்லும், கரும்பும் விளைந்திருந்ததைப் பட்டினப்பாலை
“வெண்பூக் கரும்பொடு செந்நெ னீடி
மாயிதழ்க் குவளையொடு நெய்தலு மயங்கிக்
கராஅங்கலித்த கண்ணகன் பொய்கைக்” (பட்.240-242).

என வெள்ளிய பூக்களையுடைய கரும்புகளுடன் செந்நெல்லும் சேர்ந்து வளர்ந்து பண்டைக் காலத்தில் ஒன்றாக இணைந்து ஒரே இடத்தில் ஊடுபயிராகக் சாகுபடி செய்யப்பட்டன. மருதநிலத்தில் விளைந்த கரும்பைப் பிழிந்துச் சாறெடுக்கும் முறையை

பற்றி நன்கு அறிந்திருந்தனர் என்பதனை பெரும்பாணாற்றுப்படை
“எந்திரம் சிலைக்கும் துஞ்சா கம்பலை
விசயம் அடூஉம் புகை சூழ் ஆலைதொறும்
கரும்பின் தீம் சாறு விரும்பினிர் மிசைமின்” (பெரு.260-262)

என்று குறிப்பிடுகிறது. சங்க இலக்கியங்களில் கரும்பு பற்றிய குறிப்புகள் பல இடங்களில் பேசப்படுவதைப் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன (பொரு.193, 216, பெரு.262, மது.258,பட்.9,162,240,மலை.119,341,பதி.13:3, 13:13, 30:14, 50:3, 75:6, 87:4, புறம்.16:15, 22:15, 24:13, 28:12, 35:10,42:15, 99:2,137:6, 322:7, 384:3, 386:10, 392:21). கரும்பு மருத நிலத்தில் பயிர் செய்யப்பட்டதையும், மக்கள் கரும்பை பயன்படுத்தியதையும், கரும்பிலிருந்து சாறு பிழிந்ததுப் பற்றியும்,

கரும்பு தமிழகத்திற்கு வெளிநாடுகளிலிருந்து வந்ததையும் மேற்குறித்த சங்க இலக்கியங்களின் சான்றுகளின் படிஅறிந்துகொள்ள முடிகிறது.

கரும்பு அரவை இயந்திரம்

சங்க கால வேளாண் சமூகத்தில் ஆண்டு முழுவதும் கரும்பு அறுவடை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கரும்பிலிருந்து சாறுபிழிய இயந்திரங்களைப் பயன்படுத்தினர்.

‘அமர்எனின், திங்களும் நுழையா எந்திரப் படுபுழைக்’ (புறம்.177:5)
‘தெண்ணீர்ப் படுவினும் தெருவினும் திரிந்து’ (புறம்.332:7)

இரு இடங்களில் கரும்புச் சாறு பிழிய ஆடும் போது எழுகின்ற ஓசை யானை பிளிருவது போல் இருக்கும் எனப் சுட்டப்படுகின்றது. பேரொலியை எழுப்புவதைக் கொண்டு பெரிய இயந்திரங்களைப் பயன்படுத்தியிருக்கக் கூடும் என்று கருதமுடிகிறது.

## உழவுக் கருவிகள் செய்யும் தொழில்

சங்க இலக்கியப் அகப், புறப்பாடல்களில் பெரும்பான்மையான இடங்களில் போர், வீரம் பற்றியே பாடல்கள் உள்ளன. அவ்வாறிருந்த போதிலும் வேளாண் நிலம் பற்றியும் அவர்கள் மேற்கொண்ட வேளாண் தொழில் பற்றியும், பயன்படுத்திய கருவிகள் பற்றியும் செய்திகள் கிடைக்கின்றன. மருத நிலம் வயலும் வயல் சார்ந்த இடம் ஆகும். நன்செய் நிலம் மருதம் எனப்படும். விவசாயிகளை உழவர் என்றும் அவர்களின் மனைவியரை உழத்தியர் என்று கூறுவதுண்டு. உழவு அவர்களின் தொழில் , தாமரை முதன்மை மலர், இந்திரன் கடவுளாவான். உழவர்கள் நிலத்தை உழவேண்டும், எருவிட வேண்டும் நாற்று நடவேண்டும், நீர்ப்பாசனம் ஏற்பாடு செய்யவேண்டும், மாடுகள் மேய்ந்திடாமல் காத்தல் வேண்டும் வேளாண் சமூகத்தில் தொழிலுக்கென பல்வேறுபட்ட கருவிகளைக் கொண்டு தொழில் முனைந்தனர். வேளாண் தொழில் தொடர்புடைய தொழில்கள் மருத நிலத்தில் நடைபெற்றிருந்ததை சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சங்க கால மக்கள் தங்களுடைய நிலத்திற்கு ஏற்றவாறு வேளாண் கருவிகளை வடிவமைத்துக்கொண்டனர். பயிர்த் தொழிலுக்குப் பயன்பட்ட கருவிகளான கலப்பை, உருளை முதலியவற்றை வைத்துப் பாதுகாக்க தனித்தனிக் கொட்டில்கள் இருந்தன என்பதை,

“களிற்றுத் தாள் புரையும் திரி மரப் பந்தர்,
குறுஞ் சாட்டு உருளையொடு கலப்பை சார்த்தி” (பெரு.188-189).

பெரும்பாணாற்றுப்படை குறிப்பிடுகிறது.

மரவேலை செய்வோர் தச்சர் எனப்பட்டனர். தச்சுத் தொழில் சேய்வொரே சங்க காலத்தில் உழவுக்கும்,வேளாண்மைக்கும் தேவையான கருவிகளை செய்து கொடுத்துள்ளதை இலக்கியங்கள் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது. தச்சர்கள் செய்த சில வேளாண் கருவிகளை பற்றி பின்வரும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

## உழுகருவி

பண்டைக் காலம் தொட்டுத் தமிழகத்தில் நிலங்களை உழுவதற்கு 'மரக்கலப்பை' கொண்டு எருதுகளைப் பூட்டி உழவு செய்தனர். கலப்பை நாஞ்சில் என்ற சொல்லாலும் கையாளப்பட்டுள்ளது. நாஞ்சில் ஈரப்பதம் இல்லாத நிலத்தில் (குறிஞ்சி, முல்லை) உழும் கலப்பை என்பது குறிபிடத்தக்கது. வேளாண் தொழிலில் நாஞ்சிலைப் பயன்படுத்தியுள்ளனர்.

"பிடி வாய் அன்ன மடி வாய் நாஞ்சில்
உடுப்பு முக முழுக் கொழு மூழ்க ஊன்றி" (பெரு.199-200)

என பெரும்பாணாற்றுப்படை மரக்கலப்பை என்ற நாஞ்சில் பெண்யானையின் வாய் போன்றும், அதில் உள்ள கொழு உடும்பின் வாய் போன்றும் இருப்பதாகக் குறிப்பிடுகிறது.

## நீர் இறைப்புக் கருவி

ஆற்றில் நீர் குறையும் போது ஆற்றுக் குட்டைகளிலும், கிணறுகளிலும், குளத்திலும் உள்ள நீரை நிலங்களுக்குப் பாய்ச்சுவதற்கு 'ஏற்றம்' என்ற கருவியைப் பயன்படுத்தினர். ஏற்றம் பெரும்பாலும் மரத்தால் செய்யப்பட்டிருக்கும், ஏற்றத்துடன் இரும்பாலான 'சால்பொரி' என்ற கருவி மூலம் நீர் இறைக்கப் பயன்படுத்தினர். கிணற்றில் இறைக்கும் போது எருதுகளைப் பயன்படுத்தும் பழக்கமும் இருந்திருக்கிறது. நீர் இறைக்க ஏற்றம் பயன்படுத்தியதை மதுரைக்காஞ்சி

"நீர்த்தெவ்வு நிரைத்தொழுவர்
பாடுசிலம்பு மிசையேற்றத்" (மது.90)

எனக் குறிப்பிடுகிறது.

## தளம்பு

நன்செய் நிலத்தை உழுதபின் மேடுபள்ளம் இல்லாமல் சமமாக இருக்கும் பொருட்டு பரம்புப் கொண்டு சமன்படுத்துவர். புன்செய் நிலத்தைச் செம்மைப் படுத்தும் கருவிக்குப் 'தளம்பு' என்று பெயர் இவற்றை புறநானூறு

'மலங்கு மிளிர், செறுவின் தளம்பு தடிந்து இட்ட' (புறம்-61:3)

என சேற்று வயலைச் சமன்படுத்தும் போது 'தளம்பில்' மீன்கள் அகப்பட்டுத் துண்டுபடுவதை மாடலன் மதுரைக் குமனர் பாடியுள்ளார்.

மேற்குறித்த இலக்கியச் செய்திகளைக் கொண்டு தமிழ் நாட்டில் கொடுமணல் அகழாய்வில் கிடைத்த சில பயிர்களின் எச்சங்கள் ஆய்விற்கு அனுப்பப்பட்டதில் கம்பு, வரகு, சோளம், பச்சைப்பயறு, மொச்சை ஆகிய புன்செய் பயிர்களும் வெண்டை, இலந்தை ஆகிய செடி, மரப் பயிர்களும் பயிரிடப்பட்டன என்பதை அறிய முடிகிறது. மேலும் ஒரு வகையான தாவரத்திலிருந்து எடுக்கப்பட்ட நாரில் நூற்கப்பட்ட துணியும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. சிவகளை அகழாய்வில் முதுமக்கள் தாழியில் கிடைத்த உமி நீக்கப்பட்ட நெல்லை ஆய்வு செய்தததில் இதன் காலம் அறிவியல் காலக் கணக்குப்படி கி.மு.1155 எனத் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை அறிவித்துள்ளது.

அகழாய்வுகளில் வேளாண்மைக்குத் தேவையான கருவிகள் கிடைத்துள்ளன. நெல்லை அறுக்கப் பயன்படும் சிறிய அரிவாள் ஆதிச்சநல்லூர், பெரும்பேர், கொடுமணல், கீழடி, பல்லாவரம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. மேலும் ஆதிச்சநல்லூரில், சானூர் அகழாய்வுகளில் தானியத்தை அரைக்கும் அம்மி, குழவி ஆகியவை கிடைத்துள்ளன. ஆதிச்சநல்லூர் அகழாய்வில் நான்கு கால்களுடன் கூடிய அம்மிக்கல் கிடைத்துள்ளது. சங்ககால சோழர்களின் தலைநகரமாக விளங்கிய உறையூரில் தானியங்களைச் சேகரித்து வைக்கும் கொள்கலன்கள் ஒன்று செங்கல்லால் கட்டடப்பட்டிருந்தமை அகழாய்வின் மூலம் வெளிப்பட்டது.

சோழ நாட்டின் தலைநகரமான உறையூரில் வீட்டில் சேகரிக்கப்பட்டிருந்தமை உபரி உற்பத்தித் திறனைக் காட்டுகிறது. கரூர் மற்றும் கீழடி அகழாய்வில் தானியம் வைக்கும் சேமிப்புப் பானைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதே போன்று காவேரி கரையின் அருகிலுள்ள திருக்காம்புலியூர் என்னும் இடத்தில் செய்யப்பட்ட அகழாய்வில் தானியங்களைச் சேமித்து வைக்கும் தானியக் கிடங்கு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. (சு.இராசவேலு, கோ.திருமூர்த்தி, (1995), தமிழ்நாட்டு தொல்லியல் அகழாய்வுகள்) பொ.ஆ.மு.300 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வரிச்சியூர் தமிழிக் கல்வெட்டில் 100 கலம் நெல் பற்றிய குறிப்பு உள்ளதை ஐராவதம் மகாதேவன் சுட்டிக்காட்டுகின்றார். (Iravatham Mahadevan, *Early Tamil Epigraphy*,p.171)

சங்க காலத் தமிழகத்தின் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு வளர்ச்சியில் வேளாண்மைத் தொழில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தது என்பதை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது. குறிப்பாக ஆற்றுச் சமவெளிகளும் மருத நிலப்பகுதிகளும் நீர்வளம், வளமான மண் மற்றும் பாசன வசதிகளைக் கொண்டிருந்ததால் வேளாண் உற்பத்திக்கான முக்கிய மையங்களாக விளங்கின. காவிரி, வைகை, தாமிரபரணி, பவானி, அமராவதி, நொய்யல் போன்ற ஆறுகள் வேளாண் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தன. குறிப்பாக காவிரி மற்றும் அதன் கிளைநதிகள் சோழநாட்டின் மருத நிலங்களை வளப்படுத்தியதுடன், உபரி வேளாண் உற்பத்திக்கும் வழிவகுத்தன. கரிகாலன் காவிரிக் கரைகளை உயர்த்தியதாகக் கூறப்படும் செய்தியும் நீர்வளம் மற்றும் வேளாண்மைக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

சங்க இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் நெல் மற்றும் கரும்பு ஆகியவை மருத நிலத்தின் முக்கியப் பயிர்களாக விளங்கியுள்ளன. செந்நெல், வெண்ணெல் போன்ற நெல் வகைகள் பரவலாகப் பயிரிடப்பட்டதுடன், கரும்புச் சாகுபடியும் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றிருந்தது. கரும்பிலிருந்து சாறு பிழியும் இயந்திரப் பயன்பாடு வேளாண்மையுடன் தொடர்புடைய தொழில்நுட்ப முன்னேற்றத்தையும் வெளிப்படுத்துகிறது.

தொல்லியல் அகழாய்வுகள் சங்க இலக்கியச் செய்திகளுக்கு வலுசேர்க்கும் வகையில் நெல், கம்பு, வரகு, சோளம், பச்சைப்பயறு,

மொச்சை போன்ற பயிர்களின் எச்சங்களையும், அரிவாள், கலப்பை, அம்மி, குழவி போன்ற வேளாண் கருவிகளையும் வெளிப்படுத்தியுள்ளன. பொருந்தல், சிவகளை, கொடுமணல், ஆதிச்சநல்லூர், கீழடி, உறையூர் போன்ற இடங்களின் தொல்லியல் சான்றுகள் வேளாண் உற்பத்தி, தானியச் சேமிப்பு மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் பல்வேறு நிலைகளை எடுத்துக்காட்டுகின்றன.

மேலும், வேளாண் உற்பத்தியின் வளர்ச்சி பண்டமாற்று வணிகம், உழவர் சமூக அமைப்பு, தொழில்பிரிவு மற்றும் அரச உருவாக்கம் ஆகியவற்றோடும் தொடர்புடையதாக இருந்தது. எனவே, சங்க கால ஆற்றுச் சமவெளிகளில் வேளாண்மை என்பது உணவு உற்பத்திக்கான தொழிலாக மட்டுமன்றி, சமூகப் பொருளாதார அமைப்பின் அடித்தளமாகவும், தமிழகத்தின் தொடக்ககால அரசியல் மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு ஆதாரமாகவும் விளங்கியது என இவ்வாய்வு முடிவுசெய்கிறது.

## துணைநூற் பட்டியல் (References)


1. அகநானூறு(தொகுதி.1,2,3),ந.மு.வேங்கடசாமிநாட்டார்,ரா.வேங்கடாசலம்பிள்ளை உரை,கழகவெளியீடு,சென்னை,1969
2. அதியமான்.ந,ஜெயக்குமார்.பா.,(ப.ஆ),கா.ராஜன்(க.ஆ), தமிழகக் கடல்சார் வரலாறு (அண்மைக் கால ஆய்வுகள்),தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்,2006
3. இராசமாணிக்கனார்.மா., பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 2012
4. ஐங்குறுநூறு, ஔவை சு.துரைசாமிப் பிள்ளை உரை, அண்ணாமலைப் பல்கழைக்கழகம், சிதம்பரம்,1957
5. கலித்தொகை, நச்சினாக்கினியர் உரை, கழகவெளியீடு, சென்னை,1962
6. குறுந்தொகை, ரா.இராகவையங்கார் உரை, அண்ணாமலைப் பல்கழைக்கழகம், சிதம்பரம்,1993
7. தொல்காப்பியம்(எழுத்ததிகாரம்), பாவலரேறு ச.பாலசுந்தரம் உரை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்,2012
8. நற்றினை, ஔவை சு.துரைசாமிப் பிள்ளை உரை, அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை,1968
9. பதிற்றுப்பத்து, ஔவை சு.துரைசாமிப் பிள்ளை உரை, கழகவெளியீடு, சென்னை,1950(மு.ப),1995
10. பத்துப்பாட்டு(பகுதி-1,2),பொ.வே.சோமசுந்தரனார் உரை, கழகவெளியீடு, சென்னை,2008
11. புறநானூறு(பகுதி-1,2), ஔவை சு.துரைசாமிப் பிள்ளை உரை, கழகவெளியீடு, சென்னை,1951(மு.ப),2007
12. மாதையன்.பெ., சங்க இலக்கியத்தில் வேளான் சமூதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை,2010
13. ராஜண்.கா.,(க.ஆ), சங்காலம்:தொல்பொருள் ஆய்வுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட்,சென்னை,2011
14. Mahadevan.Iravatham., Early Tamil Epigraphy, Central Institute of Classical Tamil,Cnennai,2014

**ARTICLE 57 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 121–125

# பன்னிருதிருமுறையில் மனிதநேயச் சிந்தனை

*ஆய்வாளர்:* **திருமதி ப.செல்வமணி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி(தன்னாட்சி)
எளையாம்பாளையம்.

*நெறியாளர்:* **முனைவர் ப. திலகவதி**
தமிழ்த்துறைத் தலைவர்
நவரநசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, அறச்சலூர்.

## ஆய்வுச் சுருக்கம்

பன்னிரு திருமுறைகள் சைவ சமயத்தின் அடிப்படை பக்தி இலக்கியங்களாக விளங்குகின்றன. இவை இறை வழிபாட்டை மட்டும் எடுத்துரைக்காமல், மனிதவாழ்க்கைக்குத் தேவையான அன்பு, இரக்கம், ஈகை, தொண்டு, தியாகம், சமத்துவம், பிற உயிர்களிடம் கருணை போன்ற உயர்ந்த மனித நேயப்பண்புகளையும் எடுத்துக் கூறுகின்றன. இவ்வாய்வு, பன்னிரு திருமுறைகளில் இடம்பெறும் மனிதநேயச் சிந்தனைகளை அடையாளம் கண்டு அவற்றின் சமூகப் பொருத்தத்தை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தேவாரம், திருவாசகம், திருமந்திரம் உள்ளிட்ட திருமுறைப் பாடல்களில் அன்பே இறைநிலை என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது. திருமூலரின் “அன்பேசிவம்” என்ற சிந்தனை, மனிதர்களிடையே அன்பும் கருணையும் நிலவ வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறது. மேலும், பசித்தவர்களுக்கு உணவுஅளித்தல், பிறருக்குத் தொண்டு செய்தல், துன்பப்படுவோருக்கு உதவுதல், உயிர்களிடத்தில் இரக்கம் காட்டுதல் போன்ற அறச் செயல்கள் உயர்த்திப் பேசப்பட்டுள்ளன.

நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகளிலும் தன்னலமற்ற தொண்டு, தியாகம், ஈகை, அடியார்களைப் பேணுதல் போன்ற மனித நேயப்பண்புகள் வெளிப்படுகின்றன. பிறப்பு, செல்வம், சமூகநிலை ஆகிய வேறுபாடுகளைக் கடந்து இறை அன்பின் அடிப்படையில் மனிதர்களை அணுகும் சிந்தனையும் திருமுறை மரபில் காணப்படுகிறது. இதன் அடிப்படையில், பன்னிரு திருமுறைகளில் மனிதநேயம் என்பது தனி மனித அன்பை மட்டும் குறிக்காமல், சமூகநலன், உயிர் இரக்கம், சமத்துவம், பிறருக்கான சேவை, உலகநலன் ஆகியவற்றை உள்ளடக்கிய பரந்த சிந்தனையாக அமைந்துள்ளது. இம்மனித நேயக் கருத்துகள் இன்றைய சமூகத்திலும் அன்பு, ஒற்றுமை, அறம், சமூகப்பொறுப்பு ஆகியவற்றை வளர்ப்பதற்கு பொருத்தமானவையாக உள்ளன.

**திறவுச் சொற்கள்:** பன்னிருதிருமுறை, மனிதநேயம், அன்பு, இரக்கம், ஈகைஇ தொண்டு, சமத்துவம், சமூகநலம்.

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் பன்னிரு திருமுறைகள் தனிச் சிறப்புடையவை. இவை சைவ சமயத்தின் பக்தி உணர்வை வெளிப்படுத்தும் நூல்களாக இருந்தாலும்இ அவற்றில் மனித வாழ்க்கைக்குத் தேவையான அறநெறிகளும் வாழ்வியல் கருத்துகளும் நிறைந்து காணப்படுகின்றன. மனிதனை மனிதனாக மதித்தல்,

பிறருடைய துன்பத்தை உணர்தல், இயன்ற உதவியைச் செய்தல், உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல் போன்ற பண்புகள் மனித நேயத்தின்அடிப்படைகளாகும்.

ஆய்வின்நோக்கம்

இவ்வாய்வின் முக்கிய நோக்கங்கள், பன்னிருதிருமுறைகளில் காணப்படும் மனிதநேயச் சிந்தனைகளை அடையாளம் காணுதல். அன்பு, இரக்கம், ஈகை, தொண்டு, சமத்துவம் போன்றகருத்துகளை ஆராய்தல். நாயன்மார்களின் வாழ்க்கை வழியாக வெளிப்படும் மனித நேயப்பண்புகளை விளக்குதல். திருமுறைச் சிந்தனைகளின் இன்றைய சமூகப் பொருத்தத்தை எடுத்துரைத்தல்.

அன்பும் மனிதநேயமும்

மனிதநேயத்தின் அடிப்படைப்பண்பாக அன்பு கருதப்படுகிறது. திருமூலர் – திருமந்திரம், அன்புடைமை அதிகாரம் (பாடல் எண்: 270)

“அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்” என்று கூறுகிறார்.

இங்கு அன்பும் சிவமும் வேறுபட்டவை அல்ல, அன்பே சிவம் என்ற உயர்ந்த தத்துவம் முன்வைக்கப்படுகிறது. இதன் மூலம் மனிதர்களிடையே அன்புடன் வாழ்வதே உயர்ந்த ஆன்மீக வாழ்க்கை என்ற கருத்தைப் பெறமுடிகிறது.

இரக்கச் சிந்தனை

பிற உயிர்களின் துன்பத்தை உணர்ந்து அவர்களிடம் இரக்கம் காட்டுதல் மனித நேயத்தின் முக்கியக் கூறாகும். திருமுறைப்பாடல்களில் இறைவனின் அருள், உயிர்கள் மீது கருணை, துன்பத்தைப் போக்குதல் போன்ற கருத்துகள் பல இடங்களில் வெளிப்படுகின்றன. இரக்கம் என்பது வெறும் உணர்வாக இல்லாமல், பிறரது துன்பத்தை நீக்குவதற்கான செயலாகவும் அமைகிறது. இதனால் மனிதநேயம் செயல்முறை சார்ந்த பண்பாக திருமுறைகளில் வெளிப்படுகிறது. பன்னிரு திருமுறைகளில் இரக்கம்இ அருள், பிற உயிர்களிடம் கருணை ஆகியவை உயர்ந்த பண்புகளாகக் கூறப்படுகின்றன. இதற்கு திருநாவுக்கரசர் தேவாரத்தில்,

“அப்பன்நீ அம்மைநீ ஐயனும் நீ
-*அன்புடைய மாமனும் மாமியும் நீ... -தேவாரம் -திருநாவுக்கரசர் (பதிகம் 77இ பாடல் 1)

## விளக்கம்

இறைவன் தாயாகவும், தந்தையாகவும், உறவினராகவும் இருந்து உயிர்களுக்கு அன்பும் அருளும் செய்பவன் என்பதை அப்பர் உணர்த்துகிறார். தாயும் தந்தையும் தம் பிள்ளைகளிடம் இரக்கம் காட்டுவது போலஇ இறைவனும் உயிர்களிடம் அருளும் கருணையும் காட்டுகிறான். இதன் மூலம் மனிதர்கள் பிற உயிர்களிடம் அன்புடனும் இரக்கத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

ஈகையும் விருந்தோம்பலும்

பிறருக்குக் கொடுத்து உதவுதல் தமிழர் அறவாழ்வின் முக்கியமான பண்பாகும். பன்னிருதிருமுறை மரபில் அடியார்களுக்கு உணவு அளித்தல், விருந்தினர்களைப் பேணுதல், தேவையுடையவர்களுக்கு உதவுதல் போன்ற செயல்கள் உயர்ந்த அறமாகக் கருதப்படுகின்றன. இதன் மூலம் செல்வம் தனக்காக மட்டுமே பயன்படுத்தப்படாமல், பிறருடைய நலனுக்கும் பயன்பட வேண்டும் என்ற சமூகப் பொறுப்பு உணர்வு வெளிப்படுகிறது. சிறுத்தொண்ட நாயனாரின் விருந்தோம்பல் மற்றும் தியாகத்தை விளக்கும் பாடல்

“மெய்த்தொண்டர் தம் விருந்தினரை
வேண்டியவாறே உபசரித்தார்” -சேக்கிழார்-சிறுத்தொண்டநாயனார் புராணம்

## விளக்கம்

சிறுத்தொண்ட நாயனார் சிவனடியார்களை மிகுந்த அன்புடன் வரவேற்று, அவர்களுக்கு உணவு அளித்து உபசரிப்பதைத் தமது கடமையாகக் கருதினார். தம்மிடம் வந்த விருந்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகத் தன்னலம் பாராமல் செயல்பட்டார். இதன் மூலம் விருந்தோம்பல், தியாகம் போன்ற மனிதநேயப் பண்புகள் வெளிப்படுகின்றன.

தொண்டின் சிறப்பு

திருமுறை இலக்கியங்களில் “தொண்டு” சிறப்பான இடத்தைப் பெறுகிறது. இறைவனுக்குச் செய்யும் வழிபாட்டுடன், இறையடியார்களுக்கும் சமூகத்திற்கும் செய்யும் சேவையும் முக்கியத்துவம் பெறுகிறது. நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறுகள் தன்னலமற்ற தொண்டிற்கு பல எடுத்துக்காட்டுகளை வழங்குகின்றன. பிறருக்காக உழைத்தல், தேவையில் இருப்பவர்களுக்கு உதவுதல், தன்னுடைய வசதிகளைத் தியாகம் செய்தல் போன்றவை மனிதநேயத்தின் செயல்பாட்டு வடிவங்களாக அமைகின்றன. பன்னிரு திருமுறைகளில் இறைத்தொண்டுஇ அடியார்களுக்குத் தொண்டு செய்தல்இ பிறருக்கு உதவுதல் ஆகியவை சிறந்த பண்புகளாகப் போற்றப்படுகின்றன. குறிப்பாக திருநாவுக்கரசர் தமது வாழ்வையே தொண்டுக்கு அர்ப்பணித்தவர்.

“உழவாரப் படையால் உழவார்க்கு
உழவாரப் பணி செய்தார்”

அப்பர் கோயில்களைத் தூய்மைப்படுத்துதல், உழவாரப்பணி செய்தல் போன்ற தொண்டுகளை மேற்கொண்டார்.

சமத்துவச் சிந்தனை

பன்னிருதிருமுறை மரபில் பல்வேறு சமூகப் பின்னணிகளைச் சேர்ந்த அடியார்கள் போற்றப்படுகின்றனர். இதன் மூலம் பிறப்பு, செல்வம்இ சமூக நிலை போன்ற வேறுபாடுகளைக் கடந்து இறை அன்பும் நல்லொழுக்கமும் கொண்ட மனிதர்களுக்கு மதிப்பு வழங்கப்படுகிறது.

இதனால் மனிதனை அவனுடைய பிறப்பால் அல்ல, அவனுடைய பண்பாலும் செயலாலும் மதித்தல் என்ற சமத்துவ நோக்கு

வெளிப்படுகிறது. பன்னிரு திருமுறைகளில் சாதி, பிறப்பு, சமூக வேறுபாடுகளை விட இறை அன்பும் பக்தியும் உயர்ந்தவை என்ற சமத்துவச் சிந்தனை காணப்படுகிறது. இதற்கு திருநாவுக்கரசர் தேவாரத்தில் வரும் பாடலை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

“ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.”-தேவாரம்-6ஆம் திருமுறை(பாடல் எண்:10)

## விளக்கம்

ஒருவர் சமூகத்தில் எத்தகைய நிலையில் பிறந்தவராக இருந்தாலும், இறைவனிடம் உண்மையான அன்பும் பக்தியும் கொண்டிருந்தால் அவர் மதிக்கத்தக்கவர் என அப்பர் கூறுகிறார். பிறப்பு அல்லது சமூக நிலையை அடிப்படையாகக் கொண்டு மனிதர்களை உயர்வு–தாழ்வு பார்ப்பது கூடாது என்பதே இப்பாடலின் முக்கியக் கருத்து.

தியாகமும் தன்னலமின்மையும்

நாயன்மார்களின் வரலாற்றில் தியாகம் முக்கியமான பண்பாக விளங்குகிறது. இறை நம்பிக்கைக்காகவும் பிறருடைய நலனுக்காகவும் தங்களுடைய உடைமை, நேரம், உழைப்பு ஆகியவற்றை அர்ப்பணித்தவர்கள் பலர். இந்தத் தியாகச் சிந்தனை, “நான்” என்ற தனிமனிதப் பார்வையைத் தாண்டி “நாம்” என்ற சமூக உணர்வை வளர்க்கிறது. எனவே தியாகம் மனிதநேயத்தின் உயர்ந்த வெளிப்பாடாகக் கருதப்படுகிறது. பெரியபுராணத்தில் “தன்னலமின்மை” என்பதை விளக்குவதற்கு திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் வரும் இந்தப் பாடல் மிகவும் பொருத்தமானது.

“ காவளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக நல்கியும்நா னிலத்துள்ளோர்
யாவருக்குந் தவிராத ஈகைவினைத் துறைநின்றார்”.

-பெரியபுராணம் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் பாடல் எண்: 36

விளக்கம்

சேக்கிழார் இப்பாடலில் தன்னலமின்றி மக்களுக்கு செய்த தொண்டுகளை எடுத்துரைக்கிறார். அவர் பூஞ்சோலைகளை வளர்த்தார்; குளங்களைத் தோண்டினார்; தம்மை நாடி வந்தவர்களுக்கு அவர்கள் விரும்பியவற்றை மகிழ்ச்சியுடன் வழங்கினார். விருந்தினர்களை உபசரித்தார்; புலவர்களுக்கும் உதவினார். மேலும், உலகில் உள்ள அனைவருக்கும் பாகுபாடின்றி ஈகை செய்தார் என்று பாடல் கூறுகிறது. இதனால், தனக்காக மட்டும் பொருளைச் சேர்த்து வைத்துக் கொள்ளாமல்இ பிறரின் தேவையை உணர்ந்து வழங்குவது தன்னலமின்மை என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

உயிர்களிடத்தில் அன்பு

மனிதர்களிடம் மட்டுமன்றி அனைத்து உயிர்களிடத்திலும் அன்பும் கருணையும் காட்ட வேண்டும் என்ற சிந்தனை சைவ இலக்கிய மரபில் காணப்படுகிறது. உயிர் அனைத்தும் இறைவனுடன் தொடர்புடையது

என்ற பார்வைஇ உயிர்களை மதிக்கும் பண்பை வளர்க்கிறது. இன்றைய சூழலில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, விலங்குகள் மீதான பரிவு, இயற்கையைப் பாதுகாத்தல் போன்றவற்றுக்கும் இச்சிந்தனையைத் தொடர்புபடுத்திப் பார்க்க முடியும்.

உலகநலச் சிந்தனை

திருமூலரின்இ“யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்ற புகழ் பெற்ற கருத்துஇ தனக்குக் கிடைத்த நன்மை அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்ற பரந்த உலக நலச் சிந்தனையை வெளிப்படுத்துகிறது. தனிமனித நலனைக் கடந்து சமூகநலனையும் உலகநலனையும் விரும்புவது மனிதநேயத்தின் உயர்ந்த நிலையாகும்.

இன்றைய சமூகத்தில் திருமுறை மனிதநேயம்

இன்றைய உலகில் சாதி, மதம், பொருளாதார வேறுபாடு, வன்முறை, தனிமனிதப் போட்டி போன்ற பல்வேறு சிக்கல்கள் காணப்படுகின்றன. இத்தகைய சூழலில் திருமுறைகள் வலியுறுத்தும் அன்பு, இரக்கம், சமத்துவம், தொண்டு, ஈகை போன்ற பண்புகள் சமூக ஒற்றுமைக்கு வழிகாட்டுகின்றன. பிறரை மதித்தல், தேவை உடையவர்களுக்கு உதவுதல், சமூகப் பொறுப்புடன் செயல்படுதல், உயிர்களையும் இயற்கையையும் பாதுகாத்தல் போன்ற பண்புகளை வளர்ப்பதற்கு திருமுறைச் சிந்தனைகள் துணை புரிகின்றன.

முடிவுரை

பன்னிரு திருமுறைகள் பக்தி உணர்வை மட்டுமல்லாமல், மனிதவாழ்க்கையை உயர்த்தும் அறநெறிகளையும் எடுத்துரைக்கும் சிறப்புமிக்க தமிழ் இலக்கியங்களாகும்.“அன்பேசிவம்” என்ற திருமூலரின் கருத்து, மனிதநேயத்தின் அடிப்படை அன்பே என்பதைத் தெளிவுபடுத்துகிறது. ஆகவே பன்னிரு திருமுறைகள் சமய இலக்கியங்களாக மட்டுமன்றி, மனிதனை மனித நேயமிக்கவர்களாக உருவாக்கும் வாழ்வியல் இலக்கியங்களாகவும் விளங்குகின்றன. இவற்றின் மனிதநேயச் சிந்தனைகளை இன்றைய தலைமுறையினர் அறிந்து நடைமுறைப்படுத்துவது சமூக ஒற்றுமைக்கும் அறவாழ்வுக்கும் பயனளிக்கும் என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும்.

## துணைநூற் பட்டியல் (References)

1. பன்னிரு திருமுறை – தேவாரம் – திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் பாடல்கள்.
2. பன்னிரு திருமுறை வரலாறு – சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகள்
3. ச.வே. சுப்பிரமணியன் – பன்னிரு திருமுறைகள் – மணிவாசகர் பதிப்பகம்
4. பெரியபுராணம் — சேக்கிழார் — ஸ்ரீ கணேச அச்சியந்திர சாலை.
5. பன்னிரு திருமுறைச் சிந்தனைகள் — மு. மீனாட்சி சோமசுந்தரம்.
6. பன்னிரு திருமுறை — முனைவர் சோ.ந. கந்தசாமி — மணிவாசகர் பதிப்பகம்.

**ARTICLE 58 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 126–136

# கள்ளியங்காட்டு மாரியம்மன் திருக்கோவில்

## Kalliyankattu Mariamman Temple

*ஆய்வாளர்:* **ர. தமிழ்தானு**
முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் – 636 011.
tamildhanu2001@gmail.com

*நெறியாளர்:* **முனைவர் ம. சுந்தரமூர்த்தி**
பேராசிரியர்
தமிழ்த்துறை
பெரியார் பல்கலைக்கழகம்
சேலம் – 636 011.

**Abstract**

Humans inhabit settlements established in suitable locations across this vast world. While living there, they have also lived in awe and fear of the natural forces surrounding them—earth, water, air, space, and fire. Believing in the existence of a power far greater than their own, they began to worship these elements as deities. Initially, they worshipped the trees and vegetation around them; later, they began planting stones, regarding them as divine, and worshipping them. They found fulfillment in offering the flowers and fruits they gathered to these stones. Similarly, they rejoiced in offering the meat from their hunts to the gods. These practices continue to this day in temples, observed as acts of fulfilling vows or making supplications. In modern times, keeping pace with civilizational progress, people sculpt idols, assign them specific names based on their attributes, and worship them. This is how deities and the associated festival traditions evolved. Against this backdrop, this article explores the history and festivals of the Kalliyankattu Mariamman Temple in the Gobi region.

**Keywords:** Temple – Cactus thickets – Kalyana Vinayagar – Flagstaff – Memorial stone – Horse statue.

**திறவுச் சொற்கள்:** கோவில் - கள்ளிக்காடுகள்- கல்யாண விநாயகர் - கொடி மரம்- தூரிக்கல்-குதிரைச்சிலை.

## முன்னுரை

பரந்து விரிந்த இவ்வுலகில் ஆங்காங்கு தமக்கு உகந்த இடங்களில் குடியேற்றங்களை அமைத்துக்கொண்டு மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர். அப்படி வாழ்ந்து வரும் மனிதர்கள் தம்மைச் சுற்றியுள்ள இயற்கைச் சீற்றங்களான நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவற்றைக் கண்டு அஞ்சியும் வாழ்ந்து வருகின்றனர். அவற்றைக் கண்டு அஞ்சிய மனிதர்கள் தமது ஆற்றலுக்கும் விஞ்சிய சக்தி ஏதோ ஒன்று இருப்பதாக எண்ணி அவற்றையே தெய்வமாக வழிபட்டு வருகின்றனர். முதலில் தன்னைச் சுற்றியுள்ள மரம், செடி கொடிகளையே வழிபட்டுக் கொண்டிருந்தவர்கள், பின் ஒரு கல்லை நட்டு அக்கல்லை தெய்வமெனக் கருதி வழிபட்டனர். அந்தக் கல்லிற்கு அவர்கள் தங்களுக்குக் கிடைத்த மலர், கனிகளைச் சாற்றி வணங்கி இன்பமுற்றனர். அதேபோன்று தாங்கள் வேட்டையாடிய மாமிசங்களைக்

கடவுள்களுக்கு படையலிட்டும் மகிழ்ந்தனர். அவையே இன்றளவும் தொடர்ந்து நேர்த்திக்கடனாகவோ, வேண்டுதல்களாகவோ கோவில்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. தற்காலச் சூழலில் நாகரிக வளர்ச்சிக்கு ஏற்ப சிலைகளை வடித்து அவற்றிற்கு காரணகாரியப் பெயர் சூட்டி வழிபட்டு வருகின்றனர். இவ்வாறாகத் தெய்வங்களும் அவற்றிற்கான திருவிழா அமைப்பு முறைகளும் உருவாகியது. அதன் அடிப்படையில் கோபி வட்டாரத்தில் உள்ள கள்ளியங்காட்டு மாரியம்மன் கோவிலின் வரலாறு மற்றும் திருவிழாக்கள் குறித்த செய்திகளை விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

## கோவில் அமைவிடம்

கோபிசெட்டிபாளையத்திலிருந்து ஈரோடு செல்லும் சாலையில் எட்டாவது கிலோ மீட்டர் தொலைவில் ஒத்தக்குதிரை என்னும் ஊரில் அமைந்துள்ளது ‘கள்ளியங்காட்டு மாரியம்மன் திருக்கோவில்’.

## மாரியம்மன் பெயர்க் காரணம்

நாட்டுப்புறத் தெய்வங்களில் முதன்மை பெறுவது மாரியம்மன் தெய்வம் ஆகும். கோடை காலங்களில் ஏற்படும் வெப்பத்தால் மக்களுக்கு ‘அம்மை’ போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. அம்மை போன்ற கோடைகால நோய்கள் வராமல் தடுக்க மழை வேண்டி வழிபடத் தொடங்கிய கடவுளே ‘மாரியம்மன்’ எனப்படுகிறது. ‘மாரியம்மன்’ என்பதிலுள்ள ‘மாரி’ என்பது ‘மழை’ என்ற பொருளைக் குறிப்பதாகும். மாரியம்மன் கோவில்களில் பல நோய்களைப் போக்கும் ‘வேம்பு’ மரமே தல விருட்சமாகக் காணப்படுகிறது. தாய்த் தெய்வங்களில் ஒன்றாகக் கருதப்படும் மாரியம்மனுக்கு “வெயிலுகந்தாள்”1 என்ற பெயர் வழங்கிய செய்தியை தொ.பரமசிவத்தின் ‘தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும்’ என்னும் நூலின் வழி அறிய முடிகின்றது. (ப.எண்-15)

மாரியம்மன் குறித்த தொன்ம வரலாறு

மாரியம்மன் குறித்த வரலாற்றில் தொன்மக் கதைகளும் நாட்டுப்புற நம்பிக்கைகளும் கலந்துள்ளன.

“ரைவத ராஜன் என்ற மன்னனின் மகள் ரேணுகாம்பாள். அவளுக்கும் ஜமதக்கினி முனிவருக்கும் மணமாகிறது. இந்த இணையருக்கு பரசுராமன் என்ற மகன் பிறக்கின்றான். ரேணுகா தன் கற்பின் ஆற்றலால் அபாரமான சக்தியைக் கொண்டிருக்கிறாள். அவள் வெறுங்கையோடு ‘பத்ம சரஸ்’ என்னும் சுனைக்கு சென்று தனது சக்தியால் தண்ணீரையே ஒரு குடமாகச் செய்து அக்குடத்தில் தன் கணவரின் சடங்குகளுக்கு வேண்டிய நீரைக் கொண்டு வருவாள்.

வழக்கம் போல் அச்சுனைக்கு நீர் கொண்டுவர அவள் சென்ற போது அங்கு வானில் அழகு வாய்ந்த கந்தர்வன் ஒருவனைக் காண்கிறாள். இதனால் அவளது கற்பினால் பெற்ற ஆற்றலை இழக்கிறாள், முன்பு போல் அவளால் நீரைக் கொண்டு குடம் செய்ய முடியவில்லை. இதை அறிந்த ஜமதக்கினி கோபம் கொண்டு மகன் பரசுராமனை அழைத்து அவனது தாயின் (ரேணுகாம்பாலின்) தலையைத் துண்டிக்கும்படி

கட்டளையிடுகிறார். அவனும் தந்தையின் கட்டளையை நிறைவேற்றுகின்றான். இதனால் நிம்மதியடைந்த ஜமதக்கினியும் மகனிடம் என்ன வரம் வேண்டுமென கேட்கின்றார். அதற்கு அவன் தன் தாயார் உயிர் பெற வேண்டும் என்பதையே வரமாகக் கேட்கின்றான்.

ஜமதக்கினியும் உயிர்பிக்கத் தன்னிடம் உள்ள அற்புத சக்தி வாய்ந்த தீர்த்தத்தை மகனிடம் கொடுத்து மனைவியை உயிர்பிக்கச் சொல்கின்றார். பரசுராமனும் அந்த தீர்த்தத்தை எடுத்துக்கொண்டு தன் தாயின் தலை துண்டிக்கப்பட்ட இடத்திற்கு செல்கின்றான். அங்கு தன் தாயின் தலையைத் துண்டிக்கும் முன் அதைத் தடுக்க வந்த பறையர் பெண் ஒருவரின் தலையையும் துண்டித்திருப்பான். உயிரற்றுக் கிடக்கும் இருப்பெண்களின் தலைகளையும் மாற்றிப் பொருத்தி உயிர்ப்பித்து விடுகிறான். இருவரில் யாரைத் தாயென்று அழைப்பது என்று தெரியமாலிருக்க, தந்தை (ஜமதக்கினி) தலைப்பகுதி எவர் உடம்பில் இருக்கின்றதோ அவரே உன் தாய் என்று கூறிவிடுகின்றார். இதில் கொல்லப்பட்டு மீண்டும் உயிர் பெற்ற மற்றொரு பெண்ணின் பெயரே ‘மாரியம்மன்’ என்று வழங்கப்படுவதாக செவிவழி செய்திகள் கூறுகின்றன”. “வண்ணார் வீட்டில் வளர்க்கப்பெறும் முளைப்பாரியோடு வணங்கப்பெறும் ரேணுகாதேவி என்னும் தெய்வம் மாரியம்மனின் மாற்று வடிவம் என்று கருதப்படுகின்றது”2. இக்குறிப்பு ‘தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும்’ என்னும் நூலில் பக்கம் எண் 19-ல் கூறப்பட்டுள்ளது.

## கோவில் தோன்றிய வரலாறு

“கோவிலின் சுற்று வட்டாரத்தில் வசிக்கும் மக்கள் தங்களது ஆநிரைகளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்வது வழக்கம். ஊரின் மையப் பகுதி கள்ளிக்காடுகள் சூழ்ந்து காணப்படுகின்றது. அப்பகுதி மக்கள் கள்ளிக்காடுகளுக்கு இடைப்பட்ட மேய்ச்சல் நிலங்களில் கறவை மாடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதில் ஒரு கறவை மாடு மட்டும் மாலை பால் கறக்கையில் பால் சுரப்பதில்லை. ஏன் இந்த கறவை மாடு இப்படி செய்கின்றது என்பதைக் கண்டுபிடிக்க, அடுத்த நாள் மேய்ச்சல் நிலத்திற்கு சென்று கறவை மாட்டின் செயலை கவனித்தனர். அக்கறவை மாடு பன்னிரெண்டு மணிக்கு போல் அங்கிருந்த ஒரு கல்லின் மேல் பால் பொழிந்து விடுவது தெரியவந்தது.

கறவை மாடு அங்கு ஏன் பால் பொழிகிறது என்பதை அறிய கடப்பாறை, மண்வெட்டி கொண்டு மாடு பால் பொழிந்த இடத்தைத் தோண்டிப் பார்த்தனர். அவ்விடத்தில் ஒரு கல் மண்ணில் பாதி புதைந்த வண்ணம் இருந்தது. அக்கல்லை முழுவதுமாகப் பெயர்த்தெடுக்க முற்பட்டனர். கல்லைப் பெயர்த்தெடுக்க மண்ணைப் பறைக்கும் வேலையில் அக்கல்லின் மீது மண்வெட்டி பட்டு, காயம் ஏற்பட்டுவிடுகிறது. காயம் ஏற்பட்ட இடத்திலிருந்து இரத்தமாக வழிகிறது.

இரத்தம் வழிந்தோடிய பகுதி பள்ளமாக மாறியது. அந்த பள்ளம் இன்றும் கோவிலின் பின் புறம் உள்ளது. இந்நிகழ்விற்குபின் அக்கல்லையே அப்பகுதி மக்கள் தெய்வமெனக் கருதி

வழிபடத்தொடங்கினர். கள்ளிக்காடுகள் சூழ்ந்த பகுதியில் இக்கோவில் அமைந்திருப்பதால் கள்ளியங்காட்டு மாரியம்மன் கோவில் என்று வழிபடப்படுகிறது. இக்கோவில் சுமார் 'முந்நூறு ஆண்டுகள்' பழமை வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது"3 என்று தகவலாளர் மணி கூறுகின்றார்.

"கோவில் தோன்றிய காலத்தில் ஓலை சாலை மட்டுமே அமைத்து கோவில் நடத்தி வந்தனர். அதன் பின் பல வருடங்கள் கழித்து அம்மனுக்கு கோவில் கட்டலாம் என முடிவு செய்து அம்மனிடம் வாக்கு கேட்டுள்ளனர். அதற்கு அம்மன் வாக்குக் கொடுக்கவில்லை, மீண்டும் மீண்டும் வாக்கு கேட்கவே பத்துக்கு பத்து இடம் விட்டு கோவில் எழுப்புமாறு வாக்கு கொடுத்ததாகக் கூறுகின்றனர். அதன்பின் சுவர் எழுப்பி, கையோடு பதித்து கோவில் கட்டி வழிபடத் தொடங்கியுள்ளனர். இவ்வாறு வழிபடத் தொடங்கிய பின்னரே 1996-ல் கோபுரம் எழுப்பி அம்மனை வழிபடுவதாகத்"4 தகவலாளர் ராசாமணி கூறுகிறார்.

## கள்ளியங்காட்டு மாரியம்மன் பெயர்க்காரணம்

இக்கோவிலானது "கள்ளிக்காடுகள் சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளதால் கள்ளிக்காட்டு மாரியம்மன் என்று பெயர் பெற்று அப்பெயர் காலப் போக்கில் 'கள்ளியங்காட்டு மாரியம்மன்' என வழங்கப்படுவதாகத் தகவலாளர் தேவி கூறுகின்றார்"5. "அம்மை, கண் நோய்களுக்கு சிறப்பு பெற்ற தளமாக இருப்பதால் அம்மனை 'வேப்பிலைக்காரி' எனவும் அழைப்பதாகத் தகவலாளர் செந்தில் குமார் கூறுகின்றார்"6.

கோவிலின் அமைப்பு

## கல்யாண விநாயகர்

கிழக்கு நோக்கி அமைந்துள்ள இக்கோவிலின் நுழைவுவாயிலில் கல்யாண விநாயகப் பெருமான் சிலை அமைந்துள்ளது. திருமணத்தில் தடை ஏற்படுவோர் இவ்விநாயகரை வேண்டி, அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்தினால் திருமணத்தில் ஏற்பட்ட தடை நீங்கி, திருமணம் விரைவில் கைக்கூடுவதாக மக்களிடையே நம்பிக்கை நிலவுகின்றது. புதுமணத் தம்பதிகளுக்குக் கல்யாண விநாயகர் முன்பேத் திருமணம் நடைபெறுகின்றது. கோவிலில் திருமணம் முடிந்த பிறகு வரவேற்பு விருந்திடும் வழக்கம் நம்மக்களிடையே காணப்படுவதால், கோவில் நிர்வாகமே மண்டபம் ஒன்று கட்டியுள்ளது.

## கொடி மரம் & தூரிக்கல்

கோவிலின் உள்ளே நுழைந்ததும் அம்மனுக்கு முன்பாகக் கொடிமரமும் அதற்கு முன்பாகத் தூரிக்கல்லும் அமைந்துள்ளது. அம்மனை வழிபட்ட பின்னர் பிரகாரத்தை மூன்று முறை வலம் வந்து தூரிக்கல்லை அசைத்து (ஆட்டி) வேண்டுதலை அம்மன் முன் செலுத்துகின்றனர்.

## குதிரைச்சிலை

கோவில் பிரகாரத்தின் வடக்கில், இக்கோவில் தர்மகர்த்தா தன் நினைவாக கோவிலுக்கு வழங்கிய சிலை வைக்கப்பட்டுள்ளது. அச்சிலை பார்ப்பதற்கு ஒரு விவசாயி தன் கையில் குதிரையைப் பிடித்திருப்பது போன்ற வடிவத்தில் வடிவமைத்துள்ளனர்.

## முனியப்பன் சிலை

அதைத் தொடர்ந்து கோவில் பிரகாரத்தின் வடக்கில் இரண்டு முனியப்பன் சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை செம்முனி மற்றும் மகாமுனி ஆகும். மக்கள் தங்களுக்கு நேரும் துன்பங்களை முனிகளின் துணைகொண்டு தீர்த்து வாழ்கின்றனர். கோவிலில் பெரும்பூசை எனும் பூசை முடிந்த பிறகு முனிகளின் முன் தாயத்து (எந்திரங்கள்) மந்திரித்து தரப்படுகிறது.

## கருப்பராயன் சுவாமி

அவற்றைத் தொடர்ந்து, பிரகாரத்தின் வடக்கில் இருளிலும் பயத்திலுமிருந்து மக்களைக் காக்கும் கருப்பராயன் சுவாமி அமைந்து மக்களைக் காத்து வருகின்றார்.

## நாகர் சிலைகள்

வயல்வெளிகளில் இருக்கும் எலிகளைக் கட்டுப்படுத்தி விவசாயத்தைக் காப்பதில் நாகங்களின் பங்கு அதிகம் என்பதால் மக்கள் தங்களின் வாழ்வாதாரத்தைக் காக்கும் தெய்வமான அம்மனுடன் நாகர் சிலைகளையும் வைத்து வழிபடுகின்றனர். நாகர் சிலைகள் பிரகாரத்தின் வடக்கில் அமைந்துள்ளது. நாகர் சிலைகளை ராகு கேது என்றும் கூறுவர். இவை மக்களுக்கு நேரும் துன்பங்களிலிருந்து மக்களைக் காப்பதாகக் கூறுகின்றனர்.

## கன்னிமார் சிலைகள்

முனி, கருப்பராயன், நாகர் சிலைகளைத் தொடர்ந்து பிரகாரத்தின் வடக்கு நோக்கி கன்னிமார் சிலைகள் அமைந்துள்ளது. அம்மன் கிராமத்தின் தாய் என்றால், கன்னிமார்கள் தாய்மையின் துணையாற்றலாக செயல்படுகிறார்கள். வம்சம் விருத்தி அடையவும், குழந்தை பேறு கிடைக்கவும், குடும்ப ஒற்றுமைக்காகவும் மக்கள் கன்னிமார்களை வழிபாடு செய்கின்றனர்.

## விநாயகர் சிலை

கோவில் பிரகாரத்தின் தென்மேற்கில் கிழக்கு நோக்கி விநாயகர் சிலையும், விநாயகர் சிலையிலேயே ஒன்றிணைந்த அதன் வாகனமான மூஞ்சூறு உருவமும் செதுக்கப்பட்டுள்ளது சிறப்பிற்குரியதாகக் கருதப்படுகிறது. இவரை வணங்கினால் செல்வம் பெருகும் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. இவ்விநாயகர் ‘குபேர விநாயகர்’ எனவும் அழைக்கப்படுகின்றார். இவரே ஆதியிலிருந்து வழிபடுகின்ற விநாயகர் எனவும் கூறப்படுகிறது.

## சிவலிங்கம்

விநாயகரைத் தொடர்ந்து தென்மேற்கில் கிழக்கு நோக்கி சிவலிங்கம் அமைந்துள்ளது. சிவலிங்கத்திற்கு எதிரில் சிவனின் வாகனமான நந்தி சிலை அமைந்துள்ளது. சிவ சக்தியின் வழிபாட்டுத் தலமாகவும் உள்ளது. அம்மன் கோவிலில் சிவலிங்கத்தின் சிலை இருப்பது சிறப்பிற்குரியதாகக் கருதப்படுகிறது. கரியகாளி அம்மனை வணங்கினால் கணவன் மனைவி இடையே உள்ள மனக்கசப்புகள் நீங்குவதாகவும் நம்பப்படுகிறது.

## சின்ன மாரி, பெரிய மாரி

பிரகாரத்தின் கிழக்கு நோக்கி சின்ன மாரி மற்றும் பெரிய மாரி சிலைகள் அமைந்துள்ளது. இவர்கள் அம்மனுடன் சேர்ந்து மக்களைக் காத்து வருகின்றனர். கோவிலில் இவர்களுக்கென தனி ஊஞ்சலும் அமைத்துள்ளனர். சின்ன மற்றும் பெரிய மாரி ஒன்றிணைந்து மக்களுக்கு நேரும் துன்பங்களையும், அம்மை போன்ற உடல் நோய்களையும், குடும்பத்தில் உள்ளவர்களின் கருத்து வேறுபாடுகளையும் நீங்கச் செய்கின்றன.

## கள்ளியங்காட்டு மாரியம்மன்

கருவறையில் எழுந்தருளியுள்ள மாரியம்மன் சுயம்புவாகத் தோன்றியதாகும். கடப்பாறை பட்டுக் காயம்பட்ட இடத்தில் தினந்தோறும் வேப்பிலை அரைத்துப் பூசிய பிறகே பூசைகள் நடைபெறுகின்றன. கருவறை வாயிலின் இருபுறமும் பாலத் துர்க்கைகளின் சிலைகள் வாயிற்காவலர்களாக உள்ளன. கோவிலின் சுவர்கள் பெரும்பாலும் மண்ணால் கட்டப்பட்டுள்ளன. கோவிலில் 2023-ம் ஆண்டு நடைபெற்ற குடமுழுக்கு விழா குறித்த குறிப்புகள் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

தல விருட்சம்

ஊஞ்ச மரம் (காசு ஊஞ்சை), ஆல மரம் ஆகிய மரங்கள் கோவிலின் தல விருட்சங்களாக உள்ளன.

## நீர் விருட்சம்

கோவிலுக்கென்று தனிக்கிணறு வெட்டியுள்ளனர். கோவிலின் பயன்பாட்டிற்கும், சுற்றுவட்டாரத்தில் உள்ள கோவில்களான தாசம்பாளையம் மாரியம்மன் கோவில், கோமாளிகரை செல்லாண்டியம்மன் கோவில் போன்ற கோவில்களுக்குத் திருவிழாக் காலங்களில் கம்பம் குளிப்பாட்டுவதற்கு இக்கோவிலின் கிணற்று நீரையே பயன்படுத்துகின்றனர்.

## திருவிழா

‘‘விழா’ என்னும் திறந்த வாசல் வழியே தான் நம் நாட்டு மக்களை அறித்துகொள்ள முடியும்’ என்கிறார் இரவீந்தரநாத் தாகூர். தமிழர் சமுதாயம் பல்வேறு காரணங்களால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்த போதும் அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களே ஆகும். இச்செய்தியைக் குறுந்தொகையின் “சாறுகொள்

ஊரின் புகல்வேன் மன்ற”7 (குறும்.41:2) என்ற வரிகள் மூலம் அறிய முடிகின்றது. இதில் வரும் ‘சாறு’ என்னும் சொல் ‘விழாவினைக்’ குறிக்கின்றது.

நாற்பத்தியெட்டு கிராம மக்களால் வழிபடப்படும் இக்கோவில் திருவிழா வெகுவிமர்சையாகக் கொண்டாடப்படுகிறது. திருவிழாவானது ஆண்டு தோறும் வருகின்ற சித்திரை மாதம் வியாழன் கிழமையன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

### பூச்சாட்டுதல்

சித்திரை மாதம் புதன் கிழமை அன்று அம்மனுக்கு பூச்சாட்டுதல் நடைபெறுகின்றது. அம்மனிடம் வாக்கு கேட்டப் பின்னரே பூச்சாட்டுதலானது நடைபெறுகின்றது.

### கம்பம் நடுதல்

பூச்சாட்டுதலுக்கு அடுத்த புதன் கிழமை காலை வேளையில் ஊர் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கம்பம் வெட்டச் செல்கின்றனர். அம்மன் பூசாரியின் உடலில் வந்து இந்த மரத்தை தான் வெட்ட வேண்டுமென்று வாக்கு கொடுப்பதாகக் கூறுகின்றனர். பின் வெட்டி வந்த மரம் கம்பமாக தாயர் செய்யப்பட்டு பூசை செய்து நடப்படுகிறது. கம்பம் நடுதல் நிகழ்வின் போது பூசணிக்காயை குழியில் இடுதல் என்பது வழக்கத்தில் உள்ள ஒன்றாகும்.

### அம்மை அழைத்தல்

கம்பம் நடுதல் முடிந்து, வருகின்ற புதன் கிழமை அம்மை அழைத்தல் நிகழ்ச்சி நடைபெறுகின்றது. பூந்தேர் சூடித்து, போலக் கூடை எடுத்து வந்து குதிரைத் துளுக்கு கேட்ட பின்னரே அம்மை அழைத்தல் நிகழ்வானது நடைபெறுகின்றது. அம்மை அழைத்தலானது வெட்டுக்கிராய் என்னும் பகுதியில் உள்ள தெய்வத்தினையும் (அம்மை அழைப்பதற்கு முதன்மை தெய்வம்), சுற்று வட்டாரத்தில் உள்ள மற்ற தெய்வங்களின் பெயரினையும் சொல்லி அழைத்து வருவதாகும். அம்மை அழைத்து வந்த பிறகு ஊஞ்சலில் அம்மன் துதி பாடல்கள் பாடப்படுகின்றன.

### பொங்கல் வைத்தல் மற்றும் கிடாய் வெட்டுதல்

திருவிழாவன்று காலை பொங்கல் வைத்து அம்மனை வழிபடுகின்றனர். பொங்கல் வைத்தல் நிகழ்வானது காலங்காலமாக தமிழர் பண்பாட்டில் முக்கியம் இடம் பெற்று வருகின்றது. நம் முன்னோர்கள் தோட்டத்தில் விளைச்சல் பெருகவும், வீட்டில் இருப்பவர்கள் நோய்நொடி இன்றி சுகத்துடன் வாழவும், தங்களை நம்பி உள்ள கால்நடைகளின் சுகம் பேனவும் வேண்டி பொங்கல் வைத்து, கிடாய் பலியிட்டு வழிபட்டு வருகின்றனர். அதையே இன்றளவும் நாம் கடைபிடித்து பொங்கல் வைத்து, உயிர் பலியிட்டு வழிபாடு செய்கின்றோம். உயிர் பலியிடுவதன் மூலம் அம்மனின் கோபம் குறைவதாகவும் கூறப்படுகின்றது. காலையில் இருந்தே கிடாய் வெட்டுதல் என்பது தொடங்குகின்றது.

### பெரும் பூசை

பொங்கல் வைத்து கிடாய் வெட்டிய பிறகு மதியம் பன்னிரெண்டு மணியளவில் 'பெரும் பூசை' நடைபெறுகின்றது. பெரும் பூசையின் போது பழம், தேங்காய், வெற்றிளை, பாக்கு, பொங்கல் ஆகியவற்றினைப் படைத்துப் பூசை செய்கின்றனர். பெரும் பூசை செய்யும் பூசாரி துண்டுத்துணியால் வாயை கட்டிய வண்ணமே பூசை செய்கின்றார்.

### அலகு எடுத்து வரல்

திருவிழாவன்று மாலை ஐந்து முதல் ஆறு மணியளவில் சுற்று வட்டாரத்தில் உள்ள மக்களால் பதினாறு முதல் பதினெட்டு அடி வரை உள்ள அதாவது இரண்டு மனிதன் உயரம் அளவுள்ள அலகானது குத்தி மேள தாளத்துடன் எடுத்து வரப்படுகிறது. "ஆண்டு தவராமல் அம்மனுக்கு அலகு எடுத்து வந்து வேண்டுவதல் வைக்கும் வழக்கம் பின்பற்றப்படுவதாகத்"8 தகவலாளர் முருகன் கூறுகின்றார்.

### மாவிளக்கு

அலகு குத்தி வருபவர்களுக்குப் பின்னலேயே ஆறு முதல் ஏழு மணிக்குள் மாவிளக்கு எடுத்து வரும் பக்தர்கள் கோவிலுக்கு மாவிளக்கு எடுத்து வருகின்றனர். மாவிளக்கானது உரிய அலங்காரத்துடனும் வான வெடிக்கைகளுடனும் மேள தாளங்களுடனும் பிரமாண்டமாக எடுத்துவரப்படுகிறது. மற்ற அம்மன் கோவில்களைக் காட்டிலும் மாலை நேரங்களில் மாவிளக்கு எடுத்து வந்து அம்மனை வழிபடுவது என்பது மாறுபட்டதாக உள்ளது.

### அக்னி அபிஷேகம்

திருவிழா நாளின் இறுதிப் பூசையாக அமைவது அக்னி அபிஷேகம் ஆகும். அக்னி அபிஷேகம் முடிந்த பிறகு அம்மன் சன்னதி அடைக்கப்படுகிறது. பிறகு அடுத்த நாள் காலைவேளை பூசை நடைபெறுகிறது. அதன் பின் அன்றாட பூசைகள் வழக்கம் போல் நடைபெறுகின்றன.

### கம்பம் எடுத்தல்(அ)பிடுங்குதல்

மாவிளக்கு எடுத்து வந்து பூசை முடிந்த பின்னர் சுமார் ஏழு மணிக்கு மேல் கம்பம் பிடுங்குதல் நிகழ்வானது நடைபெறுகின்றது. இத்தனை நாட்கள் நாம் வழிபட்ட கம்பம் அம்மனின் கணவனாகக் கருதப்படுவதால் கம்பம் பிடுங்கும் போது அம்மன் திரையானது மூடப்படுகிறது. கம்பம் பிடுங்கும் முன் பூசாரி அருள் வாக்கு கூறுவது வழக்கமாக உள்ள ஒன்றாகும். அவ்வாக்கை அம்மன் கூறும் வாக்காகவே மக்கள் கருதுகின்றனர். பிடுங்கிய கம்பமானது கோவிலின் பின்னால் உள்ள குளத்தில் (வீசப்படுகிறது) இடப்படுகிறது.

### மஞ்சள் நீர் உற்சவம் (அ) மஞ்சள் நீராட்டு

திருவிழா முடிந்த அடுத்த நாள் மஞ்சள் நீர் உற்சவம் எனப்படும் மஞ்சள் நீராட்டு விழா நடைபெறுகின்றது. மதிய நேர பூசைக்கு பின் மஞ்சள் நீராட்டு விளையாடப்படுகிறது. மதியம் ஒரு மணிக்கு மேல் ஆரம்பித்து நான்கு மணி வரை மஞ்சள் நீராடல் விளையாடப்படுகிறது.

மஞ்சள் நீராட்டானது சிறியவர் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் மகிழ்ச்சியாக விளையாடப்படுவதாகும். மஞ்சள் நீரின் போது அம்மனைத் தேரில் அலங்காரம் செய்து கோவிலை மூன்று முறை வலம் வந்து பூசை செய்யப்படுகின்றது. அப்பூசையின் போது பொறி, கடலை மற்றும் மிளகு வீசி பூசை செய்யப்படுகிறது.

## மறுபூசை அம்மன் ஊஞ்சல் உற்சவம்

திருவிழா முடிந்து வருகின்ற திங்கள் கிழமை அன்று மறுபூசை நடைபெறுகிறது. அம்மனின் கோபம் தனிந்து மகிழ்ச்சியடைந்து மீண்டும் மக்களை நோய் நொடிகளிலிருந்து காத்தருள வேண்டி இம்மறுபூசை நடைபெறுவதாகவும் நம்பப்படுகின்றது. மறுபூசை அன்று அம்மனுக்கு சிறப்பு பூசைகள் நடைபெறுகின்றன.

## கோவிலின் சிறப்பு

நாள்தோறும் ஒரு கால வேளைப் பூசை நடைபெற்று வருகின்றது. கயிறு மந்திரித்தல், எந்திரம் கட்டுதல் முதலிய வைத்திய முறைகள் கோவிலில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கோவிலில் வாக்கு கேட்டல் நிகழ்வு சிறப்பாக நடைபெறுகிறது. அம்மன் வாக்கு கொடுத்தால் “கண்களில் குறைபாடு உள்ளவர்கள், கண்களில் பூ விழுந்தவர்கள் - காலை நேரத்தில் அம்மன் முன் வேப்பிலை அரைத்து அதில் வரும் நீரை கண்களில் விட்டு செல்கின்றனர், பின் மீண்டும் மாலையில் கோவிலுக்கு வந்து, அம்மனுக்கு பூசை செய்து வழங்கும் தீர்த்தத்தைக் கண்களில் ஒத்திக் (ஊற்றி) கொள்கின்றனர். இப்படி செய்வதால் கண்களில் ஏற்பட்ட குறைபாடு முழுவதும் நீங்குவதாக மக்கள் நம்புகின்றனர்”9 என்று தகவலாளர் சிவக்குமார் குறிப்பிடுகின்றார். கண் தொடர்பான நோய்களுக்கு மருந்து கண்டுபிடிக்கப்படாத காலத்திலிருந்தே கள்ளியங்காட்டு மாரியம்மன் கோவிலில் கண் வைத்திய முறை நடைபெற்று வருவது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

“அம்மை போன்ற வெப்பு நோய்கள் விரைவில் குணமடைய இக்கோவிலுக்கு வந்து வேப்பிளை பத்திரி வாங்கிச் சென்று கைப்படாமல் அம்மை மேல் பூசினால் விரைவில் குணமடைகின்றது”10 என்று தகவலாளர் காளியப்பன் கூறுகின்றார்.

திருமண வாக்கு கேட்டல் என்பது சிறப்பாகக் கருதப்படுகிறது. ஏனெனில் அம்மன் வாக்கு கொடுத்து முடித்த திருமணத்தில் எந்த குறையும் வந்ததில்லை என்று பக்தர்கள் கூறுகின்றனர்.

பெரும் பூசை முடிந்த பிறகு உடல் நலம் சரியில்லாதவர்கள், கை கால்களில் குறைபாடு உடையவர்கள், இரவில் ஏதேனும் உருவத்தை கண்டு பயந்தவர்களுக்கு அவர்களின் குறைகளுக்கு ஏற்ப சிவப்பு மற்றும் பச்சை நிறக் கயிறுகளும், எந்திரங்களும் மந்திரித்து தரப்படுகின்றது. குழந்தைகளுக்கு தாயத்து மந்திரித்து தரும் வழக்கமும் உள்ளது. அதேபோன்று கால்நடைகளுக்கு உடல்நிலை சரியில்லாத போது அவைகளை அழைத்து வந்து எந்திரம் கட்டும் வழக்கமும் நிலவுகிறது.

திருவிழா நாட்களிலென்று மட்டுமில்லாமல் வாரந்தோறும் செவ்வாய் கிழமை அம்மனுக்கு வேண்டுதல் வைத்து தீர்த்தம் வழங்குபவர்கள் தீர்த்தம் வழங்குகின்றனர்.

திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய நாட்களில் எந்த நாளில் வேண்டுமானாலும் கிடாய் வெட்டும் வழக்கம் உள்ளது. இந்நிகழ்வு மற்ற கோவில்களைக் காட்டிலும் இக்கோவிலில் வேறுபட்டதாகக் காணப்படுகிறது.

அம்மன் கோவில் என்பதால் அம்மனுக்கான சிறப்பு நாட்களில் சிறப்பு விழாக்களும், சிவன், விநாயகர் போன்ற ஆண் தெய்வங்களுக்கு அம்மாவாசை, பௌர்ணமி, பிரதோசம் போன்றவையும் சிறப்பாகக் கருதப்படுகிறது.

## முடிவுரை

பரந்து விரிந்த உலகில் தனித்து வாழும் மனிதன் இயற்கை சீற்றங்களைக் கண்டு அஞ்சி வாழ்ந்தான். அப்படி அஞ்சி வாழ்ந்தவன் கடவுள் வழிபாட்டில் ஈடுபடத் தொடங்கினான். வழிபாடு என்னும் ஒன்று மக்களிடையே தோன்றிய பின் வருடம் ஒரு முறை அக்கடவுளுக்கு விழா எடுத்து சிறப்பிக்கும் வழக்கம் தோன்றியது. விழா என்னும் திறந்த வாசல் வழியே தான் நம்நாட்டு மக்களை நாம் அறிந்து கொள்ள முடியும் என்பதை பலரும் கூறியுள்ளனர். அப்படித் தோன்றிய விழாக்களைத் தொடர்ந்தே சடங்குகள் தோன்றின எனலாம். இவ்வறே கடவுள் வழிபாடும் நம்பிக்கையும் பரவியது. இக்கோவிலில் காணப்படும் கண் வைத்திய முறை மற்ற கோவில்களைக் காட்டிலும் வேறுபட்ட ஒன்றாகவேக் கருதப்படுகின்றது.

## துணைநூற் பட்டியல் (References)

1. தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும்: தொ.பரமசிவம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 600 050.
2. பழந்தமிழர் வாழ்வும் வளர்ச்சியும்: சாமி. சிதம்பரனார், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை - 600 050.
3. குறுந்தொகை மூலமும் உரையும் (பல்வகை ஆய்வுப் பகுதிகளுடன்): தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சை – 613 010
4. நாட்டுப்புற இயல் ஆய்வு: முனைவர் சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை – 600 108.

## தகவலாளர் பட்டியல்

| வ.எண் | பெயர் | வயது | பாலினம் | தொழில் | ஊர் |
|---|---|---|---|---|---|
| 1. | மணி | 65 | ஆண் | சுயதொழில் | தாசம்பாளையம் |
| 2. | ராசாமணி | 63 | ஆண் | விவசாயம் | தாசம்பாளையம் |
| 3. | தேவி | 55 | பெண் | இல்லத்தரசி | ஒத்தக்குதிரை |
| 4. | செந்தில் குமார் | 57 | ஆண் | மருந்தகம் | ஒத்தக்குதிரை |
| 5. | முருகன் | 65 | ஆண் | இஸ்திரி | தாசம்பாளையம் |
| 6. | சிவக்குமார் | 50 | ஆண் | விவசாயம் | ஒத்தக்குதிரை |
| 7. | காளியப்பன் | 60 | ஆண் | விவசாயம் | ஒத்தக்குதிரை |

**ARTICLE 59 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 137–144

# குறுந்தொகைப்பாடல்களில் உள்ளுறை வழியாக வெளிப்படும் தலைவன் தலைவி

## The Hero and Heroine as Revealed Through Ullurai (Inner Meaning / Implicit Metaphor) in Kurunthogai Poems

**முனைவர் ச. சரவணத்தாய்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி, மீனம்பாக்கம், சென்னை – 61
Dr. S. Saravanathai, Assistant Professor, Department of Tamil
Agurchand Manmull Jain College, Meenambakkam, Chennai – 61
அலைபேசி: 9578077035 | மின்னஞ்சல்: ssaravanachamy@gmail.com

## Abstract

Tamil literature is today undergoing extensive re-reading on a wide scale. Both Tamils and foreigners have engaged in this research. Tamil literature is not merely literature, but serves as a treasure trove that paves the way for various studies such as culture, history, folklore, ethnography, folkloristics, linguistics, and anthropology. It can be said that this very nature is what drives researchers towards Sangam literature.

Sangam literature has used various techniques to express human emotions. Various techniques such as imagery, symbol, ullurai (inner meaning), ullurai uvamam (implicit simile), iraichi (suggestive meaning), and figures of speech (ani) have been employed.

This article explores the concept of 'ullurai' as found in "Kurunthogai", which is specially distinguished as "Nalla Kurunthogai" (The Good Kurunthogai), a compilation of Sangam literature.

**Keywords:** Explanation of Ullurai; Tolkappiyar and Ullurai; Ullurai as Revealed in Kurunthogai; Kurunthogai - Kurinji (Mountain Landscape); Kurunthogai - Mullai (Forest Landscape); Kurunthogai - Marutham (Farmland Landscape); Kurunthogai - Palai (Arid / Desert Landscape)

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கியங்கள் இன்று பரந்துபட்ட அளவில் மறுவாசிப்பிற்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றன. இவ்வாய்வில் தமிழர்களும் அயல்தேசத்தவர்களும் இறங்கியுள்ளனர். தமிழ் இலக்கியங்கள் வெறும் இலக்கியங்களாக மட்டுமல்லாமல், பண்பாடாக, வரலாறாக, வழக்காறாக, இனவரைவியலாக, நாட்டுப்புறவியலாக, மொழியியலாக, மானுடவியலாக எனப் பல்வேறு ஆய்வுகளுக்கு வழிவகுக்கும் ஒரு கருவூலமாக உள்ளன. இத்தன்மையே சங்க இலக்கியத்தை நோக்கி ஆய்வாளர்களை உந்தித் தள்ளுகிறது எனலாம். சங்க இலக்கியங்கள் மாந்தர்தம் உணர்வை வெளிப்படுத்திட பல்வேறு வகையான உத்திகளைப் பயன்படுத்தியுள்ளன. படிமம், குறியீடு, உள்ளுறை, உள்ளுறை உவமம், , இறைச்சி, அணி எனப் பல்வேறு உத்திகள் கையாளப்பட்டுள்ளன. இக்கட்டுரையானது சங்க இலக்கியத் தொகுப்பான “நல்ல குறுந்தொகை“ என அடைகொடுத்துச் சிறப்பிக்கப்பட்ட “குறுந்தொகையில்“ பயின்று வந்துள்ள உள்ளுறை குறித்து ஆராய்கிறது.

**திறவுச் சொற்கள்:** உள்ளுறை விளக்கம்; தொல்காப்பியரும் உள்ளுறையும்; குறுந்தொகை வெளிப்படுத்தும் உள்ளுறை; குறுந்தொகை – குறிஞ்சி; குறுந்தொகை - முல்லை; குறுந்தொகை - மருதம்; குறுந்தொகை - பாலை

## உள்ளுறை - விளக்கம்

சங்க கால கவிஞர்கள் சில விசயங்களைக் கூறிட மிக நுட்பமான உத்திகளைக் கையாண்டனர்.அதில் உள்ளுறையும், உள்ளுறை உவமமும், இறைச்சிப் பொருளும் முக்கிய இடத்தைப் பிடித்தன. உள்ளுறை குறித்துத் தமிழண்ணல் அவர்கள் “தொல்காப்பியர் உள்ளுறை என ஒரு பொருளை எடுத்தோதுகின்றார். அதன் உட்பிரிவுகளுள் ஒன்றே உள்ளுறை உவமை ஆகும். இவ்வுள்ளுறை உவமை பற்றி ஓரளவு அறிந்திருக்கும் நாம் உள்ளுறை என்ற பொதுக்கோட்பாடு பற்றி யாண்டும் எப்பொழுதும் சிந்திப்பதில்லை. இக்கோட்பாடு பற்றிச் சங்க நூல்களுள் நிறைய மேற்கோள்கள் இருக்கின்றன. ஆயினும் அவை அனைத்தும் உய்த்துணரப்படாமல் உள்ளன. இதனால் உரையாசிரியர்கள் தாமும் இக்கோட்பாட்டினைத் தெளிவு பெற விளக்கிச் சென்றிலர்1 .

தொல்காப்பிய இலக்கண நூல் கூறும் உள்ளுறை, உள்ளுறை உவமம் குறித்த வரையறைகள் உள்ளுறையைப் புரிந்து கொள்ள உதவுகின்றன. “உள்ளுறை என்பது வெளிப்படையாகத் தோன்றும் ஒரு பொருள் இருக்கவும் உட்பொருளாகப் பிறிதொன்று தோன்றும்” 2. என்று கூறுவதால் கவிஞர் தான் கூறக் கருதும் பொருளிற்கு மாற்றாக வேறொரு பொருளை உணர்த்துவது உள்ளுறை என்று கருதலாம்.

தொல்காப்பியரும் உள்ளுறையும்

தொல்காப்பியர் திணை பற்றிக் கூறும்போது, து உள்ளுறை உவமத்தை முன்வைக்கின்றார்.

“உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே” 3.

என்று, கருப்பொருள்களில் தெய்வம் தவிரப் பிறபொருள்களில் உள்ளுறை பயின்று வரும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். இக்கருத்து திணைக் கோட்பாடு வகுத்துள்ள கருப்பொருள்களின் வழி உள்ளுறை விளக்கம் பெறும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. மேலும் தொல்காப்பியர்,

“உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன் எனக்
கொள்ளும் என்ப குறியறிந் தோரே”4.

என்று, உள்ளுறை உவமம் ஐந்தாகப் பாகுபடுத்தப்டுவதையும், ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறப்பு பெறும் என்பதையும் வலியுறுத்துவதோடு, உள்ளுறையின் பயன் முடிவற்ற இன்பம் என்று தொல்காப்பியர் விவரிக்கிறார். மேலும் அவர்,

“உடனுறை உவமம் சுட்டு நகை சிறப்பு எனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே” 5
என்றும்,
“அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்
தன்வயின் வருதலும் வகுத்த பண்பே” 6

என்றும் கூறுகின்றார். தொல்காப்பியர்ம் கூறும் உள்ளுறையின் வகைகளான உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்னும் ஐந்தும்

பாடுபொருள் சிறக்க உதவும் கூறுகளாகும். உடனுறை மற்றும் உவமம் குறித்துக் கூறவந்த தமிழண்ணல் அவர்கள், "உடனுறை - உடனுறைவதொன்றைச் சொல்ல அதனானே பிறிதொரு பொருள்விளங்குவது. உவமம் - என்பது ஏனை உவமம் என்பதன் வேறுபட்டு உள்ளுறைப் பொருளைத் தருவதாகும். சுட்டு என்பது ஒரு பொருளைச் சுட்டிப் பிறிதொரு பொருள் தோன்றச் செய்தல். நகை - நகையினால் பிறிதொரு பொருள் உணர நிற்றல். சிறப்பு - இதற்குச் சிறந்தது இஃது எனக் கூறுவதனால் பிறிதொரு பொருள் கொள்ளக்கிடப்பது" என்று விவரிக்கிறார்7.

மேலும் இது குறித்துப் பேச வந்த தொல்காப்பியர்,
"மங்கல மொழியும் வைஇய மொழியும்
மாறில் ஆண்மையில் சொல்லிய மொழியும்
கூறியல் மருங்கின் கொள்ளும் என்ப" 8

என்று உள்ளுறையானது, மங்கல மொழி, வைஇய மொழி, மாறில் ஆண்மையில் கூறிய மொழி என்பவற்றிலும் உள்ளுறை பயின்று வரும் என்கிறார். உள்ளுறையின் வகைகளுள் ஒன்றாக அமையும் உவமத்தைக் குறிப்பிடும் தொல்காப்பியர் உவமப் போலி என்னும் ஒன்றைக் குறிப்பிட்டு அதன் வகைகளையும் ஐந்தாகப் பாகுபாடு செய்கிறார். இதனை,

"உவமப் போலி ஐந்தென மொழிப"9
எனவ்றும்,
"தவலரும் சிறப்பின் அத்தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வரூஉம் திறத்தியல் என்ப" 10

என்றும் விவரிக்கிறார். இவற்றில், உள்ளுறை உவமம், ஏனை உவமம் என என்னும் இரண்டைக் குறிப்பிட்டு, உள்ளுறை உவமம் உய்த்துணர்ந்து பொருள் கொள்வது, ஏனை உவமம் இயல்பாகப் பொருள் உணர்ந்து கொள்வது எனத் தொல்காப்பியர் தெளிவுபடுத்துகிறார். இதனை,

"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள்முடி கென
உள்ளுறுத்து இறுவதே உள்ளறை உவமம்"11
"ஏனை உவமம் தான் உணர் வகைத்தே" 12

என்னும் நூற்பாக்களில் விவரிக்கிறார்.

## குறுந்தொகை வெளிப்படுத்தும் உள்ளுறை

சங்க இலக்கியங்களில் குறுந்தொகை மிகச் சிறப்பு வாய்ந்த ஒன்றாகக் கருதப்படுகின்றது. குறுந்தொகை அகத்திணை பாடல்கள் பெரும்பாலும் உள்ளுறையைப் பயன்படுத்தி தலைவன் தலைவியின் மன உணர்வுகளைப் பேசுகின்றன.

## குறுந்தொகை – குறிஞ்சி

தலைவன் திருமணத்தை தள்ளி வைத்துப் பொருளுக்காகத் தலவியைப் பிரிகிறான். இச்சூழலில் தலைவியின் துன்பம் கண்டு தோழி வருந்துகிறாள். இந்நிலையில் தலைவி தோழியைத் தேற்றுகிறாள். இதனைக் கறுந்தொகையில் பரணர் ,

"துறுக லயலது மாணை மாக்கொடி

துஞ்சுகளி றிவருங் குன்ற நாடன்
நெஞ்சுகள னாக நீயலென் யானென்
நற்றோண் மணந்த ஞான்றை மற்றவன்
தாவா வஞ்சின முரைத்தது
நோயோ தோழி நின்வயி னானே" 13

என்று, களவுக்காலத்தில் தலைவன் கூறிய வாய்மொழிகள் எல்லாம் பொய்த்தபோது தலைவி தோழியிடம் பின்வருமாறு கூறுகிறாள். துறுகல்லின் அருகில் வளர்ந்துள்ள மாணைக் கொடி கல்லின் மீது படராமல் கல்லின் அருகில் உறங்கும் யானை மேல் படர்ந்து வளரும். களவில் தலைவி யானைக் கன்றுபோன்ற தலைவனை மானைக் கொடிபோலத் தழுவி இருந்தபோது, அவன் தலைவியை விட்டு நீங்கினான். யானை எழுந்த போது எவ்வாறு மானைக் கொடி படர இடம் இன்றித் தவித்ததோ அவ்வாறே தலைவன் நீங்கிய வழித் தலைவி துன்புற்றாள். பிரிய மாட்டேன் என்று கூறிய தலைவனின் சூளுரை பொய்யானது என்னும் உள்ளுறையானது கருப்பொருள்களின் வழி விவரிக்கப்பட்டுள்ளது. மற்றொரு பாடலில் கபிலர்,

"காமம் ஒழிவது ஆயினும் யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென, அருவி
விடரகத்து இயம்பும் நாட! -எம்
தொடர்பும் தேயுமோ நின்வயினானே" 14

என, மலைப்பகுதியில் மேகம் மழை பொழிந்ததை அறிவிக்கும் வகையில் மலையில் இருந்து மழை பெய்கிறது. மழை பெய்த மறு நாளும் அருவிகள் பெருக்கெடுக்கும். அத்தகைய மலை நாடனே என்று தோழி தலைவனை விளித்து, இரவுக்குறி மறுக்கப்பட்ட போதும் கூட உன்மேல் கொண்ட அன்பு மாறாது என்று குறிப்பிடுகிறாள். இங்கு அருவிக் காட்சியின் மீது தலைவன் தலைவியின் காதல் உள்ளுறையாகப் பதிவு பெற்றுள்ளது. இரவுக்காலத்தில் பெய்த மழை பலரும் மழை பெய்ததை அறியுமாறு அருவியாய் வெளிப்பட்டுத் தோன்றுகிறது. அதுபோல தலைவனின் களவுக்காதல் அவன் மீது கொண்ட அன்பால் தலைவிக்கு உடல் வேறுபாடு நிகழ்ந்தது. அலர் பரவுதற்கு வழி வகுத்தது. முதல் நாள் பெய்த மழை மறுநாளும் அருவியாய்த் தொடர்ந்து பெருக்கெடுப்பது போல இரவுக்குறி தடைப்பட்டாலும் நீங்காமல் தொடரும் என்று தோழி குறிப்பிடுகிறாள். பாடலில் அருவிக் காட்சியின் மூலம் களவு - அலர் - இரவுக்குறி மறுப்பு - தொடர்ந்த அன்பு என்பன உள்ளுறையாக அமைந்து சிறக்கின்றன.

இரவில் நிலவுக்காட்சியை முன்வைத்து முன்னிலைப் புறமொழியாகத் தோழி கூறும் சிந்தனையும் உள்ளுறையாகக் கறுந்தொகையில் அமைந்துள்ளது. அப்பாடலானது,

"கருங்கால் வேங்கை வீஉகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை
எல்லி வருநர் களவிற்கு
நல்லை அல்லை நெடுவெண் நிலவே" 15

என்று, இரவில் வெளிப்படும் நிலவு தலைவனுக்கு நன்மை செய்யவில்லை. தீமையே செய்கிறது என்று தோழி குறிப்பிடுகிறாள்.

இரவுக்காலத்தில் தலைவன் கொடும் குணம் உடைய விலங்குகளைக் கடந்து தலைவியைச் சந்திக்க வருவதால் அவன் மேல் கொண்ட அன்பினால் இரவுக்குறி மறுப்பு நிகழ்கிறது. தலைவன் இரவில் வருவதால் விலங்குகள் மட்டுமன்றித் தலைவியின் தாயும் தந்தையும் உறவுகளும் உண்டு என்பதையும் தோழி உணர்த்துகிறாள். தலைவனின் இரவு வருகை களவுக்கு உகந்தது இல்லை என்பதைக் கூறிக் கற்பே நன்மை பயப்பது என்பதை உணர்த்துகிறாள். தோழி தலைவனுக்குக் கூறும் இரவுக்குறி மறுப்புச் செய்தி அவனுக்குத் தீங்கு நிகழும் என்று தலைவியும் தோழியும் வருந்தும் வருத்தத்தைப் பொருளாகக் கொண்டு அமைவதைக் கீழ்க்கண்ட கடுந்தோட்கரவீரனார் பாடலானது,

“கருங்கட் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்
கைம்மை உய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்
சாரல் நாட நடுநாள்
வாரல் வாழியோ வருந்துதும் யாமே” 16

தலைவனின் எண்ணத்தை மறுக்கும் வண்ணம் தோழியின் இரவுக் குறி மறுப்பு நிகழ்கிறது. தலைவனின் மலைநாட்டுச் சாரலில் ஆண் துணையை இழந்த பெண்குரங்கு தனித்து வாழ மனம் இன்றித் தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் தன்மையை உடையது. தலைவியும் அவ்வாறே தலைவனை இழந்து வாழும் மனநிலை இல்லாதவள் என்பதையும் கூறி, இரவு வருகையால் துன்பம் நிகழும் என்று கூறி இரவுக்குறியை மறுக்கிறாள் என்பதை விவரிக்கிறது..

தோழி தலைவனிடம் தலைவியை அழைத்துக் கொண்டு உடன்போக்குச் செல்வதற்கு முன்பு நீயே தலைவியைக் காத்தற்கு உரியவன் என்று குறிப்பிடுவதை, “பெருநன்று ஆற்றின் பேணாரும் உளரே

ஒருநன்று உடையள் ஆயினும் புரிமாண்டு
புலவி தீர அளிமதி இலைகவர்பு
ஆடுஅமை ஒழுகிய தண்ணறுஞ் சாரல்
மென்னடை மரையா துஞ்சும்
நன்மலை நாட நின்அலது இலளே” 17

எனத் தோழி, தலைவனிடம் மூங்கில்கள் வளர்ந்துள்ள மலைச்சாரலில் மெலிந்த நடையினை உடைய ஆண்மான் முதுமை காரணமாக உதிர்த்த இலைகளை உண்டு மலைப்பக்கத்தில் குளிர்ச்சியும் மணமும் உடைய இடத்தில் தங்கி வாழும் என்று குறிப்பிடுகிறாள். மானுக்கு எவ்வாறு மலைச்சாரல் முதுமையிலும் கைவிடாது காக்கிறதோ அதுபோல தலைவியும் உன் அருளால் உன்னிடம் தங்குதற்கு உரியவள் என்று குறிப்பிடுகிறாள். எந்த நிலையிலும் மானுக்கு அடைக்கலம் அளிக்கும் மலைச்சாரல்போல் இவளுக்கு எப்போதும் நீயே எல்லாமும் என்று மான் என்னும் கருப்பொருள் கொண்டு உள்ளுறை விளக்கபட்டுள்ளது. வரைவின் இடையே எவ்வாறு ஆற்றி இருப்பாய் என்று தோழி வினவும்போது

தலைவி, தோழிக்கு உரைக்கும் பாடல் ஒன்றில் கபிலர் உள்ளுறைப் பொருளை ,

“இனமயில் அகவும் மரம்பயில் கானத்து
நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்ப
படுமழை பொழிந்த சாரல் அவர்நாட்டுக்
குன்றம் நோக்கினென் தோழி
பண்டை யற்றோ கண்டிசின் நுதலே” 18

மயில் தன் துணையுடன் மகிழ்ந்து நடனம் ஆடுவதற்குக் காரணமான மழை குட்டியுடன் இருக்கும் குரங்கினைக் குளிரால் துன்புறச் செய்யும். தலைவன் தலைவியின் களவுக்கால வாழ்க்கை இன்பத்தைத் தரும் என்றாலும் அதை விடப் பாதுகாப்பு நிறைந்தது கற்பு வாழ்க்கை என்பதால் குரங்கு தன் குட்டியுடன் வாழ்கின்ற குடும்ப வாழ்க்கை சுட்டிக் காட்டிக் கூறுகின்றது.

## குறுந்தொகை - முல்லை

தலைவன் பொருள் தேடச் சென்று மீண்டு வருவேன் என்று கூறிய காலம் வந்தபோது, தலைவி வருத்தம் கொள்வாளே என்று தோழி வருந்திய நிலையில் தலைவி, தலைவன் பொய் கூறமாட்டான். இது கார்காலம் என்று இயற்கை கூறினும் நான் நம்பமாட்டேன். தலைவன் பொய் கூறமாட்டான் என்னும் பொருள்பட அமையும் உள்ளுறைப் பொருளானது தலைவியின் நம்பிக்கையையும், காதலின் ஆழத்தையும் வெளிக்காட்டுவதை,

“வண்டுபடத் ததைந்த கொடிஇணர் இடையிடுபு
பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்
கதுப்பின் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்
கானம் கார்எனக் கூறினும்
யானோ தேறேன்அவர் பொய்வழங் கலரே” 19

மேற்கண்ட பாடலில் கொன்றைக்குப் பெண்ணும், தழைக்குக் கூந்தலும் பூங்கொத்துகளுக்குப் பொன் அணிகலன்களும் உவமையாகக் கூறப்பட்டன. தலைவி கொன்றை மரத்தோடு கானகமும் சேர்த்து இது கார்காலம் எனக் கூறினும் தன்னால் ஏற்க இயலாது என்று கூறுகிறாள். கொன்றை மரங்கள் அறியாமை உடையன ஆதலால் அவை புதுப் பூக்களை மலரச் செய்து கார்காலம் எனக் கூறுமாறு பெண்களின் கூந்தலைப்போலத் தோன்றின. இவ்வாறு மரம் புதுப் பூ அணியினும் பெண்ணாக இயலாததுபோலக் கானகமும் கொன்றை மலர்ந்து கார்காலம் எனக்கூறினும் கார்காலம் அல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறாள். கொன்றை கார்ப்பருவத்தில் மலர்வது இயற்கை. கொன்றை மலர் மூலமாகத் தலைவி, தலைவன் மேல்கொண்ட நம்பிக்கை உள்ளுறை பொருளாகக் கூறப்பட்டுள்ளது.

## குறுந்தொகை - மருதம்

தலைவன் பரத்தையின் பொருட்டுப் பிரிந்து செல்கின்றான். அத்தகைய சூழலில் மீண்டும் தன் வீட்டிற்கு வர தூது அனுப்பிய சூழலில் தோழி அதனை மறுக்கிறாள் என்பதை, .

“யாரினும் இனியன் பேர்அன் பினனே

உள்ளூர்க் குரீஇத் துள்ளுநடைச் சேவல்
சூல்முதிர் பேடைக்கு ஈனில் இழையஇயர்
தேம்பொதிக் கொண்ட தீம்கழைக் கரும்பின்
நாறா வெண்பூக் கொழுதும்
யாணர் ஊரன் பாணன் வாயே” 20

மேற்கண்ட பாடலில் புலவர் விவரிக்கிறார். தலைவன் உறவுகள் அனைவரிடத்திலும் அன்புடையவன் என்று பாணன் கூறியதை ஏற்க விரும்பாமல் வாயில் மறுக்கிறாள். தலைவன் உண்மையான அன்புடையவன் என்று பாணன் கூறினும் தோழி அதனை மறுத்து உரைப்பதற்கான காரணம் உண்டு. பாடலில் குறிப்பிடப்படும் ஊர்க்குருவிகள் ஆணும் பெண்ணுமாக இணைந்து வாழ்பவை. ஆண் பறவை தன் பெண் துணைக்கு மெத்தென்ற கூட்டினை அமைக்கும். குருவிக்கு இருக்கின்ற அன்பும் பொறுப்புணர்வும் தலைவனுக்கு இல்லையே என்று தலைவி வருத்தம் கொள்வதை உள்ளுறையாக இப்பாடல் வெளிப்படுத்துகின்றது.

## குறுந்தொகை - பாலை

பொருள் தேட எண்ணம் கொண்ட தலைவன் முன்பு பாலைவழியில் பொருள்தேடச் சென்ற நினைவினையும் தான் அடைந்த துயரத்தையும் மனத்தில் கொண்டு தலைவியையும் அவளது அழகு நலத்தையும் நினைவில்கொண்டு தான் பொருள் தேடச் செல்வதைத் தவிர்ப்பதை,

“மல்குசுனை புலர்ந்த நல்கூர் சுரமுதல்
குமரி வாகைக் கோலுடை நறுவீ
மடமாத் தோகைக் குடுமியின் தோன்றும்
கான நீள்இடைத் தானும் நம்மொடு
ஒன்றுமணம் செய்தனள் இவள்எனின்
நன்றே நெஞ்சம் நயந்தநின் துணிவே” 21

என, தலைவன் முன்பு பொருள்தேடச் சென்ற வழி நீரற்ற சுனைகளை உடையதாக இருந்தது. அவ்வழியில் மீண்டும் செல்ல நினைத்த தலைவன், தலைவி உடன் வந்தால் மனத்தின் துணிவு இனிதாகும் என்று கருதுவது அவனது செலவழுங்கலை உள்ளுறையாக உணர்த்துகிறது.

## முடிவுரை

குறுந்தொகைப் பாடல்களில் அமைந்துள்ள அகத்திணைப் பாடல்களில் உள்ளுறைகள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தலைவன் தலைவியின் காதல் வாழ்வில் நிகழும் ஒழுக்கங்களை உட்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளன. கருப்பொருள்களின் வழியாகப் புலவர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். குறிஞ்சி நில உள்ளுறைகள் தலைவனின் இரவுக்குறி வருகை, காவல், வழியின் துன்பம், வரைவு கடாதல், உடன்போக்குதலான பொருண்மைகளில் அமைந்து பாடல்களின் உட்பொருளை உய்த்தறிய உதவுகின்றன. முல்லைத்திணையின் உள்ளுறைகள் தலைவன் பிரிவு அதனால் தலைவிக்கு ஏற்பட்ட துயர் ஆகியவற்றை விளக்குகின்றன.தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தின் இயல்பினை மருதத்திணையும் பிரிவுத் துன்பத்தின் வலியை நெய்தல் திணையும்

தலைவன் பொருள் தேடும் ஆர்வம் அதனால் தலைவிக்கு ஏற்படும் துன்பம் ஆகியவற்றைப் பாலைத் திணைப் பாடல்களும் விளக்குகின்றன.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு ப.60
2. மேலது, ப. 66
3. தொல்காப்பியம், பொருளதிகாரம் .நூற்பா.992
4. மேலது.நூற்பா .993
5. மேலது.நூற்பா.1188
6. மேலது.நூற்பா.1189
7. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு பக்.60-61
8. தொல்காப்பியம், பொருளதிகாரம் நூற்பா 1190
9. மேலது.நூற்பா.1244
10. மேலது.நூற்பா.1245
11. மேலது.நூற்பா..994
12. மேலது.நூற்பா. 995
13. குறுந்தொகை .36
14. மேலது, 42
15. மேலது, 47
16. மேலது, 69
17. மேலது,115
18. மேலது,249
19. மேலது . 21
20. மேலது .85
21. மேலது . 347

## துணைநூற் பட்டியல் (References)

1. இளம்பூரணர் (உ.ஆ) - தொல்காப்பியம் பொருளதிகாரம் கழகவெளியீடு, 1966
2. சண்முகப்பிள்ளை. மு(பதி) - குறுந்தொகை தமிழ்ப் பல்கலைகழக வெளியீடு, தஞ்சாவூர் முதற்பதிப்பு 1985
3. உ.வே சாமிநாதையர் (பதி) - குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.ச நூல் நிலையம், பெசன்ட் நகர், சென்னை 7 ம் பதிப்பு, 2017
4. தமிழண்ணல் - சங்க இலக்கிய ஒப்பீடு, செல்லப்பா பதிப்பகம், மயூரா வளாகம் 48, தானப்பமுதலி தெரு, மதுரை. 625 001
5. நாகராசன்.வி (உ.ஆ) - சங்க இலக்கியம் குறுந்தொகை, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் சென்னை, 2005

**ARTICLE 60 | Original Research Paper – Peer Reviewed**
Vol. 10, No. 02 (Special Issue), September 2026 | pp. 145–150

# ஆண்டாள் திருப்பாவை கூறும் உளவியல் கருத்துக்கள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் - ஓர் ஆய்வு.

## Psychological Insights and Concepts of Social Unity in Andal's Thiruppavai: A Study

**முனைவர். செ. ராஜேஸ்வரி**
உதவித் தமிழ் பேராசிரியை
ராம்கோ தொழில்நுட்பக் கல்லூரி
1/66, வடக்குத் தெரு, சுப்பையாபுரம்
தேவர்குளம் (Post)
திருநெல்வேலி 627-951
மின்னஞ்சல்: rajeshwariraji19910@gmail.com
கைபேசி: 9524841633

### Abstract

Thiruppavai,graced by Andal ,is a treasure chest of devotional literature. Beyond being an expression of spirituality, this text serves as a grand psychological arena that penetrates deep into the recesses of the human mind.

All thirty hymns (Pasurams) of Thiruppavai sing the glories of Lord Vishnu (Thirumal) and narrate the history of obtaining his divine grace. The core concept of this text is that it is a wonderful piece of literature denoting the penance (Nonbu) undertaken by Andal and the young girls of the cowherd community for themselves and for the people of the world to receive all kinds of excellent benefits, keeping the attainment of Lord Krishna’s (kannan) divine grace as their ultimate goal. The feeling that arises while reading this book reflects the Gita, which says, “In whatever way men approach Me, in that same way do I accept them”. The objective of this research is to analyze where and how psychological and aesthetic unification thoughts have been handled in this outstanding devotional literature.

### ஆய்வுச் சுருக்கம்

பக்தி இலக்கியத்தின் முத்துப் பெட்டகம் ஆண்டாள் அருளிய திருப்பாவை. ஆன்மீக வெளிப்பாட்டைக் கடந்து மனித மனத்தின் ஆழடுக்குகளைச் செம்மைப்படுத்தும் மாபெரும் உளவியல் களமே இத்திருப்பாவை.

திருப்பாவை முப்பது பாசுரங்களும் திருமாலின் பெருமைகளைப் பாடி, அவனுடைய திருவருளைப் பெற்ற வரலாற்றை எடுத்துக் கூறுவது. இப்பிரபந்தத்தின் உட்கருத்து, கண்ணனின் திருவருளைப் பெறுவதை, இறுதி இலட்சியமாகக் கொண்டு ஆண்டாளும், ஆயர்குல சிறுமியும் தங்களுக்கும், உலகத்தார்க்கும் எல்லாவித சிறப்பான நன்மைகள் கிடைக்க மேற்கொண்ட இந்நோன்பைக் குறிக்கும் ஓர் அற்புத இலக்கியம். இந்நூலைப் படிக்கும் போது ஏற்படும் உணர்வு "யாவர் என்னை எங்ஙனம் வேண்டுகிறார்களோ அவர்களை நான் அங்ஙனமே சார்கிறேன்" (1-11) கூறுவதை பிரதிபலிக்கும் கீதை.

இச்சிறந்த பக்தி இலக்கியத்தில் உளவியல் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு சிந்தனைகள் எங்கெங்கு, எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது என்பதை இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்:** உளவியல் - Psychology; சமூக ஒருமைப்பாடு - social integration; பக்தி இலக்கியம் - Devotional literature; நோன்பு - Fasting; பாவனை - Pretense;

தன்வய சிந்தனை - Self-centered thinking; உளகட்டுப்பாடு - Mental control; மனஉறுதி, - Strength of Mind; விழிப்புணர்வு - Awareness; அகந்தை - Ego Dissolution

## முன்னுரை (Introduction)

ஆண்டாள் தந்தருளிய திருப்பாவை எனும் பக்தி இலக்கியம், மாநில மக்களின் மனம், மற்றும் நற்பண்புகளை மேம்படுத்தும் உன்னதமான உளவியல் கருத்துக்களை பாசுரங்களால் கோர்த்தெடுத்த பக்தி பாமாலை என்றால் அது மிகையாகாது.

"மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்" (குறள் 457)

அஃதாவது ஆண்டாள் நாச்சியார் தன் தேனினிக்கும் பாசுரங்களில், தோழியரை, தன் ஆயர் குலச் சிறுமியரை ஒன்றிணைத்து நோன்பு நோற்பதும், சோம்பலை அகற்றி மனதை ஒருமுகப்படுத்துவதும் வள்ளுவர் காட்டும் 'மனநலம்' மற்றும் இனநலத்தின்

வடிவமன்றோ?திருப்பாவை பாசுரங்கள் முப்பதும் இளம் மங்கையரின் உள்ளங்களில் நல்லொழுக்கத்தையும், இல்லறவாழ்வில் இணைந்த இல்லதரிசிகளுக்கும்

அறநெறியையும் பக்தி மார்க்கத்தை நாடு பரம பதம் அடைய நினைப்பவர்களுக்கு இறைவனை அடைவதற்கான பக்தி மார்க்கத்தையும் எடுத்துரைக்கின்றன.

திருப்பாவை சொல் நயமும், பொருள் நயமும், கற்பனை அழகும், கவிச்சிறப்பும் கொண்ட ஒரு சிறந்த இலக்கியப் பொக்கிஷம்.

இவ்விலக்கிய பாசுரங்களை சமய நூல், சமுதாய நூல், தத்துவ நூல் என ஒவ்வோர் அடிப்படையிலும் படித்து மகிழும் வகையில் அமைந்தது. இக்கட்டுரையின் கீழ் அப்பாசுரங்களில் உளவியல் மற்றும் சமூக ஒருமைப்பாட்டுச் சிந்தனைகள் பொருந்து மாற்றைக் காண்போம்.

## ஆண்டாள் - பெண் ஆழ்வார் :- நாச்சியார் – ANDAL THE FEMALE ALVAR

ஆண்டாள் நாச்சியார், சூடிக் கொடுத்த சுடர்க் கொடி, பெரியாழ்வாரின் அருமைத் திருமகள், திருவில்லிப்புத்தூரில் வாழ்ந்த விஷ்ணுசித்தர் என்னும் பெரியாழ்வாரின் அருமைத் திருமகள்.

திருப்பாவை **'பட்டர்பிரான் கோதை'** என்றும், திருமொழி **'விட்டுசித்தன் கோதை' 'வில்லிப்புத்தூர்க் கோன் கோதை'** என்றும் ஆண்டாளைக் குறிப்பிடுகின்றன. கண்ணன், மணிவண்ணன், ஆயர்குல தலைவன், யதுகுல மன்னன் அவதார பெருமை, மகிமைகளைப் பெரியாழ்வார் மனமுருகிப் பாடுவதைக் கேட்டுக் கேட்டு, ஆண்டாளின் உள்ளம் அதில் தன்னையும் ஈர்த்ததை அறிந்து தந்தையிடம் ஆன்ம ஞான அறிவைப் பெற்று வளர்ந்தாள்.

குழந்தைப் பருவத்திலிருந்தே ஆண்டாளின் உள்ளத்தில் முளையிடபட்ட பக்தி உணர்ச்சி, அவள் வளர்ந்த நிலையில் மேலும் மலர்ந்து மணம் பரப்பியது.

அவள் வளர்ந்த தெய்வீகம் சூழ்நிலை பின்னாளில் நாச்சியாரை பக்தி நெறி மிக்க தெய்வீகப் பெண்ணாக உருவாக்கியதில் ஆச்சரியமில்லை.

**"அடிமனதில் உறைந்து கிடக்கும் உணர்வுகள் தான் மனிதனின் ஆளுமையை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. இளமைப் பருவத்தில் ஏற்படும் பிற்காலத்தில் ஏதேனும் ஒரு வடிவில் வெளிப்படும்.** இத்தகைய **அடிமன உணர்வுகள் கலைஞனுடைய படைப்புகளில் ஏதேனும் ஒரு வடிவில் வெளிப்படுத்தக் கூடும்"** என்பது **'பிராய்டு'** தரும் விளக்கமாகும்.

பிரபந்த நூலான திருப்பாவை ஆண்டாளின் திருவாக்காக தோன்றியதன் நோக்கம் திருமாலே பரம்பொருள், அவனை நம் திருவாயால் பாடி, நல் மனத்தால் சிந்தித்தால் தீவினை அனைத்தும் நெருப்பிலிட்ட தூசியாய் போகும், எத்தனைப் பிறவி எடுத்தாலும் திருமாலுக்கு தொண்டு செய்து வாழ்வதே பேரின்ப வாழ்வு என்பவற்றை உலக மாந்தர் அனைவரும் அறியும் வண்ணம் எடுத்துரைக்க எழுந்ததே இத் திருப்பாவை பாசுரங்களாகும்.

## திருப்பாவையில் உளவியல் கருத்துக்கள்: - PSYCHOLOGICAL ASPECTS IN THIRUPPAVAI

ஆண்டாளின் தன்னலமற்ற, பரந்த உலக நோக்கில் உருவானவையே இப்பாஅரப்பாடல்கள். திருப்பாவை ஒரு கற்பனை இலக்கியப் படைப்பாக இருந்தாலும், இளம் பருவத்தினர்களுக்கு இருக்க வேண்டிய

ஒழுக்க நெறிகள், கட்டுப்பாடு, நல்வாழ்விற்கான உயர்ந்த வழிமுறைகள் ஆகியன வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன.

பொதுவான உடன்பாடு குழுக்களிடம் இருந்தாலும் மனஉறுதி மிகுந்திருக்க வேண்டும். நல்லதொரு மனஉறுதிக்கு சில இன்றியமையாத காரணிகள் உண்டு.

முதல் ஐந்து பாடல்களில் நோன்பு நோற்பவர் யார், நோன்பு மேற்கொள்ளக் காரணம், நோன்பின் போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், நோன்பின் பயன்கள் ஆகியன கூறப்படுகின்றன. முதல் பாடலில்

"மார்கழிகழித் திங்கள் தொடங்கி……..
…
"நீர் ஆடப் போதுவீர்
போதுமினோ நேர் இழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச்
செல்வச் சிறுமீர்காள்” - (பா. 1)

இப்படி அழைப்பதிலிருந்தே பக்திக்கும், இறைத் தொண்டிற்கும் விருப்பம் மட்டுமே போதும், வேறேதும் தேவையில்லை எனத் தெரிகிறது.

"நோன்பு உளக்கட்டுப்பாடு நிலையில் அமைகிறது எப்படி என்றால், தான் விருப்பம் நிறைவேற இன்ன செயல்களைச் செய்கிறேன், இன்ன செயல்களைச் செய்ய மாட்டேன் என்றோ உள்ளத்தைக்

கட்டுப்படுத்துவது நோன்பு. எடுத்த காரியம் முடிக்க சில விதிகளையும், சில நியமங்களை, விலக்குகளை கடைபிடிக்க வேண்டும் அல்லவா?

இறைவன் அடி பாடுதல்
காலை நீராடுதல்
ஐயமும் பிச்சையும்
நெய், பால் உண்ணாதிருத்தல்
மையும், மலரும் அலங்கரித்து கொள்ளாதிருத்தல்
போன்றவற்றை கடைபிடிக்கின்றனர்.மேலும்
"தூயோமாய் வந்து நாம்
தூ மலர்தூவித் தொழுது
வாயினால் பாடி
மனத்தினால் சிந்திக்க
புகுதருவான் நின்றனவ தீயினில் தூசாகும்" (பா. 5)

அஃதாவது மனம், மொழி, மெய் என்ற மூன்றாலும் இறைவனை வழிபடும் கிரியை நெறி, மனத்தை ஒருமுகப்படுத்தும் யோக சக்தி நெறி, இறைவனை வழிபட்டால் தீமைகள் நீங்கி கிடைக்கும் ஞான நெறியும் ஒருங்கே அமைவதை மனஉறுதியோடு கூறுகிறாள் ஆண்டாள் நாச்சியார்.

உள்ளத்தின் பல்வேறு நிலைகளும், சமுதாய ஒற்றுமையும்:HEART VARIOUS STATE SOCIAL UNITY:

திருப்பாவையின் ஆறாம் பாசுரம் முதல் பத்து பாடல்கள் பெண்களுக்குரிய இயல்பான அன்பும் பேச்சும், பரிகாசப் பேச்சும், உரையாடல்கள், என இப்பாடல்கள் ஒரு நாடக நிகழ்ச்சி நடைபெறுவது போலவே அமைந்துள்ளது சிறப்பானதாகும்.

துயில் எழுந்தவர்கள், துயில் கொள்பவர்களை துயிலெழுப்பும் தோழி வயதில் சிறியவளாக இருப்பதால் **"பிள்ளாய் எழுந்திராய், புள்ளும் சிலம்பின காண்"**

என எழுப்புகிறாய்.

பறவைகளின் ஒலி, கோயிலில் பெரிதாகக் ஒலிக்கும் சங்கொலி, ஆச்சியல் மத்தினால் ஓசைப்படுத்தும் தயிர் மத்தின் ஓசை கேட்கவில்லையா என்பதிலிருந்து அவள் சாதாரண வீட்டுப்பெண் எனத் தெரிகிறது.

செல்வம் படைத்த குடும்பப் பெண்ணை
"தூமணி மாடத்து"...... (பா. 9)

எழுப்புதலும் கும்பகர்ணன் போல் தூங்குபவளை பொற்றொடிமே என்றும், நற்செல்வன் தங்கையை காலடியில் பால் வெள்ளமுட எனச் உணர்ச்சி பொங்கிடவும்

"எல்லே இளங்கிளியே இன்னும் உறங்குதியோ"

என்று இளங்கிளியை ஒத்த பெண்ணையும் அழைப்பதிலிருந்து, இவர்கள் அழைத்துச் செல்லும் தோழிப் பெண்கள் வெவ்வேறு குணகியல்பற்றவர்களாகவும் வெவ்வேறு குடிப்பிறப்பில் பிறந்தவர்களாக இருப்பத்தையும் காணுகையில் சமுதாய வாழ்க்கையில் ஒற்றுமையைக் காட்டி, அன்பின் இன்றியமையாமையை

இளம் உள்ளங்களுக்கு அறிவுறுத்தவே இப்பாசுரத்தை ஆண்டாள் பாடினாளோ என எண்ணத் தோன்றுகிறது.

## நம்பிக்கையும் மனஉறுதியும்: - BELIEF AND MIND FIRMNESS

நம்பிக்கையும், மனஉறுதியுமே இறைவழிபாட்டிற்கு இரு கண்கள் போன்றது. இதையே இவரது சமகாலத்து ஆழ்வார்கள் பாடியிருப்பதை இங்கு உற்று நோக்கத்தக்கது.

"அன்பே தகளியா
ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா -
நன்புகழ் நாரணனஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன்
நாரணற்கு ஞானத் தமிழ் புரிந்த நான்"
பூதத்தாழ்வார்
இரண்டாம் திருவந்தாதி.

என்பதற்கு ஏற்றாற்போல கண்ணன் தங்களுக்கு அருள் செய்வான் என்ற தளராத நம்பிக்கை.

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும
உற்றோமே ஆவோம்
உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்று" (பா. 29)

என்ற பாசுரத்தைக் காணும் போது இவர்கள் கண்ணனிடம் கொண்ட ஆழ்ந்த விருப்பத்தையும், மனத் திடத்தையும் உணர முடிகிறது.

## நிறைவுரை: - CONCLUDING REMARKS

மார்கழி நோன்பை மையமாகக் கொண்டு ஆண்டாள் தன் திருப்பாவை பாசுரங்கள் மூலம் இந்நோன்பை ஒற்றை நபராக இல்லாமல் தோழிப் பெண்களுடன் சேர்ந்து செய்யும் கூட்டு பிரார்த்தனையாக விவரிக்கிறாள்.

பேதமை நீங்க, குலபேதம், செல்வமிக்கவர், ஏற்றத்தாழ்வு போன்ற வேறுபாடுகளைக் கடந்து அனைத்து தரப்புப் பெண்களையும் உறக்கம் நீங்க எழுப்பி அழைத்து கண்ணனை வாயாரப் பாடி, மனதினால் சிந்தித்துச் செய்வது சமூக ஒருமைப்பாட்டை எடுத்துரைக்கிறது.

மேலும் பொது நலமாக, தனிமனித வேண்டுகோள் இன்றி, "நாங்கள்" என்ற ஒருமித்த கூட்டுச் சொல்லாலும்
"நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி" என உலக நன்மைக்காக, மழையைப் பொழியச் செய்ய இறைவனை வேண்டுவது சமூக நலத்தைக் குறிக்கிறது.
சமத்துவ உணர்வு தரும் பாசுரமாக
"அங்கண்மா ஞாலத்தரசர்
அபிமான பங்கமாய் வந்து...

யாமும் வந்தோம்..." (பா. 22)

பெரிய, பெரிய அரசர்களும் கூட தங்களின் அகந்தையை விட்டுவிட்டு இறைவனின் சன்னதியில் எளிய மக்களோடு மக்களாக நிற்பதைக் காணும் போது ஆன்மீகத்திலும், சமூகத்திலும் அனைவரும் சமம் என்ற சமத்துவக் கோட்பாட்டை உணர்த்துகிறது.

மக்கள் உள்ளங்களைக் கவரக் கூடிய, பதியக் கூடிய, ஏற்றுக் கொள்ளக் கூடிய பாடல்களும், இலக்கியமும்தான் காலம் கடந்து வாழும். அந்த வகையில் மழலைகள் முதல் இறையடி சேரும் பெரியோர் வரை, பல்வேறு நிலையிலுள்ள யாவரும் உய்த்துணர்ந்து, நல்ல வாழ்க்கைக்கும், நற்கதிக்கும் வழிகாட்டியாகவும், உளவியல் கருத்துக்கள் உள்ளடக்கியதாகவும், சமூக ஒருமைப்பாட்டை உயர்த்திக் காட்டுவதாகவும் இத்தெய்வ பிரபந்த பாசுரங்கள் ஒவ்வோர் ஆண்டிலும், ஒரு மாதமாம் திரு மாதமான மார்கழித் திங்களில் உருகிப் பாடுகின்ற காரணத்தால் உலகம் வாழ்கிறது என்று

## வாழும், பல்லாண்டு வாழும் என்பது உறுதி

"ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ் செந் நெல் ஊடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்று
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்" — (பா. 3)

என்ற இப்பாசுரமே இக்கட்டுரையின் மொத்த கருத்திற்கும் ஒத்த எடுத்துக்காட்டாய் திகழ்கிறது எனக் கூறி இக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

## துணைநூற் பட்டியல் (References)

1. ஆர். சண்முகம் — மனிதனும் மனமும்
2. திரு ஆண்டாள் நாச்சியார் — திருப்பாவை
3. பூதத்தாழ்வார் — இரண்டாம் திருவந்தாதி
4. திருவள்ளுவர் — திருக்குறள் (457)
5. சிஞ். பிராய்டு — உளவியல் சிந்தனைகள்